# Test – 2 (Feb-2022)

## IV ANCIENT HISTORY & CULTURE OF INDIA
## (ANCIENT INDIA)

| | | |
|---|---|---|
| 11th vol – 1 | Unit5 | தென்னிந்தியாவில் சமுதாய உருவாக்கம் |
| | Unit- 9 | தென்னிந்தியாவில் பண்பாட்டு வளர்ச்சி |
| | Unit – 10 | அரபியர், துருக்கியரின் வருகை |
| | Unit – 11 | பிற்காலச் சோழரும் பாண்டியரும் |
| 11th vol – 2 | Unit - 12 | பாமினி - விஜயநகர அரசுகள் |
| | Unit1 -13 | பண்பாட்டு ஒருமைப்பாடு : இந்தியாவில் பக்தி இயக்கம் |
| | Uni - 14 | முகலாயப் பேரரசு |

## 11th Volume I
## Unit 5
### தென்னிந்தியாவில் சமுதாய உருவாக்கம்

**சான்றுகள்**

**தொல்பொருள்கள்**

- தொடக்க வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்த பெருங்கற்காலப் புதைவிடங்கள்

- அரிக்கமேடு, கொடுமணல், ஆலங்குளம், உறையூர் கட்டிட இடிபாட்டுத் தடயங்களைக் கொண்டுள்ளன. துறைமுகங்கள் தலைநகரங்கள் உள்ளிட்ட பழங்கால இடங்களில் அகழ்வாய்வின் மூலம் பெறப்பட்ட பொருள்கள்.
- ஆந்திரா, கர்நாடகப் பகுதிகளில் அமைந்துள்ள ஸ்தூபிகளும் சைத்தியங்களும் கூடிய பௌத்தத்தலங்கள் (அமராவதி, நாகார்ஜுனாகொண்டா முதலானவை)

**நாணயச் சான்றுகள்**

- ஆந்திர-கர்நாடகப் பகுதிகளின் சாதவாகனர்கள் மற்றும் அவர்களுக்கு முந்தைய குறுநில மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள்.
- சங்க காலச் சேர, சோழ, பாண்டிய அரசர்களும் வேளிரும் வெளியிட்ட நாணயங்கள்.
- தங்கம், வெள்ளி, தாமிரத்தாலான ரோம நாணயங்கள்.

**கல்வெட்டுகள்**

- ஆந்திர-கர்நாடகப் பகுதிகளில் காணப்படும், பிராகிருத மொழியில் பொறிக்கப்பட்ட அசோகர் கல்வெட்டுகள்.
- தமிழக, கேரளக் குகைகளில் காணப்படும் தமிழ்-பிராமி கல்வெட்டுகள்: மாங்குளம். ஜம்பை, புகளூர் முதலானவை
- ஆந்திரப் பகுதிகளிலுள்ள சாதவாகனர் கல்வெட்டுகளும் பிற பௌத்த கல்வெட்டுகளும்
- தமிழகப் பகுதியில் கிடைத்துள்ள மட்பாண்டங்கள், மோதிரம், கற்கள் ஆகியவற்றில் பொறிக்கப்பட்ட எழுத்துகள்: இந்தியாவிற்கு வெளியே பெரனிக்கே, குவாசிர் அல் காதம்(எகிப்து), கோர் ரோரி(ஓமன்), குவாங்லுக்(தாய்லாந்து) போன்ற இடங்களில் காணப்படும் ஆவணங்கள்.

**இலக்கியச் சான்றுகள்:**

- சங்க நூல்களும் சங்கம் மருவிய இலக்கியங்களும்
- பொருளாதாரம், அரசாட்சிக் கலை ஆகியன குறித்து கௌடில்யர் எழுதிய அர்த்த சாஸ்திரம்
- ஆந்திரர்.·.சாதவாகனர் வம்சாவளி வரலாற்றினைக் குறிப்பிடும் புராணங்கள்
- மகாவம்சம் முதலான பௌத்த வரலாற்று நூல்கள்
- சாதவாகன அரசர் ஹாலா பிராகிருத மொழியில் எழுதிய காஹாசப்தசதி.

**தமிழ் செவ்வியல் இலக்கியம்**

தமிழ் செவ்வியல் இலக்கியத் தொகுப்பானது தொல்காப்பியம், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றைக் கொண்டுள்ளது. தமிழின் மிகப் பழமையான இலக்கண நூலான தொல்காப்பியம் கவிதையியலைப் பற்றி மட்டும் பேசவில்லை. அக்காலத்து சமூகப் பண்பாட்டையும் பேசுகிறது. சங்கம் மருவிய காலத்தைச் சேர்ந்த பதிணெண் கீழ்கணக்கு நூல்களும் ஐம்பெரும் காப்பியங்களும் (பொ.ஆ.நான்காம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை) இதற்கடுத்த காலச் சமூகப் பண்பாட்டுச் சூழலைப் சார்ந்தவையாகும்.

## வெளிநாட்டவரது குறிப்புகள்

கீழ்க்காணும் கிரேக்க, லத்தீன் சான்றுகள் தொலைதூர வணிகம், பண்பாட்டுத் தொடர்புகள் குறித்த செய்திகளைத் தெரிவிக்கின்றன.

- பொ.ஆ. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த தொன்மையான கிரேக்க நூலான எரித்திரியக் கடலின் பெரிப்ளஸ்
- பொ.ஆ. முதலாம் நூற்றாண்டில் மூத்த பிளினி எழுதிய 'இயற்கை வரலாறு' (யேவரசயட ர்ளைவழசல)
- பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டில் தாலமி எழுதிய ஜி'யோகிரபி (புவியியல்)
- ரோமானியரின் நிலவரைப்படமான பியூட்டெஞ்செரியன் அட்டவணை.(Peutingerian Table).

## மௌரியர் காலத் தென்னிந்தியா

அசோகருடைய கல்வெட்டுகளே (பொ.ஆ.மு. 270-30) தென்னிந்தியாவின் அரசியல் நிலை குறித்த முதல் சித்திரத்தை வழங்குகிறது. அசோகரின் இரண்டாம் பாறைக் கல்வெட்டில் மௌரிய அரசின் எல்லைக்கப்பால் அமைந்த அண்டை அரசுகளானத் தமிழகத்தில் ஆட்சி புரிந்த அரச மரபுகளான சோழர், பாண்டியர், கேரளபுத்திரர், சத்தியபுத்திரர் ஆகியோரைக் குறிப்பிடுகின்றார். அப்பகுதிகளின் அசோகர் மனிதர்களுக்கும் விலங்குகளுக்குமான இருவகைப்பட்ட மருத்துவ வசதிகள் செய்து கொடுத்தார் எனச் சொல்லப்படுகிறது. அக்காலத்தில் மொரியப் பேரரசு கர்நாடகா, ஆந்திராவின் வடபகுதிகளையும் கொண்டிருந்தது. தமிழக அரசுகள் சுதந்திரமான அண்டை நாடுகள் என்றோ குறிப்பிடப்பட்டுள்ளன.

மௌரியப்பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னரும், சாதவாகனர் எழுச்சிக்கு முன்னரும் பல சிற்றரசுகள் தோன்றியுள்ளன. அவற்றின் அரசர்களைப் பற்றி போதுமான செய்திகள் கிடைக்கவில்லை. எனினும் அவர்கள் வெளியிட்ட நாணயங்கள், அவர்கள் சிறுபகுதிகளை ஆண்டு வந்த குறுநில மன்னர்கள் என்பதைத் தெரிவிக்கின்றன.

**எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஏறத்தாழ 2400 பாடல்கள் கொண்ட இலக்கியக் கருவூலமாகும். மூன்று முதல் எண்ணூறு அடி அளவு கொண்ட இப்பாடல்கள் பாணர்களாலும் புலவர்களாலும் இயற்றப்பட்டவை.**

**எட்டுத்தொகையாவன: 1. நற்றினை, 2. குறுந்தொகை 3. ஐங்குறுநூறு 4. பதிற்றுப்பத்து 5. பரிபாடல் 6. கலித்தொகை 7. அகநானூறு 8. புறநானூறு**

**பத்துப்பாட்டாவது: 1. திருமுருகாற்றுப்படை 2. பொருநராற்றுப்படை 3. சிறுபாணாற்றுப்படை 4. பெரும்பாணாற்றுப்படை 5. முல்லைப்பாட்டு 6. மதுரைக் காஞ்சி 7. நெடுநல்வாடை 8. குறிஞ்சிப்பாட்டு 9. பட்டினப்பாலை 10. மலைபடுகடாம்.**

**சங்கம் மருவிய காலத்தைச் சேர்ந்த, பதினெண் கீழ்கணக்கு நூல்கள் பெரும்பாலும் நீதி பற்றியும், ஒழுக்க நெறிமுறைகளைப் பற்றியும் பேசுவனவாகும். திருக்குறளும் நாலடியாரும் இதில் முதன்மையானவை.**

**முதன்மையான காப்பியங்களான சிலப்பதிகாரமும் மணிமேகலையும் பண்பாடு**

மற்றும் மத வரலாற்றுக்கு சிறந்த சான்றுகளாகப் பயன்படுபவை.

**சங்க காலப் பெண்பாற் புலவர்**
சங்கப் பாடல்களின் தொகுப்பிற்கு பங்களித்த 450க்கும் மேற்பட்ட புலவர்களில் முப்பது பெண்பாற் புலவரும் அடங்குவர். அவர்களுள் ஔவையார், அல்லூர் நன்முல்லையார், காக்கைப்பாடினியார், காவற்பெண்டு, நல்வெளியார், ஒக்கூர் மாசாத்தியார், பாரிமகளிர் ஆகியோர் மிகமுக்கியப் பெண்பாற் புலவர்களாவர்.

**சாதவாகனர்கள் ஆட்சியின் கீழ் தென்னிந்தியா**

சாதவாகனர்கள் பொ.ஆ.மு. முதலாம் நூற்றாண்டில் தக்காணப் பகுதியில் தோன்றினர். மகாராஷ்ட்டிரா, கர்நாடகா, மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த ஒரு சில பகுதிகளை அவர்கள் ஆண்டனர். அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகளின்படி தெலுங்கானா பகுதிகளில் ஆட்சியைத் தொடங்கிய சாதவாகனர் மகாராஷ்டிரப் பகுதிகளுக்கு நகர்ந்து, கோதாவரி நதித் தீரத்தில் பிரதிஸ்தான்(மகாராஷ்டிராவில் பைத்தன்) என்னும் நகரைக் தலைநகராகக் கொண்டு ஆடசி புரிந்தனர். பின்னர் கிழக்கு நோக்கி நகர்ந்து ஆந்திராவின் கடற்கரைப் பகுதிகளைக் கட்டுப்படுத்தினர். பிளினியின் நூல் ஆந்திர நாட்டிலிருந்த கோட்டைகளுடன் கூடிய 30 நகரங்கள், ஒரு பெரும்படை, குதிரைப்படை, யானைப்படை ஆகியன குறித்து பேசுகிறது.

சாதவாகன அரசர்களுள் கௌதமபுத்ர சதகர்னி பெரும் அரசராவார். சாகஅரசர் ‘நாகபனா’வை வென்ற அவர் நாகபனாவின் நாணயங்களைத் தன் அரச முத்திரையோடு மீண்டும் வெளியிட்டார். அவருடைய தாயான கௌதம பாலஸ்ரி என்பாரின் நாசிக் கல்வெட்டு, சாகர் பகல்வர், யவனர்கள் ஆகியோரை இவர் வெற்றி கொண்டதாகக் கூறுகிறது. பெருமைக்குரிய அஸ்வமேத யாகத்தை இவர் நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

கௌதமபுத்ர சதகர்னிக்குப் பின்னர் ஆட்சி பொறுப்பேற்ற வசிஷ்டபுத்ர புலுமாயி, சாதவாகன நாட்டின் எல்லைகளை விரிவடையச் செய்தார். மற்றொரு புகழ்பெற்ற அரசரான யக்னஸ்ரி சதகர்னி, தனது ஆட்சியின் வெளிநாட்டு வணிகத்தின் முக்கியத்துவத்தைக் காட்டும் வகையில் கப்பலின் வடிவம் பதிக்கப்பட்ட நாணயங்களை வெளியிட்டார்.

சாதவாகன அரசர் ஹாலா 700 காதற் பாடல்களைக் கொண்ட காஹாசப்தசதி என்ற நூலை இயற்றினார். மகாராஷ்டிரப் பிராகிருத மொழியில் எழுதப்பட்ட இந்நூலின் கருப்பொருள் சங்க இலக்கியத்தின் அகப்பொருளை ஒத்துள்ளன. பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டையொட்டி சாதவாகனப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. அவர்களைத் தொடர்ந்து ஆந்திரப் பகுதியில் இக்சவாகு, வட கர்நாடகப் பகுதிகளில் கடம்பர் ஆகியோர் ஆட்சி புரிந்தனர்.

**சாதவாகனர் காலத்தின் முக்கியத்துவம்**

நிலமானியம் வழங்குவது சாதவாகனர் காலத்தின் முக்கிய அம்சமாகும். இதன் பயனாளிகள் பெரும்பாலும் பௌத்தர்களும் பிராமணர்களும் ஆவர். பௌத்தத் துறவிகளுக்கு வழங்கப்பட்ட நிலங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டதை நனிகாட் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இவ்வாறு மதகுருமார்களைக் கொண்ட குழுக்கள் செல்வாக்குப் பெற்று உயரிடத்தை

வகிக்கத் தொடங்கியதைக் காணமுடிகிறது. நிலங்களைக் கொடையாக வழங்கும் இம்முறை நிலங்களில் வேளாண்மை செய்யாமல், நிலங்களுக்கு உரிமையாளர்களாக மாறிய ஒரு பிரிவினரை உருவாக்கியது.

**சங்க காலம்**

பொ.ஆ.முதல் நூற்றாண்டுகளே சங்க காலம் என்பது பெரும்பாலோர் ஒத்துக் கொள்ளும் கால வரையறையாகும். இக்காலம் பற்றிய செய்திகள் அனைத்தும் சங்க இலக்கியங்களிலிருந்தே பெறப்படுகின்றன.

**மூவேந்தர்**

பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே தமிழகத்தின் மூன்று அரச மரபுகள் குறித்து அசோகர் அறிந்திருந்தாலும், பொ.ஆ. முதலாம் நூற்றாண்டு மற்றும் அதற்கு பின் வந்த காலத்தைச் சேர்ந்த சங்க இலக்கியத்தின் மூலமே அவ்வரசர்களின் பெயர்களை அறிந்து கொள்ள முடிகிறது.

மூவேந்தர் என்றறியப்பட்ட மணிமுடிசூடிய அரசர்களான சேர, சோழ, பாண்டியர் பெரும்பாலான வேளாண் நிலங்களையும், வணிகப் பெருவழிகளையும் நகரங்களையும், தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அசோகர் கல்வெட்டுகளில் மேற்சொல்லப்பட்ட மூவேந்தரோடு இடம் பெற்றுள்ள சத்யபுத்ர(அதியமான்) என்பது சங்கப் பாடல்களில் இடம் பெறும் வேளிரைக் குறிப்பதாக உள்ளது.

**சோழர்**

தமிழகத்தின் மத்திய, வட பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டிருந்தனர். அவர்களது ஆட்சியின் மையமாக இருந்த பகுதி காவிரியாற்றின் கழிமுகப் பகுதியாகும். இதுவே பின்னர் சொழ மண்டலம் என்றழைக்கப்பட்டது. அவர்களின் தலைநகர் உறையூர் ஆகும். (திருச்சிராப்பள்ளி நகரத்திற்கு அருகே அமைந்துள்ளது). மேலும் புகார் அல்லது காவிரிப்பூம்பட்டினமானது முக்கியத் துறைமுகமாகவும் அரச குடும்பத்தின் மாற்று வாழ்விடமாகவும் திகழ்ந்தது. சோழரின் சின்னம் புலி ஆகும். காவிரிப்பூம்பட்டினம் இந்துமா கடலின் பல பகுதிகளைச் சேர்ந்த வணிகர்களைத் தன்பால் ஈர்த்தது. கரிகாலனின் ஆட்சியின்போது இங்கு நடைபெற்ற ஆரவாரமான வணிக நடவடிக்கைகள் குறித்துக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினப்பாலையில் விரிவாக விளக்குகிறார்.

இளஞ்சேட்சென்னியின் மகனான கரிகாலன் சங்ககால சோழஅரசர்களில் தலையாயவராக அறியப்படுகிறார். பட்டினப்பாலை அவருடைய ஆட்சியைப் பற்றி விரிவாகக் கூறுகிறது. கரிகாலனுடைய தலையாய போர் வெற்றி என்பது வெண்ணி போர்க்களத்தில் சேரரையும் பாண்டியரையும் அவர்களுக்கு உதவிய பதினோரு வேளிர் குலத்தலைவர்களையும் வெற்றி கொண்டதாகும். காட்டை வெட்டி வளம் பெருக்கியதற்காகவும், காவிரியில் அணை கட்டி, வாய்க்கால்கள் வெட்டி நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்ததன் மூலம் வேளாண்மையை வளரச் செய்தார் என்பதற்காகவும் இவர் போற்றப்படுகிறார். பெருநற்கிள்ளி எனும் பெயருடைய மற்றொரு அரசன் வேத வேள்வியான ராஜசுய யாகத்தை நடத்தியுள்ளார். கரிகாலனின் மறைவைத் தொடர்ந்து உறையூர், மற்றும் புகார் அரச குடும்பத்தினரிடையே வாரிசுரிமை தொடர்பான மோதல் ஏற்பட்டிருக்கிறது.

**சேரர்** மத்திய, வடக்கு கேரளப் பகுதிகளையும் தமிழ்நாட்டின் கொங்கு பகுதியினையும் ஆட்சி செய்தனர். வஞ்சி அவர்களின் தலைநகராகும். மேலைக் கடற்கரைத் துறைமுகங்களான முசிறியும் தொண்டியும் அவர்களது கட்டுப்பாட்டில் இருந்தன. வஞ்சி இன்றைய தமிழகத்தின், கரூர் என்று அடையாளம் காணப்படுகிறது. அதேசமயம் சில அறிஞர்கள் கேரளத்திலுள்ள திருவஞ்சைக்களம் என்னும் ஊரே வஞ்சி என்று அடையாளங் காண்கின்றனர். சேர அரச குடும்பத்தில் இரு கிளைகள் இருந்ததெனவும். பொறையர் என்னும் கிளையினர் தமிழ்நாட்டின் கரூர் நகரிலிருந்து ஆட்சி புரிந்தனர் எனவும் பல அறிஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

எட்டு சேர அரசர்கள் குறித்தும் அவர்கள் ஆண்ட பகுதிகள், அவர்களது சாதனைகள் குறித்தும் பதிற்றுப்பத்து பேசுகிறது. கரூர் நகருக்கு அருகேயுள்ள புகளூரிலுள்ள கல்வெட்டு, மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த சேர அரசர்களைக் குறிப்பிடுகிறது. அவர்களில் ஒருவரான சேரல் இரும்பொறை தன் பெயரில் நாணயங்கள் வெளியிட்டுள்ளார். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், செங்குட்டுவனும் முக்கிய சேர அரசர்கள் ஆவர். பல குறுநில மன்னர்களைச் செங்குட்டுவன் வெற்றி கொண்டுள்ளார். கடற்கொள்ளையர்களை அடக்கியதன் மூலம் முக்கியத் துறைமுகமான (கொடுங்களூர்களுக்கு அருகேயான) முசிறியின் பாதுகாப்பை உறுதிபடுத்தினார் என்றும் கூறப்படுகிறது. ஆனால் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் செங்குட்டுவனின் மாபெரும் வட இந்தியப் படையெடுப்பு சங்க இலக்கியங்களில் சொல்லப்படவில்லை. இவர் ஐம்பத்தாறு ஆண்டுகள் ஆட்சி செய்ததாகவும் வைதீக, அவைதீக மதங்களை ஆதரித்ததாகவும் கூறப்பட்டுள்ளது. செப்பு, ஈய நாணயங்களைச் சேர அரசர் வெளியிட்டுள்ளார். தமிழ் பிராமியில் புராணக் குறிப்புகளைக் கொண்டுள்ள அவை, ரோம நாணயத்தைப் போலுள்ளன. எழுத்துக்கள் எவையும் இல்லாமல் சேரர்களின் வில் அம்புச் சின்னங்களைத் தாங்கிய சேர நாணயங்களும் கிடைத்துள்ளன.

**பாண்டியர்** மதுரையிலிருந்து ஆண்டனர். தாமிரபரணி நதி வங்காளவிரிகுடாக் கடலில் கலக்குமிடத்தில் அமைந்துள்ள கொற்கை அவர்களின் முக்கியத் துறைமுகமாகும். இது முத்துக் குளிப்பிற்கும் சங்குகள் சேகரிப்பிற்கும் பெயர் பெற்றதாகும். கொற்கை பெரிப்ளசின் குறிப்புகளில் கொல்கொய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பாண்டியரின் சின்னம் மீன். அவர்களின் நாணயங்களில் ஒருபுறம் யானையின் வடிவமும் மற்றொரு புறம், புதிய பாணியில் மீனின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. இவர்கள் கேரளத்தின் தெற்குப் பகுதிகளின் மீது போர் தொடுத்து கோட்டயத்துக்கு அருகேயுள்ள நெல்கிண்டா துறைமுகத்தை தங்கள் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்தனர். மரபுவழிச் செய்தியின்படி பாண்டியர் தமிழ்ச் சங்கங்களை ஆதரித்து சங்க நூல்களைத் தொகுப்பித்தனர். சங்கப் பாடல்கள் பாண்டிய அரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றன. ஆனால் அவர்கள் எப்போது அரச பதவி ஏற்றார்கள், அவர்கள் ஆண்ட கால அளவு என்ன, என்பன போன்ற விவரங்கள் தெளிவாக இல்லை.

மாங்குளம் தமிழ்-பிராமி கல்வெட்டு பொ.ஆ.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டிய அரசன் நெடுஞ்செழியனைக் குறிப்பிடுகிறது. மதுரைக் காஞ்சி முதுகுடுமிப்பெருவழுதியையும் மற்றொரு நெடுஞ்செழியனான தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனையும், வேறு சில பாண்டிய மன்னர்களையும் குறிப்பிடுகின்றது. முதுகுடுமிப் பெருவழுதி எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வேள்விக்குடிச் செப்பேடுகளில், பிராமணர்களுக்கு நிலங்களைத் தானமாக வழங்கினார் எனக் குறிக்கப்படுகிறார். தான் செய்த வேத வேள்விச் சடங்குகளின்

நினைவாகப் பெருவழுதி என்ற பெயரில் புராண கதைப் பொறிப்புகளைக் கொண்ட நாணயங்களை வெளியிட்டுள்ளார்.

நெடுஞ்செழியன், சேரர், சோழர் ஐந்து வேளிர் குல சிற்றரசர்கள் (திதியன், எழினி, எருமையூரான், இருங்கோவேண்மான், பொருநன்) ஆகியோரின் கூட்டுப்படைகளைத் தலையாலங்கானத்துப் போரில் வெற்றி கொண்டதற்காகப் புகழப்படுகிறார். மேலும் சிற்றரசர்களிடமிருந்து (வேளிர்) மிலலை, முத்தூர் (புதுக்கோடடை மாவட்டம்) என்னும் இடங்களைக் கைப்பற்றிய பெருமை இவரையே சாரும். கொற்கையின் தலைவனென்றும், தீருநெல்வேலி கடற்கரைப் பகுதியில் வாழும் மீன் பிடிக்கும், போர்புரியும் திறன் பெற்ற தென்பகுதி பரதவர்களின் தலைவனென்றும் இவர் புகழப்படுகிறார்.

## தமிழ் திணைப் பகுதிகளில் சமூக உருவாக்கம்

அக்காலத்தில் சமூக உருவாக்கத்தை நாம் புரிந்துகொள்ளச் சங்க இலக்கியங்கள் பெரிதும் துணை புரிகின்றன. திணைக் கோட்பாட்டின் பின்புலத்தில் தமிழகம் குறிங்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்து முக்கிய நிலப்பரப்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொன்றும் தெய்வம், மக்கள், சூழல் சார்ந்த பண்பாட்டு வாழ்க்கை எனத் தனித்தன்மைகளைக் கொண்டிருந்தது.

| | |
|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த பகுதியுமாகும். இங்கு வேட்டையாடுதலும், உணவை சேகரித்தலும் வழக்கமாக இருந்தது. |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடமுமான இங்கு, கால்நடை மேய்ப்பதும், அத்துடன் மாற்றிட வேளாண்மை செய்வதும் தொழிலாக இருந்தது. |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமுமான இங்கு நீர்பாசனத்தின் மூலம் கலப்பைகளைப் பயன்படுத்தி வேளாண்மை செய்வது தொழிலாகும். |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த இடமுமான இங்கு மீன்பிடித்தலும் உப்பு உற்பத்தியுமே முக்கியத் தொழில்களாகும். |
| பாலை | மணலும் மணல் சார்ந்த வறண்ட நிலப்பகுதியான இங்கு வேளாண்மை சாத்தியமில்லை என்பதால் மக்கள் கால்நடைத் திருட்டையும் கொள்ளையடிப்பதையும் தொழிலாகக் கொண்டனர். |

## தமிழ் அரசமைப்பு

ஆட்சியாளர்களில் மூன்று வகைப்பட்ட தலைமைத்துவம் கொண்டவர்களைக் காண முடிகிறது. 1) கிழார் 2) வேளிர் 3) வேந்தன். கிழார் என்போர் கிராமங்களின் அல்லது ஒரு சிறிய பகுதியின் தலைவராக இருந்து, பின்னர் நாடு என்றறியப்பட்ட நிராவாகப் பிரிவின் தலைவராவர். இவர்கள் குறிப்பிட்ட இடங்களில் வாழும் பழங்குடிச் சமூகங்களின் தலைவர்காளாவர். வேந்தர் எனப்பட்டோர் மிகப் பெரும் வளமான நிலப் பகுதியை கட்டுப்படுத்திய அரசர்களாவர்.

மூவேந்தர்களின் வளம் நிறைந்த பகுதிகளின் இடையே அமைந்திருந்த மலைப்பாங்கான காட:டுப் பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டிருந்தனர்.

அதியமான், பாரி, ஆய், இருங்கோ போன்ற குறுநில மன்னர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கென இயற்கை வளமிக்க ஒரு பகுதியை ஆண்டனர். அவர்கள் பெருந்தன்மை கொண்ட புரவலர்களாகப் புலவர்களையும் ஆடல் பாடல் கலைஞர்களையும் ஆதரித்தனர்.

சங்க கால சேர, சோழ, பாண்டிய அரசுகளின் அரசியல் அமைப்பைப் பொறுத்த மட்டிலும் அறிஞர்களுக்கிடையே பல மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன.

1. சமூகப் பிரிவினைகள் வெளிப்படவில்லை.
2. எல்லைகள் தெளிவாக வரையறை செய்யப்படாத நிலையிலிருந்தது.
3. ஒரு அரசின் உருவாக்கத்திற்குத் தேவைப்படும் வேளாண் வளர்ச்சியும் வேளாண் உபரியும் நாசம் ஏற்படுத்தும் போர்களால் தடுக்கப்பட்டன.
4. வட இந்திய அரசுகளைப் போல வரி விதிப்பு இருந்ததாகச் சான்றுகள் இல்லை.

பொ.ஆ.மு. முதலாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கி, பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டு வரை வணிகம் மிகப்பெரும் பங்கை வகித்துள்ளது.

கிழார்களையும், வேளர் குலத்தலைவர்களையும் வேந்தர்கள் அடிபணியச் செய்ததோடு தங்களுக்குள்ளும் போரிட்டுக்கொண்டனர். இதன் பொருட்டு தங்களுக்கெனப் படை வீரர்களை அணிதிரட்டியதோடு, சில வேளிர்குலத் தலைவர்களின் உதவியையும் பெற்றனர். சங்க காலத்தைச் சேர்ந்த வேந்தர்கள் தங்களது வலிமையைப் பறைசாற்றிக் கொள்வதற்காகச் சிறப்புப் பட்டங்களைச் கொள்வதற்காகச் சிறப்புப் பட்டங்களைச் சூடிக் கொண்டனர். கடுங்கோ, இமயவரம்பன், வானவரம்பன், பெருவழுதி போன்ற பட்டப்பெயர்களைச் சூட்டிக் கொண்டதன் மூலம் தங்களை ஏனைய மக்களிடமிருந்தும் வேளிர்குலத் தலைவர்களிடமிருந்தும் வேறுபடுத்திக் காட்டிக் கொண்டனர்.

**சமூகமும் பொருளாதாரமும்**

சங்க காலத்தில் வேந்தர்கள் மேற்கொண்ட போர்கள் எதிரிகளின் பகுதிகளைக் கைப்பற்றி அதன் மூலம் தங்களது ஆட்சி எல்லைப் பரப்பினை விரிவாக்குவதற்காய் அமைந்தன. பொருளாதார உற்பத்தியில் பெண்களும், செயலூக்கத்துடன் பங்கெடுத்துள்ளனர். சங்க காலத்தில் பல பெண்பாற்புலவர்களும் இருந்துள்ளனர்.

கைவினைத் தொழில்களான உலோகப் பாண்டம் செய்தல், சங்கு வளையல், அணிகலன் செய்தல், கண்ணாடி, இரும்பு வேலை, மட்பாண்டம் செய்தல் போன்ற உற்பத்தி நடவடிக்கைகள் குறித்து சான்றுகள் உள்ளன. நகர மையங்களான அரிக்கமேடு, உறையூர், காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம், மதுரை, கொற்கை, கேரளத்தில் பட்டணம் ஆகிய இடங்களில் இது போன்ற கைவினைப் பொருளுற்பத்தி வளமையாக நடந்துள்ளன. மதுரைக்காஞ்சி பகல் மற்றும் இரவு நேரக் கடைவீதிகளையும் (நாளங்காடி, அல்லங்காடி) அங்கு விற்பனையாகும் பலவகைப்பட்ட கைவினைப் பொருள்கள் பற்றியும் பேசுகிறது. பல்வேறு வகைப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருள்கள் அனைத்து இடங்களிலும் கிடைக்கவில்லை. சிலர் விலையுயர்ந்த ஆபரணக் கற்களையும், ஓரளவு மதிப்புள்ள ஆபரணக் கற்களையும் பண்டமாற்றாகக் கொடுத்து மூலப்பொருள்களைப் பெற்றனர். அம்மூலப் பொருள்கள் தொழிற்கூடங்களைச் சென்றடைந்து பல்வேறு பொருள்களாகத் தயார் செய்யப்பட்டது.

மட்பாண்டங்களின் மீது பொறிக்கப்பட்டுள்ள சில பெயர்கள், தமிழ் மொழி பேசாத ஏனைய மக்கள், பெரும்பாலும் வணிகர்கள் நகரங்களிலும் தொழில்

மையங்களிலும் இருந்ததைத் தெரிவிக்கின்றன. தொலைதூர நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் தமிழகத்தில் தங்கியிருந்து வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். மகதக் கைவினைஞர்கள், மாளவ உலோகப் பணியாளர்கள், மராத்திய எந்திரப் பொறியாளர்கள் போன்றோர் தமிழகக் கைவினைஞர்களோடு கூட்டுறவு முறையில் இணைந்து பணியாற்றியதாக மணிமேகலை குறிப்பிடுகின்றது. தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் வணிகத்தோடு தொடர்புடைய வணிகன், சாத்தன், நிகம போன்ற சொற்கள் இடம் பெற்றுள்ளன. உப்பு வணிகர்கள் உமணர் என்றழைக்கப்பட்டனர். அவர்கள் மாடுகள் பூட்டிய வண்டிகளில் குடும்பத்தோடு வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சாத்து என்னும் சொல் இடம் விட்டு இடம் சென்று வணிகம் செய்பவர்களைக் குறிப்பிதாகும்.

வணிகத்தில் நாணயங்கள் பயன்படுத்தப்பட்டாலும் பண்டமாற்று முறையே அதிக அளவில் பழக்கத்திலிருந்தது. ரோம தங்க வெள்ளி நாணயங்களும் பரிமாற்றத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன. ரோமப் பேரரசு தென்கிழக்கு ஆசிய நர்டுகள் போன்ற தொலைதூரத்தில் அமைந்துள்ள நாடுகளோடும் வணிகத்தொடர்புகள் மேற்கொண்டதைத் தொல்பொருள் ஆய்வுச் சான்றுகள் உறுதி செய்கின்றன.

இந்தியாவில் தென் பகுதியில் கடற்கரைகளை எளிதாகச் சென்றடைய முடியும் என்ற சூழல் இருந்ததாலும், கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் கடல்வழிப் பாதையில் அமைந்திருந்த காரணத்தினாலும் கடல் கடந்த தொடர்புகளில் முக்கியப்பங்கு வகித்தது. தொடக்க வரலாற்றுக்கால துறைமுகங்கள் பலவற்றில் கிடைத்துள்ள அம்போரா என்னும் ரோம நாட்டு ஜாடிகள், கண்ணாடிப் பொருள்கள், கடல் கடந்த வணிக நடவடிக்கைகளைச் சுட்டுகின்றன. ரோமானியர்களால் கொண்டுவரப்பட்ட செல்வம் அயல்நாட்டு வணிகர்களின் வருகை ஆகியவை குறித்து தொல்பொருள் சான்றுகளும் இலக்கியச் சான்றுகளும் உள்ளன. ரோமானியத் தங்க, வெள்ளி நாணயக் குவியல்கள் கோயம்புத்தூர் பகுதியிலும் தென்னிந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் கண்டறியப்பட்டுள்ளன.

### கருத்தியலும் மதமும்

இக்காலகட்டத்தில்தான் பௌத்த மதம் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பரவியிருந்தது. அசோகரின் மகள் போதிமரத்தை இலங்கைக்கு கொண்டு சென்றதாகக் கருதப்படுகின்றது. அசோகருக்கு முன்னதாக சந்திரகுப்த மௌரியர் கர்நாடகத்திற்கு வருகை தந்ததாகவும் பழங்கதை ஒன்று உள்ளது. சாதவாகனர்களும், சங்க காலத்து அரசர்களும், இக்சவாகுக்களும், வேத வேள்விகளை ஆதரித்தனர். பிராமணருடைய வருகை குறித்தும் வேதச் சடங்குகள் நடைபெற்றமைக்கும் சங்க இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. ஆனால் இக்காலக்கட்டத்தில் ‘வர்ணாசிரமம்’ என்னும் கருத்தியல் தமிழ்ப்பகுதிகளில் வேரூன்றவில்லை.

பௌத்த மதம் தொடர்பான சான்றுகள் தமிழகத்தில் பரவலாகக் காணப்படுகின்றன. ஆந்திராவில் கிருஷ்ணா, கோதாவரி நதிகளின் கழிமுகப் பகுதிகள் பல பௌத்த மையங்களைக் கொண்டுள்ளன.

பௌத்த மதம் எந்த அளவிற்கு ஆழமாக வேரூன்றியிருந்தது என்பதை அமராவதி, நாகர்ஜுனகொண்டா ஆகிய இடங்ளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் உணர்த்துகின்றன.

தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், காவிரிபூம்பட்டினம் ஆகிய இடங்களில் பௌத்த ஸ்தூபிகள் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. சமண மதத்தோடு ஒப்பிடுகையில் பௌத்த மதத்திற்கான சான்றுகள் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மட்டுமே கிடைக்கின்றன. தமிழகத்தில் காணப்படும் தமிழ்-பிராமி கல்வெட்டுகளுடன் கூடிய எண்ணற்ற குகை உறைவிடங்கள் பௌத்த மதத்தைக் காட்டிலும் சமண மதம் செல்வாக்குடன் விளங்கியதைப் பறைசாற்றுகின்றன.

சங்கம் மருவிய காலத்தில் சமணர்கள் தமிழ் இலக்கியத்திற்கு அளப்பரிய சேவை செய்துள்ளனர்.

**களப்பிரர்களின் காலம் - சங்கம் மருவிய காலம்**

சங்க காலத்திற்கும், பல்லவர், பாண்டியர் காலத்திற்கும் இடைப்பட்ட (தோராயமாக, பொ.ஆ 300-600க்கும்) காலமே, தமிழக வரலாற்றில் களப்பிரர் காலம் என அறியப்படுகிறது. இவ்விடைவெளியில் போர்க்குணம் மிக்க களப்பிரர்கள் என்போர் தமிழகத்தைக் கைப்பற்றித், தமிழகத்தின் பாரம்பரிய அரசுகளான மூவேந்தர்களையும் தோற்கடித்ததால் இக்காலமானது களப்பிரர்களின் இடைக்கால ஆட்சி என்றும்,

இருண்ட காலமென்றும் தொடக்க வரலாற்று ஆசிரியர்கள் சித்தரித்தனர்.

ஆனால் தமிழ்ப் பண்பாட்டின் பல சிறந்த கூறுகள் இக்காலத்தில்தான் தோன்றியிருக்கிறது. இக்காலத்தில்தான் உன்னதமான தமிழ் இலக்கியமான திருக்குறளும் அதோடு ஏனைய பதினென் கீழ்க்கணக்கு நூல்களும் இயற்றப்பட்டன.

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய சிறந்த காப்பியங்களும்,

அவைதீக மதங்களான சமணமும், பௌத்தமும் பெரும் செல்வாக்குப் பெற்றமையால் வைதீக வேதபுராண கருத்துக்களைக் கொண்டிருந்த அறிஞர்கள், ஆட்சி புரிகின்ற களப்பிரர்கள் தீயவர்கள் என்ற கருத்துத் தோற்றத்தை உருவாக்கியிருக்கலாம் எனத் தெரிகிறது.

பொ.ஆ ஆறாம் நூற்றாண்டுக்குப் பின்னர் வட தமிழகத்தில் பல்லவரும், தென்தமிழகத்தில் பாண்டியரும் அரசு மற்றும் சமூகத்தை உருவாக்க வழி உருவானது என்று அண்மைக்கால வரலாற்றாய்வாளர்கள் கூறுகின்றனர். தொடக்கத்தில் இந்நாடுகளின் அரசர்கள் சமண பௌத்த மதங்களையே சைவ-வைணவ பக்தி இயக்கத்தால் புத்துயிர் பெற்ற வேத புராண மதங்களின் செல்வாக்கிற்கு உள்ளாயினர். ஆனால் இம்மதங்கள் பக்தி இயக்க அடியார்களின் வெறுப்பைத் தூண்டும் வகையில் பொது மக்களிடையே சமண பௌத்த மதங்கள் பெரும் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தன.

## .பாடம் - 9

### தென்னிந்தியாவில் பண்பாட்டு வளர்ச்சி

**அறிமுகம்**

பொ.ஆ. 6 முதல் 9ஆம் நூற்றாண்டு வரையிலான தென்னிந்திய அரசியல் வரலாற்றில், வாதாபி (பாதாமி) சாளுக்கியருக்கும் (மேலைச் சாளுக்கியர்) காஞ்சி பல்லவருக்கும் இடையிலான மோதல்கள் முதன்மை பெறுகின்றன.

**சான்றுகள்**

கோயில் சுவர்களிலும் தூண்களிலும் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளும் செப்புப் பட்டயங்களுமே இக்காலகட்ட வரலாற்றுக்கு முக்கியச் சான்றுகளாகும். பிராமணர்களுக்கு இறையிலியாக வழங்கப்பட்ட நிலங்களைப் பதிவு செய்யவும், மத நிறுவனங்களுக்கு அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களும் பிறரும் கொடுத்த கொடைகளைப் பதிவு செய்யவும், சாளுக்கிய, அரசர்கள் கன்னடம், தெலுங்கு, தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் வெளியிட்ட கல்வெட்டுகளும், பல்லவ அரசர்கள் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் வெளியிட்ட கல்வெட்டுகளும் முக்கியச் சான்றுகளாகும். இரண்டாம் புலிகேசியினுடைய அவைக்களப் புலவரான ரவிகீர்த்தி என்பவர் சமஸ்கிருதத்தில் எழுதிய ஐஹோல் கல்வெட்டு சாளுக்கியக் கல்வெட்டுகளிலேயே மிக முக்கியமானதாகும். கன்னட மொழியில் எழுதப்பட்ட இலக்கண நூலான ‘கவிராஜமார்க்கம்’, ‘பம்ப – பாரதம்’, ‘விக்கிரமார்ஜுன விஜயம்’, நன்னையாவால் தெலுங்கு மொழியில் எழுதப்பட்ட மகாபாரதம் ஆகிய நூல்கள் முக்கிய வரலாற்றுச் செய்திகளை முன்வைக்கின்றன.

வைணவ ஆழ்வார்களின் பாடல்கள் தொகுக்கப்பட்டு நாலாயிர திவ்வியப்பிரபந்தம் எனப் போற்றப்பட்டது. சைவ இலக்கியங்கள் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன. அப்பர் (திருநாவுக்கரசர்), சம்பந்தர் (திருஞானசம்பந்தர்), சுந்தரர் ஆகியோர் இயற்றிய தேவாரம், மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகம் ஆகியவை முக்கிய நூல்களாகும். அவை இன்றுவரை புனிதமான இலக்கியங்களாகப் போற்றப்படுகின்றன.

பிற்காலத்தில் சேக்கிழாரால் எழுதப்பட்ட பெரியபுராணமும் பல வரலாற்றுச் செய்திகளை முன்வைக்கின்றது. முதலாம் மகேந்திரவர்மன் எழுதிய மத்தவிலாச பிரகாசனம் பல்லவர்கால வரலாற்றிற்கு ஒரு முக்கியச் சான்றாகும்.

சமுத்திர குப்தருடைய அலகாபாத் தூண் கல்வெட்டு, சாளுக்கிய அரசர் இரண்டாம் புலிகேசியின் சாளுக்கிய அரசர் இரண்டாம் புலிகேசியின் ஐஹோல் கல்வெட்டு உள்ளிட்ட பல கல்வெட்டுக்கள் பல்லவ – சாளுக்கிய மோதல்கள் குறித்த விவரங்களை வழங்குகின்றன.

ரமேஸ்வரவர்மனின் கூரம் செப்பேடுகள், மூன்றாம் நந்திவர்மனின் வேலூர பாளையம் செப்பேடுகள் அவ்வரசர்களின் போர்வெற்றிகளைப் பதிவு செய்கின்றன.

நாணயங்களும் இக்காலப் பொருளாதார நிலையைப் புரிந்துகொள்ள உதவுகின்றன.

பாலி மொழியில் எழுதப்பட்ட பௌத்த நூல்களான தீபவம்சம், மகாவம்சம், சீனப் பயணிகளான யுவான் சுவாங், இட்சிங் ஆகியோரின் பயணக் குறிப்புகள் ஆகியன பல்லவர்காலச் சமூக, மத பண்பாட்டு நிலைகள் குறித்த விவரங்களை வழங்குகின்றன.

ஒன்பது, பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த அரபு நாடுகளைச் சேர்ந்த பயணிகளும் மற்றும் புவியியலாளர்களுமான சுலைமான், அல்மசூதி, இபின் கவ்கா போன்றோரின் பயணக்குறிப்புகள் இக்காலகட்ட இந்தியாவின் அரசியல், சமூக, பொருளாதார நிலைகளைப் பற்றி நமக்குக் கூறுகின்றன. ஐஹோல், வாதாபி, பட்டாடக்கல் அகிய இடங்களைச் சேர்ந்த கோயில்களிலுள்ள சிற்பங்கள் இக்காலகட்டப் பண்பாட்டைப் பிரதிபலிக்கின்றன.

**சாளுக்கியர்களும் பல்லவர்களும்**

**சாளுக்கியர்**

இரண்டு சாளுக்கிய அரச குடும்பங்கள் உள்ளன. ஒன்று வாதாபி சாளுக்கியர்: மற்றொன்று கல்யாணி சாளுக்கியர்.

இப்பாடம் வாதாபி சாளுக்கியரைப் பற்றியதாகும். சாளுக்கிய அரசவம்சம் அதனை உருவாக்கிய முதலாம் புலிகேசி (சுமார் பொ.ஆ. 543-566) வாதாபிக்கு அருகேயுள்ள ஒரு குன்றினைச் சுற்றி கோட்டையைக் கட்டியதோடு வலுவான சக்தியாக உதயமானது.

கடம்பரின் மேலாதிக்கத்தின் கீழிருந்த அவர், தன்னை சுதந்திர அரசராக பிரகடனப்படுத்திக்கொண்டார்.

அவர் யக்ஞங்களை நடத்தியதாகவும் அஸ்வமேத யாகம் நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

தலைநகர் வாதாபி கீர்த்தி வர்மனால் (566-597) நிறுவப்பட்டது. முதலாம் புலிகேசியின் பேரன் இரண்டாம் புலிகேசி (609-642) அரசர் மங்களேசனைத் தோற்கடித்த பின்னர் தன்னை அரசராகப் பிரகடனப்படுத்திக் கொண்டார்.

இந்நிகழ்வு ஐஹோல் கல்வெட்டில் விவரிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் புலிகேசியின் போர் வெற்றிகளில் குறிப்பிடத்தக்கது நர்மதை நதிக்கரையில் ஹர்சரை வென்றதாகும். மாளவம், கலிங்கம் மற்றும் தக்காணத்தின் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த அரசர்கள் இவரின் அரசியல் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டனர்.

பனவாசியின் கடம்பர்களையும் மைசூரின் கங்கர்களையும் இவர் வெற்றி கொண்டார்.

இவர் காஞ்சிபுரத்தின் மீது மேற்கொண்ட தாக்குதலைப் பல்லவ அரசன் முதலாம் மகேந்திரவர்மன் முறியடித்தார். இது சாளுக்கியர்களுக்கும் பல்லவருக்கும் இடையே ஒரு நீண்ட காலப் போருக்கு இட்டுச் சென்றது. பல்லவ அரசன் முதலாம் நரசிம்மவர்மன் (630-638) வதாபியைத் தாக்கி கைப்பற்றினார்.

இப்போரில் இரண்டாம் புலிகேசி உயிர்துறந்தார். இதனைத் தொடர்ந்து வாதாபி சாளுக்கியப் பேரரசின் கிழக்குப் பகுதிகளின் மீதான பல்லவர்களின் கட்டுப்பாடு பல ஆண்டுகள் நீடித்தது. எட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாதாபி சாளுக்கியர்கள் ராஞ்டிரகூடர்களால் வெற்றி கொள்ளப்பட்டனர்.

**இரண்டாம் புலிகேசியின் ஐஹோல் கல்வெட்டு**

ஐஹோல்(கர்நாடகா) மேகுடி கோயில் ஒரு குன்றின் மேலுள்ளது. இச்சமணக் கோயிலின் கிழக்குச் சுவரில் 19 வரிகளைக் கொண்ட சமஸ்கிருதக் கல்வெட்டு ஒன்று உள்ளது. (சக வருடம் 555: கி.பி.634-635 காலத்தைச் சேர்ந்தது). இக்கல்வெட்டுச் செய்திகளை எழுதியவர் ரவிகீர்த்தி என்ற கவிஞர். இக்கல்வெட்டு சாளுக்கிய அரசர்களைக் குறிக்கும் மெய்கீர்த்தியாகும். குறிப்பாக அப்போது ஆட்சி செய்து கொண்டிருந்த இரண்டாம் புலிகேசி 'சத்யஸ்ராய' (உண்மையின் உறைவிடம்) என்று குறிப்பிடப்பட்டுள்ளான். இக்கல்வெட்டு சாளுக்கியரின் அரசவம்ச வரலாற்றை, இரண்டாம் புலிகேசி தன் பகைவர்கள் அனைவரையும் குறிப்பாக ஹர்சவர்தனரைத் தோற்கடித்ததைக் கோடிட்டுக் காட்டுகிறது.

**பல்லவர்**

பல்லவர்களின் தோற்றம் குறித்து அறிஞர்களிடையே கருத்தொற்றுமையில்லை. தொடக்ககால அறிஞர்கள் சிலர் பார்த்தியர் எனும் அரச மரபின் மற்றொரு பெயரான 'பஹல்வ' என்ற சொல்லின் திரிபே 'பல்லவ' ஆகும். என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டில் சாகர், சாதவாகனர்க்கிடையே போர்கள் நடைபெறுகையில் மேற்கிந்தியாவிலிருந்து தீபகற்பகத்தின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளுக்குப் பார்த்தியர் குடி பெயர்ந்தனர்.

பல்லவர்கள் வடபெண்ணை ஆற்றுக்கும், வட வெள்ளாற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பான தொண்டை மண்டலத்தோடு தொடர்புடையவராவர். சிம்மவர்மனின் மகனான சிம்மவிஷ்ணு காவேரி வரை முன்னேறி சோழர்களுக்குச் சொந்தமான பகுதிகளைக் கைப்பற்றி, தன் தந்தை தொடங்கிய பல்லவ வம்ச ஆட்சியை ஒருங்கிணைக்கும் பணியை மெற்கொண்டார்.

களப்பிரர்களை முற்றிலும் அழித்தொழித்து காவேரி வரை முன்னேறி அவர்களின் பகுதிகளைக் கைப்பற்றியபோது பாண்டியர்களோடு மோத வேண்டியதாயிற்று.

சிம்மவிஷ்ணுவைத் தொடர்ந்து அவரது மகன் முதலாம் மகேந்திரவர்மன் (பொ.ஆ. 590-630) அரியணை ஏறினார்.

சமண மதத்தைப் பின்பற்றிய இவரை அப்பர் சைவராக மாற்றினார்.

மகேந்திரவர்மனின் ஆட்சிக் காலத்தில் இரண்டாம் புலிகேசி, பல்லவ அரசினுடைய வடபகுதிகளைக் கைப்பற்றித் தலைநகர் காஞ்சிபுரம் வரை முன்னேறினார். இதனைத் தொடர்ந்து முதலாம் நரசிம்மவர்மனின் ஆட்சிக் காலத்தில்(630-668) பதிலடி கொடுக்கும் விதத்தில் பல்லவர்கள் சாளுக்கியர்களுக்கு எதிராகப் பல வெற்றிகளை ஈட்டினர்.

இப்போர்களில் பல்லவர்களுக்கு மானவர்மன் எனும் இலங்கை இளவரசர் உதவினர். இவ்விளவரசரே பின்னர் இலங்கையின் அரசராகப் பதவியேற்றார்.

இப்போர்களின் உச்சகட்டமாக நரசிம்மவர்மன் சாளுக்கிய அரசின் தலைநகரான வாதாபியைக் கைப்பற்றினார்.

இரண்டாம் புலிகேசி இப்போரில் கொல்லப்பட்டார். நரசிம்மவர்மன் சேர சோழர்களையும் களப்பிரர்களையும் வெற்றி கொண்டதாகக் கூறுகிறார். இலங்கை அரசன் மானவர்மனுக்கு ஆதரவாக இருமுறை அனுப்பப்பட்ட கப்பற்படைகள் வெற்றி பெற்றன. இருந்தபோதிலும் இலங்கை அரசர் தனது பதவியினை இழந்தார்.

பல்லவ சாளுக்கியப் பகைமையும் மோதல்களும் தொடர்ந்தன. இடையிடையே அமைதியும் நிலவியது. பல்லவ அரசன் முதலாம் பரமேஸ்வர்மனின் ஆட்சியின்போது (670-700) சாளுக்கிய அரசர் விக்கிரமாதித்யன் பல்லவ நாட்டின்மீது படையெடுத்தார்.

முதலாம் பரமேஸ்வர்மன் கங்கர் பாண்டியர் ஆகியோரின் உதவியோடு விக்கிரமாதித்தனை எதிர்த்துப் போரிட்டர்.

ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில், தண்டிவர்ம பல்லவனின் ஆட்சியின்போது காஞ்சிபுரம் ராஷ்ட்டிரகூட அரசர் மூன்றாம் கோவிந்தனின் தாக்குதலுக்கு உள்ளானது.

தண்டிவர்மனின் மகன் மூன்றாம் நந்திவர்மன், மேலைக் கங்கர் சோழர் ஆகியோரின் ஆதரவோடு பாண்டியரை ஸ்ரிபிரம்பியம் அல்லது திரும்புறம்பியம் போரில் தோற்கடித்தான்.

மூன்றாம் நந்திவர்மனின் பேரனான அபராஜிதன் தொண்டை மண்டலப்பகுதியின் மீது படையெடுத்து வந் முதலாம் ஆதித்த சோழனோடு போர்புரிந்து மடிந்தான்.

இத்துடன் பல்லவரின் ஆட்சி முடிவுக்கு வந்தது. இதன் பின்னர் தொண்டை மண்டலம் சோழர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

**கிராம வாழ்க்கை**

கிராம அளவில் அடிப்படையான அமைப்பு ‘சபை’ ஆகும். அறக்கட்டளைகள், நிலம் நீர்ப்பாசனம், வேளாண்மை, குற்றங்களுக்கான தண்டனை, மக்கள் தொகை உள்ளிட்ட தேவைப்படும் ஏனைய ஆவணங்களைப் பாதுகாத்தல் ஆகியன போன்ற கிராமத்தோடு தொடர்புடைய அனைத்து செயல்பாடுகளிலும் சபை அக்கறை செலுத்தியது.

இதற்கு மேலான மாவட்ட குழு ‘நாடு’ அல்லது மாவட்ட நிர்வாகத்தோடு இணைந்து செயல்பட்டது. பிராமணர்கள் மட்டுமே வாழந்த அல்லது பிராமணர்கள் அதிகமாக வாழ்ந்த கிராமங்கள் இவ்வமைப்புகளின் செயல்பாடுகள் தொடர்பான ஆவணங்களைப் பாதுகாத்தன.

**ஏரி நீர்பாசனம்**

ஏரிப்பட்டி அல்லது ஏரிநிலம் எனும் சிறப்புவகை நிலத்தை தென்னிந்தியாவில் மட்டுமே அறிகிறோம். தனிப்பட்ட மனிதர்கள் கொடையாகக் கொடுத்த

இந்நிலங்களிலிருந்து பெறப்படும் வரி கிராமத்து ஏரிகளைப் பராமரிப்பதற்காகத் தனியாக ஒதுக்கி வைக்கப்படும்.

பல்லவர் காலக் கல்வெட்டுகள் அனைத்தும் ஏரிப் பராமரிப்பைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. ஏரிகளுக்கு அடுத்த நிலையில் கிணறுகள் முக்கியமானவை.

நீர் பகிர்வினை முறைப்படுத்தவும், அளவுக்கு அதிகமாகச் சேர்ந்த நீரை வெளியேற்றவும் மதகுகள் அமைக்கப்பட்டிருந்தன. கிராமத்தாரால் நியமிக்கப்பட்ட ஏரிக்குழு எனும் அமைப்பு நீர் பகிர்வை மேற்பார்வையிட்டது. ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவைக் காட்டிலும் அதிகமான நீரைச் பயன்படுத்தி வேளாண்மை செய்வோர்மீது வரி விதிக்கப்பட்டது.

**வருவாயும் வரிவிதிப்பும்**

செப்புப்பட்டயங்களில் பதிவு செய்யப்பட்ட நிலமானியங்களே முக்கியமாக நில வருவாய், வரிவிதிப்பு ஆகியன குறித்தும் விரிவான தகவல்களை முன்வைக்கின்றன. வருவாயானது முதன்மையாக கிராம ஆதாரங்களிலிருந்தும், வணிக மற்றும் நகரங்களைச் சேர்ந்த நிறுவனங்களிலிடமிருந்தும் பெறப்பட்டது. கிராமங்களின் மீது இருவகைப்பட்ட வரிகள் விதிக்கப்பட்டன. வேளாண் மக்கள் விளைச்சலில் ஆறில் ஒரு பங்கில் தொடங்கி பத்தில் ஒரு பங்கு வரை வரியாக அரசுக்குச் செலுத்தினர். இவ்வரியை கிராமமே வசூல் செய்து அரசின் வசூல் அதிகாரியிடம் கட்டியது. இரண்டாவது வகைப்பட்ட வரிகள் உள்ளூர் அளவில் வசூலிக்கப்பட்ட வரிகளாகும். ஆனால் இவ்வரிகள் அந்தக் கிராமத்தின் சேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன. இவ்வரிப்பணம் நீர்ப்பாசன அமைப்புகளைப் பழுதுபார்த்தல், கோயில்களுக்கு விளக்கேற்றுதல் போன்றவற்றிற்கே செலவிடப்பட்டன. நிலவரியின் மூலமாகப் பெறப்படும் வருவாய் போதுமானதாக இல்லையெனில் அரசு கால்நடை வளர்ப்போர், கள் இறங்குவோர், திருமண வீட்டார், மட்பாண்டம் செய்வோர், தங்க வேலை செய்வோர், சலவை செய்வோர், துணிநெய்வோர், கடிதங்கள் சுமந்து செல்வோர், நெய் தயாரிப்போர், இடைத்தரகர்கள் ஆகியோரிடம் வரிவசூலித்து பற்றாக்குறையைச் சரிசெய்து கொள்ளும்.

**வணிகம்**

பல்லவர் காலத்தில் காஞ்சிபுரம் முக்கியமான வணிக மையமாக இருந்தது. வணிகர்கள் தங்கள் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கு அரசிடம் உரிமம் பெற வேண்டும். பொதுவாகப் பண்டமாற்று முறையே நடைமறையில் இருந்தது.

வணிகர்கள் தங்களுக்கென 'மணிக்கிராமம்' போன்ற அமைப்புகளைக் கொண்டிருந்தனர். வெளிநாட்டு வணிகத்தில் நறுமணப் பொருள்கள், பருத்தி ஆடைகள் விலையுயர்ந்த கற்கள், மூலிகைகள் ஆகியவை ஜாவா, சுமத்ரா, கம்போடியா, இலங்கை, சீனா, மியான்மர் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. மாமல்லபுரம் ஒரு முக்கியத் துறைமுகமாக விளங்கியது.

**பிராமணியத்தின் வளர்ந்து வந்த செல்வாக்கு**

இதோடு மகேந்திரவர்மனும் சமண மதத்தின் மீது கொண்டிருந்த பற்றை இழந்து சைவ மதத்தைப் பின்பற்றத் தொடங்கினார். அதனால் சமணர்கள் அரச ஆதரவை இழந்தனர். காஞ்சியிலும் மதுரையிலும் சமணர்கள் சில கல்வி

நிலையங்களையும் கர்நாடகாவிலுள்ள சரவணபெலாகொலாவில் உள்ளதைப் போன்று சமணமத மையங்களையும் நிறுவினர். ஆனால் சமணத் துறவிகளில் பெரும்பாலோர் தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு காடுகளிலும் குன்றுகளிலும் உள்ள குகைகளில் வாழவே விருப்பம் கொண்டனர்.

**மங்களும் மடாலயங்களும்**

நாளந்தா பல்கலைக்கழகத்திற்கு இணையான புகழைப் பெற்றிருந்த காஞ்சி பல்கலைக்கழகத்தைத் தவிர வேறு சில சமஸ்கிருதக் கல்லூரிகளும் செயல்பட்டு வந்தன.

சமஸ்கிருதம் அங்கீகரிக்கப்பட்ட ஊடக மொழியாகவும் அரசசபையின் அலுவலக மொழியாகவும் இருந்ததால் இலக்கிய வட்டாரங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**பல்லவரின் குடைவரைக் கோயில்கள்**

பல்லவர் பகுதிகளில் குடைவரைக் கோயில்களை அறிமுகம் செய்த பெருமை முதலாம் மகேந்திரவர்மனைச் சேரும். பிரம்மா, ஈஸ்வரா, விஷ்ணு ஆகியோர்க்கு, தான் கட்டிய கோயில்கள்.

முதலாம் மகேந்திரவர்மன் தனது மண்டகப்பட்டுக் கல்வெட்டில் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார். மகேந்திரவர்மனின் குடைவரைக் கோயில்கள் வழக்கமாக மண்டப பாணியில் தூண்களைக் கொண்ட ஒரு மண்டபத்தைக் கொண்டிருக்கும்.

**எல்லோரா – அஜந்தா – மாமல்லபுரம்**

எல்லோராவிலுள்ள குடைவரைக் கோயில்களில் 34 குகைகள் சரணத்ரி மலையில் அமைந்துள்ளன. கோணவியல், கட்டுமானத் தொழில்நுட்பம், உலோகவியல் ஆகிய துறைகளைப் பற்றிய அறிவு இந்தியக் கட்டடக்கலையாளர்களுக்கு இல்லாமல் இருந்திருந்தால் இவை போன்ற நேர்த்தியான பெருங்கட்டடங்களை உருவாக்கியிருக்க முடியாது.

எல்லோராவில் ஐந்து குகைகளில் சுவரோவியங்கள் காணப்படுகின்றன. ஆனால் கைலாசநாதர் கோயிலில் உள்ளவை மட்டும் நன்கு பாதுகாக்கப்பட்டுள்ளன. சமணர் கோயில்களில் உள்ள சில சுவரோவியங்களும் நன்கு பாதுகாக்கப்பட்டுள்ளன. விலங்குகள், பறவைகள், மரங்கள், பூக்கள் ஆகியவை நேர்த்தியாக எழிலோடு தீட்டப்பட்டுள்ளதோடு ஆசை, அன்பு, பரிவு ஆகிய மனித இயல்புகளின் வெளிப்பாடும் தொழில் வல்லமையுடன் தீட்டப்பட்டுள்ளன.

எல்லோரா குகைகளை 1983இல் உலகப் பாரம்பரியச் சின்னமாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது.

**மாமல்லபுரம்**

பல்லவர்களின் அடையாளமாகக் கருதப்படும் மாமல்லபுரம் மகாபலிபுரம்) கடற்கரைக் கோயில் ராஜசிம்மனின் (700-728) ஆட்சிக் காலத்தில் எழுப்பியதாகும். இக்கோயில் மூன்று கருவறைகளைக் கொண்டுள்ளது. அவற்றில் முக்கியமானவை

சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் படைத்தளிக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் வெளிப்புறச் சுவர் விஷ்ணுவிற்குப் படைத்தளிக்கப்பட்டுள்ளது. எல்லைச் சுவற்றின் உட்பக்கம் விரிவான செதுக்கு வேலைப்பாடுகளையும் சிற்பங்களையும் கொண்டுள்ளது. தென்னிந்தியாவில் கட்டுமானக் கோயில்களில் இது முதன்மையானதாகும். இப்பகுதியிலுள்ள ஏனைய கோயில் பாறையில் செதுக்கப்பட்ட ஐந்து அடுக்குகளைக் கொண்ட கோவிலாகுமத். ஒரே கல்லில் செதுக்கப்பட்ட விமானங்கள் மாமல்லபுர பல்லவர் கோயில்களின் சிறப்புப் பண்பாகும்.

இங்குள்ள ஒற்றைக்கல் தேர்கள், பஞ்சபாண்டவர் ரதம் என அறியப்படுகின்றன. அர்ச்சுன ரதத்தில் கலை நுணுக்கத்தோடு செதுக்கப்பட்ட சிவன், விஷ்ணு, மிதுனா, துவாரபாலக சிலைகள் உள்ளன. இவ்வைந்து ரதங்களில் மிக நேர்த்தியானது தர்மராஜ ரதமாகும். இது சதுர வடிவிலான அடித்தளத்தையும், மூன்றடுக்கு விமானத்தையும் கொண்டுள்ளது. பீம ரதம் செவ்வக வடிவ அடித்தளத்தையும், அழகான ஹரிஹரர், பிரம்மா, விஷ்ணு, ஸ்கந்தர், சிவன், அர்த்தநாரிஸ்வரர், கங்காதரர் ஆகியோரின் சிற்பங்களையும் கொண்டுள்ளது. மாமல்லபுரத்தில் செதுக்கப்பட்டுள்ள கலை வெளிப்பாட்டில் மிக முக்கியமானது கங்கை நதி ஆகாயத்திலிருந்து இறங்கிவரும் ஆகாய கங்கை காட்சியாகும். (இது பாகீரதன் தவம், அர்ஜுனன் தவம் என்றும் அறியப்படுகிறது.) புராண உருவங்களை பிரபலமான உள்ளூர் கதைகளோடு இணைத்து சிற்பங்களாகக் காட்சிப்படுத்துவது மனித மற்றும் விலங்குகளின் வாழக்கைக் கூறுகளை சீராகக் கலக்கும் கலைஞனின் திறமையைப் பறைசாற்றுகின்றன. கிருஷ்ண மண்டபச் சுவர்களில் மிக அழகாகவும் கலை நுணுக்கத்தோடும் செதுக்கப்பட்டுள்ள பசுக்கள், பசுக் கூட்டங்கள் போன்ற கிராமத்து காட்சிகள் ரசிப்பதற்கான மற்றுமொரு கலை அதிசயமாகும்.

**தமிழ் பக்தி இயக்கம்**

பக்தி இயக்கம் ஒரு மதம் சார்ந்த இயக்கமாக இடைக்காலத் தமிழக வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறந்து வைத்தது.

நாயன்மார், ஆழ்வார் ஆகியோர் இயற்றிய பாடல்களே தமிழ் பக்தி இயக்கத்தின் அடிப்படையாகும்.

சைவ, வைணவ அடியார்கள் தங்கள் பாடல்களோடு இசையைக் கலந்து அதன் பயன்பாட்டை எளிமைப்படுத்தினர்.

பன்னிரு ஆழ்வார்களும் அறுபத்து மூன்று நாயன்மார்களும் தமிழ்ச் சமூகத்தின் கைவினைஞர்கள், வேளாண்குடியினர் போன்ற பல பிரிவுகளிலிருந்து வந்தவராவர். இவர்களுள் ஆண்டாள் போன்ற பெண் அடியாரும் அடங்குவர்.

ஆண்டாள் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். கவிஞர் காரைக்கால் அம்மையார், பாண்டிய அரசி மங்கையற்கரசியார் ஆகியோர் பெண் நாயன்மார்கள் ஆவர்.

பௌத்த சமண மதங்களுக்கு வலுவான சவாலாக அமைந்தன. சற்றே கூர்ந்து நோக்கினால் பக்தி இயக்கத்தின் தாக்கத்தை நாம் இன்றும் தமிழகத்தில் காணமுடியும்.

## சான்றுகள்

தேவாரம், நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம், திருத்தொண்டத்தொகை, மாணிக்கவாசகரின் திருவாசகம், பெரியபுராணம் முதலான பக்தி இயக்கப் பாடல்களே பக்தி இயக்க வரலாற்றிற்கான முக்கியச் சான்றுகளாகும். கோயில்களும் கோயில் கல்வெட்டுகளும் சுற்றுப்பிரகாரங்களிலுள்ள சிறிய சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவையும் சான்றுகளாகப் பயன்படுகின்றன.

## ஆழ்வார்கள் நாயன்மார்கள்
### ஆழ்வார்கள்

ஆழ்வார்கள் வைணவப் பாடல்களை இயற்றினர். ஒப்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இப்பாடல்கள் அனைத்தையும் (நான்காயிரம்) நாலாயிர திவ்வியப்பிரபந்தமாக நாதமுனி தொகுத்தார். நாதமுனி திருவரங்கம் ரங்கநாதர்கோயிலில் அர்ச்சகராகப் பணியாற்றியவர். ஒன்பதாம் நூற்றாண்டில் பாண்டிய மன்னன் ஸ்ரிமாற ஸ்ரிவல்லபனின் ஆட்சிக் காலத்தில் திருவில்லிப்புத்தூரில் வாழ்ந்தவர் பெரியாழ்வார். கண்ணனின் குழந்தைப் பருவமே அவருடைய பாடல்களின் கருவாயிருந்தது.

தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள குருகூரைச் (ஆழ்வார்திருநகரி) சேர்ந்தவர். திருவாய்மொழி உட்பட நான்கு நூல்களை அவர் எழுதியுள்ளார். அவருடைய பாடல்கள் நான்கு வேதங்களின் சாரத்தை வடித்தெடுத்து எழுதப்பட்டதென்பது வைணவ நம்பிக்கை. பன்னிரண்டாம் நூற்றாண்டு முதலாக வைணவப் பாடல்களுக்கு விரிவான புலமையுடன் கூடிய விளக்கவுரைகள் எழுதப்பட்டன.

### நாயன்மார்கள்

சைவக் கவிஞர்களில் முக்கியமானவர்கள் திருநாவுக்கரசர்(அப்பர்), திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆவர்.

பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் நம்பியாண்டார்நம்பி இவர்களின் பாடல்களைத் திருமுறைகளாகத் தொகுத்தார்.

தேவாரம் என்றறியப்படும் முதல் ஏழு நூல்களில் உள்ள பாடல்கள் சம்பந்தர் (1-3) அப்பர் (4-6) சுந்தரர் (7) ஆகியோரால் இயற்றப்பட்டனவாகும். எட்டாம் திருமுறை மாணிக்கவாசகரின் பாடல்களைக் கொண்டதாகும்.

சேக்கிழாரின் பெரியபுராணத்தோடு சேர்த்து பன்னிரண்டு நூல்கள் உள்ளதாலும் இவை பன்னிரு திருமுறை என்று போற்றப்படுகின்றன.

பெரியபுராணம் சோழர் காலத்தல் இயற்றப்பட்டதாகும். இது அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாற்றைச் சொல்லுவதோடல்லாமல் அவர்தம் வாழ்வில் நடந்த அதிசய சம்பவங்கள் குறித்தும் பெரியபுராணம் கூறுகிறது.

## ஆதிசங்கரர் (788-820)

பக்தி இலக்கியங்கள் எளிய தமிழில் அனைவரும் புரிந்துகொள்ளும் வண்ணம் பொருட் செறிவோடு இசைபட கருத்துகளை முன்வைத்தன.

ஆதிசங்கரரின் வருகையோடு இக்கருத்துகள் குறித்த விவாதங்கள் சமஸ்கிருத மொழியில் பேசப்பட்டதால் ஒரு சிலர் மட்டுமே புரிந்து கொள்ளும் நிலை ஏற்பட்டது.

**ஆதிசங்கரரின் வருகை**

கேரள மாநிலம் காலடியைச் சேர்ந்த சங்கரர் என்பவரால் முன்வைக்கப்பட்டது. மாயை கோட்பாடு குறித்துப் பல்வேறு மதப் பிரிவுகளைச் சார்ந்தவர்களோடு விவாதம் செய்து வென்றார்.

அடிப்படையில் ஆதிசங்கரரின் அத்வைதக் கோட்பாடு வேதாந்தம் அல்லது உபநிடதத் தத்துவங்களில் வேரூன்றி அல்லது உபநிடதத் தத்துவங்களில் வேரூன்றி இருந்தது.

சிருங்கேரி, துவாரகை, பத்ரிநாத், பூரி மடங்கள் உருவாயின.

பிராமண மடாதிபதிகள் அவற்றிற்குத் தலைமை தாங்கினர்.

**ஸ்ரீராமானுஜர் (1017-1138)**

ஸ்ரீபெரும்புதூரில் பிறந்த ஸ்ரிராமானுஜர் காஞ்சிபுரத்தில் சங்கரரின் கோட்பாட்டை ஏற்றுக்கொண்ட யாதவபிரகாசரிடம் தத்துவப் பயிற்சி பெற்றார்.

குருவின் கருத்துக்களை ஏற்க மறுத்த இளம் ராமானுஜர் யமுனாச்சாரியாரின் திருவரங்கத் தத்துவப் பள்ளியின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார்.

ராமானுஜரை ஒருமுறை பார்த்த யமுனாச்சாரியார் அவரை திருவரங்கத்திற்கு வரவேற்றார்.

ராமானுஜர் திருவரங்கத்திற்குச் சென்ற சில நாட்களில் யமுனாச்சாரியார் இயற்கை எய்தினார்.

ராமானுஜரே திருவரங்கம் மடத்தின் தலைவராக அறிவிக்கப்பட்டார்.

கோயில் சடங்குகளை மாற்றியமைத்தார். ராமானுஜர் ஓர் சிறந்த ஆசிரியர், சீர்திருத்தவாதி, திட்டமிட்டு செயல்பட்டார். அவர் ஆதிசங்கரரின் அத்வைதக் கோட்பாட்டை மறுத்தார். வைணவத்தின் சமூகத்தளத்தை விரிவடையச் செய்யும் நோக்கில் பிராமணர் அல்லாதோரையும் இணைத்துக் கொண்டார்.

அவர் முன்வைத்த விசிடாத்வைதம் சிந்தனையாளர்களிடம் செல்வாக்குப் பெற்று தனிமரபாக வளர்ச்சி பெற்றது.

ராமானுஜர் வர்ணாசிரம அமைப்புக்கு வெளியே இருந்தோரிடமும் பக்திக் கோட்பாட்டைப் பரப்புவதில் ஆர்வம் கொண்டார்.

வர்ணாசிரம அமைப்புக்கு வெளியே இருந்தோரையும் ஆண்டிற்கு ஒருமுறையாவது கோயில்களில் நுழைய அனுமதிக்கச் செய்தார்.

## பிற்காலச் சோழர்கள், பாண்டியர்கள்

### சோழர்

### சோழப் பரம்பரையின் தோற்றம்

சங்க காலத்துக்குப் பிறகு கிடைக்கும் ஆவணங்களின்படி, காவிரிப்பகுதியில் சோழர் பல்லவருக்குக் கீழ்நிலை ஆட்சியாளர்களாக இருந்துள்ளார்கள் எனத் தெரிகிறது.

விஜயாலயன் (பொ.ஆ. 850-871) முத்தரையர்களிடமிருந்து காவிரி ஆற்றின் கழிமுகப்பகுதிகளை வென்றார்.

அவர் தஞ்சாவூர் நகரைக் கட்டமைத்து, 859இல் சோழ அரசை நிறுவினார்.

பிற்காலச் சோழர் என்றும் பேரரசுச்சோழர் என்றும் குறிப்பிடுகிறார்கள்.

விஜயாலயனுக்குப் பின் வந்த சோழ அரசர்கள் தாங்கள் சங்க காலத்தின் புகழ்பெற்ற சோழ அரசரான கரிகாலனின் மரபில் வந்தவர்கள் எனச் செப்பேடுகளில் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் தமது மரபுவழிப்பட்டியலில் 'சோழ' என்ற பெயருடைய அரசரைத் தமது மூதாதையராகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

கிள்ளி, சோச்செங்காணன், கரிகாலன் எனும் பெயர்களைக் கொண்ட சோழ அரசர்கள் தங்கள் கொடிவழியைச் சேர்ந்தவர்ள் என இச்செப்பேடுகளில் குறிப்பிட்டுள்ளார்கள்.

விஜயாலயனுக்குப் பின்வந்தோரில் முதலாம் பராந்தகன் (907-955) முதல் மூன்றாம் குலோத்துங்கன் வரையான அரசர்கள் சோழருக்குப் பெருமையும் புகழும் சேர்த்தனர்.

பராந்தகச் சோழன், நாட்டின் எல்லையை விரிவுபடுத்தினார் ஆட்சிமுறையின் அடித்தளத்தையும் விரிவாக்கினார்.

முன்னோடிகள் மூலம் ஏற்பட்டிருந்த வளர்ச்சிகளை ஒருங்கிணைத்து, தீபகற்ப இந்தியாவில சோழரின் மேலாதிக்கத்தை நிறுவினர்.

### சான்றுகள்

சோழர் தங்களது பரந்து விரிந்த பேரரசை ஆள்வதற்கு வலுவான நிர்வாகக் கட்டமைப்பபை ஊரவாக்கியதுடன், பிற்கால வரலாற்றாய்வாளர்களுக்கு உதவும்வண்ணம் பெரும் எண்ணிக்கையிலான வரலாற்றுச் சான்றுகளையும் விட்டுச் சென்றுள்ளனர்.

செப்பேடுகளிலும் கல்லிலும் 10,000க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் சோழர் வரலாற்றுக்கான முதல்நிலைச் சான்றுகளாக உள்ளன. இந்த வரலாற்று ஆவணங்களில் பெரும்பான்மையானவை அரசர்களும் பிறரும் கோயில்களுக்கு வழங்கிய கொடை குறித்த தகவல்களாகவே உள்ளன.

பெருங்காவிய நூலான கம்ப ராமாயணம் இலக்கிய வடிவிலான வரலாற்று நூல்களான கலிங்கத்துப்பரணி,

குரோத்துங்கச்சோழன் பிள்ளைத்தமிழ், மூவருலா ஆகியன

**பேரரசு உருவாக்கம்**

சோழ அரசர்களில் மிகவும் போற்றப்படுபவர் முதலாம் இராஜராஜன், அவரது கடல் கடந்த படையெடுப்புகள் மேற்குக்கடற்கரை, இலங்கை ஆகியவற்றில் வெற்றியைப் பெற்றுத்தந்தன. அவர் இந்தியப் பெருங்கடலில் மாலத்தீவுகளைக் கைப்பற்றியதும் இதில் சேரும்.

இலங்கையை வென்றதன் மூலம் அதன் வடக்கு கிழக்குப் பகுதிகள் சோழ அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் வந்தன. புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளை நிர்வகிப்பதற்கு ஒரு தமிழ் தளபதியை இராஜராஜன் நியமித்ததுடன், அங்கு ஒரு கோயில் கட்டவும் ஆணை பிறப்பித்தார்.

அக்கோயில் ‘சிவ-தேவாலே’ (சிவாலயம்) எனப்படுகிறது. இவரால் ‘மகாதிட்டா’ என்ற இடத்தில் கட்டப்பட்ட கோயில் ‘இராஜராஜேஸ்வரம்’ என அழைக்கப்படுகிறது.

இராஜராஜன் தன் மகன் முதலாம் இராஜேந்திரனை வாரிசாக அறிவித்தார். இருவரும் இரு ஆண்டு காலம் கூட்டாக ஆட்சி செய்தார்கள்.

முதலாம் இராஜேந்திரன் தன் தந்தையின் படையெடுப்புகளில் பங்கேற்று, மேலைச்சாளுக்கியரைத் தாக்கி, சோழ அரசின் எல்லையைத் துங்கபத்திரை ஆறு வரை விரிவுப்படுத்தினார்.

இராஜராஜன் மதுரை மீது தாக்குதல் தொடுத்தபோது பாண்டியர் தங்கள் மணிமுடி மற்றும் அரச நகைகளுடன் தப்பி, இலங்கையில் அடைக்கலம் புகுந்தார்கள். எனவே முதலாம் இராஜேந்திரன் இலங்கையை வென்று பாண்டியரின் மணிமுடியையும் பிற அரச உடைமைகளையும் கைப்பற்றினார்.

முதலாம் இராஜேந்திரன் அரசராகப் பொறுப்பேற்ற பின் 1023இல் வட இந்தியாவின் மீது மிகத் தீவிரமான ஒரு படையெடுப்பை நிகழ்த்தினார். இதற்காகப் படைகளைக் கோதாவரி ஆறு வரை அவரே வழிநடத்திச் சென்றார். கோதாவரியைக் கடந்த பிறகு படைக்குத் தலைமையைத் தனது தளபதியிடம் ஒப்படைத்தார்.

தமிழர்களின் கடல்வழிச் சாதனைகள் சோழர் காலத்தில் உச்சத்தை எட்டின. சோழர் சோழ மண்டலக் கடற்கரையோடு, மலபார் கடற்கரையையும் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். வங்காள விரிகுடாப் பகுதியில் சோழரின் செல்வாக்குப் சில பத்தாண்டு காலத்திற்கு நீடித்தது. இராஜேந்திரனின் கடற்படை ஸ்ரிவிஜயா (தெற்கு சுமத்ரா) மீது தாக்குதல் தொடுத்தது. தென்கிழக்கு ஆசியாவில் 700க்கும் 1300க்கும் இடையே செழித்து வளர்ந்த நாடுகளுள் ஸ்ரிவிஜயாவும் ஒன்றாகும். இது வலிமையான கடற்படை கொண்டதாகவும் வணிகத்தில் சிறந்ததாகவும் இருந்தது. இதே போன்று குறுநில மன்னரின் ஆட்சியின் கீழ் இருந்த கெடாவும்(கடாரம்) இராஜேந்திரனால் தோற்கடிக்கப்பட்டது. எனவே, இராஜேந்திரனுக்கு ‘கடாரம் கொண்டான்’ என்ற பட்டம் சூட்டப்பட்டது.

மேலைச் சாளுக்கிய அரசின் மீது 1003இல்முதலாம் இராஜராஜன் தொடுத்த போரும் 1009இல் முதலாம் இராஜேந்திரன் தொடுத்த போரும் அவர்களுக்கு வெற்றியைத் தந்தன. சாளுக்கியரின் தலைநகரான கல்யாணியைத் தகர்ப்பதற்கு இராஜேந்திரன் தன் மகனை அனுப்பினார். அங்கிருந்து கொண்டுவரப்பட்ட துவாரபாலகர் (வாயிற்காப்போன்) சிலையைக் கும்பகோணத்திலுள்ள தாராசுரம் கோயிலில் இன்றும் காணலாம். இராஜேந்திரன் முடிகொண்ட சோழன், கங்கை கொண்டான், கடாரம் கொண்டான், பண்டித சோழன் போன்ற பட்டங்கள் சூடிக்கொண்டார்.

**உள்ளாட்சி அமைப்பு**

சோழர் காலத்தில் பல்வேறு உள்ளாட்சிக் குழுக்கள் சிறப்பாக இயங்கியுள்ளன. அவை, ஊரார், சபையார், நகரத்தார், நாட்டார் ஆகியவை அத்தகு குழுக்கள் ஆகும். இவை ஒப்பீட்டளவில் தன்னாட்சி உரிமை கொண்டவையாக இயங்கின. இந்த அடித்தளத்தின் மீதுதான் சோழப் பேரரசு கட்டமைக்கப்பட்டது.

**ஊரார்**

வேளாண்மை விரிவாக்கத்தைத் தொடர்ந்து கிராமப்புறங்களில் வேளாண் குடியிருப்புகள் அதிகளவில் தோன்றின.

அவை ஊர் என அழைக்கப்பட்டன. அந்த ஊர்களில் நிலஉடமையாளர்களே ஊரின் பிரதிநிதிகளாகச் செயல்பட்டார்கள். அவர்கள் உரார் என அழைக்கப்பட்டார்கள்.

**சபையார்**

ஊர் என்பது நில உடைமை சார்ந்தோரின் குடியிருப்பு ஆகும். இது வேளாண்வகை கிராமம் என அழைக்கப்பட்டது. பிரம்மதேயம் என்பது பிராமணர்களின் குடியிருப்பாகும்.

பிரம்மதேயத்தின் மையமாக விளங்கிய கோயில்கள், அவற்றின் சொத்துகள் ஆகியவற்றை நிர்வகிப்பது, பிரம்மதேய குடியிருப்பகளைப் பராமரிப்பது ஆகிய பணிகளை ‘சபை’கள் மேற்கொண்டன.

**நகரத்தார்**

இராஜராஜனின் ஆட்சியில் மாமல்லபுரம் ‘மாநகரம்’ என்ற குழுவால் நிர்வகிக்கப்பட்டது. உள்ளூர் பொருள்கள் நகரங்களில் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டன.

ஏலக்காய் போன்றவை இவ்வாறு பரிமாற்றம் செய்யப்பட்டதாகச் சீன வரலாற்றுக்குறிப்புகள் கூறுகின்றன. உள்நாட்டிலும் கடல் கடந்தும் வணிகத்தை ஊக்குவிப்பதற்காகக் குலோத்துங்கன் சுங்கவரிகளை நீக்கினார். எனவே அவர் ‘சுங்கம் தவிர்த்த சோழன்’ எனப்படுகிறார்.

**நாட்டார்**

பிரம்மதேயங்கள் நீங்கலாகப் பல ஊர்களின் தொகுப்பு நாடு எனப்பட்டது. கால்வாய்கள் குளங்கள் போன்ற பாசன ஆதாரங்களைச் சுற்றி இவை உருவாக்கப்பட்டிருந்தன. வேளாண் வகை கிராமங்களில் நிலம் வைத்திருந்தவர்களின் மன்றம் நாட்டார் எனப்பட்டது.

**உள்ளாட்சித் தேர்தல்களும் உத்திரமேரூர் கல்வெட்டுகளும்**

பிரம்மதேயங்களில் (பிராமணர்களுக்கு வரிவிலக்குடன் அளிக்கப்பட்ட நிலம்) ஒன்றாக இருந்த உத்திரமேரூரில் (உத்திரமல்லூர் சதுர்வேதி மங்கலம்) கிடைத்த இரு கல்வெட்டுக் குறிப்புகள் (பொ.ஆ.919-இலும் 921-இலும் அறிவிக்கப்பட்டவை) மூலம் சோழர் கால உள்ளாட்சித் தேர்தல் முறையை அறிய முடிகிறது. இவை ஒரு பிராமணக் குடியிருப்புக்கான பணிகளை மேற்கொள்வதற்கு வெவ்வேறு குழுக்களைச் சேர்ந்த உறுப்பினரைத் தேர்வு செய்யும் முறையைத் தெரிவிக்கின்றன.

அதன்படி, கிராமம், 30 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவுக்கும் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் தேர்வானவர்கள் அனைவரும் சேர்ந்து வெவ்வேறு குழுக்களை உருவாக்குவார்கள். அவை பொதுப்பணிக்குழு, குளங்களுக்கான குழு, தோட்டங்களுக்கான குழு, பஞ்ச நிவாரணக் குழு, தங்கம் தொடர்பான குழு ஆகியனவாகும்.

உறுப்பினராகப் போட்டியிடுவோரின் தகுதிகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆண்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும். போட்டியாளர் 35 வயதுக்கு மேலும் 75 வயதுக்குக் கீழும் உள்ளவராக இருக்க வேண்டும். சொத்தும் சொந்த வீடும் உடையவராக இருக்க வேண்டும். வேதங்களிலும் பாஷ்யங்களிலும் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

ஒரு பிரிவில் போட்டியிடக்கூடிய அனைவருடைய பெயர்களும் தனித்தனிப் பனையோலைகளில் எழுதப்பட்டு, அவை ஒரு பானையில் இடப்படும் (குடவோலை). சபையில் வயதில் மூத்தவர் ஒரு சிறுவனை அழைத்து, பானையிலிருந்து ஓர் ஓலையை எடுக்கம்படி கூறுவார். அந்தச் சிறுவன் எடுக்கும் ஓலையில் உள்ள பெயருக்குரியவரே உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டவர் ஆவார்.

**நிலவருவாயும் நில அளவையும்**

முதலாம் இராஜராஜன்(1001), முதலாம் குலோத்துங்கன்(1086), மூன்றாம் குலோத்துங்கன் (1226) ஆகிய சோழ அரசர்கள் நிலங்களை வகைப்படுத்தி, அளவீடு செய்து அதற்கேற்றவாறு வரிகளை விதித்தனர். நில அளவீட்டுப் பணியில் ஈடுபட்டவர்கள் 'நாடு வகை செய்கிற' என்று குறிப்பிடப்பட்டார்கள். இவர் நில உடைமைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களே ஆவர். நில அளவீடு செய்ய குழி, மா, வேலி, பட்டி, பாடகம் முதலிய அலகுகள் வழக்கில் இருந்தன.

இறை, காணிகடன், இறை கட்டின காணிகடன், கடமை உள்ளிட்ட பல வரிகள் விதிக்கப்பட்டன. அவற்றில் முக்கியமான ஒரு வரி குடிமை வரி ஆகும். நிலத்தைக் குத்தகைக்குப் பெற்று வெளாண்மை செய்தவர்கள் அரசுக்கும் நில உடைமையாளர்களுக்கும் செலுத்திய வரி குடிமை வரி எனப்படும்.

வரியாக வசூலிக்கப்பட்ட நெல் 'களம்' என்ற அலகின் அடிப்படையில் வசூலிக்கப்பட்டது. ஒரு களம் என்பது 28 கிலோ ஆகும். முதலாம் ராஜராஜன் வரி வசூலை முறைப்படுத்தினார். ஒரு வேலி (6.5 ஏக்கர்) நிலத்திற்கு 100களம் வரியாக வசூலிக்கப்பட்டது. வேலியின் அளவு என்பது மண்வளம், போகங்கள் ஆகியவற்றைப் பொருத்து மாறுபடுகிறது.

**பாசனம்**

பஞ்சவன் மாதேவி வாய்க்கால், கணபதி வாய்க்கால் போன்றவற்றைக் கூறலாம்.

சோழர் கல்வெட்டுக் குறிப்புகள் சில பெரிய பாசன ஏரிகளைக் குறிப்பிடுகின்றன.

சோழ வாரிதி, கலியநேரி, பல்லவர்களால் உருவாக்கப்பட்ட வைரமேகத் தடாகம், பாகூர் பெரிய ஏரி, இராஜேந்திர சோழ பேரேரி பொன்றவை சில எடுத்துக்காட்டுகள்.

கங்கை கொண்ட சோழபுரத்தில் இராஜேந்திரசோழன் மேற்கொண்ட பாசனப்பணி குறிப்பிடத்தக்கது. அங்குள்ள எரியில் வெள்ளம் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் 16மைல் நீளமுள்ள ஓர் உறுதியான கட்டுமானத்தை அவர் எழுப்பியுள்ளார். அதை இராஜேந்திர சோழன் 'ஜலமய ஜெயஸ்தம்பம்' என்று குறிப்பிடுகிறார். அதற்கு, 'நீரில் கிடைத்த வெற்றியின் நினைவாக எழுப்பிய தூண்' என்று பொருள். 100 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த இடத்துக்கு வந்த அரேபிய வரலாற்றாசிரியரான அல்பெருணி இக்கட்டுமான அமைப்பைக் கண்டு வியந்தார். ''எங்கள் மக்கள் அதனைக் கண்டு வியப்படைவார்கள். ஆனால், அதனை அவர்களால் விவரிக்க இயலாது. அது போன்ற ஒன்றை அவர்களால் கட்டவும் முடியாது. சான்று: ஜவஹர்லால் நேரு. Glimpses of World History.

**கோயில்கள்**

சோழர் தமது காலத்தில் அதிக எண்ணிக்கையிலான கோயில்களை எழுப்பி, ஆதரித்தனர். தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம் ஆகிய இடங்களில் அரசர்களால் எழுதப்பட்ட கோயில்கள் சோழர்கால கட்டுமானம், ஓவியம், சிற்பம், சிலைவடித்தல் ஆகிய கலைகளின் களஞ்சியமாக விளங்குகின்றன.

**சமூக நிறுவனமாகக் கோயில்**

சோழர் காலத்தில் கோயில்கள் சமூகத் திருவிழாக்களுக்கான ஒரு களமாக மாறி சமூக நிறுவனங்களாக இயங்கின. சமூகம், அரசியல், பொருளாதாரம், பண்பாடு நடவடிக்கைகளுக்கான மையங்களாகக் கோயில்கள் விளங்கின. கோயிரமர், கோயில் கணக்கு (கோயில் கணக்காளர்), தேவகன்னி (கடவுளின் பிரதிநிதி), ஸ்ரீவைஷ்ணவர், கண்டேசர் (கோயில் மேலாளர்), மற்றும் பிறர் முதல்நிலை கோயில் அதிகாரிகள் ஆவர். கல்வி, நடனம், இசை, ஓவியம், நாடகம் ஆகியவற்றின் வளர்ச்சியை அவர்கள் ஊக்கவித்தனர்.

முதலாம் இராஜராஜனின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் இராஜராஜ நாடகம் என்ற நாடக நிகழ்ச்சி தஞ்சாமூர் கோயிலில் நிகழ்த்தப்பட்டிருக்கிற சித்தரைத்

திருவிழா, கார்த்திகை, ஐப்பசி விழா ஆகிய விழாக்கள் கொண்டாடப்பட்டிருக்கின்றன.

**கங்கைக் கொண்ட சோழபுரம்**

முதலாம் இராஜேந்திர சோழனின் வட இந்திய வெற்றியின் நினைவாகத் தஞ்சாவூர் பெரிய கோயில் போன்ற கங்கைகொண்ட சோழபுரத்தில் ஒரு கோயிலைக் கட்டினார்.

இராஜேந்திர சோழ கங்கம் என்ற புதிய பாசன ஏரியையும் தலைநகர் அருகே உருவாக்கினார், இது ஜல தம்பம் (நீர்த்தூண்) என அழைக்கப்படுகிறது.

கங்கை கொண்ட சோழபுரம் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும் சோழ அரசர்கள் முடிசூட்டும் இடமாகவும் ஆனது. கங்கை கொண்ட சோழபுரம் கோயில் கருவறையின் வெளிப்புறச் சுவர் மாடங்களில் இடம்பெற்றுள்ள அர்த்தநாரீசுவரர், துர்கா, விஷ்ணு, சூரியன், சண்டேச அணுக்கிரக மூர்த்தி ஆகிய கடவுளரின் சிலைகள் சிறப்புமிக்கவை.

**கல்விப் புரவலர்களாக சோழர்**

சோழ அரசர்கள் கல்விப்புரவலர்காளக விளங்கினார்கள். அறக்கட்டளைகள் நிறுவி, சமஸ்கிருதக் கல்விக்குப்பெரும் ஆதரவளித்தார்கள்.

இக்கல்லூரியில் 340 மாணவர்கள் பயின்றார்கள். 14 ஆசிரியர்கள் பணியாற்றினர். வேதம், இலக்கணம், வேதாந்தம் ஆகியவை இங்குக் கற்பிக்கப்பட்டன. அவரக்குப் பின்வந்த அரசர்களும் அவரைப் பின்பற்றினார்கள். இதன் விளைவாக, மேலும் இரு சமஸ்கிருதக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன.

இவை 1048இல் புதுச்சேரிக்கு அருகிலுள்ள திருபுவனியிலும், 1061இல் செங்கல்பட்டுக்கு அருகிலுள்ள திருமுக்கூடலிலும் அமைந்தன. இந்த சமஸ்கிருதக்கல்வி மையங்களில் வேதங்கள், சமஸ்கிருத இலக்கணம், சமயம் தத்துவங்கள் ஆகியவை கற்றுத்தரப்பட்டன. ஆசிரியர்களுக்கான ஊதியமாக அவர்களின் பணிக்காலத்திற்கு ஏற்ப நிலம் வழங்கப்பட்டது.

**சம்பூவராயர்கள்**

சம்புவராயர்கள் ராஜாதிராஜன், மூன்றாம் குரோத்துங்கன் ஆகிய சோழ அரசர்களின் ஆட்சிக்காலத்தில் வட ஆற்காடு, செங்கல்பட்டு பகுதிகளில் வலிமை படைத்த குறுநில மன்னர்களாக விளங்கினர். தாங்கள் சார்ந்திருந்த பேரரசுகளுக்கு ஆதரவாக போர்களில் ஈடுபட்டனர். பல சமயங்களில் தங்களுக்குள்ளும் போரிட்டுக் கொண்டனர். பதிமூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பாண்டியர் ஆட்சியின் இறுதி வரை சம்புவராயர்கள் பாலாறு பகுதியில் அரசியல் செல்வாக்குடன் விளங்கினர். அவர்களின் அரசு இராஜ கம்பீர ராஜ்யம் எனப்பட்டது. அதன் தலைநகரம் படைவீட்டில் அமைந்திருந்தது. வீர சோழ சம்புவராயனின் கல்வெட்டுகள் (1314-1315) பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. சம்புவராயர்கள் உயர்ந்த பட்டங்களைச் சூட்டிக்கொண்டனர். எடுத்தக்காட்டாக, சகலலோக சக்ரவர்த்தி(ன்) வென்று மண்கொண்ட சம்புவராயன் (1322-1323), சகலலோக சக்ரவர்த்தி(ன்) இராஜநாராயணன் சம்புவராயன் 20 ஆண்டுகள் ஆட்சி செய்து, பின்னாட்களில் விஜயநகரத்தின் குமார கம்பணரால் தோற்கடிக்கப்பட்டார். இந்த முடியடிப்புக்குப் பிறகுதான் குமார கம்பணர் தெற்கு நோக்கி மதுரை வரை படையெடுத்துச்

சென்றார். குமார கம்கணர் மதுரை சுல்தானைத் தோற்கடித்து முழுவெற்றி பெற்றார்.

**சோழ ஆட்சியின் முடிவு**

ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை சோழ அரச மரபு நிலையாக இருந்தது. 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் அங்குள்ள குடித்தலைமை ஆட்சியாளர்கள் எழுச்சி அடையத் தொடங்கினார். இது மைய அரசின் வலிமையைக் குறைத்தது.

1264இல் பாண்டிய மன்னன் முதலாம் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் சோழர் தலைநகரான கங்கை கொண்ட சோழபுரத்தைக் கைப்பற்றினார். அதற்கு முன்னர் காஞ்சிபுரத்தைத் தெலுங்குச் சோழர் கைப்பற்றியிருந்தனர் எஞ்சிய பகுதிகள் பாண்டியர் ஆளுகைக்குச் சென்றன.

1279இல் முதலாம் மாறவர்மன் குலசேகரப்பாண்டியன் கடைசி சோழ அரசரான மூன்றாம் இராஜேந்திர சோழனைத் தோற்கடித்தார். இத்துடன் சோழரின் ஆட்சி முடிவுக்கு வந்து, பாண்டியரின் ஆட்சி தொடங்கியது.

**பாண்டியர்**

இந்தியாவின் தென்பகுதியை ஆட்சி செய்து வந்த மூவேந்தர் மரபினரில் பாண்டியரும் அடங்குவர். அசோகர் தன் கல்வெட்டுகளில் சோழர், சேரர், பாண்டியர் சத்தியபுத்திரர் ஆகியோரைத் தென் இந்தியாவின் ஆட்சியாளர்களாகக் குறிப்பிடுகிறார்.

முத்துக்குளித்தல் தொழிலோடு வரலாற்றுப்பூர்வமாக இணைந்த கொற்கை பாண்டியரின் தொடக்க காலத் தலைநகராகவும் துறைமுகமாகவும் இருந்தது. பிற்காலத்தில் அவர்கள் மதுரைக்கு இடம்பெயர்ந்தனர்.

மதுரையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பாண்டியர்களின் தொடக்க காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

பாண்டிய நாட்டைச் சேர்ந்த புலிமான் கோம்பை என்ற கிராமத்தில் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில் கூடல் என்ற சொல் குறிப்பிடப்பட்டுள்ளது.

மதுரைக்காஞ்சியிலும் கூடல் பாண்டியர் தலைநகராகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எட்டுத்தொகை நூல்களிலும் இச்சொல் காணப்படுகிறது. வரலாற்றுப் பூர்வமாகவே மதுரை, கூடல் ஆகிய சொல்லாடல்கள் ஒன்றுக்கொன்று மாற்றுச்சொல்லாகவே கையாளப்பட்டு வந்திருக்கின்றன.

**சான்றுகள்**

சங்ககாலப் பாண்டியர் வரலாறு ஏறத்தாழ பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டு வரை எனக் குறிப்பிடப்படுகிறது. பெருங்கற்கால ஈமப் பொருள்கள் கண்டுபிடிப்பு.

தமிழ் பிராமி கல்வெட்டுகள், சங்க இலக்கியப் பாடல்கள் போன்ற பல்வேறு வரலாற்றுச் சான்றுகள் மூலம் சங்க காலப் பாண்டியர் வரலாறு மீட்டுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

பொ.ஆ. ஆறாம் நூற்றாண்டின் இறுதிவாக்கில் தென் தமிழ்நாட்டில் பாண்டியர் தம் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தினார். ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தது குறித்த தகவல்களைச் சில செப்பேடுகள் உறுதிப்படுத்துகின்றன.

அவற்றுள் நெடுஞ்சடையானின் வேள்விக்குடி மானியம் முக்கியமானதாகும்.

அரசாணைகள், பாண்டிய அரசர்களின் மரபுவழி வரிசை, வெற்றிகள், அரசர்கள் எழுப்பிய கோயில்கள், உருவாக்கிய பிரம்மதேயங்கள் ஆகியவற்றுக்கு அரசர்கள் வழங்கிய மானியங்கள், அறகொடைகள் ஆகியன குறித்து செப்பேடுகள் தெரிவிக்கின்றன. குடைவரைக் கோயில்களை உருவாக்கியவர்கள், பாசன ஏரிகள், கால்வாய்கள் போன்றவற்றை உருவாக்கியவர்கள் குறித்த செய்திகளைக் கல்வெட்டுகள் அளிக்கின்றன. மார்க்கோபோலோ, வாசஃப் இபின் பதூதா போன்ற பயணிகள் எழுதியுள்ள வரலாற்றுக் குறிப்புகள் அக்காலகட்ட அரசியல், சமூக, பண்பாட்டு வளர்ச்சிகள் குறித்து அறிய உதவுகின்றன. மதுரைத் தல வரலாறு, பாண்டிக்கோவை, மதுரை திருப்பணி மாலை ஆகிய இலக்கியங்கள் மதுரையை ஆண்ட பிற்காலப் பாண்டியர் குறித்த செய்திகளை வழங்குகின்றன.

பொ.ஆ. ஏழாம்/எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்த 'இறையனார் அகப்பொருளில் 'சங்கம்' என்ற சொல் கலைக்கழகம் என்ற பொருளில் இடம்பெற்றுள்ளது. ஆனால் பல்லவர்களுக்கு முந்தைய இலக்கியங்களில் சங்கம் என்ற சொல் இப்பொருளில் குறிப்பிடப்படவில்லை. திருவிளையாடல் புராணம், பெரிய புராணம் ஆகிய பிந்தைய இடைக்கால நூல்களில் சங்கம் என்ற சொல் கலைக்கழகம் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது.

மணிமேகலையை இயற்றிய சீத்தலைச்சாத்தனார் மதுரையைச் சேர்ந்தவர் ஆவார்.

## ஆட்சிப்பகுதி

பாண்டியரின் ஆட்சிப்பகுதி பாண்டி மண்டலம், தென் மண்டலம், பாண்டிய நாடு என்று அழைக்கப்படுகிறது. வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகளால் வளம் பெறும் சில பகுதிகள் நீங்கலாகப் பெரும்பாலும் பாறைகளும் குன்றுகளும் மலைத்தொடர்களும் நிறைந்த பகுதியே பாண்டிய நாடு ஆகும்.

## பாண்டியரின் மறுமலர்ச்சி (600-920)

களப்பிரரின் மறைவுக்குப் பின் பாண்டியரின் மறு எழுச்சி ஏற்பட்டதாகத் தெரிகிறது. ஒரு காலத்தில் மலைவாழ் படிங்குடிகளாக இருந்த களப்பிரர்கள் விரைவிலேயே சமவெளியில் குடியேறினர். அவர்கள் புத்த, சமண சமயங்களை ஆதரித்தனர். களப்பிரரிடமிருந்து பாண்டியர் பகுதியைக் கடுங்கோன் மீட்டதாகச் செப்பேடுகள் மூலம் அறிய முடிகிறது. அவரைத் தொடர்ந்து இரு அரசர்கள் அடுத்தடுத்து ஆட்சி செய்துள்ளனர். அவர்களில் சேந்தன் என்பவர் போர் முறையில் சிறந்தவராக இருந்துள்ளார். சேரரை வென்றதால் அவர் வானவன் என்ற பட்டம் பெற்றார் எனச் செப்பேடுகள் கூறுகின்றன.

அடுத்து வந்த தொடக்க காலப் பாண்டிய அரசர்களில் சிறந்தவரான அரிகேசரி மாறவர்மன் (624-674) 642இல் பதவி ஏற்றார் என்பதை வைகை ஆற்றுப்பகுதி கல்வெட்டுகள் கூறுகின்றன. இவர் முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்ம வர்மன் ஆகியோருக்குச் சம காலத்தவர் ஆவார். அவர் தமது காலத்தைச் சேர்ந்த சேர, சோழ, பல்லவ சிங்கள அரசர்களை வெற்றி கொண்டதாக அக்கல்வெட்டுக் குறிப்புகளும் செப்பேடுகளும் கூறுகின்றன. சமணர்களைக் கழுவேற்றிய கூன் பாண்டியனே அரிகேசரி என்று அடையாளம் காணப்படுகிறார்.

சைவத் துறவியான திருஞானசம்பந்தர் அரிகேசரியை சமண மதத்திலிருந்து சைவ மதத்துக்கு மாற்றினார்.

அரிகேசரியைத் தொடர்ந்து கோச்சடையான் இரணதீரனும் (700-730), அவருக்குப்பின்

மாறவர்மன் இராஜசிம்மனும் (730-765) ஆட்சி செய்தனர். அவர்களுக்குப்பின்

ஜதில பராந்தக நெடுஞ்சடையான் (முதலாம் வராகுணன்) (756-815)
(இவரே புகழ்பெற்ற வேள்விக்குடி நிலக்கொடை அளித்தவர் ஆவார்)
பாண்டிய அரசில் மிகச்சிறந்தவரான இவர் பல்லவர்களையும் சேரர்களையும் வெற்றிகரமாக எதிர்கொண்டார்.

ஸ்ரீமாற ஸ்ரீவல்லபர் (815-862) இலங்கைக்கு படையெடுத்து, அங்கு தன் அதிகாரத்தை நிலைநிறுத்தினார்.

பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனிடம் (846-869) தோற்றார். அடுத்ததாக ஆட்சிக்கு வந்த இரண்டாம் வரகுணன் திருப்புறம்பியம் போரில் அபராஜித பல்லவனால் (885-903) தோற்கடிக்கப்பட்டார்.

பின்னர் ஆட்சிக்கு வந்த பராந்தக வீரநாராயணன்,

முதலாம் பராந்தகனிடம் தோற்ற இரண்டாம் ராஜசிம்மன் 920இல் நாட்டை விட்டே ஓடினார்.

**மீண்டும் பாண்டிய எழுச்சி**

பன்னிரெண்டாம் நூற்றாண்டின் இறுதிக் கால்பகுதியில் ஆதி இராஜேந்திரனின் மறைவுக்குப் பிறகு, சோழ அரசில் வெற்றிடம் ஏற்பட்ட நிலையில் பாண்டியப் பகுதியை நிர்வகித்த ஆளுநரும் வலுவிழந்தார். இதைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட பாண்டியக் குடித்தலைமை மன்னர்கள் தங்களை நிலைநிறுத்திக் கொண்டு தமது சுதந்திர ஆட்சியை நிறுவ முயன்றனர்.

இரண்டாம் இராஜராஜசோழனுடன் போரிட்ட ஸ்ரீவல்லப பாண்டியன் தன் மகனைப் போரில் பறிகொடுத்தார். ஐந்து பாண்டியக் குறுநில மன்னர்கள் இச்சுழலைப் பயன்படுத்திக்கொண்டு முதலாம் குலோத்துங்கன் (1070-1120) போரிட்டார்கள்.

போரில் அவர்களுக்குத் தோல்வியே கிடைத்தது. 1190இல் சடையவர்மன் ஸ்ரீவல்லபன் முதலாம் குலோத்துங்கனுடைய அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு,

பாண்டிய நாட்டில் ஆட்சியைத் துவக்கினார்.. சடையவர்மன் ஸ்ரீவல்லபன் மதுரையில் நடைபெற்ற பட்டம் சூட்டு விழாவில் அரசராக முடிசூடி, செங்கோல் ஏந்தி, அரியணையில் அமர்ந்தார். இந்த நிகழ்வின் நினைவாகச். சுந்தரசோழபுரம் என்ற வேளாண் குடியிருப்புப் பகுதியைச் சுந்தரசோழ சதுர்வேதிமங்கலம் என்று பெயர் மாற்றி இறையிலியாகப் பிராமணர்களுக்கு வழங்கினார்.

சோழரின் வீழ்ச்சிக்குப் பிறகு, பதின்மூன்றாம் நூற்றாண்டில் பாண்டியர் செல்வாக்குமிக்க அரச மரபினராக மாறினார்கள். மதுரை அவர்களின் தலைநகராக இருந்தது. காயல் அவர்களுக்கான பெருந்துறைமுகமாக விளங்கியது. வெனீஸைச் சேர்ந்த புகழ்பெற்ற பயணி மார்க்கோ போலோ 1288இலும் 1293இலுமாக இரு முறை காயலுக்கு வந்துள்ளார். அப்போது காயல் துறைமுகம் முழுவதும் அரேபிய, சீன கப்பல்களால் நிறைந்திருந்ததாகவும் காயல் நகரில் வணிக நடவடிக்கைகள் முழு வீச்சில் நடைபெறுவதாகவம் மார்க்கோபோலோ கூறுகிறார்.

பாண்டிய நாட்டுக்கு வருகை தந்த வெனீஸிய (இத்தாலி) பயணி மார்க்கோபோலோ நேர்மையான நிர்வாகத்துக்காகவும் வெளிநாட்டு வணிகர்களைச் சிறந்த முறையில் நடத்தியதற்காகவும் பாண்டிய அரசரைப் பாராட்டியுள்ளார். உடன்கட்டை ஏறும் வழக்கம், அரசர்கள் பின்பற்றிய பலதார மணமுறை ஆகியவைமார்க்கோபோலோவின் பயணக்குறிப்புகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**சடையவர்மன் சுந்தரபாண்டியன்**

இரண்டாம் பாண்டிய அரசின் சிறப்புமிக்க ஆட்சியாளர் சுந்தரபாண்டியன் (1251-1268) ஆவார். இஅவர் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் என்று அழைக்கப்படுகிறார்.

பல கல்வெட்டுக்கள் அவரை மிகவும் உயர்வாகப் போற்றப்படுகின்றன. சுந்தரபாண்டியன் சேர அரசரான மலைநாட்டுக் தலைவரை அடக்கி, தனக்குக் கப்பம் செலுத்த வைத்தார்.

சோழரின் வீழ்ச்சி மால்வா பகுதியை ஆட்சி செய்த போஜ அரசன் வீர சோமேஸ்வரனுக்குக் சுந்தரபாண்டியனை சவாலக்கு அழைக்கும் துணிச்சலைக் கொடுத்தது. இருவருக்குமிடையே கண்ணனூரில் நடந்த போரில் சுந்தர-பாண்டியன் வீர சோமேஸ்வரனை வென்று, மால்வா பகுதியைச் சூறையாடினார்.

**மாறவர்மன் குலசேகரன்**

சுந்தரபாண்டியனுக்குப் பிறகு மாறவர்மன் குலசேகரன் நாற்பது ஆண்டுகள் பாண்டிய நாட்டை வெற்றிகரமாக ஆட்சிபுரிந்தார். அவரது ஆட்சியில் அமைதியும் வளர்ச்சியும் நிலவின. அவர் 1268இல் அரியணை ஏறி, 1312 வரை ஆட்சி செய்தார். அவருக்கு இரு மகன்கள், மூத்தவர் சுந்தர பாண்டியன்; இறையவர் வீரபாண்டியன்.

1302இல் இளைய மகன் வீரபாண்டியனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டப்பட்டது. இதனால் கோபமடைந்த மூத்த மகன் சுந்தர பாண்டியன் தன் தந்தையைக் கொன்று பதவிக்கு வந்தார். இதைத் தொடர்ந்து மூண்ட உள்நாட்டுப் போரில் வீரபாண்டியன் வென்று ஆட்சியைப் பிடித்தார்.

சுந்தர பாண்டியன் தில்லிக்குச் தப்பிச் சென்று அலாவுதின் கில்ஜியிடம் அடைக்கலமானார். இந்த நிகழ்வுகளே மாலிக்காபூர் தமிழகப் படையெடுப்புக்கு வழிவகுத்தன்.

**மாலிக் காபூர் படையெடுப்பு**

மாலிக் காபூர் 1311இல் மதுரையை அடைந்தபோது, அங்கே யாரும் இல்லை. வீரபாண்டியன் ஏற்கனவே தப்பியோடியிருந்தார். இந்த மதுரை படையெடுப்பு குறித்து அலாவுதினன் கில்ஜியின் அரசவைக் கவிஞர் அமிர் குஸ்ருவின் கணிப்பின்படி, அங்கிருந்து 512 யானைகள், 5,000 குதிரைகள், 500 மூட்டைகளில் வைரம், முத்து, மரகதம், மாணிக்க நகைகள், மாலிக் காபூரால் எடுத்துச் செல்லப்பட்டன எனத் தெரிகிறது. அமிர்குஸ்ரு மிகைப்படுத்தி எழுதக்கூடியவர், இருப்பினும் சொக்கநாதர்கோயிலை இடித்து ஏராளமான விலை மதிக்க முடியாத பொருள்களை மாலிக் காபூர் எடுத்துச்சென்றார் என்பது உண்மையே. இச்செல்வத்தைப் பயன்படுத்தி அலாவுதீன் கில்ஜி தனது எதிரிகளை தன் பக்கம் ஈர்த்து தனது பலத்தை அதிகரித்துக் கொண்டார்.

மாலிக் காபூரின் படையெடுப்புக்குப் பிறகு, பாண்டிய அரசின் ஆட்சிப் பொறுப்பு பாண்டிய அரசக் குடும்ப உறுப்பினர்களால் தனித் தனியாகப் பிரித்துக் கொள்ளப்பட்டன. மதுரையில் தில்லி சுல்தானிய அரசுக்குக் கட்டுப்பட்ட ஓர் அரசு உருவாகியது.

இது 1335 வரை தான் நீடித்தது. மதுரையை ஆட்சி செய்த ஆளுநர் ஜலாலுதீன் அஸன் ஷா டெல்லி சுல்தானுக்குக் கட்டுப்படாமல் 1335இல் மதுரை அரசராகத் தன்னை அறிவித்துக் கொண்டார்.

**கோயில்கள்**

பாண்டியர் பல்வேறு மாதிரிகளில் கோயில்கள் கட்டினார்கள். அவை கல்லறைக்கோயில்கள் (சுந்தரபாண்டியசுவரம்), குடைவரைக்கோயில்கள், கட்டமைப்புக் கோயில்கள் ஆகும். இடைக்காலப் பாண்டியர்களும் பிற்காலப் பாண்டியர்களும் புதிதாகக் கோயில்களைக் கட்டவில்லை. மாறாக, புதிய கோபுரங்கள் எழுப்புவது, பிரகாரவீதிகள் அமைப்பது, மண்டங்கள் கட்டுவது ஆகிய விரிவாக்கப் பணிகளில் ஈடுபட்டனர். தொடக்க காலப் பாண்டியர் கோயில்கள் எளிமையாகவும் சிறியதாகவும் இருந்தன. இக்கோயில்களில் சிவன், விஷ்ணு, கொற்றவை, கணேசன், சுப்பிரமணியர், சூரியன், பிரம்மன் ஆகிய கடவுளர் சிலைகள் சிறப்பாக வடிக்கப்பட்டிருந்தன. பாண்டியர் காலத்தில் மதுரை மீனாட்சியம்மன் கோயில் கூடுதல் அக்கறையுடன் பராமரிக்கப்பட்டது. கூடுதல் கோபுரங்கள், மண்டபங்கள் என கோயில் பரப்பை விரிவாக்கிக் கொண்டேயிருந்தனர்.

பண்டைய பாண்டியர்களால் உருவாக்கப்பட்ட குடைவரைக்கோயில்கள் பிள்ளையார்பட்டி, திருமயம், குன்றக்குடி, திருச்செந்தூர், கழுகுமலை, கன்னியாகுமரி, சித்தன்னவாசல் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. சித்தன்னவாசல் குகைக்கோயிலில் காணப்பட்ட ஒன்பதாம் நூற்றாண்டு கல்வெட்டு அந்தக் குகை இளம் கௌதமர் என்பவரால் உருவாக்கப்பட்டது. என்று கூறுகிறது. அதே காலகட்டத்தைச் சேர்ந்த இன்னொரு கல்வெட்டு ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் இக்கோயிலைப் புதுப்பித்தார் என்று கூறுகிறது. கோயிலின் சுவர்களிலும் கூரைகளிலும், தூண்களிலும் காணப்படும் ஓவியங்கள் நடனமாடும் பெண், அரசன்,

அரசி சித்தரிக்கும் ஓவியத்தில் சில நீர்வாழ் உயிரினங்களும் பூக்களும் பறவைகளும் சில பாலூட்டிகளும் இடம் பெற்றுள்ளன.

இந்தியாவின் கடல் சார்ந்த வரலாறு பாண்டியர்களின் வரலாறு இன்றி முழுமை பெறாது. பாண்டியர்களின் காலத்தில் கிழக்குக்கடற்கரை நெடுகிலும் துறைமுக நகரங்கள் இருந்தன. பாண்டியர் தென்கிழக்கு ஆசிய அரச மரபுகளில் திருமண உறவுகளும் செய்து கொண்டார்கள்.

கடல்வழி வணிக நடவடிக்கைகளில் பாண்டியர் ஓர் அழுத்தமான தடத்தை விட்டுச் சென்றுள்ளனர்.

சிந்தாமணி, மயிலாப்பூர், திருவொற்றியூர், திருவாடனை, மகாபலிபுரம் ஆகியவை சுறுசுறுப்பான கடல் வணிக மையங்களாக இருந்தன என்பதை கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம்.

# 11TH வரலாறு

## அலகு – 10

## அரபியர், துருக்கியரின் வருகை

**அறிமுகம்:**

பதின்மூன்று முதல் பதினாறாம் நூற்றாண்டு வரையான காலத்தில் (1200 – 1550) இசுலாமிய அரசு (தில்லி சுல்தானியம்) நிறுவப்பட்டது. இதன் விளைவாக இசுலாமிய நிறுவனங்களும் இசுலாமியப் பண்பாடும் இந்தியாவில் கால்கொண்டன. இக்காலகட்டத்தின் வரலாற்றை வெவ்வேறு கண்ணோட்டத்தில் வரலாற்றாசிரியர்கள் விளக்கியுள்ளனர். தனிப்பட்ட சுல்தான்களின் சாதனைகளையும் தோல்விகளையும் மட்டும் அடிப்படையாகக் கொண்டு சுல்தானிய ஆட்சியை மதிப்பிடுவது வழக்கம். தனிநபரை முன்வைத்து வழக்கமாக எழுதப்படும் வரலாற்றை எற்க மறுக்கிற வரலாற்றாசிரியர்கள், சுல்தானிய ஆட்சி பொருளாதாரம், பண்பாட்டு வளர்ச்சிக்கு பங்களித்துள்ளது என்றும், இதன் மூலம் இந்தியாவில் ஒருபன்முகப்பண்பாடு தோன்றுவதற்கு வழிவகுத்தது என்றும் கூறுகின்றனர். வர்க்க உறவுகளின் அடிப்படையில் வரலாற்றைக் கணிக்கும் வரலாற்றாசிரியர்களின் பார்வையில் மத்திய கால அரசுகள், ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதியாகவே செயல்பட்டன. எனவே, முகலாயர் ஆட்சிகளுடன் ஒப்பிடுகையில் சுல்தானிய ஆட்சியில் அமைப்ப ரீதியான முன்னேற்றம் மிகக் குறைவு என்று கருதுகின்றனர். இவ்வாறாக, சுல்தானிய ஆட்சியின் இயல்பை முடிவு செய்வதில் அறிஞர்களிடையே இன்னமும் கருத்தொற்றுமை இல்லை.

இப்பாடம் ஒரு நோக்கங்களைக் கொண்டுள்ளது. (அ) சுல்தானின் ஆட்சிக் கால அரசர்கள், நிகழ்வுகள், கருத்துகள், மக்களின் நிலை குறித்த ஒரு வழக்கமான கற்றலை மாணவர்களுக்கு அறிமுகம் செய்வது (ஆ) மாணவர்கள் அதன் சரி, தவறுகளை சீர்தூக்கிப் பார்த்து, புதிய வினாக்களை எழுப்புகிற விதத்தில் பாடத்தின் உள்ளடக்கத்தை அமைத்தல்.

**அரபியரின் வருகை: பின்னணி:**

இந்தியாவுக்கும் அரபியாவுக்கும் இடையே வணிகத் தொடர்புகள் எற்பட பூகோள அமைவிடம் உதவியது. இசுலாம் தோன்றுவதற்கு முன்பே, கடல்வழி வணிகத்தில் அரபியர் ஈடுபட்டிருந்தனர். இந்தியாவின் கிழக்கு, மேற்குக் கடற்கரைகளுடன் கடல்வழி வணிகத் தொடர்புகள் கொண்டிருந்தனர். இவர்கள் தென்னிந்தியாவின் மேற்கு, கிழக்குக் (மலபார், கோரமண்டல் (சோழமண்டல) கடற்கரைகளில் குடியேறினர். மலபார் பெண்களைத் திருமணம் செய்து கொண்டு அங்கேயே குடியமர்ந்த அரபியர், "மாப்பிள்ளை" என்று அழைக்கப்பட்டனர்.

பொ. ஆ. 712 இல் மேற்கொள்ளப்பட்ட அரபியப் படையெடுப்பும் அதைத் தொடர்ந்து நடந்த கஜினி, கோரி மன்னர்களின் படையெடுப்பகளும் இங்கிருந்து கொள்ளையடித்துச் சென்ற செல்வத்தைக் கொண்டு மத்திய ஆசியாவில் அவர்கள் ஆட்சியை வலுப்படுத்தும் நோக்கம் கொண்டதாக இருந்தன. இதனுடன், கஜினி மாமுதுவும், முகமது கோரியும் நிகழ்த்திய திடீர்த் தாக்குதல்கள், ஆக்கிரமிப்பாளர்கள், ஆக்கிரமிப்புக்குள்ளானவர்கள் என்ற உறவை ஏற்படுத்தின. குரசன் நாட்டு (கிழக்கு ஈரான்) ஷா, பின்னர் செங்கிஸ்கான் ஆகியோர்

ஆ.ஃ.ப்கானிஸ்தான் மீது படையெடுத்ததும், வட இந்திய சுல்தான் ஆட்சிக்கு ஆ.ஃ.ப்கானிஸ்தானுடனிருந்த உறவுகளைத் துண்டித்தன. மங்கோலியப் படையெடுப்புகள், கோரி சுல்தானிய ஆட்சியையும் கஜினியையும் அழித்து உச், மற்றும் முல்தானின் அரசர் சுல்தான் நசுருதீன் குபாச்சாவின் ((1206 – 28) கருவூலத்தைக் காலியாக்கின. இவ்வாறாக, வட இந்தியாவில் தமது செல்வாக்கை விரிவுபடுத்துகிற நல்வாய்ப்பு சுல்தான் இல்துமிஷுக்கு இருந்தது. இது, தில்லியைத் தலைநகராகக் கொண்டு இந்திய மாகாணங்களை இசுலாமிய ஆட்சியாளர்கள் ஏறத்தாழ நான்கு நூற்றாண்டுகள் ஆள்வதற்கு வழிவகுத்தது.

இக்காலகட்டத்தை இசுலாமிய ஆட்சிக் காலம் என்று விவரிப்பது வழக்கம். இருப்பினும் மத்திய இந்தியாவை ஆட்சி செய்த இவர்கள், பல்வேறு பிரதேசங்களையும் இனங்களையும் சேர்ந்தவர்களாவர். அரபியரும், துருக்கியரும், பாரசீகத்தவரும், மத்திய ஆசியரும் இராணுவத்திலும் நிர்வாகத்திலும் பங்கு கொண்டிருந்தனர். இல்துமிஷ் ஓர் அபெர்லாய் துருக்கியர் (Aperlai Turk) என்பதோடு அவரது இராணுவ அடிமைகள் பலரும் புக்காரா, சாமர்கண்ட், பாக்தாத் ஆகிய இடங்களைச் சேர்ந்த வணிகர்களால் தில்லிக்கு அழைத்தவரப்பட்டு அடிமையாக விற்கப்பட்ட பல்வேறு துருக்கிய, மங்கோலிய வழி வந்தவர்களாவர். பிற இனங்களைச் சேர்ந்த அமைகளும் (குறிப்பாக, மத்திய இந்தியாவின் மிஹிரிலிருந்து சிறைப்பிடிக்கப்பட்ட ஹிந்து கான்) இருந்தனர் என்றாலும், இல்துமிஷ் அவர்கள் அனைவருக்கும் துருக்கியப் பெயர்களையே சூட்டினார்.

இக்காலகட்ட (1206 – 1526) தில்லி சுல்தானியம் ஒரே மரபைச் சேர்ந்த ஆட்சியாளர்களால் ஆளப்படவில்லை. அதன் ஆட்சியாளர்கள் ஐந்து வெவ்வேறு வம்சங்களைச் சேர்ந்தவர்கள்

1. அடிமை வம்சம் (1206 – 1290)
2. கில்ஜி வம்சம் (1290 – 1320)
3. துக்ளக் வம்சம் (1320 – 1414)
4. சையது வம்சம் (1414 – 1451)
5. லோடி வம்சம் (1451 – 1526)

**சான்றுகள்:**

- அல் - பெருனி: தாரிக்-அல்-ஹிந்த் (அரபு மொழியில் எழுதப்பட்ட இந்திய தத்துவஞானமும் மதமும்)
- மின்ஹஜ் உஸ் சிராஜ்: தபகத்-இ-நசிரி (1260) (அரபு மொழியில் எழுதப்பட்ட உலக இசுலாமிய வரலாறு)
- ஜியாவுத்தின் பாரனி: தாரிக்-இ-பெரோஸ் ஷாஹி (1357) பெரோஸ் துக்ளக் வரையிலான தில்லி சுல்தான்கள் வரலாறு
- அமிர் குஸ்ரு: மி.ஃ.ப்தா உல்.ஃ.புதூ (ஜலாலுதீன் கில்ஜியின் வெற்றிகள்); கஜைன்; உல் ஃ.புதூ (அலாவுதீன் கில்ஜியின் வெற்றிகள் - பாரசீக மொழியில்)
- துக்ளக் நாமா (பாரசீக மொழியில் துக்ளக் வம்ச வரலாறு)
- சம்ஸ்-இ-சிராஜ் அ.ஃ.பி.ஃ.ப்: தாரிக் இ.ஃ.பெரோஜ் ஷாஹி (தில்லி சுல்தானியம் பற்றிப் பாரசீக மொழியிலுள்ள பாரனியின் விவரணைகளை ஒட்டியது)
- குலாம் யாஹ்யா பின் அஹ்மத்: தாரிக்-இ-முபாரக் ஷாஹி (சையது ஆட்சியாளர் முபாரக் ஷாவின் ஆட்சியில் பாரசீக மொழியில் எழுதப்பட்டது)

- ஃபெரிஷ்டா: இந்தியாவில் இசுலாமிய ஆட்சியின் வரலாறு (பாரசீகமொழி)

> பாரசீக வரலாற்று ஆவணங்கள், தில்லி சுல்தானியம் குறித்து மிகைப்படுத்திக் கூறுகின்றன. குறிப்பிட்ட சுல்தானின் ஆட்சியில் நிகழ்ந்த சம்பவங்கள் குறித்த அவற்றின் கருத்துகள் எந்த விமர்சனமும் இன்றி நவீன கல்விப்புலத்தினுள் சேர்க்கப்பட்டுள்ளன – சுனில் குமார்.

**சிந்து மீது அரபுப் படையெடுப்பு:**

ஈராக்கின் அரபு ஆளுநர் ஹஜஜ்-பின்-யூசுஃப், கடற்கொள்ளையருக்கு எதிரான நடவடிக்கை என்ற காரணம் காட்டி, சிந்து அரசர் தாகிரை எதிர்த்து, தரை வழி, கடல் வழி என இரு தனித்தனி படைப் பிரிவுகளை அனுப்பினார். ஆனால் இரண்டு படைப்பிரிவுகளும் தோற்றன. அவற்றின் தளபதிகளும் கொல்லப்பட்டனர். பிறகு ஹஜஜ், கலிபாவின் அனுமதியுடன் 6000 வலுவான குதிரைப் படை, போர்த் தளவாடங்களைச் சுமந்துவந்த ஒரு பெரிய ஒட்டகப் படை ஆகியவை அடங்கிய ஒரு முழுமையான இராணுவத்தைப் 17 வயது நிரம்பிய தனது மருமகன் முகமது-பின்-காசிம் தலைமையில் அனுப்பினார்.

**முகமது-பின்-காசிம்:**

காசிமின் படை, பிராமணாபாத் வந்து சேர்ந்த நேரத்தில் சிந்துப் பகுதியில் தாகிர் ஆட்சி செய்து கொண்டிருந்தார். பிராமணர்கள் அதிகம் வாழ்ந்த இப்பகுதியை தாகிரின் முன்னோர்கள் பௌத்த அரச வம்சத்திடமிருந்து கைப்பற்றி ஆட்சி நடத்திவந்தனர். ராணுவம் உள்ளிட்ட நிர்வாகப் பதவிகளில் பிராமணர்களே இருந்தனர். இதனால் அந்நகரம் பிராமணாபாத் எனப்பட்டது. அரசர் தாகிர் அவரது முதன்மை அமைச்சர் ஆகியோருக்கிடையே அப்போது கருத்து மோதல் எற்பட்டிருந்தது. முகமது காசிம் படையெடுத்தபோது, முதன்மை அமைச்சர் அவருக்குத் துரோகம் இழைத்ததால் தாகிருடைய படையின் ஒரு பகுதி விலகிக்கொண்டது. மக்களும் மன்னர் மீது அதிருப்தி அடைந்திருந்த சூழலில் முகமது-பின்-காசிம், பிராமணாபாத்தை எளிதில் கைப்பற்றினார். தாகிரை விரட்டிச் சென்ற காசிம் ரோஹ்ரியில் நிகழ்ந்த ஒரு மோதலில் அவரைக் கொன்றார். அதன் பிறகு காசிமின் படை, சிந்துவின் தேபல் துறைமுக நகரத்தை அழித்து மூன்று நாள்கள் கொள்ளையடித்தது. சிந்து மக்களைச் சரணடையுமாறு காசிம் கேட்டுக்கொண்டார். அவர்கள் தங்கள் தங்களின் மதத்தைப் பின்பற்றுவதற்கு முழுப் பாதுகாப்பு தருவதாகவும் வாக்களித்தார். தான் கொள்ளை அடித்ததில் வழக்கமான ஐந்தில் ஒரு பங்கைக் கலிபாவுக்கு அனுப்பிவைத்த காசிம், எஞ்சியதைத் தனது படைவீரர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார்.

**கஜினி மாமுது:**

காசிம் படையெடுத்த பிறகு, சுமார் முந்நூறாண்டுகளுக்கு இந்தியாவில் அமைதி நிலவியது. இதனிடையே, மத்திய ஆசியாவிலிருந்த அரபியப் பேரரசு உடைந்து, அதன் பல மாகாணங்கள், தங்களைச் சுதந்திர அரசுகளாக அறிவித்துக் கொண்டன. இவற்றில் ஒன்றுதான் சாமானித் (Shamanid) பேரரசு, பிறகு இதுவும் உடைந்து, பல சுதந்திர அரசுகள் தோன்றின. சாமானித் பேரரசில் குரசன் ஆளுநராக இருந்த துருக்கிய அடிமை அல்ப்டிஜின், 963 இல் கிழக்கு ஆப்கானிஸ்தானிலிருந்த கஜினி நகரைக் கைப்பற்றி, ஒரு சுதந்திர அரசை

நிறுவினார். பிறகு வரைவிலேயே அல்ப்டிஜின் இறந்துபோனார். தொடர்ந்து அவரது வாரிசாக வந்த மூவரின் தோல்வியால், உயர்குடிகள் சபுக்தஜின்னுக்கு முடிசூட்டினர்.

இந்தியாவில் இசுலாமிய அரசை தெற்கு நோக்கி விரிவுபடுத்தும் நடவடிக்கைகளை சபுக்தஜின் தொடங்கிவைத்தார். ஆப்கானிஸ்தான் ஷாஹி அரசர் ஜெயபாலைத் தோற்கடித்து, அம்மாகாணத்தில் தனது மூத்த மகன் மாமுதை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தினார். 997 ஈல் சபுக்தஜின், இறந்தபோது, கஜினி மாமுது குரசனில் இருந்தார். இதனால், சபுக்தஜினின் இளைய மகன் இஸ்மாயில் வாரிசாக அறிவிக்கப்பட்டார். பிறகு, தனது சகோதரன் இஸ்மாயிலைத் தோற்கடித்து இருபத்தேழு வயது கஜினி மாமுது ஆட்சியில் அமாந்தார். கஜினி மாமுது ஆட்சிப் பொறுப்பு ஏற்றதை, ஒரு பதவியேற்பு அங்கியை அளித்தும் யாமினி-உத்-தவுலா (பேரரசின் வலது கை) என்ற பட்டத்தை வழங்கியும் கலிபா அவரை அங்கீகரித்தார்.

அரபியரும் இரானியரும் இந்தியாவை "ஹிந்த்" என்றும், இந்தியர்களை "ஹிந்துக்கள்" என்றும் குறிப்பிட்டனர். இருப்பினும் இந்தியாவில் இஸ்லாமிய சமுதாயம் தோன்றிய பிறகு "ஹிந்து" எனும் பெயர் இஸ்லாமியர் அல்லாத இந்தியர்களைக் குறிப்பதாயிற்று.

**கஜினி மாமுதின் தாக்குதல்கள்**

32 ஆண்டுகள் ஆட்சி புரிந்த கஜினி மாமுது, பதினேழு முறை இந்தியா மீது தாக்குதல்களை நடத்தினார். செல்வக் களஞ்சியமாக இருந்த இந்துக் கோயில்களில் கொள்ளை அடிப்பதே முதன்மை நோக்கம். இருப்பினும் கோயில்களை இடிப்பது, சிலைகளைத் தகர்ப்பது ஆகிய நடவடிக்கைகளும் நடந்தன. இதை கஜினி மாமுதுவின் படைவீரர்கள், தங்களது கடவுளின் வெல்லப்பட முடியாத ஆற்றலின் விளைவாகக் கண்டனர். "பிற மதத்தினரை" வெட்டிக் கொல்வதிலும், அவர்களது வழிபாட்டுத் தலங்களை அழிப்பதிலும் கஜினி மாமுதுவின் படையினரின் மதப்பற்று வெளிப்பட்டது. எனினும் மக்களை இசுலாமிய மதத்துக்கு மாற்றுவதற்கு அவர்கள் எந்த முயற்சியும் செய்யவில்லை. தங்களது உயிரையும் உடைமைகளையும் காத்துக்கொள்வதற்காக இசுலாமியராக மாறியவர்கள்கூட கஜினி மாமுதுவின் படையெடுப்பு முடிவுக்கு வந்ததும் தங்களின் மதத்துக்கே திரும்பினர்.

ஷாஹி அரசன் அனந்தபாலரைத் தோற்கடித்த கஜினி மாமுது, பிறகு பஞ்சாபைக் கடந்து கங்கைச் சமவெளிக்குள் நெடுந்தொலைவு உள்ளே வந்தார். கன்னோசி சென்றடைவதற்கு முன்னர் மதுராவைச் சூறையாடினார். தொடர்ந்து கஜினி மாமுது, 1025 இல் குஜராத் கடற்கரையிலுள்ள கோயில் நகரமான சோம்நாத்தின் மீது படையெடுத்துக் கொள்ளையடித்தார். சோமநாத் கோயில் கொள்ளை பற்றிய ஆங்கிலேய காலனிய, மற்றும் இந்திய தேசியவாதிகளின் வரலாற்றியல்கள் மாமுதுவைக் கொடும் படையெடுப்பாளராக சித்தரிக்கின்றன. கஜினியின் இக்கொள்கைகளை, மத ஆதிக்கம் சார்ந்தவை என்று கூறுவதைவிட பெரிதும் அரசியல், பொருளாதாரத் தன்மை கொண்டவை என்பதே பொருந்தும் எனப் பல வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். மத்திய கால இந்தியாவில் வழிபாட்டிடங்களைச் சூறையாடுவதும் கடவுள் திருவுருவங்களை அழிப்பதும் பேரரசின் ஏகபோக அதிகாரத்தின் வெளிப்பாடுகளாகவே கருதப்பட்டன. கஜினி மாமுதின் ராணுவத் தாக்குதல்களும் அவரது செயல்களும் அப்படிப்பட்டவையே. மேலும், கஜினி மாமுது கொள்ளை அடித்தது, அவரது பெரும் படையைப்

பராமரிக்கிற செலவை ஈடுசெய்யும் தேவையினால் ஏற்பட்டது. துருக்கியப் படை என்பது நிரந்தரமான, தொழில்நேர்த்திப் பெற்ற படையாகும். அது தெரிந்தெடுத்து தகுதி உயர்த்தப்பட்ட வில்லாளிகள் பிரிவை மையமாகக் கொண்டு கட்டப்பட்டது. இவர்கள் அனைவரும் விலைக்கு வாங்கப்பட்ட அடிமைகளாவர்; இவர்களுக்குப் பயிற்சியளித்து ஆயுதங்கள் கொடுக்கப்பட்டன. இந்தியாவின் இந்து அரசாட்சிகளிலிருந்தும் ஈரானின் இசுலாமிய அரசாட்சிகளிலிருந்தும் அடிக்கப்பட்ட போர்க் கொள்ளையிலிருந்து இவர்களுக்கு ஊதியம் அளிக்கப்பட்டது.

இந்தப் போர்க் கொள்ளைகளில் கைப்பற்றப்பட்ட செல்வம் குறித்துப் பாரசீகக் குறிப்புகள் மிகைப்படுத்திக் கூறுகின்றன. எடுத்துக்காட்டாக, 1029 இல் ரேய் என்ற ஈரானிய நகரத்தைச் சூறையாடியதில் கஜினி மாமுதுவுக்கு 500,000 தினார்கள் மதிப்புள்ள ஆபரணங்கள், நாணயங்களாக 260,000 தினார்கள், 30,000 தினார்கள் மதிப்புடைய தங்க, வெள்ளிப் பாத்திரங்கள் கிடைத்ததாகக் கூறப்படுகிறது. இது போலவே, சோம்நாத்தைச் (1025) சூறையாடியதில், 2 கோடி தினார் மதிப்புடைய கொள்ளைப் பொருள்கள் கஜினி மாமுதுவுக்குக் கிடைத்ததாக நம்பப்படுகிறது. வரலாற்றறிஞர் ரோமிலா தாப்பர், ”சோம்நாத் படையெடுப்பு குறித்த தகவல்கள் 13ஆம் நூற்றாண்டிலிருந்து அரபு மரபவழிப் பதிவுகளில் காணப்படுகின்றன. ஆனால், இதன் சமகால சமண மதச் சான்றுள் இதனை உறுதிப்படுத்தவில்லை” என்கிறார். இத்தகைய திடீர் இராணுவத் தாக்குதல்களும் கொள்ளையடிப்புகளும் பொருளாதார மற்றும் மத உருவ எதிர்ப்புத் தன்மை கொண்டதே தவிர வகுப்புவாதத் தன்மை கொண்டதல்ல. சமகாலப் போர்முறையிலிருந்து பிரிக்க முடியாத அழிவுகளையும் மத்திய கால அரசர்களின் வழக்கமான கொள்ளையிடும் தன்மையையுமே அவை வெளிப்படுத்துகின்றன” என்கிறார்.

கஜினி மாமுது இறந்த பிறகு கஜினி வம்சத்தில் உறவினர்களிடையே அரச வாரிசுரிமை தொடர்பாக முடிவற்ற மோதல்கள் நிகழ்ந்தன. இருப்பினும், 42 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி புரிந்த சுல்தான் இப்ராஹிம், 17 ஆண்டுகள் ஆட்சி புரிந்த அவரது மகன் மசூத் போன்ற சில விதிவிலக்குகளும் இருந்தனர். வடக்கே கோரிகளிடமிருந்தும் மேற்கே செலிஜுக் துருக்கியரிடமிருந்தும் கஜினி வம்ச ஆட்சிக்கு நிரந்தர அபாயம் இருந்த வந்தது. இது அரசாட்சிக்குப் பேரழிவை ஏற்படுத்தியது. இதனால், கஜினி வம்சத்தின் பிற்கால ஆட்சியாளர்கள் லாகூர் பகுதியில் மட்டுமே அதிகாரம் செலுத்த முடிந்தது. இதுவும்கூட முப்பது ஆண்டுகளே நீடித்தது. 1186 இல் கோரி அரசர் மொய்சுதீன் முகமது என்கிற கோரி முகமது, பஞ்சாப் மீது படையெடுத்து லாகூரைக் கைப்பற்றினார். கஜினி வம்சத்தின் கடைசி அரசர் குரவ் ஷா, 1192 இல் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். அவரது மரணத்துடன் கஜினி அரசு முடிவுக்கு வந்தது.

**கோரி முகமது:**

கஜினியின் படையெடுப்புகள் கொள்ளையடிக்கும் நோக்கம் கொண்டவை. இதனை விரிவுபடுத்திக் கொள்ளையடித்த செல்வமும், திறையும் தொடர்ந்து சீராக வந்து சேர்வதை உறுதி செய்துகொள்ள படையரண் நகரங்களை கோரிகள் அமைத்தனர். கோரி முகமது, தாம் கைப்பற்றிய நிலப்பகுதிகளில் முதலீடு செய்தார். 1180 களிலும் 1190 களிலும் நவீன பஞ்சாப், சிந்து. ஹரியானா மாகாணங்களில் அவர் காவல் அரண்களை அமைத்தார். விரைவிலேயே இந்தப் படை மையங்களில், ராணுவத்தில் சேர வாய்ப்புகளைத் தேடிக்கொண்டிருந்த கூலிப்படை வீரர்கள் குடியேறினர். இப்படைவீரர்கள், சுல்தானிய அரசின் வருவாய், படை விவகாரங்களை ஒழுங்கமைக்கப் பணியமர்த்தப்பட்டனர். வட இந்தியாவில்

1190 இலிருந்து சுல்தானின் படைத் தளபதிகள், அடிமைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர். போர் முறையிலும் நிர்வாகத்திலும் சிறப்புப் பயிற்சி பெற்ற இந்த அடிமைகள், நிலத்தோடும் விவசாய உழைப்போடும் வீட்டு வேலைகளோடும் தொடர்புடைய அடிமைகளிலிருந்து மாறுபட்டவர்கள். தொடக்கத்தில், உச் (லாகூர்), முல்தான் ஆகியன குறிப்பிடத்தக்க அதிகார மையங்களாகக் கருதப்பட்டன. 1175 இல் முல்தான் மீது படையெடுத்த கோரி முகமது, அதை அதன் இசுமாயிய வம்ச ஆட்சியாளரிடமிருந்து கைப்பற்றினார். தொடர்ந்து உச் கோட்டையும் தாக்குதல் இன்றியே பணிந்தது. எனினும், குஜராத்தின் சாளுக்கியர் அபு மலையில் கோரி முகமதுவுக்கு ஒரு பயங்கரத் தோல்வியைக் கொடுத்தனர் (1179). இந்தத் தோல்விக்குப் பிறகு கோரி முகமது, தமது படையெடுப்பின் போக்கை மாற்றிக் கொண்டு சிந்துவிலும் பஞ்சாபிலும் தமது நிலையை உறுதிப்படுத்திக் கொண்டார்.

கணிதவியலாளரும் தத்துவஞானியும் வானியலாளரும் வரலாற்று ஆசிரியருமான அல்-பெருனி, கஜனி மாமுதுவுடன் இந்தியா வந்தார். கிதாப்-உல்-ஹிந்த் என்ற தனது நூலை இயற்றுவதற்கு முன்பு அவர் சமஸ்கிருதம் கற்றுக்கொண்டார். இந்து மத நூல்களையும் தத்துவ நூல்களையும் கற்றார். யூக்ளிடின் கிரேக்க நூலைக்கூட அவர் சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தார். ஆரியபட்டரின் முக்கிய நூலான ஆர்யப்பட்டியம் (புவி, அதன் அச்சில் சுழல்வது இரவு பகலை ஏற்படுத்துகிறது போன்ற செய்திகளை உள்ளடக்கிய நூல்) என்பதை அவர் மேலை நாடுகளுக்குத் தெரியப்படுத்தினார். இந்தியாவுக்கும் பிற உலக நாடுகளுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்தார்.

**பிருத்விராஜ் சௌகான்:**

அஜ்மீர் சௌகான்களின் இராணுவ முக்கியத்துவத்துவம் வாய்ந்த தபர்ஹிந்தா (பட்டிண்டா) கோட்டையை முகமது கோரி தாக்கினார். அஜ்மீர் அரசர் பிருத்விராஜ் சௌகான், தபர்ஹிந்தாவுக்கு அணுவகுத்துச் சென்று 1191 இல் முதலாவது தரெய்ன் போரை நிகழத்தினார். இந்தப போரில் ஒரு முழுமையான வெற்றியைப் பிருத்விராஜ் பெற்றார். எனினும் இதை ஓர் எல்லைப்புறச் சண்டையாக மட்டுமே கருதியதால் அங்கே தனது நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளவில்லை. மேலும், கோரிகள் அவ்வப்போது தாக்குதல்கள் நடத்துவார்கள் என்றும் அவர் எதிர்பார்க்கவில்லை. தரெய்ன் போரில் முகமது கோரி காயமடைந்தார். ஒரு குதிரை வீரன் அவரை பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு சென்றார். பிருத்விராஜ் சௌகான் நினைத்ததற்கு மாறாக, அடுத்த ஆண்டில் (1192) முகமது கோரி அஜ்மீர் மீது மீண்டும் படையெடுத்தார். கோரியின் ஆற்றலைப் பிருத்விராஜ் குறைத்து மதிப்பிட்டார். தனது அமைச்சர் சோமேஸ்வராவின் ஆலோசனையை நிராகரித்தார். கோரிக்கு எதிராக ஒரு சிறிய படைக் குழுவுக்குத் தலைமையேற்றுச் சென்றார். இந்த இரண்டாவது தரெய்ன் போரில், பிருத்விராஜ் தோல்வி அடைந்தார். இறுதியில் சிறைப் பிடிக்கப்பட்டார். இந்திய வரலாற்றின் திருப்புமுனைகளுள் ஒன்றாக இந்தப் போர் அமைந்தது. போரில் வெற்றி பெற்ற கோரி, மீண்டும் அஜ்மீரின் ஆட்சியை பிருத்விராஜிடமே ஒப்படைத்தார். பின்னர், இராஜதுரோகக் குற்றம் சாட்டி, அவரைக் கொன்றார். தனது நம்பிக்கைக்குரிய தளபதியான குத்புதீன் ஐபக்கை இந்தியப் பகுதிக்கான தனது துணை ஆட்சியாளராக நியமித்தார்.

**கன்னோசி அரசர் ஜெயசந்திரா:**

கன்னோசி அரசர் ஜெயசந்திராவை எதிர்த்துப் போர்புரிய மீண்டும் விரைவிலேயே முகமது கோரி இந்தியா வந்தார். கோரியை எதிர்த்த போரில் ரஜபுத்திரத் தலைவர்கள் யாரும் ஜெயச்சந்திரனை ஆதரிக்கவில்லை. அவர்கள்

பிருதிவிராஜ் பக்கம் நின்றனர். ஜெயச்சந்திரன் மகள் சம்யுக்தாவைப் பிருதிவிராஜ் கடத்திச் சென்றதையொட்டி இருவருக்குமிடையே பகை இருந்தது. இதனால் தனிமைப்பட்டு நின்ற ஜெயசந்திராவை எளிதாக வென்ற முகமது கோரி, ஏராளமான கொள்ளைச் செல்வத்துடன் திரும்பினார். திரும்பும் வழியில், சிந்து நதிக் கரையில் தங்கியிருந்தபோது, அடையாளமட் தெரியாதவர்களால் கொல்லப்பட்டார்.

**ரஜபுத்திர அரசுகள்:**

பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கூர்ஜர பிரதிஹாரர், ராஷ்டிகூடர் ஆகிய வலுவான இரண்டு ரஜபுத்திர அரசாட்சிகள் தங்களின் அதிகாரத்தை இழந்தன. டோமர் (தில்லி), சௌகான் (ராஜஸ்தான்), சோலங்கி (குஜராத்), பரமர் (மால்வா), கடவாலா (கன்னோசி), சந்தேலர் (புந்தேல்கந்த்) ஆகியவை வட இந்தியாவின் முக்கியமான அரச வம்சங்கள் ஆகும். முதன்மையான இரு சௌகான் அரசர்களான விக்ரகராஜ், பிருத்விராஜ், பரமர் வம்சத்தின் போஜர், கடவாலா அரசன் ஜெயசந்திரா, சந்தேலரான யசோவர்மன், கீர்த்தி வர்மன் ஆகிய அனைவரும் வலுவாக இருந்தனர்.

லக்ஷ்மணர் கோயில், விஸ்வநாதர் கோயில், கந்தரியா மஹாதேவர் கோயில் உள்பட பல கோயில்களைக் கொண்ட உலகப் புகழ்பெற்ற கஜராஹோ கோயில் வளாகம்ட, கஜுராஹோவிலிருந்து ஆட்சிபுரிந்த புந்தேல்கந்த் சந்தேலர்களால் கட்டப்பட்டது.

ரஜபுத்திரர்கள் போர்ப் பாரம்பரியம் கொண்டவர்கள். துருக்கியரும் ரஜபுத்திரரும் ஒரே மாதிரியான ஆயுதங்களையே பயன்படுத்தினர். எனினும், படை ஒழுங்கிலும் பயிற்சியிலும் ரஜபுத்திரர்கள் கவனமின்றியிருந்தனர். அதே நேரத்தில் நிலைமைகளுக்குத் தக்கவாறு உத்திகள் வகுப்பதில் துருக்கியர் வல்லவர்களாயிருந்தனர். துருக்கிய குதிரைப் படை, இந்திய குதிரைப் படையை விடை மேம்பட்டதாயிருந்தது. ரஜபுத்திரப் படை யானைகளை மையப்படுத்தி இருந்தது. யானைகளுடன் ஒப்பிடுகிறபோது குதிரைகள் பன்மடங்கு வேகம் கொண்டவை. இது, போரில் துருக்கியர்களுக்குச் சாதகமாக அமைந்தது. எனவே, அவர்கள் பகைவரை எளிதில் வென்றனர்.

**தில்லி சுல்தானியப் பேரரசு:**
**அடிமை வம்சம்**

முகமது கோரி இறந்த பிறகு அதிகாரத்துக்கு மூவர் போட்டியிட்டனர். ஒருவர் குத்புதீன் ஐபக். இவர், தில்லியில் அரியணை ஏறினார். ஆனால் அவரது மாமனார் இல்திஸ், ஆட்சிக்கு ஓர் அச்சுறுத்தலாகவே இருந்தார். இந்த வம்சத்தின் மூன்று முக்கியமான ஆட்சியாளர்கள்: குத்புதீன் ஐபக், இல்துமிஷ், பால்பன்.

அடிமை வம்சத்தை மம்லக் வம்சம் என்றும் கூறுவர். மம்லக் என்பதற்கு உடைமை என்று பொருளாகும். இது "ஓர் அடிமை" என்பதற்கான அரபுத் தகுதிப் பெயருமாகும்.

**குத்புதீன் ஐபக் (1206 – 1210)**

குத்புதீன் ஐபக், சிறுவனாக இருந்த போதே கஜினியில் ஓர் அடிமையாக சுல்தான் முகமது கோரிக்கு விற்கப்பட்டார். அவரது திறமையையும்

விசுவாசத்தையும் கண்டமுகமது கோரி, இந்தியாவில் தான் வெற்றிபெற்ற ஒரு மாகாணத்திற்கு பொறுப்பு ஆளுநராக அவரை நியமித்தார். பிகாரையும் வங்கத்தையும் கைப்பற்றுவதற்கு ஆப்கானிஸ்தானிலிருந்து வந்த முகமது-பின்-பக்தியார் கில்ஜி என்ற ஒரு துருக்கியத் தளபதிக்கு அவர் உதவினார். குத்புதீன் ஐபக் நான்கு ஆண்டுகள் (1206 – 1210) ஆட்சி புரிந்தார். அவர் புத்திசாலி என்றும்

புகழ்பெற்ற நாளந்தா பௌத்தப் பல்கலைக் கழகத்தை அழித்தவர் பக்தியார் கில்ஜி என்று கருதப்படுகிறது. சீனப் பயணி யுவான் சுவாங் தனது பயணக் குறிப்புகளில் நாளந்தா குறித்து விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். நாளந்தா நூலகத்தில் இருந்த இலக்கணம், இலக்கியம், தர்க்கம், வானியல், மருத்துவம் குறித்த நூறாயிரக்கணக்கான கையெழுத்துப் பிரதிகளும் நூல்களும் துருக்கியச் சூறையாடலில் அழிந்தன.

நேர்மையான நிர்வாக என்றும் பெயரெடுத்தார். 1210 இல் லாகூரில் சௌகான் எனும் விளையாட்டின் போது நிகழ்ந்த ஒரு விபத்தில் இறந்தார்.

**இல்துமிஷ் (1210 – 1236):**

சம்சுதீன் இல்துமிஷ் (1210 – 1236) துருக்கிய இனத்தைச் சார்ந்த குத்புதீன் ஐபக்கின் அடிமை. இல்துமிஷ்கின் மேல்தட்டு அடிமைகள் பலரும் துருக்கிய, மங்கோலிய வழித்தோன்றல்கள். அவர்களை புக்காரா, சாமர்கண்ட், பாக்தர்த் போன்ற வணிக மையங்களிலிருந்து வணிகர்கள் தில்லிக்கு அழைத்துவந்தனர். மற்ற இனங்களைச் சேர்ந்த (குறிப்பாக மைய இந்தியாவின் மிஹிரிலிருந்து சிறைப்பிடிக்கப்பட்ட ஹிந்து கான் போன்ற) சில அடிமைகளும் இருந்தனர். எனினும் இவர்கள் அனைவருக்குமே துருக்கியப் பட்டங்களை சம்சுதீன் இல்துமிஷ், கொடுத்தார். தனது மேல்தட்டு இராணுவ அடிமைகளையே (பண்டகன்) அவர் நம்பியிருந்தார். தொலைவிலுள்ள இடங்களில் அவர்களையே ஆளுநர்களாகவும் தளபதிகளாகவும்

பண்டகன் என்பது பண்ட என்பதன் பன்மையாகும். இச்சொல்லுக்குப் படை அடிமை என்று பொருள். இராணுவப் பணி அனுபவம், பேரரசருடனான நெருக்கம், நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் அவர்கள் தரம் பிரிக்கப்பட்டார்கள். இந்த நம்பிக்கை, அவர்கள் ஆளுநர்களாகவும் தளபதிகளாகவும் நியமிக்கப்படுவதற்கு வழிகோலியது. வட இந்தியாவில் குரித் பண்டகன், மொய்சுதீன் கோரியின் அடிமைகளாவர். இந்த அடிமைகளுக்கு சொந்தச் சமூக அடையாளம் இல்லை இதனால் அவர்களது எஜமானர்கள் அவர்களுக்குப் புதிய பெயர்கள் சூட்டினர் "நிஸ்பா" என்பதையும் உள்ளடக்கிய அப்பெயர்கள் அவர்களது சமூக அல்லது பிரதேச அடையாளத்தைக் குறித்தன. அடிமைகள், தங்களது எஜமானர்களின் நிஸ்பாவைக் கொண்டிருந்தனர். எனவே மொய்சுதீன் அடிமை, மொய்சு எனும் நிஸ்பாவைக் கொண்டிருப்பார். சுல்தான் சம்சுதீன் இல்துமிஷின் அடிமை, ஷம்ஸி பண்டகன் என்று குறிப்பிடப்படுவார்.

நியமிக்கிற வழக்கத்தையும் கைக்கொண்டார். இக்காலகட்டத்தில் மங்கோலிய இனத்தைச் சேர்ந்த அனுபவமிக்க இராணுவத் தளபதிகள் வட இந்தியாவுக்குள் குடிபெயர்ந்தபோதிலும், பழைய வழக்கத்தை இல்துமிஷ் மாற்றிக் கொள்ளவில்லை.

குத்புதீனின் அடிமையும் மருமகனுமான சம்சுதீன் இல்துமிஷ், குத்புதீன் ஐபக்கின் மகன் ஆரம் ஷா ஆட்சிக்கு வருவதைத் தடுத்து, தானே தில்லியின்

ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தார். தனது ஆட்சிக் காலத்தில் அவர் குவாலியர், ரன்தம்பர், அஜ்மீர், ஜலோர் ஆகிய இடங்களில் ரஜபுத்திரர்களுக்கிடையே நிலவிய குழப்பங்களை முடித்துவைத்தார். லாகூரிலும் முல்தானிலும் நசுருதீன் குபச்சாவின் படையை எதிர்த்து வெற்றிபெற்றார். வங்க ஆளுநர் அலிவர்தனின் சதியையும் முறியடித்தார். மங்கோலிய செங்கிஸ்கானுக்கும் மத்திய ஆசியாவின் கவாரிஸ்மி ஷா ஜலாலுதீனுக்கும் இடையே போர்ப்பகை இருந்தது. இல்துமிஷிடம் ஜலாவுதீன் ஆதரவு கேட்டார். இல்துமிஷ், அவரை ஆதரிக்க மறுத்துவிட்டார். ஜலாலுதீனை அவர், ஆதரித்திருந்தால் இந்திய வரலாறு பெரிதும் மாறி இருந்திருக்கும். மங்கோலியர்கள் இந்தியாவை எளிதில் நாசம் செய்திருப்பார்கள். இல்துமிஷின் ஆட்சி, தில்லியில் 243 அடி உயரமுள்ள குதுப் மினார் என்ற ஒரு வெற்றித்தூணைக் கட்டியதற்கும் சுல்தான்கள் ஆட்சி காலத்தின் இரண்டு அடிப்படை நாணயங்களான செப்பு, வெள்ளி தங்காவை அறிமுகம் செய்ததற்கும் குறிப்பிடத்தகுந்தது.

அடிமை வம்ச மரபுகள் பலவீனமானவை என்பதால், இல்தமிஷ் இறந்த பிறகு அவரது வாரிசுகள் ஆட்சிக்கு வருவது எளிதாக இல்லை. ஒரு பத்து ஆண்டுகளுக்குள், ஒரு மகன், ஒரு மகள் (சுல்தானா ரசியா), மற்றொரு மகன், ஒரு பேரன் எனப் பலரும் ஆட்சிக்க வந்தனர். இறுதியில் அவரது கடைசி மகன் சுல்தான் இரண்டாம் நசிர் அல்லுதீன் முகமது (1246 – 66) அரசரானார். இல்துமிஷின் வாரிசுகள் தங்கள் தந்தையாரால் நியமிக்கப்பட்ட தளபதிகளையும் ஆளுநர்களையும் எதிர்த்து போரிட்டுத் தோற்றனர். மூத்த பிரபுக்களாகிய அவர்கள் தொடர்ந்து தில்லி அரசியலில் தலையிட்டனர். இல்துமிஷ் வாரிசுகளுக்கு நிபந்தனைகள் விதித்து வந்தனர். மூத்த அரச குடும்ப அடிமைகளுக்கு மாற்றாக இளைய தலைமுறையினரை சுல்தான் நியமித்தபோது, அவர்களுக்கு முன்னே அதிகாரம் செலுத்தியவர்களுக்கு, நிகரான வலிமையான ஒன்றுபட்ட சுல்தானிய அரசு பற்றி அரசருக்கிருந்த கண்ணோட்டத்தை அவர்கள் பெற்றிருக்கவில்லை.

கிழக்கே நவீன வங்கம், மேற்கே பஞ்சாப், சிந்து மாகாணங்களில் நியமிக்கப்பட்ட அடிமை ஆளுநர்கள் தில்லியின் கட்டுபாபட்டிலிருந்து வெளியேறி சுதந்திர அரசுகளாக அறிவித்தனர். தில்லி சுல்தானின் “மைய ஆட்சிப் பகுதியிலிருந்த அடிமை அளுநர்களும், தங்களை நிலைப்படுத்திக் கொண்டும் பக்கத்திலுள்ள குறுநிலத் தலைவர்களுடன் அணி சேர்ந்தும் சுல்தானுக்குக் கட்டுப்பட மறுத்தனர். ஷம்ஸியின் அடிமைகளுக்கும் அடுத்தடுத்து வந்த தில்லி சுல்தான்களுக்கும் இடையில் இருபதாண்டுகளுக்கு மோதல்கள் நிகழ்ந்தன. அதன் பிறகு 1254 இல், வட – மேற்கில் ஷிவாலிக் ஆட்சிப் பகுதிகளின் தளபதியாக இருந்த உலுக் கான், தில்லியைக் கைப்பற்றினார். உலுக்கான், இல்துமிஷ் ஆட்சியின்போது அடிமையாகவும் இளைஞராகவும் இருந்தவர். அவர் (சுல்தானுக்குத் துணையாக இருந்த) ஆட்சி அதிகாரப் பிரதிநிதி என்று பொருள்படும். நயிப்-இ முல்க் என்று பட்டம் சூட்டிக்கொண்டார். பிறகு 1266 இல் சுல்தான் கியஸ்-அல்-தின் பால்பனாக தில்லி ஆட்சியைக் கைப்பற்றினார்.

**பால்பன் (1265 – 1287)**

பால்பன் அரசரானதும் தில்லி சுல்தானியத்தில் குழப்பங்கள் விளைவித்த பிரபுக்களின் அரசியல் சூழ்ச்சிகள் முடிவுக்குவந்தன. பால்பன், தனது ஆட்சி அதிகாரத்தை உறுதிப்படுத்திக்கொள்ள, அடங்க மறுத்த ஆளுநர்கள் மீதும் அவர்களின் உள்ளூர்

**ரஸியா சுல்தானா (1236 – 1240):**
இவர் பேரரசர் இல்துமிஷின் மகள். ரஸியா அரியணை ஏறுவதற்கு துருக்கிய பிரபுக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஏராளமான தடைகளைக் கடந்தே ரஸியா பேரரசியாகப் பதவி ஏற்றார். மொராக்கோ நாட்டைச் சேர்ந்த பயணி, இபின் பதூதாவின் கூற்றுப்படி "குதிரை மீது ஆண்கள் சவாரி செய்வதைப் போல், கையில் வில் அம்புடன், அரச பரிவாரங்கள் சூழ ரசியாவும் சவாரி செய்தார். தனது முகத்துக்கு அவர் திரையிடவில்லை". இருப்பினும் அவர் மூன்றரை ஆண்டுகளே ஆட்சி புரிந்தார். ஜலாலுதீன் யாகுத் என்ற ஓர் அபிசீனிய அடிமையை அவர் குதிரை இலாயப் பணித்துறைத்தலைவராக (அமீர்-இ-அகுர்) ஓர் உயர்ந்த பதவியில் அமர்த்தினார். இது, துருக்கிய பிரபுக்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. யாகுத்துக்கும் அரசி ரஸியாவுக்கும் இருந்த நெருக்கத்தைப் பெரிதுபடுத்த, பிரபுக்கள், அரசியைப் பதவியிலிருந்து இறக்க முயன்றனர். ரஸியாவுக்குப் பொதுமக்கள் ஆதரவு இருந்ததால், தில்லியில் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தெற்குப் பஞ்சாப்பில் கலகக்கார ஆளுநர் அல்துனியாவைத் தண்டிப்பதற்கு அவர் நடவடிக்கை மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்தைச் சதிகாரர்கள் பயன்படுத்தி அவரை ஆட்சியிலிருந்து அகற்றினர்.

கூட்டாளிகள் மீதும் தாக்குதல் தொடுத்தார். தில்லியைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தோவாபிலும் நிகழ்ந்த பால்பனின் தாக்குதல்களை பாரனி குறிப்பிடுகிறார். இந்தத் தாக்குதல்களின் போது காடுகள் அழிக்கப்பட்டன. புதிய சாலைகள் அமைக்கப்பட்டன. காடழிக்கப்பட்ட புதிய நிலங்கள், புதிதாகப் படையில் சேர்ந்த ஆ∴ப்கானியர்களுக்கும் மற்றவர்களுக்கும் குத்தகையில்லா நிலங்களாக (ம∴ப்ருஸி) வழங்கப்பட்டு, அவை பயிரிடப்பட்டன. வணிகத் தடங்களையும் கிராமச் சந்தைகளையும் பாதுகாக்கப் புதிய கோட்டைகள் கட்டப்பட்டன.

**பால்பனும் சட்ட ஒழுங்கும்:**

கங்கை, யமுனை நதிகள் இடையிலான தோவாப் பகுதிகளில் சட்ட ஒழுங்கு நிலைமை சீர்குலைந்தது. ரஜபுத்திர ஜமீன்தார்கள் கோட்டைகள் அமைத்தனர். சுல்தானின் ஆணைகளை மீறினர். வட மேற்கில், மேவாரைச் சுற்றிய அடர்ந்த காட்டுப் பகுதிகளில் வாழ்ந்த "மியோ" என்ற ஓர் இசுலாமியச் சமூகம் கொலையிலும் கொள்ளையிலும் ஈடுபட்டிருந்தது. இதை ஒரு சவாலாக ஏற்ற பால்பன் தாமே முன்னின்று மேவாரைச் சேர்ந்தவர்கள் மீது தாக்குதல் தொடுத்தார். அவரின் படைவீரர்கள், மியோக்களைத் தேடிப் பிடித்துக் கொன்றனர். தோவாப் பகுதியில் ரஜபுத்திர அரசணகள் அழிக்கப்பட்டன. காடுகள் அழிக்கப்பட்டன. சாலைகளைப் பாதுகாக்கவும் கலகங்களைக் கையாளவும் அப்பகுதி முழுவதிலும் ஆ∴ப்கன் படை வீரர்கள் குடியமர்த்தப்பட்டனர்.

**துக்ரில் கானை தண்டிக்கின்ற தாக்குதல்:**

பால்பன், கலகங்களை ஈவிரக்கமின்றி ஒடுக்கினார். தனக்குப் பிடித்த ஓர் அடிமையான துக்ரில் கானை வங்கத்தின் ஆளுநராக நியமித்தார். ஆனால், விரைவிலேயே துக்ரில் கான் வெளிப்படையாகவே கலகம் செய்தார். அதை ஒடுக்குவதற்கு, பால்பன் அனுப்பிவைத்த அவத் ஆளுநர் அமின் கான் பணிந்து பின்வாங்கினார். இதனால் ஆத்திரமடைந்த பால்பன் மேலும் இரு படைப் பிரிவுகளை அனுப்ப அவையும் தோல்வியைத் தழுவின. அடுத்தடுத்து ஏற்பட்ட இந்தப் பின்னடைவுகளால் அவமானப்பட்ட பால்பன், தாமே வங்கத்திற்குச் சென்றார். பால்பன் நெருங்கிவிட்டதைக் கேள்வியுற்ற துக்ரில் கான் தப்பியோடினார். பல்பன், அவரைப் பின் தொடர்ந்து முதலில் லக்நௌதிக்கும் பிறகு திரிபுராவை நோக்கியும்

சென்றார். அங்கே துக்ரில் கானைப் பிடித்த பால்பனின் படைவீரர்கள் அவரைக் கொன்றனர். பிறகு வங்கத்தின் ஆளுநராக பால்பனின் மகன் புக்ரா கான் நியமிக்கப்பட்டார். பால்பன் இறந்த பிறகு புக்ரா கான் ஒரு சுதந்திர அரசாட்சியாகப் பிரிந்து போனாரேயன்றி தந்தையின் அரியணையைக் கோரவில்லை. இதனால் தில்லியில் ஒரு தலைமை நெருக்கடி ஏற்பட்டது. மேலும், அவரது மகன் கைகுபாத், சிற்றின்பத்தில் வீழ்ந்து கிடந்தார்.

**மங்கோலிய அச்சுறுத்தலுக்கு எதிரான நடவடிக்கைகள்:**

மங்கோலியர்களின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் விதமாக தனது ராணுவத்தை பால்பன் பலப்படுத்திக் கொண்டார். படிண்டா, சுனம், சாமானா ஆகிய இடங்களில் இருந்த கோட்டையில் கூடுதல் படைகளை நிலைநிறுத்தி வலுப்படுத்தினார். அதே நேரத்தில், ஈரானின் மங்கோலிய பொறுப்பு ஆளுநரும் செங்கிஸ் கானின் பேரனுமான ஹுலாகு கானுடன் நல்லுறவைப் பேணுவதற்கு அவர் முயற்சி செய்தார். சட்லெஜுக்கு

மங்கோல் என்ற பெயர், மங்கோலிய மொழி பேசக்கூடிய மத்திய ஆசிய நாடோடிக் குழுக்கள் அனைத்தையும் குறிக்கும். பன்னிரெண்டாம் நூற்றாண்டில் அவர்கள் செங்கிஸ் கான் தலைமையில் ஒரு மிகப் பெரிய அரசாட்சியை நிறுவினர். நவீன ருஷ்யாவின் பெரும்பகுதி, சீனா, கொரியா, தென் கிழக்கு ஆசியா, பாரசீகம், இந்தியா, மத்தியக் கிழக்கு நாடுகள், கிழக்கு ஐரோப்பா ஆகியவற்றை அவரது அரசாட்சி உள்ளடக்கி இருந்தது. அவர்களின் விரைவான குதிரைகளும் சிறந்த குதிரைப் படை உத்திகளும் புதிய தொழில்நுட்பங்களை ஏற்கும் மனப்பாங்கும் அரசியலைச் சூழ்ச்சித் திறத்துடன் கையாளும் செங்கிஸ்கானின் திறனும் மங்கோலியரின் வெற்றிக்குக் காரணமாகக் கூறப்படுகின்றன.

அப்பால் முன்னேறி வரமாட்டோம் என்ற வாக்குறுதியை மங்கோலியரிடமிருந்து பால்பன் அவரிடமிருந்து பெற்றார். இதை, 1259 இல் தில்லிக்கு ஒரு நல்லெண்ணக் குழுவை அனுப்பிவைத்து ஹுலாகு கான் குறிப்பால் உணர்தினார். மங்கோலியத் தாக்குதல்களிலிருந்து எல்லைப் பகுதிகளைக் காப்பதற்காக தனது விருப்பத்துக்குரிய மகன் முகமது கானுக்கு முல்தானின் ஆளுநர் பொறுப்பு அளித்திருந்தார் பால்பன். ஹுலாகு கானுடன் நட்புறவு இருந்தபோதிலும் ஒரு மங்கோலியரோடு ஏற்பட்ட ஒரு மோதலில் முகமது கான் கொல்லப்பட்டார். இதனால் மனமுடைந்த பால்பன், 1286 இல் இறந்து போனார்.

**கில்ஜிகள் (1290 – 1320)**
**ஜலாலுதீன் கில்ஜி (1290 – 1296):**

பால்பனின் மகன் கைகுபாத் அரசராகும் தகுதியற்றவராக இருந்தார். இதனால் அவரது மூன்று வயது மகன் கேமார்ஸ் அரச கட்டிலில் அமர்த்தப்பட்டார். பேரரசின் அமைச்சர்கள், பொறுப்பு ஆளுநர் போன்றோரை நியமிப்பதில் ஒத்த கருத்து ஏற்படவில்லை. இதையொட்டிப் பிரபுக்கள் சதி செய்தனர். இக்குழப்பத்திலிருந்து ஒரு புதிய தலைவராகப் படைத் தளபதி மாலிக் ஜலாலுதீன் கில்ஜி மேலெழுந்தார். கைகுபாத்தின் பெயரால் அரசாட்டி செய்த ஜலாலுதீன், அவரைக் கொல்வதற்கு ஒரு அதிகாரியை அனுப்பினார். விரைவிலேயே ஜலாலுதீன் முறைப்படி அரசரானார். ஜலாலுதீன் ஓர் ஆ.்.ப்கானியர்; துருக்கியர் அல்லர் என்ற அடிப்படையில் அவருக்கு எதிர்ப்பிருந்தது. உண்மையில் கில்ஜிகள், ஆ.்.ப்கானிஸ்தானில் துருக்கிய ஆட்சி நிறுவப்படுவதற்கு முன்பே அங்கு குடியமர்ந்தவர்கள்; எனவே அவர்கள்

ஆ.்.ப்கானியமயமான துருக்கியர்களாவர். எப்படியிருப்பினும், பிரபுக்கள் பலரையும் விரைவிலேயே ஜலாலுதீன் வசப்படுத்திவிட்டார்.

இதனால், கில்ஜிகள் மீது தொடக்கத்தில் அவர்களுக்கு இருந்த வெறுப்பு மறைந்து அவர் பல சண்டைகளில் வெற்றிபெற்றார். மேலும் தமது முதிய வயதில்கூட மங்கோலியக் கூட்டங்களை எதிர்த்து அணிவகுத்த அவர், இந்தியாவுக்குள் அவர்கள் நுழைவதை வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்தினார்.

காராவின் பொறுப்பு அளுநரான ஜலாலுதீன் கில்ஜியின் ஓர் உடன் பிறந்தார் மகனும் மருமகனுமான அலாவுதீன், இச்சமயத்தில் மால்வா மீது படையெடுத்தார். இந்தப் படையெடுப்பில் பெருமளவு செல்வம் கிடைத்தது. இந்த வெற்றி, தக்காணத்திலிருந்த யாதவ அரசின் தலைநகர் தேவகிரியைச் சூறையாடுவதற்கான ஓர் உந்துதலை ஜலாலுதீனுக்கு அளித்தது. எனினும், இந்தப் படையெடுப்பில் அவர் கொல்லப்பட்டார். இவ்வாறாக, ஜலாலுதீனின் ஆறாண்டுக் கால ஆட்சி 1296 இல் முடிவுக்கு வந்தது.

**அலாவுதீன் கில்ஜி (1296 – 1316):**
**அலாவுதீனும் பிரபுக்களும்:**

அலாவுதீன், எதிரிகளை ஒழித்து தில்லியில் தமது இடத்தைப் பலப்படுத்திக்கொள்வதில் முதலாண்டு முழுவதும் கழித்தார். விரைவிலேயே அவர், பிரபுக்கள் மீது ஒரு உறுதியான பிடியை வைத்துக்கொள்வதில் தமது கவனத்தைச் செலுத்தினார். உயர் அதிகாரிகள் பலரையும் பணிநீக்கம் செய்தார். குறிப்பாக, ஜலாலுதீனுக்கு எதிராகத் தங்களின் விசுவாசத்தை மாற்றிக் கொண்டு, சந்தர்ப்பத்துக்கேற்பத் தம்மிடம் இணைந்த பிரபுக்களிடத்தில் அவர் மிகக் கடுமையாக நடந்து கொண்டார்.

**மங்கோலிய அச்சுறுத்தல்கள்**

மங்கோலியப் படையெடுப்புகள் அலாவுதீனுக்கு ஒரு பெரும் சவாலாக அமைந்தன. அவரது இரண்டாவது ஆட்சி ஆண்டில் (1298) மங்கோலியர் தில்லியை உக்கிரமாகத் தாக்கினர். அலாவுதீனின் படையால் அவர்களை எதிர்த்து நிற்க இயலவில்லை. அடுத்த ஆண்டில் மேலும் அதிக படைகளுடன் மங்கோலியர் மீண்டும் தாக்கிய போது, தில்லியின் புறநகர மக்கள் நகரத்துக்குள் தஞ்சமைந்தனர். இந்தச் சவாலை அலாவுதீன், தானே எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதன் விளைவாக நிகழ்ந்த மோதலில் மங்கோலியர் நிலைகுலைந்தனர். இருப்பினும் 1305 இல் தோஆப் சமவெளிப் பகுதியின் வழியே நுழைந்து மீண்டும் தாக்கினர். இம்முறை மங்கோலியரை தோற்கடித்த சுல்தானின் படை, அதிக எண்ணிக்கையில் அவர்களைச் சிறைப்பிடித்துக் கொன்றது. ஆனாலும் மங்கோலியர் அச்சுறுத்தல்கள் தொடர்ந்தன. கடைசி மங்கோலியத் தாக்குதல் 1307 – 08 இல் நிகழ்ந்தது. இது மிகப் பிரமாண்டமாக இருந்தது. ஆனாலும், மங்கோலியருக்குக் கிடைத்த கடுமையான பதிலடி, அதன் பிறகு அவர்கள் உள்ளே நுழைந்து தாக்காதவாறு தடுத்தது.

**இராணுவத் தாக்குதல்கள்:**

சுல்தானியம் தனது அரசியல் இலக்குகளை அடைவதற்கு, அதன் வட இந்திய நிலப்பரப்புகளின் வேளாண் வளங்களைப் பயன்படுத்திக்கொள்ள இயலவில்லை. இது, கொள்ளைப் பொருள் தேடி இடைவிடாமல் அவர்கள் நடத்திய

சூறையாடல்களால் தெளிவாகிறது. தேவகிரி (1296, 1307, 1314) குஜராத் (1299 – 1300), ரன்தம்போர் (1301), சித்தோர் (1303), மால்வா (1305) ஆகிய இடங்களின் மீது அலாவுதீன் நடத்திய தாக்குதல்கள், அவருடைய மீது அலாவுதீன் நடத்திய தாக்குதல்கள், அவருடைய ராணுவ, அரசியல் அதிகாரத்தைப் பறைசாற்றவும், செல்வவளத்தைப் பெருக்கவுமே நடத்தப்பட்டன. தீபகற்பத்தில் அவருடைய முதல் இலக்கு மேற்கு தக்காணத்தில் இருந்த தேவகிரியாகும். 1307 ஆம் ஆண்டு, தேவகிரி கோட்டையைக் கைப்பற்றுவதற்காக மாலிக் கா∴பூர் தலைமையில் ஒரு பெரும் படையை அலாவுதீன் அனுப்பினார். இதைத் தொடர்ந்து, தெலுங்கானா பகுதியிலிருந்த வாரங்கல்லின் காகதீய அரசர் பிரதாபருத்ரதேவா 1309 இல் தோற்கடிக்கப்பட்டார். 1310 இல் தோல்வியடைந்த ஹொய்சாள அரசர் மூன்றாம் வீரவல்லாளன், அவரது செல்வங்கள் அனைத்தையும் தில்லித் துருப்புகளிடம் ஒப்படைத்தார்.

பிறகு மாலிக் கா∴பூர் தமிழ் நாட்டுக்குப் புறப்பட்டார். கனத்த மழை, வெள்ளத்தால் கா∴பூர் முன்னேறுவது தடைபட்டபோதும், சிதம்பரம், திருவரங்கம் ஆகிய கோயில் நரகங்களையும் பாண்டியர் தலைநகரம் மதுரையையும் சூறையாடினார். தமிழ்ப் பிரதேசங்களிலிருந்த இசுலாமியர், மாலிக் கா∴பூரை எதிர்த்து, பாண்டியர் தரப்பில் நின்று போரிட்டனர் என்பது இங்குக் குறிப்பிடத்தகுந்தது. 1311 இல் ஏராளமான செல்வக் குவியலுடன் மாலிக் கா∴பூர், தில்லி திரும்பினார்.

**நிர்வாகச் சீர்திருத்தங்கள்:**

பரந்த நிலப்பரப்புகளை வென்றதைத் தொடர்ந்து, அரசை நிலைப்படுத்தும் நோக்கில் விரிவான நிர்வாகச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. பிரபுக்கள் குவித்துவைத்திருந்த செல்வம், அவர்களுக்கு ஓய்வையும் சதிகள் செய்வதற்கான வசதிவாய்ப்புகளையும் அளிப்பதாக அலாவுதீன் கருதினார். அவர் எடுத்த முதல் நடவடிக்கை அதை அவர்களிடமிருந்து பறித்ததுதான். சுல்தானின் ஒப்புதலோடு மட்டுமே பிரபுக் குடும்பங்களுக்கிடையில் திருமண உறவுகள் அனுமதிக்கப்பட்டன. பரிசாகவோ, மதம் சார்ந்த அறக்கொடையாகவோ அளிக்கப்பட்டுச் சொத்துரிமை அடிப்படையில் வைத்திருந்த கிராமங்களை மீண்டும் அரச அதிகாரத்தின் கீழ் கொண்டுவர சுல்தான் ஆணையிட்டார். கிராம அலுவலர்கள் அனுபவித்துவந்த மரபுரிமைகளைப் பறித்து, பரம்பரை கிராம அலுவலர்களின் அதிகாரங்களைத் தடை செய்தார். ஊழல் வயப்பட்ட

தகுதியிலும் வரிசையிலும் சுல்தானை அடுத்துப் பிரபுக்கள் இருந்தனர். அரசை நிர்வகிப்பதில் அவர்கள் ஒரு தீர்மானகரமான பங்கு வகித்தனர். பிரபுக்களே ஆளும் வர்க்கமாக இருந்தபோதிலும் அவர்கள், துருக்கியர், பாரசீகர், அரபியர், எகிப்தியர், இந்திய முஸ்லீம்கள் போன்ற வெவ்வேறு இனக்குழுக்களிலிருந்தும் இனங்களிலிருந்தும் வந்தனர். இல்துமிஷ். நாற்பதின்மர் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அவர்களிலிருந்து தெரிவு செய்து இராணுவத்திலும் குடிமை நிர்வாகத்திலும் நியமித்தார். இல்துமிஷ் இறந்த பிறகு, ருக்னுத்தின் ∴பெரோஸை அரசனாக்க வேண்டும் என்ற இல்துமிஷின் விருப்பதைப் புறந்தள்ளும் அளவுக்கு அந்த நாற்பதின்மர் குழு வலுமிக்கதாயிற்று. ரஸியா, தனது நலன்களைக் காத்துக்கொள்வதற்காக, அபிசீனிய அடிமையாகுத் தலைமையில் துருக்கியரல்லாத பிரபுக்களையும் இந்திய முஸ்லீம் பிரபுக்களையும் கொண்ட ஒரு குழு அமைத்தார். எனினும் இதை, அவ்விருவரையும் கொலை செய்ய வைத்த துருக்கிய பிரபுக்கள் எதிர்த்தனர். இவ்வாறாக, அரசரின் மூத்த மகனே ஆட்சிக்கு வாரிசு என்ற விதி இல்லாத நிலையில் அரசுரிமை கோரி ஏதோ ஒருவர் தரப்பில் பிரபுக்கள்

சேர்ந்துகொண்டனர். இது, சுல்தானைத் தெரிந்தெடுக்க உதவியது அல்லது ஆட்சி நிலைகுலைவதற்குப் பங்களித்தது. பிரபுக்கள் பல குழுக்களாக சுல்தானுக்கு எதிரான சதிகளில் ஈடுபட்டனர். எனவே அந்த நாற்பதின்மார் அமைப்பு சுல்தானியத்தின் நிலைத்தன்மைக்குப் பெரிய அபாயத்தை ஏற்படுத்துகிறது என்று கூறி, அதை பால்பன் ஒழித்தர் இதன் மூலம் "துருக்கிய பிரபுக்கள்" ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார். அவரது ஆணையை மீறுகிற பிரபுக்களின் நிலங்களைப் பறிமுதல் செய்தார். அலாவுதீன் கில்ஜி, ஒற்றர்களைப் பணியமர்த்தி, துருக்கியப் பிரபுக்களின் கள்ளத்தனமான நடவடிக்கைகள் ஏதேனும் இருந்தால் தம்மிடம் நேரடியாகத் தெரிவிக்குமாறு பணித்து, அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுத்தார்.

அரச அலுவலர்களைக் கடுமையாகத் தண்டித்தார். மதுவும் போதை மருந்துகளின் பயன்பாடும் தடை செய்யப்பட்டன. சூதாட்டமும் தடை செய்யப்பட்டது. சூதாடிகள் நகரத்துக்கு வெளியே விரட்டப்பட்டனர். இருப்பினும் மது விலக்கு பெருமளவில் மீறப்பட்டதால், கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் கட்டாயம் அலாவுதீனுக்கு ஏற்பட்டது.

உழவர்களிடமிருந்து நில வரிகள் நேரடியாக வசூலிக்கப்பட்டன. இதனால் கிராமத் தலைவர்கள் மரபாக அனுபவித்து வந்த வரிகள் வசூலிக்கும் உரிமை பறிபோனது. அலாவுதீன் விதித்த வரிச் சுமை செல்வர்கள் மிது இருந்ததேயன்றி எழைகள் மீது அல்ல, தனது பேரரசின் அனைத்துப் பகுதிகளுடனும் தொடர்பில் இருப்பதற்காக அலாவுதீன் அஞ்சல் முறையை ஏற்படுத்தினார்.

**சந்தைச் சீர்திருத்தங்கள்:**

அலாவுதீன் ஒரு பெரிய, திறமை வாய்ந்த படையைப் பராமரிக்க வேண்டியிருந்தது. படை வீரர்களுக்குக் கொள்ளையில் பங்கு தராமல் பணமாக ஊதியம் வழங்கிய முதல் சுல்தான் அலாவுதீன் ஆவார். படை வீரர்களுக்குக் குறைந்த ஊதியமே அளிக்கப்பட்டது. இதனால், விலைகளைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் வேண்டியிருந்தது. அத்தியாவசியப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, கள்ளச்சந்தை, பதுக்கல் குறித்த விவரங்களைச் சேகரிப்பதற்கு விரிவான ஒற்றாடல் வலைப்பின்னலை ஏற்படுத்தினார். சந்தைகளில் நடந்த கொடுக்கல் - வாங்கல், வாங்குவது, விற்பது, பேரங்கள் என அனைத்து விவரங்களையும் ஒற்றர்கள் மூலம் அறிந்து கொண்டார். அத்தியாவசியப் பொருள்களின் விலை குறித்துச் சந்தை கண்காணிப்பாளர்களும் அறிக்கை அளிப்பவர்களும் ஒற்றர்களும் அவருக்கு அன்றாடம் அறிக்கை அளித்தல் வேண்டும். விலை ஒழுங்குமுறை விதிகளை மீறுவோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். ஏதேனும் எடைக் குறைவு கண்டுப்பிடிக்கப்பட்டால், விற்பவரின் உடலிலிருந்து அதற்குச் சமமான எடையுள்ள சதைவெட்டி அவரது கண் முன்னேயே வீசப்பட்டது.

**அலாவுதீன் வாரிசுகள்:**

அலாவுதீன், தனது மூத்த மகன் கிசர் காளை தமது வாரிசாக நியமித்தார். இருப்பினும் அந்நேரத்தில் அலாவுதீனின் நம்பிக்கைக்குரியவராக மாலிக் கா∴பூர் இருந்தார். எனவே, மாலிக் கா∴பூர் தாமே அரசாங்க அதிகாரத்தை எடுத்துக்கொண்டார். ஆனால் ஆட்சிக்கு வந்த வெறும் முப்பத்தைந்தே நாள்களில் பிரபுகளால் அவர் கொல்லப்பட்டார். இதன் பிறகு வரிசையாகக் கொலைகள் நிகழ்ந்தன. இதன் காரணமாக மங்கோலியருக்கு எதிரான பல படையெடுப்புகளில்

பங்கேற்ற திறமைசாலியான காஸி மாலிக், 1320 இல் கியாசுதீன் துக்ளக் ஆக ஆட்சியில் அமா்ந்தார். பதவியிலிருந்த கில்ஜி ஆட்சியாளா் குஸ்ரெளவைக் கொன்றதன் மூலம் கில்ஜி வம்சத்திலிருந்து எவரும் அசுரிமை கோருவதைத்தடுத்தார். இவ்வாறாக, 1414 வரையிலும் நீடித்த துக்ளக் வம்சத்தின் ஆட்சி தொடங்கியது.

**துக்ளக் வம்சம்**

**கியாசுதீன் துக்ளக் (1320 – 1324):**

கியாசுதீன் துக்ளக், பிரபுக்கள் வகுப்பினருடன் சமரசக் கொள்கையைப் பின்பற்றினார். அவரது ஐந்தாவது ஆட்சி ஆண்டில் (1325) கியாசுதீன் இறந்தார். மூன்று நாள்கள் கழித்து ஜான் கான் என்ற இயற்பெயர் கொண்ட அவரது மகன் ஆட்சிக் கட்டில் ஏறியதோடு முகமது-பின்-துக்ளக் எனும் பட்டத்தை சூட்டிக்கொண்டார்.

**முகமது-பின்-துக்ளக் (1324 – 1351):**

முகமது – பின் - துக்ளக், கற்றவா், நற்பண்பு நிறைந்தவா், திறமை வாய்ந்த அரசா் என்ற போதிலும் இரக்கமற்றவா், கொடூரமானவா், நியாயமற்றவா் என்றும் பெயா் பெற்றிருந்தார். தில்லிக்கு அருகே மீரட் வரையிலும் அணிவகுத்து வந்த மங்கோலியப் படையை முகமது-பின் துக்ளக் திறமையாகப் பின்வாங்கச் செய்தார். ஆனால், அலாவுதீன் போல் தமது திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தும் மனவுறுதி முகமதுக்கு இல்லை.

**தலைநகர மாற்றம்:**

தில்லியிலிருந்து தென்னிந்தியாவை ஆள்வது கடினம் என்று முகமது-பின்-துக்ளக் கருதினார். எனவே, தலைநகரை தௌலதாபாத்துக்கு மாற்றும் துணிவான முயற்சியை மேற்கொண்டார். மஹாராஷ்டிரத்திலுள்ள தேவகிரிக்கு முகமது – பின் - துக்ளக் சூட்டிய மறுபெயரே தௌலதாபாத். இந்தியாவின் நடுவில் அமைந்திருக்கிற தேவகிரிக்குப் பாறைப்பாங்கான மலையின் உச்சியில் ஒரு வலுவான கோட்டையைக் கொண்டிருக்கிற சாதகமான அம்சமும் இருந்தது. இராணுவ அரசியல் சாதகங்களை மனத்தில் கொண்டு முக்கியமான அதிகாரிகளையும் சூஃபி துறவிகள் உள்பட பல முன்னணிப் பிரமுகா்களையும் தேவகிரிக்கு இடம் மாறுபாடு சுல்தான் ஆணையிட்டார். ஆயினும் இந்தத் திட்டம் தோல்வியைத் தழுவியது. தௌலதாபாதிலிருந்து வட இந்தியாவை ஆள்வது கடினம் என்று முகமது-பின்-துக்ளக் விரைவிலேயே உணா்ந்தார். எனவே மீண்டும் தலைநகரை தில்லிக்கு மாற்ற உத்தவிட்டார்.

**அடையாள நாணயங்கள்:**

முகமது-பின்-துக்ளக் மேற்கொண்ட அடுத்த முக்கியமான பரிசோதனை அடையாள நாணயங்களை அறிமுகப்படுத்தியதாகும். இந்த நாணய முறை ஏற்கனவே சீனாவிலும் ஈரானிலும் நடைமுறையிலிருந்தது. இந்தியாவில் நாணயங்களின் மதிப்பு அதிலிருந்த வெள்ளி உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஆனால் துக்ளக்கின் முயற்சி காலத்திற்கு முன் எடுத்த முயற்சியாகிவிட்டது. வெண்கல நாணயங்களைப் போலியாக அடிப்பது எளிதாயிருந்தது. அரசாங்கம் அதைத் தடுக்க முடியவில்லை. வெண்கல

நாணயங்களைத் திரும்பப்பெற வேண்டிய அளவுக்குப் புதிய நாணயங்கள் மதிப்பிழக்கத் தொடங்கின. இதனால் மீண்டும் வெள்ளி நாணயங்களை அரசாங்கம் வெளியிட்டு அதை ஈடுசெய்ய வேண்டியதாயிற்று.

**பிற புதுமை நடவடிக்கைகள்:**

வேளாண்மையை விரிவாக்குகிற முகமது-பின்-துக்ளக்கின் திட்டம் புதுமையானது என்றாலும் அதுவும் துயரகரமாகத் தோற்றது. தோவாப் சமவெளிப் பகுதியில் ஒரு நீண்டகாலக் கடும் பஞ்சம் ஏற்பட்டிருந்த நேரத்தில் இம்முயற்சி எடுக்கப்பட்டது. எதிர்ப்பு தெரிவித்த விவசாயிகள் கடுமையாக நடத்தப்பட்டனர். கொடூரமாகத் தண்டிக்கப்பட்டனர். இந்தப் பஞ்சம், தாங்கமுடியாத முறையற்ற நில வரி வசூலுடன் இனங்காணப்பட்டது. வேளாண்மையைக் கவனித்துக்கொள்ள ஒரு தனித் துறையை (திவான்-இ-அமிர் கோஹி) சுல்தான் ஏற்படுத்தினார். கால்நடைகளையும் விதைகளையும் வாங்க. கிணறுகள் வெட்ட விவசாயிகளுக்குக் கடன் தரப்பட்டது என்றாலும் இது பயன்தரவில்லை. பயிர்களைக் கண்காணிக்கப் பணியமர்த்தப்பட்ட அலுவலர்கள் திறம்படச் செயல்படவில்லை. பிரபுக்களும் முக்கியமான அலுவலர்களும் வெவ்வேறு பின்னணி கொண்டவர்கள். சுல்தானின் எதேச்சதிகாரப் போக்க அவருக்கு நிறைய எதிரிகளைச் சம்பாதித்துக் கொடுத்தது.

தொலைவிலுள்ள பகுதிகளை பயனளிக்கும் வகையில் நிர்வகிக்க இயலாது என்பதை நன்கறிந்த அலாவுதீன் அவற்றை இணைத்துக் கொள்ளவில்லை. அவற்றின் மீது தமது மேலாண்மையை நிறுவுவதையே அவர் விரும்பினார். ஆனால், முகமது-பின்-துக்ளக், தான் வென்ற அனைத்து பகுதிகளையும் இணைத்துக்கொண்டார். எனவே, அவரது இறுதி காலத்தில் அடுத்தடுத்து கிளர்ச்சிகளை சந்தித்தார்.

அவரது ஒடுக்குதல் நடவடிக்கைகள் மக்களை மேலும் அவரிடமிருந்து அந்நியப்படுத்தின. வங்கம், மதுரை, வாரங்கல், ஆவாத், குஜராத், சிந்து ஆகிய தொலைதூரப் பகுதிகள் ஒன்றுக்குபின் ஒன்றாக கிளர்த்தெழுந்தன. கிளர்ச்சியாளர்களுடன் சண்டையிடுவதிலேயே முகமது தமது கடைசி நாட்களைக் கழித்தார். குஜராத்தில் ஒரு கிளர்ச்சித் தலைவரை விரட்டிச் செல்வதில் ஈடுபட்டிருந்தபோது உடல்நலம் கெட்டு, தனது 26வது ஆட்சியாண்டின் (1351) முடிவில் முகமது-பின்-துக்ளக் இறந்தார்.

**ஃபெரோஸ் துக்ளக் (1351 – 1388)**

ஃபெரோஸின் தந்தை ரஜப், கியாசுதீன் துக்ளகின் தம்பி ஆவார். இருவருமே அலாவுதீன் கில்ஜியின் ஆட்சிக் காலத்தில் குரசனிலிருந்து வந்தவர்கள். ரஜப், ஒரு ஜாட் இளவரசியை மணந்திருந்தார். ஃபெரோஸுக்கு ஏழு வயதான போது அவர் இறந்துவிட்டார். கியாசுதீன் ஆட்சிக்கு வந்த போது, ஃபெரோஸை, 12,000 குதிரை வீரர்களைக் கொண்ட சிறப்புப் படைக்குத் தளபதியாக்கினார். பின்னர், சுல்தானியத்தின் நான்கு பிரிவுகளில் ஒன்றின் பொறுப்பு ஃபெரோஸிடம் கொடுக்கப்பட்டது. முகமது-பின்-துக்ளக், தனது வாரிசை அறிவிக்காமலேயே இறந்திருந்தார். முகமதுவின் சகோதரி, தனது மகனுக்கு ஆட்சி உரிமை கோரியதைப் பிரபுக்கள் ஆதரிக்கவில்லை. முகமதுவின் வாழ்நாள் நண்பர் கான்-இ-ஜஹன் பரிந்துரைத்த முகமதுவின் மகன் ஒரு குழந்தையாக இருந்தார். எனவே ஃபெரோஸ் ஆட்சியில் அமர்ந்தார்.

∴பெரோஸ் துக்ளக்கிடம் ஓர் உயரதிகாரியாக இருந்த புகழ் பெற்ற கான்-இ-ஜஹன், இசுலாமுக்கு மாறிய ஒரு பிராமணர். ஆதியில், கண்ணு என்று அறியப்பட்ட அவர், (தற்போதைய தெலுங்கானாவின்) வாரங்கல்லில் நிகழ்ந்த சுல்தானியப் படையெடுப்பு ஒன்றின் போது சிறப்பிடிக்கப்பட்டவர்.

**பிரபுக்களுடன் சமரசக் கொள்கை:**

பிரபுக்கள் வகுப்பினரிடமும் மதத் தலைவர்களுடமும் ∴பெரோஸ் துக்ளக், சமரசக் கொள்கையைக் கடைப்படித்தார். அலாவுதீன் ஆட்சியில் பறிக்கப்பட்ட சொத்துகள் மீண்டும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டன. அலாவுதீன் ஆதரிக்காத ஒரு நடைமுறையான, அலுவலர்களைப் பரம்பரையாகப் பணியமர்த்துகிற முறையை ∴பெரோஸ் மீண்டும் அறிமுகப்படுத்தினார். அரசாங்க அலுவலர்களின் ஊதியத்தை அதிகப்படுத்தினார். வருவாய் நிர்வாகத்தை ஒழுங்கு செய்கிற போது, பல வரிகளைக் குறைத்தார். அதே நேரத்தில் அரசு நிதி வீணாகச் செலவழிக்கப்படவில்லை என்பதையும் உறுதி செய்துகொண்டார். அவருக்கு முன்னர் ஆட்சியில் இருந்தவர் செயல்படுத்திய பல்வேறு சித்திரவதை முறைகளை ஒழித்தார். அடிமைகள் குறித்து ∴பெரோஸுக்கு ஒரு மெய்யான அக்கறை இருந்தது. அவர்களது நலன்களைக் கவனிப்பதற்காகத் தனியே ஓர் அரசுத் துறையை ஏற்படுத்தினார். 1,80,000 அடிமைகளின் நல்வாழ்க்கையில் அடிமைகள் நலத்துறை, அக்கறை செலுத்தியது. கைவினைத் தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டு, அரசாங்கத்தின் தொழில்கூடங்களில் அவர்கள் பணியமர்த்தப்பட்டனர்.

**போர்கள் வேண்டாம் என்ற ∴பெரோஸின் கொள்கை**

∴பெரோஸ் துக்ளக், போர்கள் எதுவும் தொடுக்கவில்லை. இருப்பினும், கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அவரது வங்கப் படையெடுப்பு ஒரு விதிவிலக்காகும். அவரது படை வங்கத்திலிருந்து திரும்புகிற வழியில் திடீரென்று ஒரிசாவுக்குள் நுழைந்தது. திறை செலுத்த ஒப்புக்கொள்ளும் வாக்குதியை அப்பகுதி அரசரிடமிருந்து பெறுவதற்கு இது உதவியது. அவரது காலத்தில் இரண்டு மங்கோலிய தாக்குதல்களே நிகழ்ந்தன. இவ்விரண்டுமே வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன. அவரது காலத்திய ஒரே பெரிய இராணுவப் படையெடுப்பு, சிந்துவின் மீது தொடுக்கப்பட்டதாகும் எதிரிகளை வழியிலேயே நிலைகுலைய வைத்து ∴பெரோஸ் வெற்றிபெற்றார். எனினும் அவரது எதிரிகளும் அப்போது ஏற்பட்ட ஒரு பஞ்சமும் சுல்தானுக்கும் அவரது படைக்கும் ஒரு கடுமையான சோதனையை ஏற்படுத்தின. இருப்பினும் ∴பெரோஸின் இராணுவம் சமாளித்து சிந்துவை அடைந்தது. சிந்துவின் அரசர், சுல்தானிடம்ட சரணடையவும் திறை செலுத்தவும் இணங்கினார்.

**மதக் கொள்கை:**

வைதீக இசுலாமை ∴பெரோஸ் ஆதரித்தார். மதத் தலைவர்களை மன நிறைவுறச் செய்வதற்காக தமது அரசை இசுலாமிய அரசாக அறிவித்தார். மத விரோதிகள் கொடுமை செய்யப்பட்டனர். மேலும் இசுலாமிய விரோத நடைமுறைகள் என கருதப்பட்டவை தடை செய்யப்பட்டன. இசுலாமியர் அல்லாதவருக்கு "ஜிஸியா" எனும் வரியை விதித்தார். பிராமணர்களும் அதைச் செலுத்துமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். இருப்பினும் புதிய இந்துக் கோயில்கள் கட்டுவதை ∴பெரோஸ் தடை செய்யவில்லை. அவரது பண்பாட்டு ஆர்வம், மதம், மருத்துவம், இசை தொடர்பான பல சமஸ்கிருத நூல்களை மொழிபெயர்ப்பதற்கு வித்திட்டது.

பல்வகைப் பண்புகள் நிறைந்த ஓர் அறிஞரான ∴பெரோஸ், இசுலாமியர் - அல்லாதார் உள்படக் கற்றிந்தவர்களை மனத்தடையின்றி ஆதரித்தார். இசையில் விருப்பம் கொண்டிருந்தார். பல கல்வி நிறுவனங்களையும், மசூதிகளையும் அரண்மனைகளையும் கோட்டைகளையும் நிறுவினார்.

**பொதுப் பணிகள்:**

பல பாசனத் திட்டங்களை ∴பெரோஸ் மேற்கொண்டார். சட்லெஜ் நிதியிலிருந்து ஹன்ஸிக்கு வெட்டிய கால்வாயும் யமுனையில் வெட்டிய மற்றொரு கால்வாயும் அவரது வலுவான பொதுப் பணி வளர்ச்சிக் கொள்கையைச் சுட்டுகின்றன.

ஜிஸியா என்பத இசுலாமிய அரசுகளால் அவர்களின் நிலத்தில் வாழும் இசுலாமியர் அல்லாத குடிமக்களின் தலைக்கு இவ்வளவு என விதித்து வசூலிக்கப்பட்ட ஒரு வரியாகும். இதன் மூலம் அவர்கள் உரிமைகள் உறுதி செய்யப்பட்டன. இந்தியாவில் முதன் முறையாக இசுலாமியர் அல்லாதார் மீது ஜிஸியா விதித்தவர் குத்புதீன் ஐபக். முகலாய அரசர் அக்பர், பதினாறாம் நூற்றாண்டில் ஜிஸியாவை ஒழித்தார் என்றாலும், பதினேழாம் நூற்றாண்டில் ஔரங்கசீப் அவ்வரியை மீண்டும் அறிமுகப்படுத்தினார்.

தனது மகன் ∴பத் கானையும் பேரன் கியாசுதீனையும் தில்லி சுல்தானியத்தின் இணை ஆட்சியாளர்களாக ஆக்கிய பிறகு, 1388 இல் ∴பெரோஸ் இறந்தார்.

பிரபுக்கள் வகுப்பினருக்கு அனுமதிக்கப்பட்டிருந்த பரம்பரை உரிமை, இராணுவத்திலும், செயல்படுத்தப்பட்டது. இது தில்லி சுல்தானியத்தை வலுவிழக்கச் செய்தது. அதிகாரத்தை மீண்டும் பெற்ற பிரபுக்களின் அரசியல் தலையீடுகள் அரசு நிலைகுலையும் அளவுக்கு இட்டுச் சென்றது. ∴பெரோஸ் துக்ளக் இறந்த ஆறு ஆண்டுகளுக்குள் அவரைத் தொடர்ந்து நால்வர் ஆட்சி புரிந்தனர்.

**தைமூரின் படையெடுப்பு:**

கடைசி துக்ளக் அரசர் நசுருதீன் முகமது ஷா (1394 – 1412): இவரது ஆட்சியின் போதுதான் மத்திய ஆசியாவிலிருந்து தைமூரின் படையெடுப்பு நிகழ்ந்தது. தைமூர், பன்னிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த மாபெரும் மங்கோலிய அரசர் செங்கிஸ்கானுடன் இரத்த உறவு இருப்பதாகக் கூறத்தக்க துருக்கியர் உள்ளபடியே எந்த எதிர்ப்புமின்றித் தைமூர் தில்லியைச் சூறையாடினார். தைமூர் வந்து சேர்ந்த செய்தியைக் கேட்ட சுல்தான் நசுருதீன் தில்லியை விட்டுத் தப்பி ஓடிவிட்டார். கொல்லர், கல்தச்சர், தச்சர் போன்ற இந்திய கைவினைஞர்களைச் சிறைபிடித்துச் சென்ற தைமூர், தனது தலைநகர் சாமர்கண்டில் கட்டடங்களை எழுப்புவதில் அவர்களை ஈடுபடுத்தினார். நசுருதீன் 1412 வரையிலும் சமாளித்து ஆட்சி செய்ய முடிந்தது. பிறகு வீழ்ந்து கொண்டிருந்த பேரரசை சையது லோடி வம்சங்கள் 1526 வரையிலும் தில்லியிலிருந்து ஆண்டனர்.

**சையது வம்சம் (1414 – 1451):**

பஞ்சாப் போர் அணிவகுப்புகளில் தன் நலன்களை மேற்பார்வை பார்ப்பதற்கு கிசர் கானைத் தனது துணையாக நியமித்தார் தைமூர். கிசர்கான் (1414 – 1421)

தானே சென்று தில்லியைக் கைப்பற்றி சையது வம்ச ஆட்சியை நிறுவினார். கிசர் கான் நிறுவிய சையது வம்சத்தில், 1451 வரையிலும் நான்கு சுல்தான்கள் ஆண்டனர். முற்பட்ட சையது சுல்தான்கள், தைமூரின் மகனுக்குத் திறை செலுத்தி ஆட்சி புரிந்தனர். அவர்களின் ஆட்சியை, யாஹியா-பின்-அஹ்மத் சிரிந்தி இயற்றிய தாரிக்-முபாரக்-சாஹி குறிப்பிடுகிறது. அவர்களது ஆட்சியின் இறுதியில், பேரரசு தில்லி நகரத்துக்குள் சுருங்கி விட்டது.

கலிபாவின் தலைமையைத் தாங்கள் ஏற்பதாகக் கூறினாலும் அவர்கள் முழு அதிகாரமுள்ள ஆட்சியாளர்களாக விளங்கினர். இராணுவத் தலைவர் என்ற வகையில் ஆயுதம் தாங்கிய படைகளின் தலைமைத் தளபதி எனும் அதிகாரம் அவர்களிடமிருந்தது. நீதி நிர்வாகத் தலைவர் என்ற முறையில் மேல்முறையீட்டு உச்சநீதிமன்றமும் அவர்கள் தான். பூமியில் கடவுளின் பிரதிநிதியாகத் தாம் ஆட்சி செய்வதாக பால்பன் கூறினார். மதத்தின் பரிந்துரைகள் குறித்துத் தாம் கவலைப்படவில்லை என்று கூறிக்கொண்டு அலாவுதீன் கில்ஜி முழு அதிகாரத்தைக் கோரினார். இருப்பினும் அரசு மக்கள் நலனுக்கு இன்றியமையாதவற்றையே செய்தார்.

தில்லி சுல்தான் ஆட்சி, ஓர் அனைத்திந்தியப் பேரரசாகப் கருதப்படவேண்டிய தகுதி கொண்டது. முகமது-பின்-துக்ளக் ஆட்சியின் முடிவுக் காலத்தில் ஒரு சில சிறிய பகுதிகளைத் தவிர, எதிரெதிர் முனைகளிலிலுள்ள காஷ்மீரத்தையும், கேரளத்தையும் உள்ளடக்கிய இந்தியா முழுவதும் தில்லியின் நேரடி ஆட்சிக்குள் வந்தது. அரச வாரிசுரிமை தொடர்பாக நன்கு வரையறுக்கப்பட்ட, ஒப்புக்கொண்ட விதிகள் இல்லை. எனவே, சுல்தானிய காலத்தில் வாரிசுரிமைப் போட்டி எழுவது வழக்கமாக நடந்தது. இக்தா (முக்திகள் அல்லது வாலிகள்) உரிமையாளர்கள் வரிகள் வசூலித்தனர். அரச சேவைக்குப் படைக் குழுக்களைப் பராமரிப்பதற்கு சுல்தான்களுக்க அவர்கள் தேவைப்பட்டனர். சல்தான்கள், குறிப்பிட்ட சில பகுதிகளைத் தங்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் (கலிஸா) வைத்துக்கொண்டனர். இத்தகைய பகுதிகளில் வசூலிக்கும் வருவாயிலிருந்தே சுல்தான்களின் சொந்த படைக்குழுக்களின் (ஹஷ்ம்-இ-கால்ப்) அதிகாரிகளுக்கும் வீரர்களுக்கும் ஊதியம் வழங்கப்பட்டது.

பிரதேச விரிவாக்கத்திற்கு ஏற்றாற்போல் நிதி ஆதாரமும் பெருகியது. உற்பத்தி பொருளில் பாதி என்ற அடிப்படையில் நிலவரி கடுமையாக விதிக்கப்பட்டது. பரம்பரையாக வரி வசூலித்து வந்தோர் (தற்போது சௌத்ரிகள் எனப்படுவோர்), கிராமத் தலைவர் ஆகியோரின் நிதித் தேவைகள் கடுமையாகக் குறைக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டன. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட வரி வசூல் ஒரு கடுமையான விவசாயக் கிளர்ச்சியை, குறிப்பாக தில்லி அருகே தோவாபில், தூண்டிவிட்டது (1332 – 34). இதுவும், தொடர்ந்து வந்த பஞ்சமும் தில்லிப் பகுதியிலும் தோவாயிலும் உழவர்களுக்குக் கடன் வழங்குவதை அடிப்படையாகக் கொண்ட ஒரு வேளாண் வளர்ச்சித் திட்டத்தைக் கொண்டு வருமாறு முகமது-பின்-துக்ளக்கை நிர்பந்தித்தன.

இராணுவப் படையெடுப்புகள், பதுக்கிய செல்வத்தை வெளிக்கொண்டு வந்தன. காடுகளை அழித்து நிலமாக்கியது, பிரதேசங்களுக்கு இடையில் நடைபெற்ற விறுவிறுப்பான வணிகம் போன்றவை மக்கள் இடப்பெயர்ச்சியை ஊக்குவித்தது. அறிவாளிகளையும் மதப்பற்றுள்ளவர்களையும் ஒருங்கிணைத்தது. சுல்தானிய ஆட்சியின் படையரண் நகரங்களிலும் அவர்களின் வலுவான பிடியிலிருந்த பகுதிகளிலும் சமூகப் படிநிலை, குடியமர்வு ஆகியவற்றில் ஏற்பட்டிருந்த மாற்றங்கள் நிர்வாகச் சிக்கல்களை உண்டாக்கின, பதினான்காம்

நூற்றாண்டு முழுவதும் சுல்தான் ஆட்சி, அதிகரித்து வந்த அதன் வேறுபட்ட மக்கள்தொகையை, முக்தி (muqthi) எனும் மாகாண ஆளுநர்கள் மூலம் கட்டுப்படுத்த விரும்பியது. ஆனால், அவர்களது வல்லமையும் நிதி ஆதாரமும், இருப்பிடத்தில் இருந்த அரசியல் குழுக்களுடன் அணி சேர்வதற்கான சந்தர்ப்பமும் முகமது-பின்-துக்ளக் போன்ற கடுமையான, எதேச்சாதிகாரப் பேரரசர்களால் கூட அவர்களை ஒரு குறுகிய காலத்திற்கு மட்டுமே கட்டுப்படுத்த முடியும் என்ற நிலையை உருவாக்கின.

துருக்கிய – ஆ∴ப்கானிய அரசியல் வெற்றிகளைத் தொடர்ந்து மத்திய ஆசியாவிலிருந்து பெரிய அளவுக்கு இசுலாமிய சமூகங்கள் குடிபெயர்ந்தன. இந்தியா வாய்ப்புகளின் நாடாக கருதப்பட்டது. அனைத்து நிலைகளிலும் சமூகம், சிறப்புரிமைகளின் அடிப்படையில் அமைந்திருந்தது. மதத்திற்கு அப்பாற்பாட்டு பிரபுக்கள் வகுப்பினர் அனைவரும் செழிப்பான சமூக-பொருளாதார வாழக்கையை அனுபவித்தனர். சமகாலத்தில் உலகம் முழுவதும் இருந்த ஆட்சியாளர்களுடன் ஒப்பிடுகிறபோது சுல்தான்களும் பிரபுக்களும் சிறப்புரிமைகளுடன் வளமான வாழ்க்கையை அனுபவித்தனர். தொடக்கத்தில் துருக்கியர் மட்டுமே பிரபுக்களாக இருந்தனர். நீண்ட காலத்திற்கு ஆ∴ப்கானியரும் ஈரானியரும் இந்திய இஸ்லாமியரும் பிரபுக்கள் வகுப்பிலிருந்து விலக்கப்பட்டிருந்தனர். இசுலாத்தில் ஒரு தனிநபரின் தனிப்பட்ட தகுதிநிலை, பிறப்பின் அடிப்படையில்லாமல் திறமைகளையும் செயல்களையும் மட்டுமே சார்ந்திருந்ததால் இசுலாமுக்கு மதம் மாறியவர்கள் சமூகத்தில் சமமாகவே பாவிக்கப்பட்டனர்.

பல கடவுளர்களை வழிபட்ட இந்துக்களைப் போலன்றி, இசுலாமியர் ஓர் இறை வழிபாட்டைப் பின்பற்றினர். நம்பிக்கைகள், பழக்க வழக்கங்களின் ஓர் அடிப்படைத் தொகுப்பையும் அவர்கள் கடைப்பிடித்தனர். பகவத் கீதை குறிப்பிடுவதைப் போல, இந்துமதத்தில் வெகு நீண்ட காலமாக ஓரிறைப் போக்கு இருந்துவந்தது. இருப்பினும், அல்பெருனி சுட்டியதைப் போல, ஓரிறைக் கொள்கைக்கும் இசுலாத்துக்கும் உள்ள நெருக்கம், இக்கோட்பாட்டை ஓரத்திலிரந்து மையத்திற்குக் கொண்டுவர உதவியது. பதிமூன்றாம் நூற்றாண்டில், கர்நாடகத்தில் பசவண்ணர் நிறுவிய லிங்காயத் பிரிவு ஒரு கடவுளையே (பரசிவன்) நம்பியது. அப்பிரிவு சாதிப் பாரபட்சங்களை நிராகரித்தது. பெண்களுக்கு உயர் நிலையை அளித்தது. கூடவே பூசாரி பிராமணர்களின் ஏகபோகம் என்பதை இல்லாமல் ஆக்கியது. இதற்கு இணையாகத் தமிழ் நாட்டில் சித்தர்கள் விளங்கினர். ஒரு கடவுளைப் பாடிய அவர்கள், சாதியை, வைதீகத்தை மறுபிறப்பைச் சாடினர். தமிழ் நாட்டில் சித்தர்கள் விளங்கினர். ஒரு கடவுளைப் பாடிய அவர்கள், சாதியை, வைதீகத்தை மறுபிறப்பைச் சாடினர். தென் இந்திய பக்தி இயக்கத்தையும் ஓரிறைக் கொள்கையையும் வட இந்தியாவுக்குக் கொண்டு சென்றதில் இரண்டு பேர் முக்கியமான பங்கு வகித்தனர். அதிகம் அறியப்படாதவர்கள்: மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த நாமதேவர் ஒருவர்; உருவ வழிபாடையும் சாதிப் பாகுபாடுகளையும் இவர் எதிர்த்தார், ஓரிறைக் கொள்கையைக் கறாராகப் பின்பற்றினார். இரண்டாமவர் ராமானுஜரைப் பின்பற்றிய ராமானந்தர்.

### பொருளாதாரம்

தில்லி சுல்தானியம், சில முக்கியப் பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தியது. இதில் ஒன்று நில வரியைப் பணமாக விசூலித்தது. இதன் காரணமாக

இந்தியாவில் இசுலாமியர் ஆட்சியின் முக்கியத்தும் என்னவென்றால், இசுலாமிய ஆட்சியாளர்களின் சூறையாடல்கள், அபகரிப்புகள் இருந்தாலும், நீண்ட கால இந்து மதத்துடன் சக வாழ்வு வாழ்வதற்கான மன ஏற்பு தொடக்க காலம் முதல் காணப்படுவதே. இந்தியாவை வென்றடக்கிய முகமது கோரி, தமது தங்க நாணயங்கள் சிலவற்றில் பெண் கடவுள் லக்ஷ்மியின் உருவத்தைப் பொறித்திருக்கிறார். 1325 இல் முகமது – பின்-துக்ளக், சமணத் துறவிகளுக்கு அனைத்து அரசு அலுவர்களும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று ஒரு ஆணை வெளியிட்டார். அவரே கூட ஹோலி பண்டிகையில் பங்கேடுத்ததோடு யோகிகளுடன் நல்ல நட்புடன் இருந்திருக்கிறார்.

"பல கடவுள் வழிபாட்டாளர்களையும், இந்துக்களையும், மங்கோலியர்களையும், நாத்திகர்களையும் பஞ்சணையில் அமர வைத்து சகல மரியாதைகளும் செய்கிறார்கள்" என் இசுலாமிய ஆட்சியாளர்கள் குறித்து பரணி வெறுப்புடன் எழுதுகிறார். மேலும், "இந்துகள் எவ்வளவு வரி செலுத்துகிறார்கள் என்பதைப் பொறுத்து கோயில்கள் கட்டிக்கொள்ளவும், திருவிழாக்கள் நடத்தவும், இசுலாமிய வேலையாட்களை வைத்துக் கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறார்கள். இசுலாமியர்களுக்கு நிகராக ராய், ராணா, தாகூர், ஷா, மஹ்தா, பண்டிட் போன்ற அரசு பட்டங்கள் இந்துக்களுக்கும் வழங்கப்படுகின்றன" என்றும் பரணி எழுதுகிறார்.

உணவு தானியங்களும் இதர கிராமப்புறத் உற்பத்திப் பொருள்களும் நகரங்களை நோக்கி நகர்ந்தன இதன் மூலம் நகர வளர்ச்சி ஒரு புதிய கட்டத்தை எட்டியது. பதினான்காம் நூற்றாண்டில், தில்லியும் தௌலதாபாத்தும் (தேவகிரி) உலகின் மாபெரும் நகரங்களாக விளங்கின. முல்தான், காரா, அவத், கௌர், கேம்பே (கம்பயத்), குல்பர்கா போன்ற இதர பெரிய நகரங்களும் இருந்தன.

பதிமூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே செப்புக் காசுகளோடு தங்க, வெள்ளிக் காசுகளையும் தில்லி சுல்தான்கள் வெளியிடத் தொடங்கினர். இது வணிகம் விறுவிறுப்பாக நடந்ததை குறிக்கிறது. மேற்கு எல்லைப்பகுதிகளில் மங்கோலியப் படையெடுப்புகள் வெற்றிபெற்றபோதிலும், தரை வழியிலும் கடல் வழியிலும் நிகழ்த்த இந்தியாவின் அயல் வணிகம், இக்காலத்தில் கணிசமாக வளர்ச்சி பெற்றது என்கிறார் இர்ஃபான் ஹபீப்.

**வணிகமும் நகர்மயமாக்கமும்:**

சுல்தான்களும் பிரபுக்களும் ஆடம்பரப் பொருள்களை மிகவும் விரும்பியதால் உள்நாட்டு வணிகம் புத்துயிர் பெற்றது. குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு இந்தியாவில் அரிதாக வெளியிடப்பட்ட தங்க நாணயங்கள், இந்தியப் பொருளாதாரத்தின் மீட்சியைக் குறிக்கும் விதத்தில் மீண்டும் வெளிவரத் தொடங்கின. ஆயினும் பண்டைக் காலத்தில் பொருளாதாரத்தில் ஒரு முக்கியமான பாத்திரம் வகித்த வணிகக் குழுக்கள் சுல்தான்கள் காலத்தில் இருந்ததற்குச் சான்று இல்லை. சுல்தான்கள் ஆட்சி, பல முக்கியமான நகரங்களையும் பெருநகரங்களையும் உள்ளடக்கிய ஒரு நகரப்புறப் பொருளாதாரத்தால் இயங்கியது. தில்லி, லாகூர், முல்தான், காரா, லக்னௌ, அன்ஹில்வாரா, கேம்பே, தௌலதாபாத் ஆகிய நகரங்கள் சமண மார்வாரிகள், இந்து முல்தானிகள், முஸ்லிம் போராக்கள், குரசானியர், ஆஃப்கானியர், ஈரானியர் ஆகியோரின் வணிக நடவடிக்கைகளால் செழித்திருந்தன. ஏற்றுமதி-இறக்குமதி வணிகம், தரைவழி, கடல் வழி என

இரண்டின் மூலமும் நன்கு செழித்திருந்தது. குஜராத்திகளும் தமிழர்களும் கடல் வணிகத்தில் ஆதிக்கம் செலுத்தினர். அதே நேரத்தில் இந்து முல்தானிகளும் முஸ்லிம் குரசானியரும் ஆ.ஃப்கானியரும் ஈரானியரும் மத்திய ஆசியாவுடன் தரை வழி வணிகத்தில் ஆதிக்கம் செலுத்தினர்.

**தொழில்துறை வல்லமை:**

சீனர் கண்டுபிடித்த அரபியர் கற்றுக்கொண்ட காகிதம் தயாரிக்கும் தொழில்நுட்பம், தில்லி சுல்தானியர்காலத்தில் இந்தியாவில் அறிமுகமானது. சீனர் கண்டுபிடித்த நூற்புச் சக்கரம், பதினான்காம் நூற்றாண்டில் ஈரான் வழியே இந்தியாவுக்கு வந்தது.

> தில்லி சுல்தானிய ஆட்சியின் ஒட்டுமொத்த வரலாற்றில் ஆட்சி உரிமையைத் தாமாகவே துறந்து, தில்லிக்கு வெளியே ஒரு சிறிய நகருக்குச் சென்று, முழுமையாக முப்பது ஆண்டுகள் மனநிறைவோடும் அமைதியாகவும் வாழ்ந்த ஒரே சுல்தான் சய்யித் வம்சத்தில் வந்த ஆலம் ஷா – Abraham Eraly, The age of Wrath.

**லோடி வம்சம் (1451 – 1526):**

லோடி வம்ச ஆட்சியை நிறுவியவர் பஹ்லோல் லோடி ஆவார். இவரது ஆட்சியின் போது வங்கத்தில் ஆட்சி புரிந்த ஷார்கி அரசு கைப்பற்றப்பட்டது. இவரது மகன் சிக்கந்தர் லோடி (1489 – 1517) 1504 இல் தலைநகரை தில்லியிலிருந்து ஆக்ராவுக்கு மாற்றினார். கடைசி லோடி ஆட்சியாளரான இப்ராஹிம் லோடி, முகலாய வம்ச ஆட்சியை நிறுவிய முதலாம் பானிப்பட் போரில் பாபரிடம் தோற்றார்.

**சுல்தானிய ஆட்சி நிர்வாகம்**
**அரசும் சமூகமும்**

சுல்தானிய அரசு முறையானதோர் இசுலாமிய அரசாகக் கருதப்பட்டது. சுல்தான்கள் பலரும், இது நூற்பவர்களின் உற்பத்தித் திறனை ஆறு மடங்கு அதிகரிக்க உதவியது. நூல் உற்பத்தியை மாபெரும் அளவுக்குப் பெருக்கியது. அதைத் தொடர்ந்து தறிகளில் மிதிப்பொறிகள் அறிமுகம் செய்யப்பட்டன. நூலுற்பத்தி பெருகியது போலவே நெசவு வேலையை விரைவுபடுத்த இது உதவியது. பதினைந்தாம் நூற்றாண்டில் வங்கத்தில் பட்டுப்புழு வளர்ப்பு நிறுவப்பட்டது. அதிகமாக செங்கல், கலவை பயன்படுத்தி நிலவறைத் தொழில்நுட்பத்தோடு கூடிய கட்டட நடவடிக்கைகள் ஓர்புதிய உச்சத்தை எட்டின.

**கல்வி:**

இசுலாமிய உலகக் கல்வி மரபுகள் அறிமுகமாயின. அடிப்படையாக இருந்தது மக்தப் இங்கே ஒரு பள்ளி ஆசிரியர் குழந்தைகளுக்குப் படிக்கவும் எழுதவும் கற்றுத்தந்தார். மேலும் உயர் நிலையில், பல்வேறு பாடங்களிலுள்ள முக்கியமான பிரதிகளைக் கற்க அறிஞர்களிடத்தில் தனி மாணவர்கள் படித்தனர். உயர் கல்வியின் மேலும் ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவம் மதரஸா (நேர்ப் பொருள்: கற்றுக்கொள்கிற இடம்). பதினோறாம் நூற்றாண்டில் மத்திய ஆசியாவிலும் ஈரானிலும் இது பரவலாக நிறுவப்பட்டது. மேலும் அங்கிருந்து இதர இசுலாமிய

நாடுகளுக்குப் பரவியது. வழக்கமாக மதரஸாவுக்கு ஒரு கட்டடம் இருந்தது. தனி ஆசிரியர்கள் கல்வி கற்பித்தனர். அங்கே மாணவர்கள் தங்கி இருக்கவும் நூலகத்துக்கும் தொழுகைக்கும் எனச் சில அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. ஃபெரோஸ் துக்ளக், தில்லியில் ஒரு பெரிய மதரஸாவைக் கட்டினார். அந்த அற்புதமான கட்டடம் இன்றும் இருக்கிறது. முதன்மையாக அங்கே "குர்ஆன் உரை, இறைதூதரின் வாக்குகள், இஸ்லாமியச் சட்டங்கள் (ஃபிக்)" கற்பிக்கப்பட்டன என்று பரணியின் விவரணையிலிருந்து தெரிகிறது. சிக்கந்தர் லோடி (1489 – 1517), தமது ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் முழுவதும் பல்வேறு நகரங்களில் மக்தப்களிலும் மதரஸாக்களிலும் ஆசிரியர்களை நியமித்தார். அவர்களுக்கு நிலமும் மானியமும் ஒதுக்கினார் என்பது திட்டவட்டமாக தெரிகிறது.

**வரலாற்றியல்:**

அரபு பாரசீகக் கல்வியறிவுடன் மதம் - சாரா அறிவியல்களும் இந்தியாவுக்கு வந்தன. கூடுதலாக வந்த இன்னுமொரு குறிப்பிடத்தக்க விடயம் முறையான வரலாறெழுதுதலாகும். அரபியரின் சிந்துப் படையெடுப்பு குறித்து எழுதப்பட்ட நூல் சச்நாமா (ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு அரபிய மூல நூலின் பதிமூன்றாம் நூற்றாண்டுப் பாரசீக மொழிபெயர்ப்பு). தில்லியில் சுமார் 1260 இல் எழுதப்பட்ட மின்ஹஜ் சிராஜின் தபகத்-இ-நசிரியைப் போன்று பிற்கால வரலாறெழுதுதலின் ஒத்திசைவும் தர்க்க ஒழுங்கும் இல்லாமல் இருக்கிற போதிலும் அது வரலாற்று ஆராய்ச்சியில் முன்னேற்றத்தை காட்டுவதாக உள்ளது.

**சூ.ஃபியிசம்:**

பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில் சூ.ஃபிகள் மத்தியில் செல்வாக்கு மிக்க இரு பிரிவுகள் தோன்றின. முல்தானை மையமாகக் கொண்ட சுஹ்ரவார்தி, தில்லியிலும் பிற இடங்களிலும் கோலோச்சிய சிஸ்டி ஆகியன. மிகப் பிரபலமான சிஸ்டி துறவி ஷெய்க் நிசாமுதீன், தமது உரையாடல்களில் (1307 – 1322) இறை நம்பிக்கைக்கு முற்பட்ட கட்டத்திலிருந்த சூ.ஃபியிசம் பற்றிச் செம்மையான ஒரு விளக்கமளித்தார். ஜலாலுதீன் ரூமி (1207 – 1273), அப்துர் ரஹ்மான் ஜிமி (1414 – 1492) ஆகியோரின் பாரசீகக் கவிதைகள் வழியாகவும், பிறகு இந்தியாவில் அஷ்ர.ஃப் ஜஹாங்கிர் சிம்நனி (பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில்) மேற்கொண்ட முயற்சிகள் வழியாக (1250 இல் இறந்த) இப்ன் அல் - அரபியின் கருத்துகள் செல்வாக்கு பெறத் தொடங்கிய போது சூபிசம் இதை நம்பிக்கை கொண்டதாக மாறியது. குறிப்பாக, ஏற்கப்பட்ட இறை நம்பிக்கை இந்திய இசுலாமிய சிந்தனையில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிய அதே காலத்தில் ஆதி சங்கரின் இறை நம்பிக்கை கோட்பாடு வைதீக சிந்தனைக்குள் கூடுதல் செல்வாக்கை பெற்றுக் கொண்டிருந்தது.

**கலீபா**

முகமது நபியின் வாரிசாகக் கருதப்படும் கலீபாக்கள் ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகத்தின் குடிமை, மதம் தொடர்பான விவகாரங்களின் மீது அதிகாரம் செலுத்தி வந்தனர். 1258 இல் பாக்தாத் நகரை மங்கோலியர் கைப்பற்றும் வரை கலீபா அந்நகரை ஆட்சி செய்தார். பின்னர் எகிப்தில் 1516 – 17 ஆம் அண்டுகளில் ஆட்டோமானியர் வெற்றி பெறும்வரை ஆட்சி செய்தார். இதன் பின்னர் ஆட்டோமானிய சுல்தான்களே இப்பதவியை வகித்து வந்தனர். ஆட்டோமானியப் பேரரசு நீக்கப்பட்டு (1920) முஸ்தபா கமால் அத்தாதுர்கின் தலைமையில் துருக்கியக் குடியரசு உருவானபோது இக்கலீபா பதவி

ஒழிக்கப்பட்டது.

**சாதியும் பெண்களும்:**

"இந்திய நிலப்பிரபுத்துவ"த்திலிருந்து சுவீகரித்துக்கொண்ட சமூக நிறுவனங்கள் பலவற்றை சுல்தான்கள் மாற்றி அமைக்கவில்லை. அடிமை முறை ஏற்கெனவே இந்தியாவில் நிலவியது. இருப்பினும் பதிமூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில் அடிமைகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்தது. போர், வரி செலுத்தத் தவறுதல் ஆகிய இரு நேர்வுகளாலும் மக்கள் அடிமைப்படுத்தப்பட்டனர். வீட்டுவேலை செய்வதிலும் கூடவே கைத்தொழிலிலும் அடிமைகள் ஈடுபடுத்தப்பட்டனர். கிராம சமுதாயமும் சாதி அமைப்பும் மாற்றமின்றி நீடித்தன. பாலினச் சமத்துவமின்மை, தடையின்றி நடைமுறையில் நீடித்தது. மத்திய கால இந்தியப் பெண்களிடம் கல்வியின்மை பரவலாகக் காணப்பட்டது. மேலும் சில இந்து சாதிகளில், உயர்குடிப் பெண்கள் கல்வியறிவு பெறுவது உயர்குடிப் பெண்கள் கல்வியறிவு பெறுவது அவமானத்திற்கு உரியதாகவும் கருதப்பட்டது. மேல் தட்டு இசுலாமிய சமுதாயத்தில் பெண்கள் பர்தா அணிவதைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது மேலும், அவர்களின் குடும்ப உறுப்பினர் தவிர வேறெந்த ஆண்களோடும் எவ்விதத் தொடர்புமின்றி ஸெனானாவில் (பெண்கள் வசிப்பிடத்தில்) ஒதுக்கி வைக்கப்பட்டனர். செல்வப் பெண்கள் மூடு பல்லக்கில் பயணம் செய்தனர்.

பர்தா அணிந்திருந்தபோதிலும் சில விஷயங்களில் இசுலாமியப் பெண்களுக்கு, பெரும்பாலான இந்துப் பெண்களைக் காட்டிலும் ஒப்பிட்டளவில் சமூகத்தில் உயர்ந்த தகுதியும் அதிக சுதந்திரமும் இருந்தன. அவர்கள் தங்களின் பெற்றோரிடமிருந்து சொத்துரிமை பெறவும், மண விலக்கு பெறவும் உரிமை இருந்தது இந்தச் உரிமைகள் இந்தப் பெண்களுக்கு இல்லை. ரஜபுத்திரர்களிடையே இருந்ததைப் போல், பல இந்து சமுதாயங்களில் பெண் குழந்தை பிறப்பது, ஒரு கெடுவாய்ப்பாகக் கருதப்பட்டது. இசுலாமிய மரபில், விதலைகள் உடன்கட்டை ஏறும் (சதி) வழக்கம் அறியப்பட்டிருக்கவில்லை. பெண்கள் படிக்கவும் எழுதவும் கற்பதை இசுலாம் தடைசெய்யவில்லை. அதே நேரத்தில் அது பலதார மணத்திற்கு ஏற்பளித்தது.

**கலப்புப் பண்பாட்டின் பரிணாமம்:**

இந்தியருடனான துருக்கியரின் பரஸ்பரத் தொடர்பு, கட்டடக்கலையிலும் நுண்கலையிலும் இலக்கியத்திலும் அதன் தாக்கத்தைக் ஏற்படுத்தியது.

| |
|---|
| சுல்தான் ∴பெரோஸ் துக்ளக், 1,80,000 அடிமைகள் வைத்திருந்ததற்காகப் புகழ்பெற்றவர். இதில் 12,000 பேர் கைவினைஞர்களாகப் பணிபுரிந்தனர். அவரது முதன்மை அமைச்சர் கான் ஜஹன் மக்பூல் 2000 த்துக்கும் அதிகமான பெண் அடிமைகளை வைத்திருந்தார். |

**கட்டடக் கலை:**

வளைவு, கவிகை, நிலவறைகள், சுண்ணாம்புக் கலவைப் பயன்பாடு, சாராசெனிய அம்சங்கள் ஆகியவை இந்தியாவில் அறிமுகமாயின.

பளிங்குக்கல், சிகப்பு, சாம்பல், மஞ்சள் நிற மணற்கல் பயன்பாடு கட்டடங்களுக்குப் பேரழகூட்டின. சுல்தான்கள், ஏற்கெனவே இருந்த கட்டடங்களைத் தம் தேவைகளுக்கு ஏற்ப மாற்றிக்கொண்டனர். இதற்கு, தில்லியில் குதுப்

மினாருக்குப் பக்கத்தில் அமைந்துள்ள குத்புதீன் ஐபக்கின் குவாத் உல் இசுலாம் மசூதியும் அஜ்மீரிலுள்ள அத்ஹை-தின்-கஜோப்ராவும் சிறப்பான எடுத்துக்காட்டுகள். ஒரு சமண மடாலயத்தின் மீது கட்டப்பட்ட ஒரு இந்துக் கோயில், குவ்வாத் உல் இசுலாம் மசூதியாக மாற்றி அமைக்கப்பட்டது. ஒரு மசூதியாக மாற்றப்படுவதற்கு முன்பு அத்ஹை-தின்-க-ஜோப்ரா, ஒரு சமண மடாலயமாக இருந்திருக்கிறது.

மேற்காசியாவிலிருந்து கைவினைஞர்கள் வந்துசேர்ந்ததும் வளைவுகளும் கவிகைகளும் துல்லியமும் முழுமையும் அடைந்தன. படிப்படியாக உள்ளூர் கைவினைஞர்களும் இதில் பயிற்சி பெற்றனர். முதல் மெய்யான வளைவால் அலங்கரிக்கப்பட்டது பால்பனின் கல்லறை, குவ்வாத் உல் இஸ்லாம் மசூதிக்கு ஒரு நுழைவாயிலாக அலாவுதீன் கில்ஜி கட்டிய அலாய் தர்வாஸா, முதல் உண்மையான கவிகையாகும். கியாசுதீன் துக்ளக்கும், முகமது பின் துக்ளக்கும் தலைநகர் தில்லியின் துக்ளகாபாத்தில் யமுனை நதியைத் தடுத்து செயற்கை ஏரி ஒன்றை உருவாக்கி அதன் நடுவில் அமைந்திருந்த கோட்டை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கியாசுதீன் துக்ளகின் கல்லறை, ஓர் உயர்ந்த மேடையின் மீது கவிகைகளைக் கொண்ட சாய்வுச் சுவர் அமைப்பை அறிமுகப்படுத்தியது. ∴பெரோஸ் துக்ளகின் கட்டங்கள், குறிப்பாக அவரது உல்லாச விடுதியான ஹவுஸ் காஸ், இந்திய, சாராசெனிய அம்சங்களை ஒன்று விட்டு ஒன்றான அடுக்குகளில் இணைத்திருப்பது, ஓர் ஒருங்கிணைப்பு உணர்வைக் காட்டுகிறது.

**சிற்பமும் ஓவியமும்:**

கட்டங்களை விலங்கு மற்றும் மனிதச் சித்திரங்கள் கொண்டு அலங்கரிப்பது இசுலாமியவிரோதம் என்று மரபான இசுலாமிய இறையியல் கருதியது. எனவே இசுலாத்துக்கு முந்தைய கட்டடங்களில் காணப்பட்ட நன்கு செதுக்கப்பட்ட உயிரோட்டம் கொண்ட உருவங்களுக்குப் பதிலாக பூ மற்றும் இதர வடிவ வேலைப்பாடுகள் செய்யப்பட்டன. தனிச்சிறப்பான கையெழுத்துப் பாணியில் பொறிக்கப்பட்ட குர்ஆன் வாசகங்களைக் கொண்டு கட்டடங்களை அழகுபடுத்தும் கலையான அரபிய சித்திர எழுத்து வேலை, கட்டங்களுக்கு எழிலூட்டியது.

**இசையும் நடனமும்:**

இசை என்பது கூட்டிணைவுப் போக்குகள் தெளிவாக வெளிப்படுகிற ஒரு துறையாகும். ரபாப், ஸாரங்கி போன்ற இசைக்கருவிகளை இசுலாமியர் கொண்டு வந்தனர். இந்திய இசை, உலகிலுள்ள மற்ற அனைத:து இசைகளை விடவும் மேம்பட்டது என்று அமிர் குஸ்ரு வெளிப்படையாக அறிவித்தார். சூ∴பிகளின் மனைப்பயிற்சி, இசையோடு சேர்ந்து காதல் கவிதைகளைப் பாடுதல் போன்றவை இசையைப் பரவலாக்க உதவியது. சூ∴பி துறவி பிர் போதன் இக்காலத்தின் ஒரு மிகப்பெரும் இசைஞராகக் கருதப்பட்டார். இசையின் வளர்ச்சிக்கு அரச ஆதரவும் இருந்தது. ∴பெரோஸ் துக்ளக் இசையில் காட்டிய ஆர்வம், "ராக் தர்பன்" என்ற இந்திய சமஸ்கிருத இசை நூலைப் பாரசீக மொழிக்குப் பெயர்த்ததன் மூலம் ஒத்திசைவுக்கு இட்டுச் சென்றது. நடனமும் அரசவையில் ஒரு உந்துதலைப் பெற்றது. இசைஞர் நுஸ்ரத் காட்டன் நடனக்காரர் மிர் அ∴ப்ரோஸ், ஜலாலுதீன் கில்ஜி அரசவையில் இருந்ததை ஜியாவுத்தீன் பரனி பட்டியலிடுகிறார்.

**இலக்கியம்:**

பாரசீக உரைநடையிலும் கவிதையிலும் ஒரு முக்கியமான நபராக விளங்குபவர் அமிர் குஸ்ரு. தமது "ஒன்பது வானங்கள்" (Nu siphr) நூலில்

தம்மை ஓர் இந்தியன் என்று அழைத்துக்கொள்வதில் அவர் பெருமிதம் கொள்கிறார். இந்நூலில், அவர் இந்தியாவின் வானிலையை, அதன் மொழிகளை குறிப்பாக சமஸ்கிருதத்தை அதன் கலைகளை, அதன் இசையை, அதன் மக்களை, அதன் விலங்குகளையும் கூடப் போற்றுகிறார். இசுலாமிய சூ∴பி துறவிகள், இலக்கியத்தில் ஆழந்த தாக்கம் செலுத்தினர். சூ∴பி துறவி நிசாமுதீன் அவுலியாவின் உரையாடல்களைக்

இல்துமிஷ் கட்டி முடித்த போது 72.5 மீட்டர் உயரமிருந்த குதுப் மினார், ∴பெரோஸ் ஷா துக்ளக் மேற்கொண்ட பழுதுநீக்கும் பணிகளால் 74 மீட்டராக உயர்ந்தது. 379 படிகள் கொண்ட மினார், அதன் உயரத்துக்காகவும், மாடிகளை அடையாளப்படுத்துகிற துருத்தி நிற்கிற உப்பரிகைகளுக்காகவும், படிப்படியான கோபுரச் சரிவுக்காகவும், கோபுரத்தைச் சுற்றிலுமுள்ள சரிவான விளிம்பு அலங்கரிப்புகள் ஒரு வளைவு தோற்றத்தைத் தருவதற்காகவும் சிறப்புடையது.

அதன் இசையை, அதன் மக்களை, அதன் விலங்குகளையும் கூடப் போற்றுகிறார். இசுலாமிய சூ∴பி துறவிகள், இலக்கியத்தில் ஆழ்ந்த தாக்கம் செலுத்தினர். சூ∴பி துறவி நிசாமுதீன் அவுலியாவின் உரையாடல்களைக் கொண்ட "∴பவாய்" துல் ∴பவாத்" என்ற ஒரு நூலை அமிர் ஹாஸ்ஸன் தொகுத்தார். ஜியவுத்தீன் பரனி, சம்சுதீன் சிராஜ் அ∴பி∴ப், அப்துல் மாலிக் இசுலாமி ஆகியோரின் எழுத்துகளுடன் சேர்ந்து ஒரு வலுவான வரலாறு எழுதுகிற சிந்தனைப் போக்கு உதித்தது. பாரசீக உரைநடையின் ஆசானாக ஜியாவுத்தீன் பரனி தோன்றினார். ∴புதூ உஸ் சலாதின் என்ற தனது கவிதைத் தொகுப்பில் அப்துல் மாலிக் இசுலாமி, கஜனவிய காலம் தொடங்கி முகமது-பின்-துக்ளக் ஆட்சி வரையிலுமான இசுலாமியர் ஆட்சியின் வரலாற்றைப் பதிவு செய்தார்.

சமஸ்கிருத நூல்களை மொழிபெயர்த்ததன் மூலம் பாரசீக இலக்கியம் வளமடைந்தது. பாரசீகச் சொற்களுக்கு நிகரான ஹிந்தாவி சொற்களைக் கொண்ட அகராதிகள் தொகுக்கப்பட்டன. இவற்றுள் மிகவும் முக்கியமானவை: ∴பக்ருத்தின் கவ்வாஸ் இயற்றிய ∴பரங்-இ-கவாஸ் முகம்மத் ஷதியாபடி இயற்றிய மி∴ப்தஹு" ஐ ∴புவாஜலா ஆகியனவாகும். கிளி நூல் எனும் துதிநமஹ என்பது ஜியா நக்ஷபி, பாரசீக மொழியில் மொழிபெயர்த்த சமஸ்கிருதக் கதைகளின் தொகுப்பாகும். மகாபாரதமும் ராஜதரங்கிணியும் கூடப் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டன.

சமஸ்கிருத் இலக்கியத்தின் முன்னேற்றத்தை தில்லி சுல்தானிய ஆட்சி தடுக்கவில்லை. உயர் அறிவுபூர்வ சிந்தனை மொழியாக சமஸ்கிருதம் தொடர்ந்தது. பேரரசின் வெவ்வேறு பகுதிகளில் நிறுவப்பட்டிருந்த சமஸ்கிருதப் பள்ளிகளும் கல்வி நிலையங்களும் தொடர்ந்து செழித்தன. தில்லியிலுள்ள 1276-ஆம் ஆண்டுக்குரிய செவ்வியல் சமஸ்கிருத கல்வெட்டு (பால பவோலி), சுல்தான் பால்பனின் நல்லாட்சியின் விளைவாக விஷ்ணு பகவான், எந்தக் கவலைகளுமின்றிப் பாற்கடலில் துயில்கிறார் என்கிறது. சமஸ்கிருத இலக்கியத்தில் அரபு, பாரசீக மொழிகளின் தாக்கத்தை, மொழிபெயர்ப்புகள் வழி உணரலாம். ஸ்ரீவரா, கதாகௌடுக என்ற தமது நூலில், யூசு∴ப் ஜுலைகாவின் கதையை ஒரு சமஸ்கிருதக் காதல் பாடலாகச் சேர்த்திருக்கிறார். காஷ்மீர அரசர்களின் வரலாறான ஜைனவிலாஸ் நூலை இயற்றுவதற்கு பட்டவதார, ஷா நாமா எனும் ∴பிர்தௌசியின் நூலை ஒரு முன்மாதிரியாக எடுத்துக்கொண்டுள்ளார்.

# 11th வரலாறு

# அலகு – 11

# பிற்காலச் சோழரும் பாண்டியரும்

**கற்றல் நோக்கங்கள்:**

- பிற்காலச் சோழர், பாண்டியர் ஆட்சியின் போது நடைபெற்ற கீழ்கண்டவை குறித்து அறிவு பெறுதல் ஆகும்.

I **சோழர்:**

- சோழ அரசர்களின் சாதனைகள்
- சோழப் பேரரசின் கீழ் ஏற்பட்ட பண்பாட்டு வளர்ச்சி
- நன்கு வளர்ச்சி அடைந்த வேளாண்மைக் கட்மைப்பு, நீர்ப்பாசன முறை ஆகியவற்றின் தோற்றம்
- இடைக்காலத் தமிழச் சமூகத்தில் கோயில்களின் பங்களிப்பு
- சோழர் காலக் கடல்வழிவணிகம்

II. **பாண்டியர்:**

- மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு பாண்டியரின் எழுச்சி
- மாலிக் காபூரின் படையெடுப்பும் வீழ்ச்சியும்
- அலாவுதீன் கில்ஜியை வரவழைத்த வாரிசுரிமைச் சண்டை
- பாண்டியர் ஆட்சியில் வேளாண்மை, நீர்ப்பாசனம், வணிகம்
- தென் தமிழ்நாட்டில் மதமும் பண்பாடும்

**அறிமுகம்:**

வரலாற்றின் தொடக்க காலத்தில் மூன்று வலிமை வாய்ந்த மரபுவழி அரசர்கள் தமிழத்தை ஆட்சி செய்தனர். சங்க இலக்கியம் மூவேந்தர்கள் என்று அவர்களைக் குறிப்பிடுகிறது. பல சங்கப் பாடல்கள் சோழ அரசர்களின் மரபு பற்றிக் குறிப்பிடுகின்றன. எனினும், சங்க காலத்திற்குப் பின், பொ.ஆ.9-ஆம் நூற்றாண்டு வரை சோழர் குறித்த சான்றுகளை அறிய முடியவில்லை. இந்த இடைப்பட்ட காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட அசைவியக்கங்கள் இப்பகுதியில் பெரிய அளவிலான மாற்றங்கள் ஏற்பட வழிவகுத்தன. அம்மாற்றங்கள் முடியாட்சி தோன்றி நிலத்திருக்கக் காரணமாயின. அவற்றுள் ஒன்றுதான் பிற்காலச் சோழப் பேரரசு ஆகும்.

பிற்காலச் சோழரின் தோற்றத்துக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றில் ஒன்று வேளாண்மை விரிவாக்கம் ஆகும். இந்த விரிவாக்கம் ஆற்று வடிநிலங்களில் ஏற்பட்டது. இதன்மூலம் வேளாண் உற்பத்தி பன்மடங்கு பெருகியது. இந்த வேளாண் பெருவளர்ச்சி அபரிமிதமான உபரி தானிய உற்பத்திக்கு இட்டுச் சென்றது. ஆனால் இந்த உபரி சமமற்ற செல்வப் பகிர்வுக்கும் காரணமாயிற்று. தொடக்க காலத்தில் இருந்ததைப் போல் அல்லாமல், சமூகம் படிப்படியாகப் பெரிய அளவில் வேறுபாடுகளுக்கு உள்ளானது. இதே காலகட்டத்தில், இந்தியாவின் வட

பகுதியிலிருந்து அறிமுகமான மதங்கள், அவை சார்ந்த கோயில்கள் போன்ற நிறுவனங்களும் சிந்தனைப் போக்குகளும் புதிய சக்திகளாக வடிவெடுத்தன. பக்தி இயக்கத்துக்குத் தலைமை தாங்கிய நாயன்மார்களும், ஆழ்வார்களும் தமது கருத்தியலை பரப்புரை செய்தனர். இதேபோன்று, வட இந்தியாவில் உருவான அரசியல் சிந்தனைகளும் நிறுவனங்களும் விரைவில் தெற்கில் பரவின. இம்மாற்றங்களின் ஒட்டுமொத்த விளைவாக இங்கு அரசு உருவானது. முடியாட்சி முறையைக் கொண்ட இவ்வரசுக்குப் பண்டைய சோழ மன்னனின் வழிவந்தவர்களாகத் தங்களை பறைசாற்றிக் கொண்டோர் தலைமையேற்றனர்.

சோழப் பேரரசு செல்வாக்கு இழந்ததும், வகை ஆற்று வடிநிலமான மதுரை பகுதியில் பாண்டியர் ஆட்சி செய்யத் தொடங்கினர். பதினான்காம் நூற்றாண்டுவாக்கில் பாண்டியரின் ஆட்சி வலிமை பெற்றது. சோழர் போலவே பாண்டியர்களும் வேளாண்மை, வணிகம் மூலம் பெரும் வருவாய் ஈட்டினர். இக்கால கட்டத்திலும் கடல் கடந்த வாணிபத்தின் விரிவாக்கம் தொடர்ந்தது. பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாக இருந்த திருநெல்வேலியிலிருந்து மலபார் கடற்கரைப்பகுதிக்குத் தானியங்களும் பருத்தியும் பருத்தித்துணிகளும் காளைகளும் ஏற்றுமதி செய்யப்பட்டன. மேற்கு, தென்கிழக்கு ஆசியா பகுதிகளுடனும் வணிகத் தொடர்பு மேற்கொள்ளப்பட்டது. பாண்டிய மன்னர்கள் மத, பண்பாட்டு, அரசியல் கூறுகளைத் தொகுத்து உருவாக்கிய பண்பாட்டு மரபானது குப்த அரசர்கள் செவ்வியல் காலத்தில் உருவாக்கியதாகக் கருதப்படும் ஒற்றைப் பரிமாணப் பண்பாட்டில் இருந்து முற்றிலும் வேபட்டதாகும்.

## I – சோழர்:

### சோழப் பரம்பரையின் தோற்றம்:

சங்க காலத்துக்குப் பிறகு கிடைக்கும் ஆவணங்களின்படி, காவிரிப்பகுதியில் சோழர் பல்லவருக்குக் கீழ்நிலை ஆட்சியாளர்களாக இருந்துள்ளார்கள் எனத் தெரிகிறது. விஜயாலயன் (பொ.ஆ. 850 – 871) முத்தரையர்களிடமிருந்து காவிரி ஆற்றின் கழிமுகப்பகுதிகளை வென்றார். அவர் தஞ்சாவூர் நகரைக் கட்டமைத்து, 859 இல் சோழ அரசை நிறுவினார். எனவே, வரலாற்றாய்வாளர்கள் இச்சோழர்களைப் பிற்காலச் சோழர் என்றும் பேரரசுச்சோழர் என்றும் குறிப்பிடுகிறார்கள். விஜயாலயனுக்குப் பின் வந்த சோழ அரசர்கள் தாங்கள் சங்க காலத்தின் புகழ்பெற்ற சோழ அரசனான கரிகாலனின் மரபில் வந்தவர்கள் எனச் செப்பேடுகளில் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் தமது மரபுவழிப்பட்டியலில் ‘சோழ’ என்ற பெயருடைய அரசரைத் தனது மூதாதையராகக் குறிப்பிட்டுள்ளார்கள். கிள்ளி, சோச்செங்கண்ணன்,கரிகாலன் எனும் பெயர்களைக் கொண்ட சோழ அரசர்கள் தங்கள் கொடிவழியைச் சேர்ந்தவர்கள் என இச்செப்பேடுகளில் குறிப்பிட்டுள்ளார்கள்.

விஜயாலயனுக்குப் பின்வந்தோரில் முதலாம் பராந்தகன் (907 – 955) முதல் மூன்றாம் குலோத்துங்கன் வரையான அரசர்கள் சோழருக்குப் பெருமையும் புகழும் சேர்ந்தனர். பராந்தகச் சோழன் நாட்டின் எல்லையை விரிவுப்படுத்தினார். ஆட்சிமுறையின் அடித்தளத்தையும் விரிவாக்கினர். முதலாம் இராஜராஜனும் அவருடைய மகன் முதலாம் இராஜேந்திரரும் தங்கள் முன்னோடிகள் மூலம் ஏற்பட்டிருந்த வளர்ச்சிகளை ஒருங்கிணைத்து, தீபகற்ப இந்தியாவில் சோழரின் மேலாதிக்கத்தை நிறுவினர்.

**சான்றுகள்:**

சோழர் தங்களது பரந்து விரிந்த பேரரசை ஆள்வதற்கு வலுவான நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கியதுடன், பிற்கால வரலாற்றாய்வாளர்களுக்கு உதவும் வண்ணம் பெரும் எண்ணிக்கையிலான வரலாற்றுச் சான்றுகளையும் விட்டுச் சென்றுள்ளனர். செப்பேடுகளிலும் கல்லிலும் 10,000-க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் சோழர் வரலாற்றுக்கான முதல்நிலைச் சான்றுகளாக உள்ளன. இந்த வரலாற்று ஆவணங்களில் பெரும்பான்மையானவை அரசர்களும் பிறரும் கோயில்களுக்கு வழங்கிய கொடை குறித்த தகவல்களாகவே உள்ளன. அற்றின் உள்ளடக்கத்தில் நிலப் பரிமாற்றங்கள், வரிகள் (விதிக்கப்பட்ட வரிகள், விலக்கப்பட்ட வரிகள்) ஆகியன குறித்த தகவல்களே அதிகம். ஆனால், பிற்காலக் கல்வெட்டுகள் சமூக வேறுபாடுகள் குறித்துக் குறிப்பிடுகின்றன. அவை சமூகத்தில் சாதிகள், துணைச்சாதிகள் இருந்ததைக் காட்டுகின்றன. இவற்றின் வாயிலாக அன்றைய சமூகக் கட்டமைப்பு குறித்த தகவல்களை அறிய முடிகிறது. இவற்றுடன் செப்பேடுகளிலும் அரசர் ஆணைகள் காணப்படுகின்றன. அவற்றிலும் கொடிவழி, போர்கள், வெற்றிகள், நிர்வாகப் பிரிவுகள், உள்ளாட்சி அமைப்பு, நில உரிமைகள், பல்வேறு வரிகள் குறித்த செய்திகள் உள்ளன. சோழர் ஆட்சியில் இலக்கியங்களும் செழித்தன. சைவ, வைணவ நூல்கள் தொகுத்து முறைப்படுத்தப்பட்டன. இது சோழர் காலத்தில் நடந்த முக்கியமான சமய இலக்கியப் பணியாகும். பெருங்காவிய நூலான கம்ப இராமாயணம் இலக்கிய வடிவிலான வரலாற்று நூல்களான கலிங்கத்துப்பரணி, குலோத்துங்கச் சோழன், பிள்ளைத்தமிழ், மூவருலா, ஆகியனவும் இக்காலத்தில் இயற்றப்பட்டன. நான்னூல், நேமிநாதம், வீரசோழியம் ஆகியவை இக்காலத்தில் எழுதப்பட்ட குறிப்பிடத்தக்க இலக்கண நூல்கள் ஆகும். பாண்டிக்கோவை, தக்கயாகப்பரணி ஆகியவை பிற முக்கிய இலக்கியப் படைப்புகளாகும்.

**ஆட்சிப்பகுதி :**

தமிழ்நாட்டில் சோழ அரச மரபின் கீழ் இருந்த ஆட்சிப் பகுதி சோனாடு அல்லது சோழ நாடு எனப்படுகிறது. சோழ மண்டலம் எனப்படும் காவிரி ஆற்றின் கழிமுகப்பகுதி சோழ அரசின் மையப்பகுதியாக விளங்கியது. சோழ மண்டலம் என்ற சொல் ஐரோப்பியர் நாவில் ‘கோரமண்டல்’ எனத் திரிபடைந்தது. தற்போது இச்சொல் தென்னிந்தியாவின் கிழக்குப் பகுதி முழுவதையும் குறிக்கின்றது. தமது படைவலிமையைப் பயன்படுத்தி, தற்போதைய புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களையும் தற்போதைய மேற்குத் தமிழ்நாட்டின் கொங்குப் பகுதியையும் இணைத்துச் சோழப் பேரரசை விரிவுப்படுத்தினார்கள். பதினொன்றாம் நூற்றாண்டு வாக்கில் படையெடுப்புகள் மூலம் தொண்டை நாடு, பாண்டி நாடு, தெற்குக் கர்நாடகத்தைச் சேர்ந்த கங்கைவடி, மலைமண்டலம் என்ற கேரளம் ஆகிய பகுதிகள் வரை விரிவுப்படுத்தினார்கள். கடல் கடந்த விரிவாக்கத்தின்போது, சோழர் இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளைக் கட்டுப்படுத்தியும், அப்பகுதிகளை ‘மும்முடிச்சோழ மண்டலம்’’ என அழைத்தார்கள்.

**பேரரசு உருவாக்கம்:**

சோழ அரசர்களில் மிகவும் போற்றப்படுபவர் முதலாம் இராஜராஜன். அவரது கடல் கடந்த படையெடுப்புகள் மேற்குக்கடற்கரை, இலங்கை ஆகியவற்றில் வெற்றியைப் பெற்றுத்தந்தன. இவர் இந்தியப் பெருங்கடலில் மாலத் தீவுகளைக் கைப்பற்றியதும் இதில் சேரும். இலங்கையை வென்றதன் மூலம் அதன் வடக்கு கிழக்குப் பகுதிகள் சோழ அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. புதிதாக

இணைக்கப்பட்ட பகுதிகளை கைப்பற்றியதும் இதில் சேரும். இலங்கையை வென்றதன் மூலம் அதன் வடக்கு கிழக்குப் பகுதிகள் சோழ அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளை நிர்வகிப்பதற்கு ஒரு தமிழ் தளபதியை இராஜராஜன் நியமித்ததுடன், அங்கு ஒரு கோயில் கட்டவும் ஆணை பிறப்பித்தார். அக்கோயில் 'சிவ-தேவாலே'' (சிவாலயம்) எனப்படுகிறது. இவரால் 'மகாதிட்டா' என்ற இடத்தில் கட்டப்பட்ட கோயில் 'இராஜராஜேஸ்வரம்' என அழைக்கப்படுகிறது.

இராஜராஜன் தன் மகன் முதலாம் இராஜேந்திரனை வாரிசாக அறிவித்தார். இருவரும் இரு ஆண்டு காலம் கூட்டாக ஆட்சி செய்தார்கள். முதலாம் இராஜேந்திரன் தன் தந்தையின் படையெடுப்புகளில் பங்கேற்று, மேலைச்சாளுக்கிரைத் தாக்கி, சோழ அரசின் எல்லையைத் துங்கபத்திரை ஆறு வரை விரிவுப்படுத்தினார். இராஜராஜன் மதுரை மீது தாக்குதல் தொடுத்தபோது பாண்டியர் தங்கள் மணிமுடி மற்றும் அரச நகைளுடன் தப்பி, இலங்கையில் அடைக்கலம் புகுந்தார்கள். எனவே முதலாம் இராஜேந்திரன் இலங்கையை வென்று, பாண்டியரின் மணிமுடியையும் பிற அரச உடைமையையும் கைப்பற்றினார்.

1023 இல் முதலாம் இராஜேந்திரன் அரசப் பொறுப்பேற்றார். அவர் வட இந்தியாவின் மீது மிகத் தீவிரமான ஒரு படையெடுப்பை நிகழ்த்தினார். இதற்காகப் படைகளைக் கோதாவரி ஆறு வரை அவரே வழிநடத்திச்சென்றார். கோதாவரியைக் கடந்த பிறகு படைக்குத் தலைமையைத் தனது தளபதியிடம் ஒப்படைத்தார். அத்தளபதியின் தலைமையில் படையெடுப்பு தொடர்ந்தது. முதலாம் இராஜேந்திரனுக்கு வட இந்தியாவில் கிடைத்த வெற்றிகளின் நினைவாகக் கங்கை கொண்ட சோழபுரம் கட்டப்பட்டது.

தமிழர்களின் கடல்வழிச் சாதனைகள் சோழர்காலத்தில் உச்சத்தை எட்டின. சோழர் சோழ மண்டலக்கடற்கரையோடு,மலபார் கடற்கரையையும் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். வங்காள விரிகுடாப் பகுதியில் சோழரின் செல்வாக்குச் சில பத்தாண்டு காலத்திற்கு நீடித்தது. இராஜேந்தினின் கடற்படை ஸ்ரீவிஜயா (தெற்கு சுமத்ரா) மீது தாக்குதல் தொடுத்தது. தென்கிழக்கு ஆசியாவில் 700க்கும் 1300 க்கும் இடையே செழித்து வளர்ந்த நாடுகளுள் ஸ்ரீவிஜயாவும் ஒன்றாகும். இது வலிமையான கடற்படைகொண்டதாகவும் வணிகத்தில் சிறந்ததாகவும் இருந்தது. இதேபோன்று குறுநில மன்னரின் ஆட்சியின் கீழ் இருந்த கெடாவும் (கடாரம்) ராஜேந்திரனால் தோற்கடிக்கப்பட்டன. எனவே, ராஜேந்திரனுக்கு 'கடாரம் கொண்டான்'' என்ற பட்டம் சூட்டப்பட்டது.

மேலைச் சாளுக்கிய அரசின் மீது 1003இல் முதலாம் இராஜராஜன் தொடுத்த போரும் 1009 இல் முதலாம் இராஜேந்திரன் தொடுத்த போரும் அவர்களுக்கு வெற்றியைத் தந்தன. சாளுக்கியரின் தலைநகரான கல்யாணியைத் தகர்ப்பதற்கு இராஜேந்திரன்தன் மகனை அனுப்பினார். அங்கிருந்து கொண்டுவரப்பட்ட துவாரபாலகர் (வாயிற்காப்போன்) சிலையைக் கும்பகோணத்திலுள்ள தாராசுரம் கோயிலில் இன்றும் காணலாம். ராஜேந்திரன் முடிகொண்ட சோழன்,கங்கைகொண்டான், கடாரம் கொண்டான், பண்டித சோழன் போன்ற பட்டங்கள் சூடிக்கொண்டார்.

## சோழர் நிர்வாகம்:

### அரசர்:

சோழ அரசின் தன்மை குறித்து வரலாற்றாய்வாளர்களிடையே பலவிதக் கருத்துகள் உள்ளன. சோழ அரசு மரபுவழிப்பட்ட முடியாட்சியை அடிப்படையாகக் கொண்டிருந்தது என்பது தெளிவாகிறது. அரசர் பற்பல பெருமைகளுக்கு உரியவராக அக்காலத்தைச் சேர்ந்த இலக்கியங்களிலும் கல்வெட்டுக் குறிப்புகளிலும் புகழப்படுகிறார். கடவுளுக்கு இணையாகப் பெருமான் அல்லது பெருமகன், உலகுடைய நாயனார் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார். பிற்காலத்தில் சக்கரவர்த்தி (பேரரசர்), திருபுவன சக்கரவர்த்தி (மூன்று உலகங்களுக்கானப் பேரரசர்) போன்ற பட்டங்களை சோழ அரசர்கள் சூடிக்கொண்டனர். அரசராகப் பட்டம் சூட்டும் விழாவின் போது அவரது பெயருக்குப் பின் ''தேவன்'' என்ற சொல்லைப் பின்னொட்டாகச் சேர்க்கும் நடைமுறை இருந்தது. அரசர்கள் தங்களைக் கடவுளின் நண்பன் (தம்பிரான்தோழன்) என்று உரிமை கோரித் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்தினர்.

சோழ அரசர்கள் தங்கள் ஆன்மீக வழிகாட்டி அல்லது இராஜ குருக்களாகப் பிராமணர்களை நியமித்தார்கள் முதலாம் இராஜராஜனும் முதலாம் இராஜேந்திரனும் தங்களுடைய இராஜ குருக்களாக முறையே ஈசான சிவன், சர்வ சிவன் ஆகியோரைக் கல்வெட்டுக் குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளனர். அரசர்கள் தங்கள் சமூக மதிப்பையும் அதிகாரத்தையும் உயர்த்திக்கொள்வதற்கான ஒரு வழிமுறையாகவே பிராமணர்களை ஆதரித்தனர். அதன் பொருட்டு பிராமணர்களுக்குப் பிரம்மதேயம், சதுர்வேதி மங்கலம் என்ற பெயரில் பெரும் நிலப்பரப்புகளைக் இறையிலியாக அளித்தனர்.

### மண்டலங்கள்:

முன்னரே குறிப்பிடப்பட்டது போல் சோழ அரசின் எல்லை விஜயாலயன் காலத்திலிருந்தே சீராக விரிவடைந்து வந்தது. திறை செலுத்துபவர்கள் என்று வரலாற்று ஆசிரியர்களால் விளக்கமளிக்கப்படும் சிற்றரசர்கள் அல்லது குறுநில மன்னர்களுடனான போர்களுக்குப் பின்னர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பகுதிகள் சோழ அரசுடன் இணைத்துக்கொள்ளப்பட்டன. முதலாம் இராஜராஜன் இப்பகுதிகளையெல்லாம் மண்டலங்களாக ஒன்றிணைத்து, ஒவ்வொரு மண்டலத்திலும் ஓர் ஆளுநரை நிமித்தார். பாண்டிய நாட்டில் சோழ பாண்டியர், இலங்கையில் சோழ இலங்கேஸ்வரர் (இது, பின்னர் மும்முடி சோழ மண்டலம் என்று அழைக்கப்பட்டது), தெற்கு கர்நாடகத்தின் கங்கை வடி பகுதியில் சோழ கங்கர் என ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். மேலும், இருக்குவேளிர், இளங்கோ வேளிர், மழவர்கள், பானர்கள் போன்ற சிற்றரசர்கள் ஆட்சி செய்த முக்கியத்துவம் குறைந்த பகுதிகளும் பின்னர் சோழ அரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டன. இந்தச் சிற்றரசர்களும் சோழ ஆட்சி நிர்வாகத்தின் பல்வேறு பொறுப்புகளில் அமர்த்தப்பட்டனர்.

### படை:

சோழப் பேரரசு நிரந்தரப் படையைக் கொண்டிருந்தது. இப்படை மரபுவழிப்பட்டை இருந்த மூன்று பிரிவுகளைக் கொண்டிருந்தது. காலாட்படை, குதிரைப்படை (குதிரைச்சேவகர்), யானைப்படை (ஆனையாட்கள்), வில் வீரர்கள் (வில்லாளிகள்), வாள் வீரர்கள் (வாளிலர்), ஈட்டி வீரர்கள் (கொண்டுவார்)

ஆகியோரும் படையில் இருந்தனர். படைப் பணிகளில் இருபடிநிலைகள் குறிப்பிடப்படுகின்றன. 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு சீனப் புவியியலாளர், “சோழரிடம் 60 ஆயிரம் போர் யானைகள் இருந்தன. அவற்றின் முதுகில் வீடு போன்ற அமைப்பு இருக்கும். அதில் வீரர்கள் நிறைந்திருப்பார்கள். போரில் இவர்களின் நீண்ட தொலைவில் உள்ள இலக்குகளின் மீது அம்பு எய்வார்கள். அருகில் உள்ள பகைவர்களுடன் யானையின் மீதிருந்தபடியே ஈட்டியால் சண்டையிடுவார்’ எனக் குறிப்பிடுகிறார். சோழர் கடல்கடந்து சென்று நடத்திய போர்கள் மிகவும் புகழ்பெற்றவை. சோழர்களிடம் ‘எண்ணற்ற கப்பல்கள் இருந்தன என வரலாற்றாய்வாளர்கள் அவர்களின் கடற்படையை வியந்து குறிப்பிடுமளவுக்கு அதன் பலம் இருந்தது. படை வீரர்களுக்குப் படைப்பற்று’ என்ற உரிமை வழங்கப்பட்டிருந்தது. தலைநகரில் படை முகாம் இட்டிருந்த இடம் ‘படைவீடு” எனப்பட்டது. புதிதாகச் சேர்க்கப்படும் பகுதிகளில் அமைக்கப்பட்ட புறக்காவல் படைகள் ‘நிலைப்படைகள்’ எனப்பட்டன. ஒரு படைப்பிரிவின் தலைவர் ‘நாயகம்’ என்றும் பின்னாட்களில் ‘படைமுதலி’ என்றும் அழைக்கப்பட்டார். படைத்தளபதி ‘சேனாபதி’, ‘தண்டநாயகம்’ என்றறியப்பட்டார்.

**உள்ளாட்சி அமைப்பு:**

சோழர் காலத்தில் பல்வேறு உள்ளாட்சிக் குழுக்கள் சிறப்பாக இயங்கியுள்ளன. அவை ஊரார், சபையார், நகரத்தார், நாட்டார் ஆகியவை அத்தகு குழுக்கள் ஆகும். இவை ஒப்பீட்டளவில் தன்னாட்சி உரிமை கொண்டவையாக இயங்கின. இந்த அடித்தளத்தின் மீதுதான் சோழப் பேரரசு கட்டமைக்கப்பட்டது.

**ஊரார்:**

வேளாண்மை விரிவாக்கத்தைத் தொடர்ந்து கிராமப்புறங்களில் வேளாண் குடியிருப்புகள் அதிகளவில் தோன்றின. அவை ‘ஊர்’ என அழைக்கப்பட்டன. அந்த ஊர்களில் நில உடமையாளர்களே ஊரின் பிரதிநிதிகளாகச் செயல்பட்டார்கள். அவர்கள் ஊரார் என அழைக்கப்பட்டார்கள். கோயில்களின் நிர்வாகத்தையும் குளங்களின் பராமரிப்பையும் இவ்வூரார் மேற்கொண்டனர். குளங்களிலிருந்த நீரை ஊரின் தேவைகளுக்குப் பயன்படுத்துவதையும் ஊரார் கவனித்துக்கொண்டார்கள். இவை தவிர, வரி உள்ளிட்ட வருவாய்களைச் வசூப்பது, சட்ட ஒழுங்கைப் பாதுகாப்பது, அரசரின் கட்டளையை நிறைவேற்றுவது ஆகிய நிர்வாகப் பொறுப்புகளையும் இவர்கள் மேற்கொண்டனர்.

**சபையார்:**

ஊர் என்பது நில உடைமை சார்ந்தோரின் குடியிருப்பு, பிரம்மதேயம் என்பது பிராமணர்களின் குடியிருப்பாகும். பிரம்மதேயத்தின் மையமாக விளங்கிய கோயில்கள், அவற்றின் சொத்துக்கள் ஆகியவற்றை நிர்வகிப்பது, பிரம்மதேய குடியிருப்புகளைப் பராமரிப்பது ஆகிய பணிகளை ‘சபை’கள் மேற்கொண்டன. கோயில் நிலங்களுடன் இணைக்கப்பட்டிருந்த பாசனக்குளங்களின் பராமரிப்புக்குச் சபை பொறுப்பாக இருந்தது. ஊரைப் போலவே சபையும் அரசின் பிரதிநிதியாகச் செயல்பட்டது. நிர்வாகம், நிதி, நீதி ஆகிய துறைகள் சார்ந்த பணிகளையும் சபை மேற்கொண்டது.

**நகரத்தார்:**

நகரம் வணிகர்களின் குடியிருப்பாக விளங்கியது. தங்கம் உள்ளிட்ட உலோகப் பொருள்கள், கைவினைப் பொருள்கள், நெசவு, பானை வனைதல் ஆகியவற்றில் திறமை பெற்ற கைவினைஞர்களும் நகரத்தில் வசித்தனர். நகரத்தின் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் நகரத்தார் எனப்பட்டனர். இவர்களின் நிதியுதவி கோயில்களுக்குத் தேவைப்பட்டது. கோயில்களின் நிர்வாகத்துடன் நகரத்தார் சீரான தொடர்பில் இருந்தனர். முதலாம் இராஜராஜனின் ஆட்சியில் மாமல்லபுரம் 'மாநகரம்' என்ற குழுவால் நிர்வகிக்கப்பட்டது. உள்ளூர் பொருள்கள் நகரங்களில் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டன. பட்டு, பீங்கான், கற்பூரம், கிராம்பு, சந்தனக்கட்டை, ஏலக்காய் போன்றவை இவ்வாறு பரிமாற்றம் செய்யப்பட்டதாகச் சீன வரலாற்றுக்குறிப்புகள் கூறுகின்றன. உள்நாட்டிலும் கடல் கடந்தும் வணிகத்தை ஊக்குவிப்பதற்காகக் குலோத்துங்கன் சுங்கவரிகளை நீக்கினார். எனவே அவர் 'சுங்கம் தவிர்த்த சோழன்' எனப்படுகிறார்.

**நாட்டார்:**

பிரம்மதேயங்கள் நீங்கலாகப் பல ஊர்களின் தொகுப்பு நாடு எனப்பட்டது. கால்வாய்கள், குளங்கள் போன்ற பாசன ஆதாரங்களைச் சுற்றி இவை உருவாக்கப்பட்டிருந்தன. வேளாண் வகை கிராமங்களில் நிலம் வைத்திருந்தவர்களின் மன்றம் நாட்டார் எனப்பட்டது. சோழ அரசக்கட்டமைப்பின் அடிப்படை உறுப்புகளாக நாட்டார் செயல்பட்டனர். அரசுக்கான நிர்வாகம், நிதி, நீதித்துறை சார்ந்த பணிகளை இவர்கள் மேற்கொண்டனர். நாட்டார்களுக்கு மரபுவழி நில உரிமைகள் வழங்கப்பட்டிருந்தன. தாங்கள் சார்ந்த நாட்டிலிருந்து வரி சேகரித்துக் கொடுக்கும் பொறுப்பும் அவர்களுக்கு இருந்தது. நாட்டார்களுக்கு மரியாதை செலுத்தும் நோக்கில் ஆசுடையான் (நில உரிமையாளர்). அரையன் (வழிநடத்துவோர்), கிழவன் (தலைவர்) போன்ற பட்டங்கள் அளிக்கப்பட்டன. நாட்டுக்கணக்கு, நாட்டு வையவன் எனும் பணியாளர்கள் நாட்டாரின் நிர்வாகப் பணிகளை ஆவணப்படுத்தினர்.

**உள்ளாட்சித் தேர்தல்களும் உத்தரமேரூர் கல்வெட்டுகளும்:**

பிரம்மதேயங்களில் (பிராமணர்களுக்கு வரிவிலக்குடன் அளிக்கப்பட்ட நிலம்) ஒன்றாக இருந்த உத்தரமேரூரில் (உத்தரமல்லூர் சதுர்வேதி மங்கலம்) கிடைத்த இரு கல்வெட்டுக் குறிப்புகள் (பொ.ஆ. 919 இலும் 921 இலும் அறிவிக்கப்பட்டவை) மூலம் சோழர் கால உள்ளாட்சித் தேர்தல் முறையை அறிய முடிகிறது. இவை ஒரு பிராமணக் குடியிருப்புக்கான பணிகளை மேற்கொள்வதற்கு வெவ்வேறு குழுக்களைச் சேர்ந்த உறுப்பினரைத் தேர்வு செய்யும் முறையைத் தெரிவிக்கின்றன. அதன்படி, கிராமம் 30 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவுக்கும் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்வானவர்கள் அனைவரும் சேர்ந்து வெவ்வேறு குழுக்களை உருவாக்குவார்கள். அவை பொதுப்பணிக்குழு, குளங்களுக்கான குழு, தோட்டங்களுக்கான குழு, பஞ்ச நிவாரணக் குழு, தங்கம் தொடர்பான குழு ஆகியவாகும்.

உறுப்பினராகப் போட்டியிடுவோரின் தகுதிகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆண்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும். போட்டியாளர் 35 வயதுக்கு மேலும் 75 வயதுக்குக் கீழும் உள்ளவராக இருக்க வேண்டும். சொத்தும் சொந்த வீடும் உடையவராக இருக்க வேண்டும். வேதங்களிலும் பாஷ்யங்களிலும்

தேர்ந்தவராக இருக்க வேண்டும்.

ஒரு பிரிவில் போட்டியிடக்கூடிய அனைவருடைய பெயர்களும் தனித்தனிப் பனையோலைகளில் எழுதப்பட்டு, அவை ஒரு பானையில் இடப்படும் (குடவோலை), சபையில் வயதில் மூத்தவர் ஒரு சிறுவனை அழைத்து, பானையிலிருந்து ஓர் ஓலையை எடுக்கும்படி கூறுவார். அந்தச் சிறுவன் எடுக்கும் ஓலையில் உள்ள பெயருக்குரியவரே உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டவர் ஆவார்.

**பொருளாதாரம்:**
**வேளாண்மை:**

சோழர் காலகட்டத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய வளர்ச்சிகளில் ஒன்று, வேளாண்மை விரிவாக்கம் ஆகும். வளமான ஆற்றுச் சமவெளி பகுதிகளில் மக்கள் குடியேறினர். ஆறுகள் இல்லாத பகுதிகளிலும் குளம், கிணறு, கால்வாய் ஆகிய நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. இதனால் உணவு தானிய உற்பத்தி உபரிநிலையை எட்டியது. இதனால் சமூக ஏற்றத்தாழ்வுகள் உருவாகின. வேளாண்மையில் கிடைத்த கூடுதல் வருவாய் நில வரியாகச் சோழ அரசுக்கு வலுவூட்டியது. நில வருவாய் நிர்வாகத்துக்கெனத் தனியாக ஒரு துறை 'புறவுவரித்திணைக்களம்' என்ற பெயரில் இயங்கியது. அதன் தலைவர் 'புறவு வரித்திணைக்கள நாயகம்' எனப்பட்டார்.

**நில வருவாயும் நில அளவையும்:**

வரிகளை மதிப்பிடுவதற்காகச் சோழர் விரிவான முறையில் நில அளவை செய்வதிலும் தீர்வை விதிப்பதிலும் ஈடுபட்டார்கள். முதலாம் இராஜராஜன் (1001), முதலாம் குலேத்துங்கன் (1086), மூன்றாம் குலோத்துங்கன் (1226) ஆகிய சோழ அரசர்கள் நிலங்களை வகைப்படுத்தி, அளவீடு செய்து அதற்கேற்றவாறு வரிகளை விதித்தனர். நில அளவீடு பணியில் ஈடுபட்டவர்கள் 'நாடு வகை செய்கிற' என்று குறிப்பிடப்பட்டார்கள். இவர் நில உடமைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களே ஆவர். நில அளவீடு செய்ய குழி, மா, வெளி, பட்டி, பாடகம் முதலிய அலகுகள் வழக்கில் இருந்தன. பெரும்பாலும் வரிகள் பொருள்களாகவே வசூலிக்கப்பட்டன. இறை, காணிகடன், இறை கட்டின காணிகடன், கடமை உள்ளிட்ட பல வரிகள் விதிக்கப்பட்டன. அவற்றில் முக்கியமான ஒரு வரி குடிமை வரி ஆகும். நிலத்தைக் குத்தகைக்குப் பெற்று வேளாண்மை செய்தவர்கள் அரசுக்கும் நில உடமையாளர்களுக்கும் செலுத்திய வரி குடிமை வரி எனப்படும். இந்நில உடமையாளர்கள் உடையான், அரையன், கிழவர் போன்ற மரியாதைக்குரிய பட்டங்களைப் பெற்றிருந்தனர். நிலத்தின் வளம், நில உடைமையாளரின் சமூக மதிப்பு ஆகியவற்றைப் பொறுத்து வரி நிர்ணயிக்கப்பட்டது. அரசரும் உள்ளூர்த்தலைவர்களும் 'ஓப்படி' என்ற வரியை வசூலித்தனர். கோயில்களுக்கும் பிராமணர்களுக்கும் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. விளைபொருளாகச் செலுத்தப்பட்ட வரி 'இறை கட்டின நெல்லு' எனப்பட்டது. இவ்வரிகள் அனைத்தும் பெரும்பாலும் காவிரிசமவெளிப் பகுதியில் தான் நடைமுறையில் இருந்தன. ஏனைய தொலைதூரப் பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஊர் மட்டத்தில் வரிகளை வசூலித்து, அரசுக்குச் செலுத்தும் பொறுப்பு ஊராரின் பொறுப்பு ஆகும். நாடு மட்டத்தில் நாட்டார் இப்பொறுப்பை நிறைவேற்றினர்.

வரியாக வசூலிக்கப்பட்ட நெல் ‘களம்’ என்ற அலகின் அடிப்படையில் வசூலிக்கப்பட்டது. ஒரு களம் என்பது 28 கிலோ ஆகும். முதலாம் ராஜராஜன் வரி வசூலை முறைப்படுத்தினார். ஒரு வேலி (6.5 ஏக்கர்) நிலத்திற்கு 100 களம் வரியாக வசூலிக்கப்பட்டது. வேலியின் அளவு என்பது மண்வளம், போகங்கள் ஆகியவற்றைப் பொருத்து மாறுபடுகிறது.

**பாசனம்:**

சோழர் நடைமுறையில் இருந்த நீர் பாசன முறையை மேம்படுத்தும் வழிமுறைகளை மேற்கொண்டார்கள். சோழ நாடு வேளாண்மை மூலம் அதிக வருவாய் ஈட்டும் அரசாக இருந்ததால், நீராதாரங்களை நிர்வகிப்பதில் அதிகக் கவனத்தைச் செலுத்தியது. வடி, வாய்க்கால் எனற் குறுக்கு மறுக்கான கால்வாய்கள் மழைநீரைச் சேமித்து வைப்பதற்குக் காவிரி வடிநிலப்பகுதியில் பயன்பட்ட மரபுவழி முறை. ‘வடி’ என்பது நீர் வடக்குத் தெற்காக ஓடுவதாகும். ‘வாய்க்கால்’ என்றால் கிழக்கு மேற்காக ஓடுவதாகும். வடி என்பது வடிகாலாக நீரை வெளியேற்றுவதையும், வாய்க்கால் என்பது நீரைக் கொண்டுவருவதையும் குறிக்கும். ஒரு விளைநிலைத்துக்கு வாய்க்கால் வழியே வரும் நீர் வடிக்குத் திருப்பப்பட்டு, மற்றொரு வாய்க்காலுக்குச் செல்லும். மழைநீர் கால்வாய் என்பது இயற்கையாக உருவாவதாகும். பல பாசனக்கால்வாய்கள் இத்தகைய இயற்கையான கால்வாய்களை மாற்றியமைத்துக் கொண்டு உருவாக்கப்பட்டவைதான். இவ்வாறு சேமிக்கப்படும் மழை நீர் வடி வழியாகவும்

கங்கை கொண்ட சோழபுரத்தில் இராஜேந்திர சோழன் மேற்கொண்ட பாசனப்பணி குறிப்பித்தக்கது. அங்குள்ள ஏரியில் வெள்ளம் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் 16 மைல் நீளமுள்ள ஓர் உறுதியான கட்டுமானத்தை அவர் எழுப்பியுள்ளார். அதை இராஜேந்திர சோழன் “ஜலமய ஜெயஸ்தம்பம்“ என்று குறிப்பிடுகிறார். அதற்கு, “நீரில் கிடைத்த வெற்றியின் நினைவாக எழுப்பிய தூண்“ என்று பொருள். 100 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த இடத்துக்கு வந்த அரேபிய வரலாற்றாசிரியரான அல்பெருனி இக்கட்டுமான அமைப்பைக் கண்டு வியந்தார். “எங்கள் மக்கள் அதனைக் கண்டு வியப்படைவார்கள். ஆனால், அதனை அவர்களால் விவரிக்க இயலாது. அது போன்ற ஒன்றை அவர்களால் கட்டவும் முடியாது” என்று அல்பெரூனி பதிவு செய்துள்ளார். சான்று: ஜவஹர்லால் நேரு (Glimpses of world History)

வாய்க்கால் வழியாகவும் சுற்றுமுறையில் பயன்படுத்தப்பட்டது. இந்த அமைப்புமுறை அனைத்து நிலங்களுக்கும் நீர் சீராகச் செல்வதற்கு உதவியது. பல கால்வாய்களுக்கு அரசர்கள், அரசிகள், கடவுளரின் பெயர்கள் சூட்டப்பட்டிருந்தன. எடுத்துக்காட்டாக, உத்தமச் சோழ வாய்க்கால், பஞ்சவன் மாதேவி வாய்க்கால், கணபதி வாய்க்கால் போன்றவற்றைக் கூறலாம். ஊர் வாய்க்கால் என்பது நில உரிமையாளர்கள் பலரால் கூட்டாகப் பயன்படுத்தப்பட்டது. நாடு வாய்க்கால் என்பதே நாட்டு வாய்க்கால் எனப்பட்டது. சுழற்சி முறையில் நீரை விடுவது வழக்கில் இருந்தது. சோழர் கல்வெட்டுக் குறிப்புகள் சில பெரிய பாசன ஏரிகளைக் குறிப்பிடுகின்றன. சோழ வாரிதி, கலியநேரி, பல்லவர்களால் உருவாக்கப்பட்ட வைரமேகத் தடாகம், பாகூர் பெரிய ஏரி, இராஜேந்திர சோழ பேரேரி போன்றவை சில எடுத்துக்காட்டுகள், ஏரிகளை அனைத்து பருவங்களிலும் பராமரிக்கும் வகையிலும், மராமத்து பணிகளில் ஈடுபடும் வகையிலும் மக்கள் ஊதியமில்லா

உழைப்பைத் தரும் வழக்கம் இருந்தது. வெட்டி, அமஞ்சி ஆகிய வடிவங்களில் ஊதியமில்லா உழைப்பு செயல்படுத்தப்பட்டது.

**நீர் மேலாண்மை:**

பல வகையான நீர் உரிமைகள் நிலவின. ஏரிகளில் இருந்தும், கிணறுகளில் இருந்தும் பெறப்படும் நீரின் பங்கினை இந்த உரிமைகள் முறைப்படுத்தின. கால்வாய்களை ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல், பாசன அமைப்பைப் பழுதுபார்த்தல் ஆகிய பொறுப்புகளும் இந்த உரிமைகளில் அடக்கம். நீரைப் பங்கீடு செய்வது "நிற்கின்றவாறு" (பங்கீடு செய்யப்பட்டபடியான நீரின் அளவு) என்று குறிக்கப்பட்டது. குமிழ் (மதகு), தலைவாய் (தலைமடை) ஆகியன வழியாக நீர் திறந்துவிடப்பட்டது. நீர் உரிமைகளை மீறுவதும் பிரம்மதேயங்களுக்குக் கொடையளிக்கப்பட்ட நீராதாரங்களை ஆக்கிரமிப்பதும் அரசுக்கு எதிரான செயல்கள் என்று அரசு ஆணைகள் எச்சரித்தன. ஊருக்குப் பொதுவான குளம் "எங்கள் குளம்", என்று அழைக்கப்பட்டது. நன்கொடையாகவும் மானியமாகவும் நடைபெற்ற நிலப்பரிமாற்றங்களில் நீர் மீதான உரிமைகளும் இணைக்கப்பட்டிருந்தன.

சோழர்காலத்தில், கிராம சபைகள், பாசனக்குளங்களைப் பழுதுபார்க்க ஏரி ஆயம் என்ற வரி வசூலிக்கப்பட்டது. சில சமயங்களில் அரையன் போன்ற உள்ளூர் தலைவர்கள் புயலில் சேதமடைந்த குளங்களைப் பழுதுபார்த்துப் புதுப்பித்தனர். கிராம மக்களும் கோயில்களும் குளத்து நீரைப் பகிர்ந்துகொண்டதை நிகழ்வுகளும் நடந்துள்ளன. குளங்களிலும் ஆறுகளிலும் இருந்து மதகு அல்லது தலைமடை வழியாக நீரைத் திறந்துவிடுவதற்குத் தலைவாயா, தலைவாய்ச் சான்றார், ஏரி அரையர்கள் போன்ற சிறப்புக் குழுக்கள் இருந்துள்ளன. குளத்துக்குப் பொறுப்பான மக்கள் குழு குளத்தார் எனப்பட்டது. பிற்காலத்தில், கோயில்கள் பாசன ஆதாரங்களை நிர்வகிக்கும் பொறுப்புகள் கோயில்களுக்கு வழங்கப்பட்டன.

**சமூகமும் அதன் கட்டமைப்பும்:**

சோழர் காலச் சமூகம் பெருமளவில் வேளாண்மையைச் சார்ந்திருந்ததால், நிலம் வைத்திருப்பது சமூக மதிப்பையும் அதிகாரப் படிநிலையையும் நிர்ணயிக்கும் ஒரு முக்கியக் காரணியாக விளங்கியது. பிரம்மதேய குடியிருப்புகளில் உயர்தகுதி நிலையில் இருந்த நில உடமையாளர்கள் 'பிரம்மதேய – கிழவர்' என்று அழைக்கப்பட்டனர். இவர்களுக்கு நில வரியில் இருந்துவிலங்கு அளிக்கப்பட்டது இதைத் தொடர்ந்து அங்கிருந்த உள்ளூர் விவசாயிகள் 'குடிநீக்கம்' (குடிநீக்கி) செய்து இடம்பெயரச் செய்யப்பட்னர். நிலக்கொடை அளிக்கப்பட்ட கோயில்கள் 'தேவதானம்'' என்று அழைக்கப்பட்டன. இவற்றுக்கும் பிரம்மதேயம் போன்றே வரிவிலக்கு வழங்கப்பட்டன. இக்காலகட்டத்தில் கோயில்களே பல்வேறு செயல்பாடுகளின் இணைப்பு மையமாக மாறியிருந்தன.

சமூகப்படிநிலையின் அடுத்த இடத்தில் வேளாண்வகை கிராமங்களைச் சேர்ந்த சில உடமையாளர்கள் இடம் பெற்றனர். இவர்களின் நிலங்களிலும் பிராமணர்களின் நிலங்களிலும் 'உழுகுடி' என்ற குத்தகைதாரர்கள் வேளாண் வேலைகளை மேற்கொண்டனர், இவர்களுக்குச் சொந்தமாக நிலங்கள் இல்லை. நில உடமையாளர்கள் விளைச்சலில் மேல்வாரத்தையும் (அதிக பங்கு) உழுகுடிகள் கீழ்வாரத்தையும் (குறைவான பங்கு) எடுத்துக்கொண்டனர். சமூகப்படி நிலையில் அடிமட்டத்தில் உழைப்பாளிகளும் (பணிசெய் மக்கள்) அடிமைகளும் இருந்தார்கள்.

இந்த வேளாண் சமூகத்துக்கு வெளியே ஆயுதம் தரித்த வீரர்களும் கைவினைஞர்களும் வணிகர்களும் இருந்தனர். மக்கள்தொகையில் குறிப்பிடத்தக்க அளவில் இருந்திருக்கக்கூடிய கால்நடை வளர்ப்போர் குறித்துச் சில ஆவணங்கள் கூறுகின்றன. அக்காலத்தில் பழங்குடிகளும், காட்டில் வசித்த மக்களும் இருந்துள்ளனர். ஆனால், அவர்கள் குறித்து நமது அறிதல் குறைவானதாகும்.

**மதம்:**

சிவன், விஷ்ணு முதலான புராணக் கடவுள்கள் சோழர் காலத்தில் பிரபலம் அடைந்தனர். இக்கடவுள்களுக்காக அதிக எண்ணிக்கையில் புதிய கோயில்கள் கட்டப்பட்டன. இக்கோயில்களுக்குப் பெருமளவில் நிலக் கொடைகள் வழங்கப்பட்டன. பெருமளவிலான மக்கள் இக்கோயில்களின் செல்வாக்கின் கீழ் கொண்டுவரப்பட்டவர்.

சோழ அரசர்கள் தீவிர சைவர்கள் ஆவர். முதலாம் பராந்தகனும் உத்தமச் சோழனும் (907 – 970) சைவ சமயத்தை வளர்க்க நிதியுதவியும் நிலக்கொடையும் அளித்தார்கள். தஞ்சை பிரகதீசுவரர் (பெருவுடையார்) கோயிலில் உள்ள ஒரு சுவரோவியத்தில் முதலாம் இராஜராஜனும் அவருடைய மனைவியரும் சிவனை வணங்குவதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. சிவபாத சேகரன் என்பது அவருக்குரிய பட்டங்களுள் ஒன்று. சிவனுடைய பாதங்களை இறுகப் பற்றியவன் என்பது இதற்குப் பொருள்.

முதன்மைக் கடவுளான சிவன் இரு வடிவங்களில் வணங்கப்பட்டார். இக்கால கட்டத்தில், மிகவும் மேம்பட்ட தத்துவமாகச் சைவ சித்தாந்தம் உருவானது. இத்தத்துவத்தின் அடிப்படை நூலான சிவஞானபோதம் மெய்கண்டரால் இயற்றப்பட்டது. பிற்காலத்தில் பல சைவ மடங்கள் தோன்றி இத்தத்துவத்தை வளர்த்தன.

லிங்கோத்பவர் என்ற குறியீட்டு வடிவத்திலும் நடராஜர் என்ற மனித வடிவத்திலும் சிவ வழிபாடு நடைபெற்றது. காவிரி சமவெளியில் அமைந்த இக்கோயில் மையங்களைக் கொண்டு ஒருநில வரைபடம் தயாரித்தால், அது, இடம், காலம் தொடர்பான ஓர் வேளாண் - அரசியல் புவியியல் வரைபடத்தை நமக்கு வழங்கும்.

சிற்பங்கள், ஓவியங்களில் ‘திரிபுராந்தகன்’ (அசுரர்களின் மூன்று மாய நகரங்களை அழித்தவராகப் புராணங்களில் கூறப்படுபவர்) என்னும் வடிவத்தில் சிவன் மீண்டும், மீண்டும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவது, அவருக்குப் போர் வீரருக்குரிய ஒரு கூறினை வழங்கியது. இதன் மூலம் அரசர் தமது அரசப் பதவிக்குச் சட்ட அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டார். நடராஜன் அல்லது ஆடல் வல்லான் (நடனங்களின் அரசர்) ஆகிய வடிவங்களிலும் சிவன் சித்தரிக்கப்பட்டார். இது, நாயன்மார்கள் எழுதிய பாடல்களோடு இணைந்து தமிழ் இசை, நடனம், நாடகம் ஆகியவற்றின் மையக் கருவானது. சிவனைப் போற்றிப் பாடிய இப்பாடல்கள் அவரின் திருவிளையாடல்களை சித்தரிக்கின்றது. இவை சமூகத்தின் பல பிரிவுகளைச் சார்ந்த மக்களை ஈர்ப்பதாக அமைந்தன.

நம்பியாண்டார் நம்பி சைவ சமய நூல்களை மீட்டெடுத்து, திருமுறை என்ற பெயரில் தொகுத்து, வரிசைப்படுத்தினார். கோயில்களில் தினமும் திருமுறைகளை ஓதுவதற்கு ஓதுவார், பதிகம் பாடுவோர் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டனர். பாடல்களைப் பாடுவோர் ‘விண்ணப்பம் செய்வோர்’’ என்று அழைக்கப்பட்டனர்.

இசைக்கருவிகளை இசைப்பவர்களும் நியமனம் செய்யப்பட்டனர். கடவுளுக்குத் தொண்டு செய்ய பெண்கள் அர்ப்பணிக்கப்பட்டனர், அவர்களைப் பயிற்றுவிக்க இசை ஆசிரியர்களும் நடன ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டனர்.

காலப்போக்கில் சைவம் மீதான சோழ அரசர்களின் பக்தி மிகையான ஆர்வமாக மாறியது. இரண்டாம் குலோத்துங்கனிடம் இத்தகைய தன்மையைக் காண முடியும். அரச சமயமான சைவத்துக்கும் வைணவத்துக்கும் இடையே நடந்துவந்த சமய மோதல்களில் வைணவம் ஒதுக்கப்பட்டது. இவை, வைணவத் திருத்தொண்டரான ஸ்ரீ ராமானுஜர் சோழ நாட்டை விட்டு வெளியேறி கர்நாடகத்தில் உள்ள மேல்கோட்டைக்குச் சென்ற நிகழ்வுக்கும் இட்டுச் சென்றது.

**கோயில்கள்:**

சோழர் தமது காலத்தில் அதிக எண்ணிக்கையிலான கோயில்களை எழுப்பி, ஆதரித்தனர். தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம் ஆகிய இடங்களில் அரசர்களால் எழுப்பப்பட்ட கோயில்கள் சோழர்கால கட்டுமானம், ஓவியம், சிற்பம், சிலைவடிவத்தில் ஆகிய கலைகளின் களஞ்சியமாக விளங்குகின்றன. கோயில்கள் சமூகம், பொருளாதாரம், பண்பாடு மற்றும் அரசியல் ஆகிய செயல்பாடுகளின் மையங்களாக மாறின. அரசர், அதிகாரிகள், நடன கலைஞர்கள், இசைக் கலைஞர்கள், பாடகர்கள், அவர்களின் ஆசிரியர்கள், இவர்களுக்குத் தலைமை தாங்கும் மதகுரு என கோயில்களின் அமைப்பு அப்படியே அரச சபையைப் எதிரொளித்தது. இவர்கள் கோயிலின் பிரிக்க முடியாத உறுப்புகளாகவே செயல்பட்டாகள். தொடக்க கட்ட சோழர்கால கோயில்கள் கட்டுமான நோக்கில் எளிமையாக இருந்தன. அரசர்கள் புதைக்கப்படும் இடங்களில் கோயில் (பள்ளிப்படை) எழுப்பும் வழக்கமும் இருந்தது,

**சமூக நிறுவனமாகக் கோயில்:**

சோழர் காலத்தில் கோயில்கள் சமூகத் திருவிழாக்களுக்கான ஒரு களமாக மாறி சமூக நிறுவனங்களாக இயங்கின. சமூகம், அரசியல், பொருளாதாரம், பண்பாடு நடவடிக்கைகளுக்கான மையங்களாகக் கோயில்கள் விளங்கின. கோயிரமர், கோயில் கணக்கு (கோயில் கணக்காளர்) தேவ – கன்னி (கடவுளின் பிரதிநிதி) ஸ்ரீ வைஷ்ணவர், கண்டேசர் (கோயில் மேலாளர்) மற்றும் பிறர் முதல்நிலை கோயில் அதிகாரிகள் ஆவர். கல்வி, நடனம், இசை, ஓவியம், நாடகம் ஆகியவற்றின் வளர்ச்சியை அவர்கள் ஊக்குவித்தனர். முதலாம் இராஜராஜனின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் இராஜராஜ நாடகம் என்ற நாடக நிகழ்ச்சி தஞ்சாவூர் கோயிலில் நிகழ்த்தப்பட்டிருக்கிற சித்திரைத் திருவிழா, கார்த்திகை, ஐப்பசி விழா ஆகிய விழாக்கள் கொண்டாடப்பட்டிருக்கின்றன. கோயில்களில் பாடப்பட்ட வழிபாட்டுப் பாடல்கள் வாய்மொழிக் கல்வியை வளர்த்ததாகக் கூறப்படுகிறது. குடக்கூத்து, சாக்கைக்கூத்து போன்ற மரபு நடனங்கள் சிற்ப ஓவிய வடிவங்களாகக் கீழ்ப்பழுவூர், திருவொற்றியூர் கோயில்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர் பெரிய கோயிலில் நிருத்யம், கர்ணம் போன்ற நடன நிலைகள் சிற்ப வடிவில் காட்டப்பட்டுள்ளன. தமிழ் மரபு இசைக்கருவிகளும் இதேபோல் சித்தரிக்கப்பட்டுள்ளன.

மேய்ச்சலைத் தொழிலாகக் கொண்ட மக்களும் தங்கள் பக்தியை வெளிப்படுத்தும் விதமாகக் கோயிகளின் அணையா விளக்குகளைப் பராமரிப்பதற்குக் கால்நடைகளைக் கொடையாக வழங்கினர். அவர்களது கொடைகள் பதிவு செய்யப்பட்டதன் மூலம் அம்மக்களின் பெயர்களும் அரச

கோயில்களின் கல்வெட்டுகளில் இடம்பெற்றன. இதன் மூலம் அவர்கள் அரச குடும்பத்தின் நெருக்கத்தினைப் பெற்றனர். எண்ணெய் ஆட்டுபவர்கள் சங்கர பாடியார் என அழைக்கப்பட்டனர். இவர்கள் கோயில்களுக்கு எண்ணெய் வழங்கினர். இதன் மூலம் கோயில்களின் அன்றாட நிகழ்வுகளின் அங்கமாயினர். பஞ்ச காலத்தில் இவர்களில் சிலர் தங்களைத் தாமே கோயில் அடிமைகளாக விற்றுக்கொண்டனர்.

கடன் வழங்குதல், அறக்கொடைகளையும், நன்கொடைகளையும் வழங்குதல், பெறுதல் ஆகிய செயல்பாடுகளில் ஈடுபட்டதால் கோயில்கள் வங்கிகள் போன்று இயங்கின. வேதம், இசை, கலைகள் ஆகியவற்றில் பயிற்சி அளித்ததால் கோயில் ஒரு கல்வி நிறுவனமாகவும் விளங்கியது. சிற்ப வேலைகளும் உலோக வேலைகளும் ஊக்குவிக்கப்பட்டன. கோயிலின் வரவு செலவுக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டன. தணிக்கையாளர் 'கோயில் கணக்கு' என அழைக்கப்பட்டார்.

**கங்கை கொண்ட சோழபுரம்:**

முதலாம் இராஜேந்திர சோழனின் வட இந்திய வெற்றியின் நினைவாகத் தஞ்சாவூர் பெரிய கோயில் போன்றே கங்கைகொண்ட சோழபுரத்தில் ஒரு கோயிலைக் கட்டினார். இராஜேந்திரன் சோழ கங்கம் என்ற புதிய பாசன ஏரியையும் தலைநகர் அருகே உருவாக்கினார். இது ஜல தம்பம் (நீர்த்தூண்) என அழைக்கப்படுகிறது. கங்கை கொண்ட சோழபுரம் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும் சோழ அரசர்கள் முடிசூட்டும் இடமாகவும் ஆனது.

**பெருவுடையார்(பிரகதீசுவரர்) கோயில்:**

இராஜராஜேஸ்வரம், பிரகதீசுவரர் கோயில் என்று அழைக்கப்படும் தஞ்சாவூர் பெரிய கோயில் கட்டடக்கலை, ஓவியம், சிற்பம், சிலை வடித்தல் ஆகிய கலைகளுக்குத் தன்னிகரற்ற எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இராஜராஜனின் ஆட்சி அதிகாரத்துக்கு இக்கோயில் அழுத்தமான சட்ட அங்கீகாரமாக உள்ளது. இக்கோயிலின் கருவறை மீது அமைக்கப்பட்ட விமானம் 80 டன் எடை கொண்ட ஒரே கல்லால் ஆனது. கருவறையின் வெளிச்சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ள இலட்சுமி, விஷ்ணு, அர்த்தநாரீசுவரர், பிச்சாடனர் (பிச்சை ஏற்கும் கோலத்தில் உள்ள சிவன்) ஆகிய உருவங்கள் சிறப்பு அம்சங்கள் ஆகும். புராணங்களிலும் காவியங்களிலும் காணப்படும் காட்சிகள் சுவரோவியங்களாகவும் குறும் சிற்பங்களாகவும் இக்கோயில் சுவர்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சோழ ஆட்சியாளர்களின் சமயக் கருத்தியலை இவை வெளிப்படுத்துகின்றன. நடனப் பெண்கள், இசைக்கலைஞர்கள், இசை ஆசிரியர்கள் இவை நாடு என்ற பகுதிகளைச் சேர்ந்த பல குடியிருப்புகளிலிருந்து தேர்வு செய்யப்பட்டுக் கோயில்களோடு இணைக்கப்பட்டனர். கோயில்களில் பக்திப்பாடல்களைப் பாடுவதற்காகப் பாடகர்கள் நியமிக்கப்பட்டனர்.

கங்கை கொண்ட சோழபுரம் கோயில் கருவறையின் வெளிப்புறச் சுவர் மாடங்களில் இடம்பெற்றுள்ள அர்த்த நாரீசுவரர், துர்கா, விஷ்ணு, சூரியன், சண்டேச அனுக்கிரக மூர்த்தி ஆகிய கடவுளரின் சிலைகள் சிறப்புமிக்கவை.

**தாராசுரம் கோயில்:**

இரண்டாம் இராஜராஜனால் (1146 – 1172) கட்டப்பட் தாராசுரம் கோயில் சோழர் காலக் கட்டுமானக் கலைக்கு மற்றொரு சிறந்த உதாரணம் ஆகும். இக்கோயிலின் கருவறைச்சுவரின் தளத்தில் 'பெரிய புராண' நிகழ்வுகள் குறுஞ்சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. நாயன்மார்களில் முதல் நால்வரில் ஒருவரான சுந்தரரின் கதையைச் சித்தரிக்கும் சுவரோவியமும் இங்குள்ளது. அரசு நிர்வாகத்தில் சேக்கிழார் செல்வாக்குப் பெற்றிருந்ததை இந்த ஓவியம் ஏற்பளிப்பு செய்வதாக உள்ளது.

**வணிகம்:**

வேளாண் உற்பத்தி அதிகரிப்புடன் கைவினைத் தொழில்கள் நடவடிக்கைகளாலும் உற்பத்திப் பொருள் அதிகரித்து, பண்டமாற்று முறை வணிக வளர்ச்சிக்கு இட்டுச்சென்றது. இந்த வணிக நடவடிக்கைகளில், தென் இந்தியாவின் தொடக்க காலத்தில் அறிந்திராத விலை, லாபம், சந்தை போன்ற கருத்தாக்கங்கள் இப்போது ஈடுபடுத்தப்பட்டன. அஞ்சுவண்ணத்தார், மணிக்கிராமத்தார் ஆகிய இரு வணிகக்குழுக்கள் பற்றி அறியமுடிகின்றது. அஞ்சுவண்ணத்தார் குழு யூதர்கள், கிறிஸ்தவர்கள், இசுலாமியர்கள் உள்ளிட்ட மேற்கு ஆசியர்களைக் கொண்டிருந்தது. இவர்கள் கடல்வழி வணிகர்கள் ஆவர். மேற்குக்கடற்கரையின் துறைமுக நகரங்களில் இவர்கள் குடியேறியிருந்தார்கள். உள்நாட்டு வணிகம் செய்தவர்கள் மணிக்கிராமத்தார் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் கொடும்பாளூர், உறையூர், கோவில்பட்டி, பிரான்மலை போன்ற நாட்டின் உட்புற நகரங்களில் வசித்தனர். காலப்போக்கில் இந்த இரு வணிகக்குழுவினரும் ஒன்றாகி, ஐநூற்றுவர், திசை ஆயிரத்து ஐநூற்றுவர், வளஞ்சியர் போன்ற பெயர்களுடன் இயங்கினர். இவர்களது தலைமை வணிகக் குழு கர்நாடகத்திலுள்ள ஐஹோல் என்ற இடத்தில் இயங்கியது. ஐநூற்றுவர் வணிகக் குழு மேற்கொண்ட கடல் கடந்த வணிகம் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் நடைபெற்றது. முனைச்சந்தை (புதுக்கோட்டை), மயிலாப்பூர், திருவொற்றியூர் (சென்னை), நாகப்பட்டினம், விசாகப்பட்டினம், கிருஷ்ணப்பட்டினம் (தெற்கு நெல்லூர்) ஆகிய இடங்கள் கடல் வணிகக்குழுக்களின் மையங்களாக மாறின. உள்நாட்டு வணிகம் விலங்குகள், படகுகள் வழியாக மேற்கொள்ளப்பட்டன. சோழநாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள் சந்தனம், அகில், சுவையூட்டும் பொருள்கள், விலையுயர்ந்த ரத்தினங்கள், மிளகு, எண்ணெய், நெல், தானியங்கள், உப்பு ஆகியவை ஆகும். கற்பூரம், செம்பு, தகரம், பாதரசம் போன்ற பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. பாசன நடவடிக்கைகளில் வணிகர்களும் ஆர்வம் கொண்டனர். வளஞ்சியர் குழு வெட்டிய ஐநூற்றுவப்பேரேரி என்ற பாசன ஏரி புதுக்கோட்டையில் உள்ளது.

**கல்விப் புரவலர்களாக சோழர்:**

சோழ அரசர்கள் கல்விப்புரவலர்களாக விளங்கினார்கள். அறக்கட்டைகளை நிறுவி, சமஸ்கிருதக் கல்விக்குப் பெரும் ஆதரவளித்தார்கள். அப்போது எழுத்தறிவு பரவலாக இருந்தது என்பதைக் கல்வெட்டுகள் மூலமட் அறிய முடிகிறது. முதலாம் இராஜேந்திரன் தென் ஆற்காடு பகுதியில் உள்ள எண்ணாயிரத்தில் வேதக் கல்லூரி ஒன்றை நிறுவினார். இக்கல்லூாயீல் 340 மாணவர்கள் பயின்றார்கள். 14 ஆசிரியர்கள் பணியாற்றினர். வேதம், இலக்கணம், வேதாந்தம் ஆகியவை இங்குக் கற்பிக்கப்பட்டன. அவருக்குப் பின்வந்த அரசர்களும் அவரைப் பின்பற்றினார்கள். இதன் விளைவாக, மேலும் இரு சமஸ்கிருதக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. இவை 1048 இல் புதுச்சேரிக்கு அருகிலுள்ள திருபுவனியிலும், 1061 இல்

செங்கல்பட்டுக்கு அருகிலுள்ள திருமுக்கூடலிலும் அமைந்தன. இந்த சமஸ்கிருதக் கல்வி மையங்களில் வேதங்கள், சமஸ்கிருத இலக்கணம், சமயம், தத்துவங்கள் ஆகியவை கற்றுத்தரப்பட்டன. ஆசிரியர்களுக்கான ஊதியமாக அவர்களின் பணிக்காலத்திற்கு ஏற்ப நிலம் வழங்கப்பட்டது. பெரும் இலக்கியப் படைப்புகளான கம்ப இராமாயணம், பெரிய புராணம் ஆகியன இக்காலகட்டத்தைச் சேர்ந்தவை ஆகும்.

### சோழ ஆட்சியின் முடிவு:

ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை சோழ அரச மரபு நிலையாக இருந்தது. 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் அங்குள்ள குடித்தலைமை ஆட்சியாளர்கள் எழுச்சி அடையத் தொடங்கினர். இது மைய அரசின் வலிமையைக் குறைத்தது. அடிக்கடி நிகழ்ந்த பாண்டியரின் தொடர் படையெடுப்புகளால் ஒரு காலத்தில் வலிமை பெற்று விளங்கிய சோழ அரசு, தன்னை விட வலிமையில் குறைந்த ஹொய்சால அரசைச் சார்ந்திருக்குமளவிற்கு வலுவிழந்தது. 1264 இல் பாண்டிய மன்னன் முதலாம் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் சோழர் தலைநகரான கங்கைகொண்ட சோழபுரத்தைக் கைப்பற்றினார். அதற்கு முன்னரே காஞ்சிபுரத்தைத் தெலுங்குச் சோழர் கைப்பற்றியிருந்தனர். எஞ்சிய பகுதிகள் பாண்டியரின் ஆளுகைக்குச் சென்றன. 1279 இல் முதலாம் மாறவர்மன் குலசேகரப்பாண்டியன் கடைசி சோழ அரசரான மூன்றாம் இராஜேந்திர சோழனைத் தோற்கடித்தார். இத்துடன் சோழரின் ஆட்சி முடிவுக்கு வந்து, பாண்டியரின் ஆட்சி தொடங்கியது.

**சம்புவராயர்கள்:**
சம்புவராயர்க்ள ராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகிய சோழ அரசர்களின் ஆட்சிக்காலத்தில் வட ஆற்காடு, செங்கல்பட்டு பகுதிகளில் வலிமை படைத்த குறுநில மன்னர்களாக விளங்கினர். தாங்கள் சார்ந்திருந்த பேரரசுகளுக்கு ஆதரவாக போர்களில் ஈடுபட்டனர். பல சமயங்களில் தங்களுக்குள்ளும் போரிட்டுக் கொண்டனர். பதிமூன்றாம் நூற்றாண்டின் பிற்பதியிலிருந்து பாண்டியர் ஆட்சியின் இறுதி வரை சம்புவராயர்கள் பாலாறு பகுதியில் அரசியல் செல்வாக்குடன் விளங்கினர். அவர்களின் அரசு இராஜ கம்பீர ராஜ்யம் எனப்பட்டது. அதன் தலைநகரம் படைவீட்டில் அமைந்திருந்தது. வீர சோழ சம்புவராயனின் கல்வெட்டுகள் (1314 – 1315) பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. சம்புவராயர்கள் உயர்ந்த பட்டங்களைச் சூட்டிக்கொண்டனர். எடுத்துக்காட்டாக, சகலலோக சக்ரவர்த்தி(ன்) வென்று மண்கொண்ட சம்புவராயன் (1322 – 1323), சகலலோக சக்கர்த்தி(ன்) இராஜநாராயண் சம்புவராயன் (1337 – 1338) ஆகியோரைக் கூறலாம். சகலலோக சக்ரவர்த்தி(ன்) இராஜநாராயணன் சம்புவராயன் 20 ஆண்டுகள் ஆட்சி செய்து, பின்னாட்களில் விஜயநகரத்தின் குமார கம்பணரால் தோற்கடிக்கப்பட்டார். இந்த முறியடிப்புக்குப் பிறகுதான் குமார கம்பணர் தெற்கு நோக்கி மதுரை வரை படையெடுத்துச் சென்றார். குமார கம்பணர் மதுரை சுல்தானைத் தோற்கடித்து முழுவெற்றி பெற்றார்.

## II - பாண்டியர்:

தொடர்ச்சியாக இல்லாவிட்டாலும் நவீன காலத்துக்கு முன்புவரை இந்தியாவின் தென்பகுதியைத் ஆட்சி செய்து வந்த மூவேந்தர் மரபினரில் பாண்டியரும் அடங்குவர். அசோகர் தன் கல்வெட்டுகளில் சோழர், சேரர், பாண்டியர் சத்தியபுத்திர் ஆகியோரைத் தென் இந்தியாவின் ஆட்சியாளர்களாகக்

குறிப்பிடுகிறார். முத்துக்குளித்தல் தொழிலோடு வரலாற்றுப்பூர்வமாக இணைந்த கொற்கை பாண்டியரின் தொடக்க காலத் தலைநகரமாகவும் துறைமுகமாகவும் இருந்தது. பிற்காலத்தில் அவர்கள் மதுரைக்கு இடம் பெயர்ந்தனர்.

மதுரையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பாண்டியர்களின் தொடக்க காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் மடிரை என மதுரை குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் செவ்விலக்கியங்கள் மதுரையைக் கூடல் எனச் சுட்டுகின்றன. இச்சொல்லுக்குக் கூடுகை என்று பொருளாகும். பாண்டிய நாட்டைச் சேர்ந்த புலிமான் கோம்பை என்ற கிராமத்தில் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில் கூடல் என்ற சொல் குறிப்பிடப்பெற்றுள்ளது. பத்துப்பாட்டு நூல்களிலான பட்டினப்பாலையிலும், மதுரைக்காஞ்சியிலும் கூடல் பாண்டியர் தலைநகரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எட்டுத்தொகை நூல்களிலும் இச்சொல் காணப்படுகிறது. வரலாற்றுப் பூர்வமாகவே மதுரை, கூடல் ஆகிய சொல்லாடல்கள் ஒன்றுக்கொன்று மாற்றுச்சொல்லாகவே கையாளப்பட்டு வந்திருக்கின்றன.

**சான்றுகள்:**

சங்ககாலப் பாண்டியர் வரலாறு ஏறத்தாழ பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டு வரை எனக் குறிப்பிடப்படுகிறது. பெருங்கற்கால ஈமப் பொருட்கள் கண்டுபிடிப்பு, தமிழ் பிராமி கல்வெட்டுகள், சங்க இலக்கியப் பாடல்கள் போன்ற பல்வேறு வரலாற்றுச் சான்றுகள் மூலம் சங்க காலப் பாண்டியர் வரலாறு மீட்டுருவாக்கும் செய்யப்பட்டுள்ளது. பொ.ஆ. ஆறாம் நூற்றாண்டின் இறுதிவாக்கில் தென் தமிழ்நாட்டில் பாண்டியர் தம் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தினர். ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தது குறித்த தகவல்களைச் சில செப்பேடுகள் உறுதிப்படுத்துகின்றன. அவற்றுள் நெடுஞ்சடையானின் வேள்விக்குடி மானியம் முக்கியமானதாகும். அரசு ஆணைகள், பாண்டிய அரசர்களின் மரபுவழி வரிசை, வெற்றிகள், அரசர்கள் எழுப்பிய கோயில்கள், உருவாக்கிய பிரம்மதேயங்கள் ஆகியவற்றுக்கு அரசர்கள் வழங்கிய மானியங்கள், அறக்கொடைகள் ஆகியன குறித்து செப்பேடுகள் தெரிவிக்கின்றன. குடைவரைக் கோயில்களை உருவாக்கியவர்கள், பாசன ஏரிகள், கால்வாய்கள் போன்றவற்றை உருவாக்கியவர்கள் குறித்த செய்திகளைக் கல்வெட்டுகள் அளிக்கின்றன. மார்க்கோ போலோ, வாசஃப், இபின் பதூதா போன்ற பயணிகள் எழுதியுள்ள வரலாற்றுக் குறிப்புகள் அக்காலகட்ட அரசியல், சமூக, பண்பாட்டு வளர்ச்சிகள் குறித்து அறிய உதவுகின்றன. மதுரைத் தல வரலாறு, பாண்டியக் கோவை, மதுரை திருப்பணி மாலை ஆகிய இலக்கியங்கள் மதுரையை ஆண்ட பிற்காலப் பாண்டியர் குறித்த செய்திகளை வழங்குகின்றன.

பொ.ஆ. ஏழாம் / எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்த “இறையனார் அகப்பொருளில் “சங்கம்“ என்ற சொல் கலைக்கழகம் என்ற பொருளில் இடம் பெற்றுள்ளது. ஆனால், பல்லவர்களுக்கு முந்தைய இலக்கியங்களில் சங்கம் என்ற சொல் இப்பொருளில் குறிப்பிடவில்லை. திருவிளையாடல் புராணம், பெரிய புராணம் ஆகிய பிந்தைய இடைக்கால நூல்களில் சங்கம் என்ற சொல் கலைக்கழகம் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது.

| |
|---|
| மணிமேகலையை இயற்றிய சீத்தலைச் சாத்தனார் மதுரையைச் சேர்ந்தவர் ஆவார். |

## ஆட்சிப்பகுதி:

பாண்டியரின் ஆட்சிப்பகுதி பாண்டி மண்டலம், தென் மண்டலம், பாண்டி நாடு என்று அழைக்கப்படுகிறது. வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகளால் வளம் பெறும் சில பகுதிகள் நீங்கலாகப் பெரும்பாலும் பாறைகளும் குன்றுகளும் மலைத்தொடர்களும் நிறைந்த பகுதியே பாண்டிய நாடு ஆகும். புதுக்கோட்டை வழியே ஓடும் வெள்ளாறு பாண்டிய நாட்டின் வட எல்லையாகும். இந்தியப் பெருங்கடல் தென் எல்லையாகும். மேற்குத் தொடர்ச்சி மலைகள் மேற்கு எல்லையாகவும் வங்காள விரிகுடா கிழக்கு எல்லையாகவும் அமைந்திருந்தன.

## பாண்டியரின் மறுமலர்ச்சி (600 – 920)

களப்பிரரின் மறைவுக்குப் பின் பாண்டியரின் மறு எழுச்சி ஏற்பட்டதாகத் தெரிகிறது. ஒரு காலத்தில் மழைவாழ் பழங்குடிகளாக இருந்த களப்பிர்கள் விரைவிலேயே சமவெளியில் குடியேறினர். அவர்கள் புத்த, சமண சமயங்களை ஆதரித்தனர். களப்பிரரிடமிருந்து பாண்டியர் பகுதியைக் கடுங்கோன் மீட்டதாகச் செப்பேடுகள் மூலும் அறிய முடிகிறது. அவரைத் தொடர்ந்து இரு அரசர்கள் அடுத்தடுத்து ஆட்சி செய்துள்ளனர். அவர்களில் சேந்தன் என்பவர் போர் முறையில் சிறந்தவராக இருந்துள்ளார். சேரரை வென்றதால் அவர் வானவன் என்ற பட்டம் பெற்றார் எனச் செப்பேடுகள் கூறுகின்றன. அடுத்து வந்த தொடக்க காலப் பாண்டிய அரசர்களில் சிறந்தவரான அரிகேசரி மாறவர்மன் (624 – 674) 642 இல் பதவி ஏற்றார் என்பதை வைகை ஆற்றுப்பகுதி கல்வெட்டுகள் கூறுகின்றன. இவர் முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்ம வர்மன் ஆகியோருக்குச் சம காலத்தவர் ஆவார். அவர் தமது காலத்தைச் சேர்ந்த சேர, சோழ, பல்லவ சிங்கள அரசர்களை வெற்றி கொண்டதாக அக்கல்வெட்டுக் குறிப்புகளும் செப்பேடுகளும கூறுகின்றன. சமணர்களைக் கழுவேற்றிய கூன் பாண்டியனே அரிகேசரி என்று அடையாளம் காணப்படுகிறார்.

சைவத் துறவியான திருஞானசம்பந்தர் அரிகேசரியை சமண மதத்திலிருந்து சைவ மதத்துக்கு மாற்றினார்.

அரிகேசரியைத் தொடர்ந்து கோச்சடையான் ரணதீரனும் (700 – 730), அவருக்குப் பின் மாறவர்மன் ராஜசிம்ஹனும் (730 – 765) ஆட்சி செய்தனர். அவர்களுக்குப் பின் ஜதில பராந்தக நெடுஞ்சடைநன் (முதலாம் வரகுணன்) (756 – 815) ஆட்சிப்பொறுப்பை ஏற்றார். இவரே புகழ்பெற்ற வேள்விக்குடி நிலக்கொடை அளித்தவர் ஆவார். பாண்டிய அரச மரபில் மிகச் சிறந்தவரான இவர் பல்லவர்களையும் சேரர்களையும் வெற்றிகரமாக எதிர்கொண்டார். பாண்டிய அரசைத் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளுக்கு விரிவுபடுத்தினார். பல விஷ்ணு கோயில்களைக் கட்டிய பெருமையும் இவருக்கு உண்டு. இவருக்கு அடுத்த அரசரான ஸ்ரீமாற ஸ்ரீவல்லபர் (815 – 862) இலங்கைக்குப் படையெடுத்து, அங்கு தன் அதிகாரத்தை நிலைநிறுத்தினார். எனினும் பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனிடம் (846 – 869) தோற்றார். அடுத்ததாக ஆட்சிக்கு வந்த இரண்டாம் வரகுணன் திருப்புறம்பியம் போரில் அபராஜித பல்லவனால் (885 – 903) தோற்கடிக்கப்பட்டார். இவருக்கு பின்னர் ஆட்சிக்கு வந்த பராந்தக வீரநாராயணன், இரண்டாம் இராஜசிம்ஹன் ஆகியோரால் முதலாம் பராந்தகனின் தலைமையில் தோன்றிய சோழரின் எழுச்சிக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. முதலாம் பராந்தகனிடம் தோற்ற இரண்டாம் இராஜசிம்ஹன் 920 இல் நாட்டை விட்டே ஓடினார்.

**மீண்டும் பாண்டிய எழுச்சி (1190 – 1310):**

பன்னிரெண்டாம் நூற்றாண்டின் இறுதிக் கால்பகுதியில் ஆதி இராஜேந்திரனின் மறைவுக்குப் பிறகு, சோழ அரசில் வெற்றிடம் ஏற்பட்ட நிலையில் பாண்டியப் பகுதியை நிர்வகித்த ஆளுநரும் வலுவிழந்தார். இதைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட பாண்டியக் குடித்தலைமை மன்னர்கள் தங்களை நிலைநிறுத்திக்கொண்டு தமது சுதந்திர ஆட்சியை நிறுவ முயன்றனர். இரண்டாம் இராஜராஜசோழனுடன் போரிட்ட ஸ்ரீவல்லப பாண்டியன் தன் மகனைப் போரில் பறிகொடுத்தார். ஐந்து பாண்டியக் குறுநில மன்னர்கள் இச்சூழலைப் பயன்படுத்திக்கொண்டு முதலாம் குலோத்துங்கனுடன் (1070 – 1120) போரிட்டார்கள். போரில் அவர்களுக்குத் தோல்வியே கிடைத்தது. 1190 இல் சடையவர்மன் ஸ்ரீவல்லபன் முதலாம்

பாண்டிய நாட்டுக்கு வருகை தந்த வெனீஸிய (இத்தாலி) பயணி மார்க்கோ போலோ நேர்மையான நிர்வாகத்துக்காவும் வெளிநாட்டு வணிகர்களைச் சிறந்த முறையில் நடத்தியதற்காகவும் பாண்டிய அரசரைப் பாராட்டியுள்ளார். உடன்கட்டை ஏறும் வழக்கம், அரசர்கள் பன்பற்றிய பலதார மணமுறை ஆகியவை மார்க்கோ போலோவின் பயணக் குறிப்புகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குலோத்துங்கனுடைய அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு, பாண்டிய நாட்டில் ஆட்சியைத் துவக்கினார். சடையவர்மன் ஸ்ரீவல்லபன் மதுரையில் நடைபெற்ற பட்டம் சூட்டு விழாவில் அரசராக முடிசூடி, செங்கோல் ஏந்தி, அரியாணையில் அமர்ந்தார். இந்த நிகழ்வின் நினைவாகச் சுந்தரசோழபுரம் என்ற வேளாண் குடியிருப்புப் பகுதியைச் சுந்தரசோழசதுர் வேதிமங்கலம் என்று பெயர் மாற்றி இறையிலியாகப் பிராமணர்களுக்கு வழங்கினார்.

சோழரின் வீழ்ச்சிக்குப் பிறகு, பதின்மூன்றாம் நூற்றாண்டில் பாண்டியர் செல்வாக்குமிக்க அரச மரபினராக மாறினார்கள். மதுரை அவர்களின் தலைநகரமாக இருந்தது. காயல் அவர்களுக்கான பெருந்துறைமுகமாக விளங்கியது. வெனிஸைச் சேர்ந்த புகழ்பெற்ற பயணி மார்க்கோ போலே 1288 இலும் 1293 இலுமாக இரு முறை காயலுக்கு வந்துள்ளார். அப்போது காயல் துறைமுகம் முழுவதும் அரேபிய, சீன கப்பல்களால் நிறைந்திருந்ததாகவும் காயல் நகரில் வணிக நடவடிக்கைகள் முழு வீச்சில் நடைபெறுவதாகவும் மார்க்கோ போலோ கூறுகிறார்.

**சடையவர்மன் சுந்தர பாண்டியன்:**

இரண்டாம் பாண்டிய அரசின் சிறப்புமிக்க ஆட்சியாளர் சுந்தரபாண்டியன் (1251 – 1268) ஆவார். அவர் தமிழ்நாடு முழுவதையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்ததுடன், ஆந்திராவில் உள்ள நெல்லூர் வரை தனது அரசியல் அதிகாரத்தைச் செலுத்தினார். இவர் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் என்று அழைக்கப்படுகிறார். அவருடைய ஆட்சிக்காலத்தில் தான் பாண்டிய அரசு வலிமையின் உச்சத்தில் இருந்தது. அப்போது ஹொய்சாலர்கள் அடக்கி வைக்கப்பட்டார்கள். பல கல்வெட்டுக்கள் அவரை மிகவும் உயர்வாகப் போற்றப்படுகின்றன. சுந்தரபாண்டியன் சேர அரசரான மலைநாட்டுத் தலைவரை அடக்கி, தனக்குக் கப்பம் செலுத்த வைத்தார். சோழரின் வீழச்சி மால்வா பகுதியை ஆட்சி செய்த போஜ அரசன் வீர சோமேஸ்வரனுக்குச் சுந்தரபாண்டியனை சவாலுக்கு அழைக்கும் துணிச்சலைக் கொடுத்தது. இருவருக்குமிடையே

கண்ணனூரில் நடந்த போரில் சுந்தர – பாண்டியன் வீர சோமேஸ்வரனைத் வென்று, மால்வா பகுதியைச் சூறையாடினார். சேந்தமங்கலத்தையும் கட்டுக்குள் கொண்டுவந்தார். கடலூரை மையமாகக் கொண்டு வட தமிழகத்தில் வெல்வாக்குடன் ஆட்சி நடத்திய காடவர்களையும் அடக்கிய சுந்தரபாண்டியன் அவர்களைக் கப்பம் செலுத்தப் பணிந்தார். அவர் மேற்குப்பகுதியையும் தற்கால ஆற்காடு பகுதிக்கும் சேலத்துக்கும் இடைப்பட்ட பகுதியையும் கைப்பற்றினார். போரில் காஞ்சிபுரம் அரசனைக் கொன்று அதையும் எடுத்துக்கொண்டார். கொல்லப்பட்ட காஞ்சிபுரம் அரசரின் சகோதாரர் பாண்டிய மன்னருக்கு அடிபணிந்ததன் மூலம் காஞ்சிபுரம் ஆட்சியை கவனித்துக் கொண்டார். கப்பம் செலுத்தவும் சம்மதித்தார். எனினும் அவர் தனி ஒருவராக ஆட்சி செய்யும் வாய்ப்பு மறுக்கப்பட்டது. சுதந்திர பாண்டியன் தன்னுடைய தரப்பினரான விக்கிரம பாண்டியன், வீர பாண்டியன் ஆகிய இருவருடன் சேர்ந்து ஆட்சி புரியும்படி செய்தார். வீரபாண்டியன் ஈழம், கொங்கு, சோழ மண்டலம் (சோழ நாடு) ஆகியவற்றை வெற்றிகொண்டதாக அவர் குறித்த ஓர் ஆவணம் (1253 – 1256) கூறுகிறது.

**மாறவர்மன் குலசேகரன்:**

சுந்தர பாண்டியனுக்குப் பிறகு மாறவர்மன் குலசேகரன் நாற்பது ஆண்டுகள் பாண்டிய நாட்டை வெற்றிகரமாக ஆட்சிபுரிந்தார். அவரது ஆட்சியில் அமைதியும் வளர்ச்சியும் நிலவின. அவர் 1268 இல் அரியணை ஏறி, 1312 வரை ஆட்சி செய்தார். அவருக்கு இரு மகன்கள், மூத்தவர் சுந்தர பாண்யடின்: இளையவர் வீரபாண்டியன், 1302 இல் இளைய மகன் வீரபாண்டியனுக்கு இளவராகப் பட்டம் சூட்டப்பட்டது. இதனால் கோபமடைந்த மூத்த மகன் சுந்தர பாண்டியன் தன் தந்தையைக் கொன்று பதவிக்கு வந்தார். இதைத் தொடர்ந்து மூண்ட உள்நாட்டுப் போரில் வீரபாண்டியன் வென்று ஆட்சியைப் பிடித்தார். சுந்தர பாண்டியன் தில்லிக்குத் தப்பிச் சென்று அலாவுதின் கில்ஜியிடம் அடைக்கலமானார். இந்த நிகழ்வுகளே மாலிக் காபூர் தமிழகப் படையெடுப்புக்கு வழிவகுத்தன.

**மாலிக் காபூர் படையெடுப்பு:**

மாலிக் காபூர் 1311 இல் மதுரையை அடைந்தபோது, அங்கே யாரும் இல்லை, வீரபாண்டியன் ஏற்கனவே தப்பியோடிருந்தார். இந்த மதுரை படையெடுப்பு குறித்து அலாவுதின் கில்ஜியின் அரசவைக் கவிஞர் அமிர் குஸ்ருவின் கணிப்பின் படி, அங்கிருந்து 512 யானைகள், 5,000 குதிரைகள், 500 மூட்டைகளில் வைரம், முத்து, மரகதம், மாணிக்க நகைகள் மாலிக் காபூரால் எடுத்துச் செல்லப்பட்டன எனத் தெரிகிறது. அமிர் குஸ்ரு மிகைப்படுத்தி எழுதக்கூடியவர், இருப்பினும் சொக்கநாதர் குறித்து அலாவுதின் கில்ஜியின் அரசவைக் கவிஞர் அமிர் குஸ்ருவின் கணிப்பின்படி, அங்கிருந்து கோயிலை இடித்து ஏராளமான விலை மதிக்க முடியாத பொருள்களை மாலிக் காபூர் எடுத்துச் சென்றார் என்பது உண்மையே. இச்செல்வத்தைப் பயன்படுத்தி அலாவுதீன் கில்ஜி தனது எதிரிகளை தன் பக்கம் ஈர்த்து தனது பலத்தை அதிகரித்துக் கொண்டார்.

மாலிக் காபூரின் படையெடுப்புக்குப் பிறகு, பாண்டிய அரசின் ஆட்சிப்பொறுப்பு பாண்டிய அரசக் குடும்ப உறுப்பினர்களால் தனித் தனியாகப் பிரித்துக்கொள்ளப்பட்டன. மதுரையில் தில்லி சுல்தானிய அரசுக்குக் கட்டுப்பட்ட ஓர் அரசு உருவாகிறது. இது 1335 வரை தான் நீடித்தது. மதுரையை ஆட்சி செய்த ஆளுநர் ஜலாலுதீன் அஸன் ஷா டெல்லி சுல்தானுக்குக் கட்டுப்படாமல் 1335 இல் மதுரை அரசராகத் தன்னை அறிவித்துக் கொண்டார்.

## அரசு:

பாண்டிய அரசர்கள் தொடர்ந்து மதுரையையே தங்கள் தலைநகராகக் கொண்டார்கள். பாண்டிய அரசர்களைக் கூடல்கோன், கூடல் நகர் காவலன், மதுரபுர பரமேசுவரன் என்று போற்றுவது மரபாக இருந்தது. தொடக்க காலப் பாண்டியருக்கான பட்டங்கள்: பாண்டிய அதியரசன், பாண்டிய மகராசன், மன்னர் மன்னன், அவனிப சேகரன், ஏக வீரன், சகலபுவன சக்கரவர்த்தி போன்றவை ஆகும். பிற்காலப் பாண்டியருக்குச் சமஸ்கிருதத்தில் அமைந்த பட்டங்கள்: கோதண்ட ராமன், கோலாகலன், புவனேகவீரன், கலியுக ராமன் போன்றவை ஆகும். தூய தமிழில் அமைந்த கோலாகலன், புவனேகவீரன், கலியுக ராமன் போன்றவை ஆகும். தூய தமிழில் அமைந்த பட்டங்கள்: செம்பியன், வானவன், தென்னவன் போன்றவை. பாண்டியர் தம்முடன் நெடிய வணிக பண்பாட்டுத் தொடர்பு கொண்டிருந்த அரபு நாடுகளிலிருந்து குதிரைகளை இறக்குமதி செய்தனர். இக்குதிரைகளைக் கொண்டு ராணுவத்தைப் பலப்படுத்திக்கொண்டனர். இதன்மூலம் பாண்டியர் தங்கள் ராணுவ வலிமையைத் தக்கவைத்துக் கொண்டனர்.

## அரண்மனையும் அரியணையும்:

பாண்டியர் அரண்மனை திருமாளிகை, மனபரணன் திருமாளிகை என்று அழைக்கப்பட்டன. அரசர்கள் நீளமான, ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அமரும் இட வசதி கொண்ட அரியணையில் அமர்ந்தபடி நிர்வாகம் செய்தனர். குறுநில மன்னர்கள் மீது அரசர்களின் சட்டபூர்வ மேலாளுமையைக் காட்டும் விதத்திலும் அரியணைகளுக்குப் பெயரிடும் வழக்கம் இருந்தது. அத்தகைய அரியணைகளின் பெயர்கள் முன்னைய தரையன், பாண்டியத்தரையன், கலிங்கத்தரையன் ஆகும். அரசர்கள் அரியணைளில் இருந்தபடிதான் அரசக்கட்டளைகளை வாய்மொழியாகப் பிறப்பித்தார்கள். அவை திருமந்தி, ஓலை என்று அழைக்கப்பட்டன.

## அரசு அதிகாரிகள்:

அதிகாரிகள் குழு அரச கட்டளைகளை நிறைவேற்றியது. முதன்மை அமைச்சர் உத்தர மந்திரி எனப்பட்டார். மாணிக்கவாசகர், குலச்சிறையார், மாறன்கரி போன்ற ஆளுமைகள் பாண்டிய அமைச்சர்களாக இருந்துள்ளனர். அரச தலைமைச் செயலகம் எழுத்துமண்டலம் எனப்பட்டது. அக பரிவார முதலிகள் என்பவர்கள் அரசரின் தனிப்பட்ட உதவியாளர்களாக இருந்தனர். மாறன் எயினம், சாத்தன் கணபதி, ஏனாதி சட்டம், திரதிரன், மூர்த்தி எயினன் போன்றவை உயர்ந்த மதிப்புக்குரிய அரச பதவிகளாக இருந்தன. படைத்தளபதிகளுக்குப் பள்ளி வேலன், பராந்தகன் பள்ளி வேலன், மாறன் ஆதித்தன், தென்னவன் தமிழவேள் ஆகிய பட்டங்கள் சூட்டப்பட்டன.

## அரசியல் பிரிவுகள்:

பாண்டிய மண்டலம் என்பது பல வளநாடுகளைக் கொண்டது. ஒரு வளநாடு பல நாடுகளாகவும் கூற்றங்களாகவும் பிரிக்கப்பட்டது. நாடு, கூற்றம் ஆகியன மங்கலம், நகரம், ஊர், குடி ஆகிய குடியிருப்புகளைக் கொண்டவையாக இருந்தன. பாண்டிய மண்டலத்தில் குளக்கீழ் என்ற ஒரு தனிச்சிறப்பான அரசியல் பிரிவு இருந்தது. பாசன ஏரிக்குக் கீழேயிருக்கும் பகுதி என்று இதற்குப் பொருளாகும். எடுத்துக்காட்டாக, மதுரை நகரம் “மடக்குளக்கீழ் மதுரை“ என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேளாண் நிலங்களின் தன்மைகளை மதிப்பிட்டு, வரிகளை விதிப்பது நாட்டாரின் வேலையாகும். நில அளவீடுகளின் போது 14 மற்றும் 24 அடி நீளமுள்ள கழிகளைப் பயன்படுத்தினர். பின்னர் அவற்றைக் கொடையாக வழங்கினர். சாலபோகம் நிலம் பிராமணர்களுக்கு ஒதுக்கப்பட்டது. இரும்பு உலோக வேலை செய்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலம் "தட்டார் காணி" எனப்பட்டது. மரவேலை செய்பவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலம் "தச்சர் மானியம்" எனப்பட்டது. கல்வி கற்பிக்கும் பிராமணக் குழுவிற்கு வழங்கப்பட்ட நிலம் பட்ட விருத்தி எனப்பட்டது.

**நிர்வாகமும் சமயமும் : 7 முதல் 9 ஆம் நூற்றாண்டு வரை:**

800-ஐச் சேர்ந்த மானூர் (திருநெல்வேலி மாவட்டம்) கல்வெட்டு கிராம நிர்வாகத்தைப் பற்றிய செய்திகளைக் கூறுகிறது. அதன்படி, பாண்டியர் கிராம நிர்வாகமும் கிராமசபைகள், குழுக்கள் எனச் சோழர் ஆட்சியின் உள்ளாட்சி முறை போன்றே அமைந்திருந்தது. குடிமை அதிகாரங்கள், இராணுவ அதிகாரங்கள் ஒரே நபரிடமே இருந்துள்ளன. இக்காலகட்ட பாண்டிய அரசர்கள் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளையும் ஆதரித்தனர். சைவ, வைணவ அடியார்கள் (நாயன்மார்களும் ஆழ்வார்களும்) தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தங்கள் பங்களிப்பை அளித்தனர். இக்காலகட்டம் கடுமையான மத மோதல்கள் நிகழ்ந்த காலகட்டமாகக் குறிக்கப்படுகிறது. பக்தி இயக்கத்தின் எழுச்சி வேற்று மத அறிஞர்களை விவாதங்களுக்கு அழைத்தது. இத்தகைய விவாதங்களில் புத்த, சமண மதங்கள் தோல்வி அடைந்ததாக பக்தி இலக்கியங்கள் கூறுகின்றன.

**பொருளாதாரம்:**
**சமூகம்:**

அரசர்களும் குறுநில மன்னர்களும் பாசன வசதிகளுடன் கூடிய குடியிருப்புகளை உருவாக்கி மங்கலம், சதுர்வேதிமங்கலம் என்ற பெயரிட்டு பிராமணர்களுக்கு வழங்கினர். இக்குடியிருப்புகளுக்கு அரசனின் பெயர்களும் கடவுளரின் பெயர்களும் சூட்டப்பட்டன. செல்வாக்குமிக்க பிராமணர்கள் பிரம்மாதிராஜன், பிரம்மராஜ்யன் ஆகிய உயர் தகுதிநிலை பட்டங்களைக் கொண்டிருந்தனர்.

**வணிகம்:**

இசுலாமியர்களைத் தமிழ் நாட்டுக்குள் முதன் முதலாக வரவழைத்தது மாலிக் காபூரின் படையெடுப்பு அல்ல. ஏழாம் நூற்றாண்டிலேயே தென்னிந்தியாவின் மேற்குக்கடற்கரையில் அரபுக்குடியிருப்புகள் தோன்றிவிட்டன. இதன்மூலம் தங்கள் வணிகத்தை கிழக்குக் கடற்கரையிலிருந்த தமிழர்களுடன் விரிவுபடுத்திக் கொண்டனர். இதன் காரணமாக கிழக்குக் கரையில் இருந்த அரசுகள் இந்த அரபு வணிகர்கள் மீது மிகவும் தாராளமாக கொள்கைகளைத் தளர்த்தி ஆதரவு அளித்துள்ளனர். இதனால் அவ்வணிகர்களுக்குத் துறைமுகக் கட்டணங்கள், சுங்க வரி ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டன. காயல் துறைமுக நகரில், அரபுத்தலைவன் மாலிக்கு இஸ்லாம் ஜமாலுதீன் என்பவரால் ஒரு முகவர் நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் பாண்டியருக்குக் குதிரைகளை இறக்குமதி செய்யும் பணிகளை மேற்கொண்டுள்ளது.

பாண்டியர் கால குதிரை வணிகம் குறித்து வாசா ்.ப் பின்வருமாறு பதிவு

செய்துள்ளார். “காயல் மற்றும் இந்தியாவின் பிற துறைமுகங்களில் ஏறத்தாழ 10,000 குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றில் 1,400 குதிரைகள் ஜமாலுதீனுக்குச் சொந்தமானவை. குதிரையின் சராசரி விலை 220 செம்பொன் தினார்களாகும்”.

நிகமத்தோர், நானாதேவி, திசை ஆயிரத்து ஐநூற்றுவர், ஐநூற்றுவர், மணிக்கிராமத்தார், பதினென் விஷயத்தார் என்று வணிகர்கள் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறார்கள். அவர்களது வணிக குழுக்கள் கொடும்பாளூர், பெரியகுளம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டன. மிளகு, முத்து, விலையுயர்ந்த கற்கள், குதிரைகள், யானைகள், பறவைகள் ஆகியன வணிகத்தில் ஈடுபடுத்தப்பட்டன. பதிமூன்று – பதினான்காம் நூற்றாண்டுகளில் குதிரை வணிகம் விறுவிறுப்பாக நடைபெற்றது. விழாக்கள், போர்களில் பயன்படுத்த குதிரைகள் அதிக அளவில் தேவைப்பட்டதால் பாண்டிய அரசர்கள் குதிரைகளில் அதிக முதலீடு செய்தனர் என்று மார்க்கோ போலோ, வாசா∴ப் ஆகியயோர் குறிப்பிடுகிறார்கள். குதிரை வணிகம் செய்வோர் குதிரைச்செட்டி எனப்பட்டனர். இவர்கள் கடல்வழி வணிகத்திலும் ஈடுபட்டனர். பாண்டியர் காலத்தில் முழு வீச்சில் இயங்கிய துறைமுக நகரம் காயல்பட்டினம் ஆகும். வணிகத்தில் பரிமாற்றத்துக்கான ஊடகமாக தங்கம் விளங்கியதால், தங்க நாயணங்கள் அதிகமாகப் புழக்கத்தில் இருந்தன. அவை காசு, பழங்காசு, அன்றாட நற்பழங்காசு, கனம், கழஞ்சு, பொன் எனப் பல்வேறு பெயர்களில் குறிப்பிடப்பட்டன. வணிகர்களின் கடவுளர் அவர்களுக்கான பட்டப்பெயர்களுடன் கூடிய பெயர்களுடன் அமைந்திருந்தன. எடுத்துக்காட்டாக, ஆயிரத்து ஐநூற்றுவார் உடையார், சொக்கநாயகி அம்மன் போன்ற பெயர்களைக் கூறலாம். சீரான கால இடைவெளியில் நடத்தப்பட்ட பொருட்காட்சிகள் தவளம் எனப்பட்டன. வணிகர்களின் குடியிருப்புப் பகுதி “தெரு எனப்பட்டது.

**பாசனம்:**

பாண்டிய அரசர்கள் பெரும் எண்ணிக்கையிலான பாசன வளங்களை உருவாக்கினர். அவை அரசக் குடும்ப உறுப்பினர்கள் பெயர்களில் அறியப்படுகின்றன. வாசுதேவப்பேரேரி, வீரபாண்டியப்பேரேரி, ஸ்ரீ வல்லபப் பேரேரி, பராக்கிரமப்பாண்டியப்பேரேரி போன்றவை ஆகும். ஏரிகள் திருமால் ஏரி, மாறன் ஏரி, கலியன் ஏரி, காடன் ஏரி என்று பெயரிடப்பட்டன. வைக, தாமிரபரணி ஆகிய ஆறுகளின் இரு கரைகளிலும் அவற்றின் நீரைப் பாசனக் குளங்களுக்குக் கொண்டு செல்லும் கால்வாய்கள் வெட்டப்பட்டன. சேந்தன் மாறன் காலகட்டத்தைச் சேர்ந்த வைகை ஆற்றுப்படுகைக் கல்வெட்டுகளில் அவரால் நிறுவப்பட்ட ஆற்று மதகு குறிப்பிடப்படுகிறது. ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் வெட்டிய ஒரு பெரிய ஏரி இன்றும் பயன்பாட்டில் உள்ளது. வட மாவட்டங்களில் பல்லவர்கள் மேற்கொண்டதைப் போன்றே தென் மாவட்டங்களிலும் பாண்டியர் பாசனத் தொழில் நுட்பங்களை அறிமுகம் செய்தனர். ஏரிகளின் கரைகளை அமைக்கும்போது பண்டைய கட்டுமானக் கலைஞர்கள் கரை மட்டத்தைச் சமமாகப் பராமரிக்க நூல் பயன்படுத்தினர். கரைகளின் உட்பகுதியை வலுவூட்ட கல் அடுக்குளைப் பயன்படுத்தியது பாண்டிய பாசனத் தொழில்நுட்பங்களில் ஒன்றாகும். பிற்காலப் பாண்டியர் காலத்தில் (ஏறத்தாழ 1212) திருவண்ணாமலை கோயில் நிலங்கள் பாசன வசதி பெற, பெண்ணை ஆற்றிலிருந்து வாய்க்கால் அமைத்துத் தந்துள்ளார். வறட்சிப்பகுதியான இராமநாதபுரத்தில் பல ஏரிகள் வெட்டப்பட்டன. இத்தகைய பகுதிகளில் உள்ளாட்சி அமைப்புகள், உள்ளூர் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோர் மேற்பார்வையில் பாசன வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. பாசன நீர்நிலைகளின் பராமரிப்பு பணிகள் பெரும்பாலும் உள்ளாட்சி அமைப்புகளால்

மேற்கொள்ளப்பட்டன. சில சமயங்களில் வணிகர்களும் பாசன ஏரிகளை வெட்டினார்கள்.

இருப்பைக்குடி கிழவன் என்ற உள்ளூர்த்தலைவர் பல ஏரிகளை வெட்டியதுடன், அவற்றைப் பழுதுபார்க்கும் வேலையிலும் ஈடுபட்டார். நில உடமையாளர்கள் பூமிபுத்திரர் எனப்பட்டனர். வரலாற்று நோக்கில் இவர்கள் உள்ளூர் குடிகளாக இருந்ததால், நாட்டு மக்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்களின் சமுதாயக் குழு சித்திர மேழி பெரிய நாட்டார் எனப்பட்டது.

**ஏழுத்தறிவு:**

பாண்டியர் ஆட்சியில் எழுத்தறிவைப் பரப்பும் பணிகள் பல்வேறு வழிகளில் மேற்கொள்ளப்பட்டன. கோயில்களில் பக்திப்பாடல்கள், பாடப் பாடகர்கள் நியமிக்கப்பட்ட செயல்பாடுகளை, எழுத்தறிவை ஊக்குவிக்கும் செயல்பாடுகளாகக் காணமுடியும். அரங்குகளில் நாடகங்கள் இதே நோக்கில் அரங்கேற்றப்பட்டன. சமஸ்கிருதக் கல்வியை ஊக்குவிக்கப் பட்ட விருத்தி, சாலபோகம் ஆகிய பெயர்களில் அறக்கொடைகள் வழங்கப்பட்டன. கடிகை, சாலை, வித்யா ஸ்தானம் ஆகிய நிலையங்களில் பிராமணர்கள் சமஸ்கிருதம் பயின்றனர். பன்னிரெண்டாம் நூற்றாண்டில் மடங்கள் உருவாகி மத ஆர்வத்தில் கல்வி கற்பிக்கும் நோக்கத்துடன் கோயில்களுடன் இணைக்கப்பட்டன. தமிழை வளர்க்கவும் மகாபாரதத்தை மொழிபெயர்க்கவும் ஒரு கலைக்கழகம் அமைக்கப்பட்டதாக ஒரு செப்பேடு கூறுகிறது. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் இயற்றப்பட்ட முக்கியமான இலக்கிய நூல்கள் திருப்பாவை, திருவெம்பாவை, திருவாசகம், திருக்கோவை முதலியன ஆகும்.

**மதம்:**

பாண்டியர் தொடக்கத்தில் சமணர்களாக இருந்து, சைவ மதத்துக்கு மாறியவர்கள் என்று கூறப்படுகிறது. கோயில் கல்வெட்டுகளும் சிற்பங்களும் அதற்குச் சான்று பகர்வதாக உள்ளன. குடவரை-குகை கோயில்கள் இக்கால கட்டத்தில் மதம்- கட்டடக்கலை ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்களின் வெளிப்பாடுகளாகக் காணப்படுகின்றன. இடைக்காலப் பாண்டியரும் பிற்காலப் பாண்டியரும் பல கோயில்களைப் பழுதுபார்த்து, அவற்றுக்குத் தங்கம், நிலம் ஆகியவற்றை நன்கொடையாகக் வழங்கியுள்ளனர். திருவரங்கம், சிதம்பரம் ஆகிய கோயில்களின் கருவறை மீதுள்ள விமானங்கள் தங்கத் தகடுகளால் வேயப்பட்டன. சடையவர்மன் சுந்தர பாண்டியன் திருவரங்கம் கோயிலில் பட்டம் சூட்டினார். அதன் நினைவாக அக்கோவிலுக்கு ஒரு விஷ்ணு சிலையை நன்கொடையாகக் கொடுத்தார். இக்கோயிலின் உட்சுவர்களும் பிற மூன்று விமானங்களும் தங்கத்தகடுகள் பொருத்தப்பட்டவை ஆகும்.

பாண்டியர் வேத நடைமுறைகளுக்கும் தங்கள் ஆதரவை விரிவுபடுத்தினார்கள். பல வேதச் சடங்குகளைச் செய்த பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி சங்க காலத்தைச் சேர்ந்த பாண்டிய அரசர் ஆவார். ஒவ்வொரு பெரிய பாண்டிய அரசரும் அசுவமேத யாகம், ஹிரண்ய கர்பா, வாஜபேய யக்னா ஆகிய சடங்குகளை மேற்கொண்டதாக வேள்விக்குடி செப்பேடும் பிற கல்வெட்டுகளும் கூறுகின்றன. அரசர்கள் சைவத்தையும் வைணவத்தையும் சமமாக நடத்தியதைக் கல்வெட்டுக் குறிப்புகளில் காணப்படும் கடவுள் வாழ்த்துப்பகுதிகள் தெரிவிக்கின்றன. சில அரசர்கள் தீவிர சைவச் சமயத்தவராகவும் இருந்துள்ளனர். எனினும் இரு பிரிவைச் சேர்ந்த கோயில்களும்

ஆதரிக்கப்பட்டன. நிலக்கொடைகள், வரி விலக்கு, புதுப்பிக்கும் பணி, கூடுதலாகக் கோபுரம் கட்டுவது, அதிக இட வசதி உள்ள மண்டபங்களைக் கட்டுவது போன்ற அறக்கொடைகள் மூலம் கோவில்கள் சிறப்பாக ஆதரிக்கப்பட்டன.

**கோயில்கள்:**

பாண்டியர் பல்வேறு மாதிரிகளில் கோயில்கள் கட்டினார்கள். அவை கல்லறைக்கோயில்கள் (சுந்தரபாண்டிசுவரம்), குடைவரைக் கோயில்கள், கட்டமைப்புக் கோயில்கள் ஆகும். இடைக்காலப் பாண்டியர்களும் பிற்காலப் பாண்டியர்களும் புதிதாகக் கோயில்களைக் கட்டவில்லை. மாறாக, புதிய கோபுரங்கள் எழுப்புவது, பிரகார வீதிகள் அமைப்பது, மண்டபங்கள் கட்டுவது ஆகிய விரிவாக்கப் பணிகளில் ஈடுபட்டனர். தொடக்க காலப் பாண்டியர் கோயில்கள் எளிமையாகவும் சிறியதாகவும் இருந்தன. இக்கோயில்களில் சிவன், விஷ்ணு, கொற்றவை, கணேசன், சுப்பிரமணியர், சூரியன், பிரம்மன் ஆகிய கடவுளர் சிலைகள் சிறப்பாக வடிவக்கப்பட்டிருந்தன. பாண்டியர் காலத்தில் மதுரை மீனாட்சியம்மன் கோயில் கூடுதல் அக்கறையுடன் பராமரிக்கப்பட்டது. கூடுதல் கோபுரங்கள், மண்டபங்கள் என கோயில் பரப்பை விரிவாக்கிக் கொண்டேயிருந்தனர்.

பண்டைய பாண்டியர்களால் உருவாக்கப்பட்ட குடைவரைக் கோயில்கள் பிள்ளையார்பட்டி, திருமயம், குன்றக்குடி, திருச்செந்தூர், கழுகுமலை, கன்னியாகுமரி, சித்தன்னவாசல் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. சித்தன்னவாசல், அரிட்டாபட்டி, திருமலைபுரம், ருநெடுங்கரை ஆகிய கோயில்களில் ஓவியங்கள் காணப்படுகின்றன. சித்தன்னவாசல் குகைக்கோயிலில் காணப்பட்ட ஒன்பதாம் நூற்றாண்டு கல்வெட்டு அந்தக் குகை இளம் கௌதமர் என்பவரால் உருவாக்கப்பட்டது என்று கூறுகிறது. அதே காலகட்டத்தைச் சேர்ந்த இன்னொரு கல்வெட்டு ஸ்ரீ மாறன் ஸ்ரீ வல்லபன் இக்கோயிலைப் புதுப்பித்ததார் என்று கூறுகிறது. கோயிலின் சுவர்களிலும் கூரைகளிலும் தூண்களிலும் காணப்படும் ஓவியங்கள் சிறந்த கலைப்படைப்புகளாகும். இந்த ஓவியங்கள் நடனமாடும் பெண், அரசன், அரிசி போன்றோரைச் சித்தரிக்கின்றன. ஒரு குளத்தைச் சித்தரிக்கும் ஓவியத்தில் சில நீர்வாழ் உயிரினங்களும் பூக்களும் பறவைகளும் சில பாலூட்டிகளும் இடம் பெற்றுள்ளன.

இந்தியாவின் கடல் சார்ந்த வரலாறு பாண்டியர்களின் வரலாறு இன்றி முழுமை பெறாது. பாண்டியர்களின் காலத்தில் கிழக்குக்கடற்கரை நெடுகிலும் துறைமுக நகரங்கள் இருந்தன. பாண்டியர் தென்கிழக்கு ஆசிய அரச மரபுகளில் திருமண உறவுகளும் செய்து கொண்டார்கள்.

கடல்வழி வணிக நடவடிக்கைகளில் பாண்டியர் ஓர் அழுத்தமான தடத்தை விட்டுச் சென்றுள்ளனர்.

சிந்தாமணி, மயிலாப்பூர், திருவெற்றியூர், திருவாடானை, மகாபலிபுரம் ஆகியவை சுறுசுறுப்பான கடல் வணிக மையங்களாக இருந்தன என்பதை கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம்.

# 11TH HISTORY
# UNIT – 12
# பாமினி – விஜயநகர அரசுகள்

**அறிமுகம்:**

14 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தில்லி சுல்தானியம் தெற்கே விரிவாக்கத்திற்குத் தயாரான போது தக்காண தென்னிந்தியாவும் நான்கு அரசுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவை தேவகிரியின் யாதவர் (மேற்குத் தக்காணம் / தற்போதைய மகாராஷ்டிர), ஹொய்சாலரின் துவாரசமுத்திரம் (கர்நாடகா), வாரங்கல் பகுதியை சார்ந்த காகதியர், மதுரையைச் சார்ந்த பாண்டியர் ஆகும். 1304, 1310 ஆகிய ஆண்டுகளில் மாலிக் காபூரின் இரு படையெடுப்புகளில் இந்தப் பழைய அரசுகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோற்கடிக்கப்பட்டன; சேர்த்துவைக்கப்பட்டிருந்த தங்கள் செல்வங்களின் பெரும் பகுதியையும் தில்லி சுல்தானியத்தின் படையெடுப்பின் போது இழந்தன. துக்ளக் அரச வம்சம் தனது படைத்தளபதிகளின் மூலம் தென்னிந்தியப் படையெடுப்புகளைத் தொடர்ந்து நடத்தியது. முகம்மது பின் துக்ளக் (1325 – 1351) பரந்த தன் அரசை சிறப்பாக ஆட்சி புரிவதற்கென தலைநகரைக்கூட தேவகிரிக்கு மாற்றினார் (தௌலதாபாத் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது) ஆனால் அம்முயற்சிகள் தோல்வியடைந்து மக்கள் பெருந்துயரத்திற்கு ஆளாயினர். மீண்டும் தன் தலைநகரை தில்லிக்கு மாற்றியபோது அவரின் தென் பகுதி மாகாண ஆளுநர்கள் தங்களை சுதந்திர அரசர்களாக அறிவித்தனர். இதன் காரணமாக 1333 இல் மதுரையில் சுதந்திரமான மதுரை சுல்தானிடம் உருவானது. 1345 இல் வடக்குக் கர்நாடகாவில் ஜாபர்கான் தன்னைச் சுதந்திர அரசராக அறிவித்துக்கொண்டு தன் தலைநகரை தேவகிரியிலிருந்து குல்பர்காவிற்கு மாற்றினார். அவர் பாமன் ஷா என்ற பட்டத்தைச் சூடி பாமினி அரசவம்சத்தைத் (1347 – 1527) தோற்றுவித்தார். இதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பாக 1336 ஆம் ஆண்டு விஜயநகர அரசு சங்கம வம்ச சகோதரர்களான ஹரிஹரர், புக்கர் ஆகியோரால் துங்கபத்ரா நதிக்கரையில் விஜயநகரைத் தலைநகராகக் கொண்டு (தற்போதைய ஹம்பி) தோற்றுவிக்கப்பட்டது. அடுத்த நூற்றாண்டுகளில் இவ்வரசுகள் தங்களுக்குள் வளமான ரெய்ச்சூர் ஆற்றிடைப் பகுதியைக் கட்டுப்படுத்தவும் இவர்களின் இராணுவத்திற்குத் தேவைப்படும் குதிரைகளை இறக்குமதி செய்யவும், மேற்குக் கடற்கரையிலுள்ள கோவா, ஹனோவர் துறைமுகங்களைக் கட்டுப்படுத்தவும் இடைவெளியில்லாமல் கடுமையாகப் போரிட்டனர்.

**ஆதாரங்கள்:**

இக்காலப் பகுதியைப் பற்றி அறிய இலக்கியம், கல்வெட்டு, தொல்பொருள் போன்ற பலவகை ஆதாரங்கள் கிடைக்கின்றன. பாமினி அரசவையிலிருந்த வரலாற்றாசிரியர்கள், பாமினி, விஜயநகர அரசுகளுக்கிடையிலான மோதல்கள் பற்றிப் பாரசீக மொழியில் எழுதிய பல குறிப்புகள் உள்ளன. அவற்றில் சில சார்புத் தன்மையோடு மிகைப்படுத்திய தகவல்களைக் கொண்டிருந்தாலும், அவை போர்கள், அரண்மனைச் சதிகள், இருதரப்புகளை சார்ந்த மக்களின் வாழ்க்கை, துயரங்கள் ஆகியன பற்றிய போர்களைக் கண்ணால் கண்ட சாட்சியங்களைக் கொண்டுள்ளன. கல்வெட்டுகளில் அது போன்ற செய்திகள் இல்லை. விஜயநகர

அரசவையின் ஆதரவில் எழுதப்பட்ட மனுசரிதம், சாளுவவையுதயம் போன்ற இலக்கியங்கள் விஜயநகர அரசின் வம்சாவளி, அரசியல் மற்றும் சமூகம் பற்றிய தகவல்களைத் தருகின்றன. தெலுங்கு மொழியில் எழுதப்பட்ட இலக்கியமான ராயவாசகமு கிருஷ்ணதேவராயரின் கீழ் இருந்த நாயக்க முறை பற்றிய ஆர்வமூட்டக்கூடிய தகவல்களைத் தருகின்றது. 14 முதல் 16 ஆம் நூற்றாண்டு வரை தென்னிந்தியாவிற்கு வந்த பல அயல்நாட்டுப் பயணிகள் தங்கள் பயணங்களைப் பற்றி எழுதியுள்ளனர். அவை அரசியல், சமூகம், பண்பாடு ஆகிய அம்சங்களின் மேல் வெளிச்சம் பாய்ச்சுகின்றன. மொராக்கோ நாட்டைச் சேர்ந்த பயணியான இபன் பதூதா (1333 – 45), பாரசீகப் பயணியான அப்துர் ரசாக் (1443 – 45), ரஷியப் பயணியான நிகிடின் (1470 – 74), போர்த்துகல் நாட்டு வணிகரான டோமிங்கோ பயஸ், இத்தாலி நாட்டின் நூனிஸ் (1520 – 35) ஆகியோரின் குறிப்புகள் குறிப்பிடத் தகுந்த முறையில் அதிகமான செய்திகளை முன்வைக்கின்றன. கன்னடம், தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளிலுள்ள ஆயிரக்கணக்கான கல்வெட்டுகளும் சமஸ்கிருத மொழியிலுள்ள பல செப்புப் பட்டயங்களும் இலக்கியச் சான்றுகள் தரும் செய்திகளோடு மேலதிகச் செய்திகளை வழங்குகின்றன. கோவில்கள், அரண்மனைகள், கோட்டைகள், மசூதிகள் என வளமான தொல்லியல் சான்றுகளும் உள்ளன. நாணயச் சான்றுகளும் அதிக அளவில் கிடைக்கின்றன.

விஜயநகர அரசர்கள் “வராகன்“ என்று குறிப்பிட்டப்பட்ட தங்க நாணயங்களை அதிக எண்ணிக்கையில் வெளியிட்டனர். (இது தமிழில் பொன் என்றும் கன்னடத்தில் ஹொன்னு என்றும் குறிப்பிடப்பட்டது) இந்தத் தங்க நாணயங்கள் வெவ்வேறு இந்து தெய்வங்களின் உருவங்களையும் காளை, யானை, கண்ட பெருண்டா என்ற கற்பனைப் பறவை (இரட்டைக் கழுகு வடிவத்தில் உள்ள இந்த உருவம் தனது அலகிலும் நகத்திலும் யானையைக் கொத்திக்கொண்டிருப்பதாகக் காணப்படுகிறது) ஆகிய விலங்கு உருவங்களையும் தாங்கியுள்ளன. நாணயத்தில் அரசனுடைய பெயர் நகரி அல்லது கன்னட எழுத்து வடிவத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

**பாமினி அரசு**

**அலாவுதீன் ஹசன் பாமன்ஷா (1347 – 1358):**

கிருஷ்ணா, துங்கபத்ரா நதிகளுக்கிடையிலான வளமான ரெய்ச்சூர் பகுதியைக் கைப்பற்றுவதில் பாமினி, விஜயநகர அரசுகளிடையே ஏற்பட்ட போட்டி பாமினி அரசின் தொடக்க கால வரலாற்றைக் குறிப்பதோடு மட்டுமல்லாமல் இரு நூற்றாண்டுகளுக்கு நீடித்த அம்சமாக இருந்தது. வாரங்கல்லின் கிழக்குப் பகுதி மற்றும் ஒரிசா ஆட்சியாளர்களுக்கு எதிராக பாமன்ஷா தன் போராட்டத்தைத் தொடங்கினார். சுமூகமான நிர்வாகத்திற்காக தில்லி சுல்தானியர் முறையைப் பின்பற்றி இவர் தன் ஆட்சிப் பகுதியை நான்கு பிரிவுகளாகப் பிரித்தார் அப்பகுதிகள் தராப்ஸ் எனப்பட்டன. பிரிக்கப்பட்ட நான்கு பகுதிகளுக்கும் ஒவ்வொரு ஆளுநர் நியமிக்கப்பட்டார். அவர்களே அப்பகுதியின் படைகளையும் வழிநடத்தினர். குல்பர்கா, தௌலதாபாத், பீடார், பெரார் ஆகியவை அந்த நான்கு மாகாணங்களாகும் மாகாண ஆளுநர்கள் மாகாண நிர்வாகம், வரி வசூல் போன்றவற்றிற்கு முழுப்பொறுப்பாவர். வலிமையான அரசர்களின் கீழ் நன்கு செயல்பட்ட இம்முறை, திறமை குன்றிய அரசர்களின் காலத்தில் ஆபத்தாக மாறியது. 11 ஆண்டுகள் பாமன்ஷா தன் அரசியல் எதிரிகளை அடக்கி சிறப்பாக ஆட்சி செய்தார். வாரங்கல் மற்றும் ரெட்டி அரசுகளான ராஜமுந்திரி, கொண்ட வீடு ஆகியவற்றிடமிருந்து வருடம்தோறும் கப்பல் பெற அவர் மேற்கொண்ட முயற்சி பல

போர்களுக்கு இட்டுச் சென்றது. அனைத்திலும் அவர் வெற்றிபெற்றார். இவர் தான் பெற்ற வெற்றிகளை நினைவு கூறும் வகையில் தன் நாணயங்களில் தன்னுடைய பெயரை இரண்டாம் அலெக்சாண்டர் என்று பொறித்துக் கொண்டார்.

**முதலாம் முகமது (1358 – 1375):**

பாமன்ஷாவிற்குப் பின் ஆட்சிக்கு வந்தவர் முதலாம் முகம்மது. விஜயநகர அடசுடன் நீண்டகாலப் போர்களை அவர் மேற்கொண்டார். அவற்றில் பல ரெய்ச்சூர் ஆற்றிடைப் பகுதியோடு தொடர்புடையதாகும். இருதரப்பிலும் பலத்த உயிர் சேதம் ஏற்பட்டாலும் யாரும் அப்பகுதியை முழுமையாக கட்டுப்படுத்த இயலவில்லை. இவர் மேற்கொண்ட இரண்டு கடுமையான போர்களால் பலன் ஏதும் இல்லை. 1363 இல் வாரங்கல் மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றினார். வாரங்கல் போர் நஷ்டஈட்டை வாரி வழங்கியது. கோல்கொண்டா கோட்டை அவர் வசமானது. அங்கிருந்த கருவூலங்கள், ரத்தினக்கற்கள் பாமினி அரசின் வசமாயின. அங்கிருந்த ரத்தினச் சிம்மாசனம் பாமினி அரசின் சிம்மாசனமாயிற்று.

ஆகாய நீல வண்ணத்திலுள்ள ரத்தினக்கற்கள் ஓரளவு விலை மதிப்புள்ள கற்களாகும். இம்மாணிக்கக் கற்களினால் இழக்கப்பட்ட அரியணை பாரசீக அரசர்களின் ஒரு சிம்மாசனமாக இருந்தது என பிரதௌசியின் ஷாநாமா குறிக்கின்றது.

முதலாம் முகமது சிறந்த அரசு முறை நிர்வாகத்தைப் பின்பற்றினார். தில்லி சுல்தானிய அரச முறையைப் பின்பற்றிச் சிறப்பாக இவர் செய்த நிர்வாக முறை பிற்காலத்தில் மராட்டிய ஆட்சியாளர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தது. அவர் எட்டு அமைச்சர்கள் கொண்ட குழுவை ஏற்படுத்தினார். அதன் படி

1. வகில் - உஸ்-சுல்தானா: படைத்தலைவர், அரசருக்கு அடுத்த நிலையில் உள்ளவர்.
2. வசீர் - குல்: மற்ற அமைச்சர்களின் பணிகளை மேற்பார்வையிடுவர்
3. அமீர்-இ-ஜும்லா: நிதியமைச்சர்
4. வசீர்-இ-அஷ்ரப்: வெளியுறவு அமைச்சர், அரசு விவகாரத்துறை அமைச்சர், அரசு விழாக்களை முன்னின்று நடத்தும் பொறுப்புடையவர்
5. நசீர்: நிதித்துறை இணையமைச்சர்
6. பேஷ்வா : அரசப் படைகளின் பொறுப்பாளர்.
7. கொத்வால்: காவல்துறைத் தலைவர், தலைநகரின் நீதிபதி
8. சதர்-இ-ஜஹான்: தலைமை நீதிபதி; சமய அறநிலையத்துறை அமைச்சர்.

வழிப்பறி கொள்ளையர்களுக்கு எதிராக அவர் கடுமையான நடவடிக்கை எடுத்தார். நிறுவன மற்றும் புவியியல் ரீதியில் முகமது ஷா ஏற்படுத்திய ஒருங்கிணைப்பே அவர் அரசுக்கு திடமான அடித்தளத்தை உருவாக்கியது. அவர் குல்பர்காவில் இரு மசூதிகளை எழுப்பினார். அதில் ஒரு மசூதி 1367 ஆம் ஆண்டில் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டது. அது சிறந்த கட்டடமாகும். முதலாம் முகமது ஷாவிற்குப் பின்சில சுல்தான்கள் ஆட்சி செய்தனர். அவர்கள் திறமையற்றவர்கள். தென்பகுதி ஆட்சியாளர்களுடன் அவர்கள் அடிக்கடி போரிட்டனர். 1425 இல் வாரங்கல் மற்றும் அதன் கிழக்கிலிருந்த பகுதிகளை ஒரிசா ஆட்சியாளர்கள் கைப்பற்றினர். இந்நிலையில் தலைநகரம் குல்பர்காவிலிருந்து 1429 இல் பீடாருக்கு மாற்றப்பட்டது. அதன் பின் ஆட்சிக்கு வந்த மூன்றாம் முகமது (1463 – 1482) காலத்தில் சிறந்த அமைச்சராக விளங்கிய முகமது கவான் சிறந்த அரசியல் விவேகியாவார்.

**முகமது கவான்:**

பாரசீகத்தில் பிறந்த முகமது கவான் புகழ்பெற்ற இஸ்லாமிய சமய வல்லுநராகவும், பாரசீக மொழியில், கணிதத்தில் புலமை பெற்றவராகவும் விளங்கினார். அவர் சிறந்த கவிஞராகவும் எழுத்தாளராகவும் விளங்கினார். பீடாரில் ஒரு மதரசாவை நிறுவிய அவர் அதில் ஒரு பெரிய நூலகத்தையும் அமைத்தார். அந்நூலகத்தில் 3000 கையெழுத்து நூல்கள் இருந்தன. இவை

**கோல்கொண்டா கோட்டை:**
ராஜா கிருஷ்ண தேவ் என்ற வாரங்கல்லைத் தலைநகராகக் கொண்ட காகத்திய வம்ச அரசர் கட்டிய கோட்டை இது. 1495 – 1496 இல் இக்கோட்டை சுல்தான் குலிகுதப்ஷாவிற்கு ஒரு ஜாகீராகத் (நிலமாக) தரப்பட்டது. அவர் அக்கோட்டையைக் கருங்கற்கள் கொண்டு புனரமைத்தார். அதன்பின் இக்கோட்டைப் பகுதி இருந்த நகரம் முகம்மது நகர் எனப்பட்டது. பிற்காலத்தில் பாமினி அரசின் கைவசமாகி, அதன்பின்னர் குதுப்ஷாகி வம்ச அரசின் தலைநகரானது குதுப்ஷாகி வம்சத்தின் ஐந்தாவது சுல்தானான முகம்மது குலி குதுப்ஷா காலத்தில் கம்பீரமான கோட்டையாக கோல்கொண்டா கோட்டை திகழ்ந்தது. பாமினி சுல்தானியத்தின் வீழ்ச்சிக்குபின் இந்நகரம் வளர்ச்சியடைந்தது. 17 ஆம் நூற்றாண்டில் கோல்கொண்டா ஒரு சிறந்த வைரச் சந்தையாகத் திகழ்ந்தது. கோஹினூர் வரம் உட்பட மிகச்சிறந்த வைரங்களை உலகிற்கு வழங்கியது.

கோல்கொண்டா கோட்டை ஹைதராபாத்திலிருந்து 11 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மலைமீது 120 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டது. கோல்கொண்டா கோட்டை அதன் ஒலி அம்ச அடிப்படையில் சிறந்த கட்டடக் கலையின் அம்சமாகும். இக்கோட்டையின் உயர்ந்த பகுதி பாலா ஹிசார் என்றழைக்கப்படுகிறது. இதில் ரகசிய நிலத்தடி சுரங்கப்பாதை உள்ளது. அது தார்பார் அறையிலிருந்து மலையின் கீழுள்ள அரண்மனைக்குச் செல்வதாகச் சொல்லப்படுகின்றது. இக்கோட்டையில் அரச அவையும் (Durbar Hall) உள்ளது. இதில் ஒரு மாளிகையும் உள்ளது.

கோல்கொண்டா கோட்டையில் குதுப்ஷாகியின் கல்லறையும் உள்ளது. இதில் இருவிதத் தனி வழிகள் உள்ளன. இவை கோல்கொண்டா கட்டடக்கலையின் சிறப்பம்சங்களில் ஒன்றாகத் கருதப்படுகிறது. பீரங்கிகள், பாலங்கள், அரச அரண்மனைகள், அறைகள், மசூதிகள், தொழுவங்கள் உட்பட நான்கு சிறிய கோட்டைகளும் இதனுள் அடங்கும் இக்கோட்டையின் நுழைவாயில் பகுதி பதேதர்வாசா (அ) வெற்றி நுழைவாயில் என்றழைக்கப்படுகிறது. ஔரங்கசீப் எட்டு மாதங்கள் முற்றுகையிட்டு 1687 இல் ஆப்கானிய வாசல் காப்பாளரின் துரோகம் காரணமாக கோல்கொண்டா கோட்டையை அதன் ஆட்சியாளரிடமிருந்து கைப்பற்றினார்.

இவருடைய புலமையை உணர்த்த வல்லன. மூன்றாம் முகம்மதுவின் தலைசிறந்த பிரதம மந்திரியாக விளங்கிய கவான் சிறந்த நிர்வாகத் திறனுடன் பாமினி அரசின் வளர்ச்சிக்கு முக்கியமான காரணமாகத் திகழ்ந்தார். கொங்கணம், ஒரிசா, விஜயநகர மன்னர்களுக்கு எதிராக வெற்றிகரமாகப் போரை நடத்தினார். சிறந்த நிர்வாகக் கூறுகளை அறிந்திருந்த இவர் பாரசீக வேதியியல் வல்லுநர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் வெடிமருந்தைப் பயன்படுத்தினார். மாகாண ஆளுநர்களின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்திச் சிறப்பான ஆட்சி அமைப்புக்கு கவான் அடித்தளமிட்டார். பாமினி அரசை நிர்வகிக்க வசதியாக நாட்டை எட்டு மாகாணங்களாகப் பிரித்தார். ஒவ்வொரு பகுதியும் தனித்தனியே எல்லை வரையறை

செய்யப்பட்டு அவற்றிற்கெனத் தனித்தனியே ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். சில மாவட்டங்களை கவானே தன் நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார். ஆளுநர்களின் ராணுவ அதிகாரத்தை குறைத்தார். ஒரு ஆளுநருக்கு ஒரு கோட்டையே அனுமதிக்கப்பட்டது. மற்ற கோட்டைகள் சுல்தானின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. அரசு அதிகாரிகளுக்கு ஊதியத்திற்குப் பதில் நிலங்கள் தரப்பட்டன.

கவான் அறிமுகப்படுத்திய நிர்வாகச் சீர்திருத்தங்கள் அரசின் நிலையை உயர்த்தின. ஆனால் மாகாணத் தலைவர்களுக்குத் தரப்பட்ட அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. அவர்களில் பலர் தக்காணத்தை சேர்ந்தவர்களாவர். தக்காணத்தில் அவர்களுக்கிடையே இரு பிரிவுகள் உண்டாயின. அவ்விரு பிரிவனர்

1. தக்காண முஸ்லீம்கள்
2. வெளிநாட்டிலிருந்து வந்த முஸ்லீம்கள் ஆவர்.

அவ்விரு பிரிவினரிடையே ஏற்பட்ட மோதலால் நிர்வாகச் சீர்குலைவும் வீழ்ச்சியும் ஏற்பட்டன. இந்தப் போட்டியில் கவான் பலியானார். கவானின் வளர்ச்சியால் பொறாமை கொண்ட அவர்கள் கவான் சுல்தானுக்கு எதிராக சதி செய்கிறார் என்னும் போலிக் கடிதத்தை தயாரித்து சுல்தானின் கைகளில் கிடைக்குமாறு செய்தனர். ஏற்கனவே கவான் தன் மீது ஆதிக்கம் செலுத்துவதாக எண்ணிய சுல்தான் அவர்மீது அதிருப்தி கொண்டார். சுல்தானுடன் இருந்த விரிசலைச் சரி செய்ய கவான் அவரிடம் மன்னிப்பு கோரினார். ஆனால் சுல்தான் மன்னிக்கத் தயாராக இல்லை. அரசனுக்கெதிராகச் செயல்பட்டதாக கவான் கொல்லப்பட்டார். சுல்தான் மூன்றாம் முகம்மதுவின் ஆட்சியின் வீழ்ச்சிக்கு கவானின் மறைவு காரணமாயிற்று. மூன்றாம் முகம்மது இறந்தபின் பாமினி அரசு வீழ்ச்சியடையத் தொடங்கியது. அதன்பின் அவரது வம்சத்தைச் சார்ந்த 5 மன்னர்கள் ஆட்சி செய்தனர். அரசும் நான்கு சுதந்திர அரசுகளாகப் பிரிந்தது (பீஜப்பூர், அகமது நகர், பெரார், கோல்கொண்டா) அதன்பின் ஐந்தாவதாக பீடார் உருவாக்கப்பட்டது. பிற்காலத்தில் பீஜப்பூர் வலிமையான அரசானது. பீடார், பெரார் போன்றவை அதில் இணைக்கப்பட்டன. அதே நேரத்தில் அகமது நகர், கோல்கொண்டா போன்றவை சுதந்திர அரசுகளாயின. ஆனால் பொது எதிரியான விஜயநகர அரசை எதிர்க்கும் வகையில் ஐந்து அரசுகளும் ஒரே கூட்டணியாக இணைந்து 1565 இல் தலைக்கோட்டைப் போரில் (ராக்சஷிதங்கடி போர்) விஜயநகர அரசைத் தோற்கடித்தன. ஆனால் தலைக்கோட்டைப் போருக்குப் பின் தக்காண சுல்தானியங்கள் முகலாய அரசுடன் இணைக்கப்பட்டன.

### விஜயநகரப் பேரரசு
### தோற்றமும் விரிவாக்கமும்:

விஜயநகரப் பேரரசின் உருவாக்கம் தொடர்பாக பல மரபுசார்ந்த செய்திகள் உள்ளன. சமகாலக் கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில், பொதுவாக ஏற்கப்படும் கருத்து யாதெனில் சங்கமரின் இரு புதல்வர்களான ஹரிஹரர், புக்கர் ஆகியோர் ஹொய்சாள அரசரிடம் சில காலம் பணி செய்த பின்னர் தங்களை சுதந்திர அசரர்களாக நிலைநிறுத்திக் கொண்டு 1336 இல் புதிய அரசுக்கான அடித்தளத்தை அமைத்தனர். இந்நிகழ்வு ஹொய்சாள அரசர் மூன்றாம் பல்லாலர் மதுரை சுல்தானால் கொல்லப்பட்ட பின்னர் நடைபெற்றிருக்க வேண்டும். தொடக்கத்தில் துங்கபத்திரை நதியின் வடக்குக் கரையில் அனகொண்டி அருகே தலைநகர் அமைந்திருந்தது. ஆனால் விரைவில் ஆற்றின் தென்கரையில் அமைந்திருந்த ஹொய்சாள நகரமான ஹொசபட்னா (ஹம்பிக்கு அருகே) என்னும்

இடத்திற்கு மாற்றப்பட்டது. தலைநகரம் விரிவுப்படுத்தப்பட்ட பின்னர் வெற்றியின் நகரம் என்ற பொருளில் விஜயநகரம் எனப் புதிய பெயர் சூட்டப்பட்டது. இதன் பின்னர் அவர்கள் தங்களை விஜயநகர அல்லது கர்நாடக – விஜயநகர அரசர்களாகப் பிரகடனப்படுத்திக் கொண்டனர். வரலாற்றறிஞர்கள் ஹரிஹரர் தொடங்கிய இவ்வரச வம்சத்தை அவரின் தந்தையாரின் பெயரில் அல்லது மூதாதையரின் பெயரில் சங்கம வம்சம் என அழைத்தனர். விஜயநகர அரசர்கள், சாளுக்கியரின் முத்திரையான பன்றி (வராகம்) உருவத்தைத் தங்களது அரசு முத்திரையாகக் கொண்டனர்.

சில மரபுக் கதைகளின் படி புகழ்பெற்ற சைவத் துறவியும், சமஸ்கிருத அறிஞருமான வித்யாரண்யரின் அறிவுறுத்தலுக்கு இணங்க ஹரிஹரரும் புக்கரும் சுல்தான் துக்ளக்கிடம் செய்துவந்த பணியிலிருந்து விலகி, சுல்தானால் சிறை பிடிக்கப்பட்டபோது முஸ்லீம் மதத்திற்கு மாறியிருந்த இவர்கள் மீண்டும் இந்துக்களாக மாறினர் என்று கூறப்படுகிறது. விஜயநகரப் பேரரசு நிறுவியதில் வித்யாரண்யர் முக்கியப் பங்காற்றினார். ஆனால் இது சந்தேகத்திற்குரியது என்பர். ஏனெனில் சில கல்வெட்டுச் சான்றுகளின்படி வித்யாரண்யர் பதினான்காம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்தவர். அதாவது விஜயநகரப் பேரரசு உருவான அறுபது ஆண்டுகளுக்குப் பின்னர் வாழ்ந்தவர்.

விஜயநகர அரசு நான்கு அரச வம்சத்து அரசர்களால் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக ஆளப்பட்டது. சங்கம் வம்சம் (1336 – 1485), சாளுவ வம்சம் (1485 – 1505), துளுவ வம்சம் (1505 – 1570), ஆரவீடு வம்சம் (1570 – 1650) என இவ்வரசின் வரலாற்றை நான்கு கட்டங்களாக விவரிக்கலாம்.
தொடக்கத்தில் தென்னிந்தியாவின் பல பகுதிகளில் உள்ளூர் தலைவர்களால் ஆளப்பட்டு வந்த பல சிற்றரசுகளைப் போலவே விஜயநகர அரசும் இருந்தது. பதிமூன்றாம் நூற்றான்டின் பெரிய அரசுகளான தமிழ்நாட்டில் பாண்டியர், கர்நாடகத்தைச் சேர்ந்த ஹொய்சாளர், ஆந்திர காகத்தியர் ஆகிய மூன்று அரசுகளும் பதினான்காம் நூற்றாண்டின் முதல் முப்பது ஆண்டுகளில் தில்லி சுல்தானியத்தின் படையெடுப்புகளால் அழிவுற்று பெரும் அரசியல் வெற்றிடத்தை ஏற்படுத்தியது. குழப்பமும் கொந்தளிப்பும் நிறைந்த இச்சூழ்நிலை சங்கம் வம்சத்தை சேர்ந்த ஹரிஹரர் முதலான ஐந்து சகோதரர்களுக்கு தங்கள் பகுதியை ஒருங்கிணைக்கவும் விரிவாக்கம் செய்யவும் வாய்ப்பினை வழங்கியது. மேலும் சற்றே முன்னதாக உருவாக்கப்பட்ட மதுரை சுல்தானியமும், 1347 இல் உருவான பாமினி அரசும் தில்லியின் பிடியிலிருந்து விடுபட்டு சுதந்திர அரசுகளாயின. தில்லி சல்தானியமே பலவீனம் அடைந்ததால் அது தென்னிந்தியாவின் மேல் அதிக ஆர்வம் காட்டவில்லை.

விஜயநகர அரசு உருவான நாற்பதாண்டுகளுக்கு உள்ளாகவே ஐந்து சகோதரர்களும் வெவ்வேறு திசைகளில் மேற்கொண்ட படையெடுப்புகளின் விளைவாகக் குறுநில அரசு என்ற நிலையிலிருந்து பெரிய அரசாக மாறியது. முதலில் கர்நாடகாவில் ஹொய்சாள அரசின் இதயமாக இருந்த பகுதிகள் விஜயநகரோடு இணைக்கப்பட்டன. தொடர்ந்து கர்நாடகாவின் கடற்கரைப் பகுதிகள் கைப்பற்றப்பட்டன. அவை இறுதிவரை நாட்டின் முக்கியப் பகுதியாகவே இருந்தன. பல துறைமுகங்களைச் சென்றடையும் வாய்ப்பினை இப்பகுதி கொண்டிருந்ததால் இப்பகுதியின் பிரதானிகள் அல்லது ஆளுநர்கள் இப்பகுதியின் நிர்வாகத்தில் அக்கறை செலுத்தினர். முதலாம் புக்கரின் ஆட்சியின் போது தமிழகத்தின் தொண்டை மண்டலப் பகுதியின் மீது கவனம் திரும்பியது. தமிழகத்தின் வட மாவட்டங்களை உள்ளடக்கிய தொண்டை மண்டலப் பகுதியை சம்புவராயர் ஆண்டு

வந்தனர். இளவரசர் கம்பண்ணா (வழக்கமாக குமார கம்பண்ணா என்பர்) தன் நம்பிக்கைக்குரிய தளபதி மாரையா நாயக்கரின் உதவியுடன் இப்பணியை வெற்றிகரமாக முடித்தார். மேலும் மதுரை சுல்தானை 1370 இல் கொன்றதன் மூலம் மதுரை சுல்தானிய ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்த பெருமையும் குமார கம்பண்ணாவின் மனைவி கங்காதேவி சமஸ்கிருத மொழியில் எழுதிய "மதுரா விஜயம்" எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மதுரை உள்ளிட்ட பாண்டிய நாடு அப்போது விஜயநகர அரசோடு இணையவில்லை. நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் 1500 வாக்கில் பாண்டிய நாடு விஜயநகர அரசின் ஒரு பகுதியானது. அதுவரையிலும் தமிழகத்தின் வடபகுதிகளும் காவேரி வடிநிலப் பகுதி வரையிலான மத்தியப் பகுதிகளுமே சங்கம – சாளுவவம்ச அரசுகளின் நேரடி நிர்வாகத்தின் கீழிருந்தன.

**விஜயநகர் - பாமினி மோதல்:**

தொடக்கத்திலிருந்தே பாமினி விஜயநகர அரசுகள் தொடர்ந்து மோதிக் கொண்டன. இடங்களைக் கைப்பற்றுதல், கப்பம் வசூலித்தல், குதிரை வாணிகத்தின் மேலான கட்டுப்பாடு ஆகியவற்றில் ஏற்பட்ட போட்டியே மோதல்களுக்கான முக்கியக் காரணங்களாகும். கிருஷ்ணா, துங்கபத்திரை நதிகளுக்கு இடைப்பட்ட வளம் மிக்க ரெய்ச்சூர் பகுதியை இணைத்துக்கொள்ளவும், மேலாதிக்கம் செலுத்தவும் இருவருமே விரும்பினர். ஆனால் இருவராலும் முழுமையான வெற்றியைப் பெற இயலவில்லை. நிலையற்ற சிறிய வெற்றிகளுக்காகப் பெருமளவில் ரத்தம் சிந்தப்பட்டது, சில வரலாற்று ஆய்வாளர்கள் இந்து விஜயநகரத்திற்கும் இஸ்லாமிய பாமினி அரசுகளுக்கு இடையே நிலவிய மதப் பகைமையே தொடர்ந்த போர்களுக்கான அடிப்படைக் காரணமென்று கருதுகின்றனர். ஆனால் உண்மையில் விஜயநகர அரசர்கள் முஸ்லீம்கள் அல்லாத இந்து அரசுகளான வாராங்கல், கொண்டவீடு, ஒரிசா ஆகியவற்றுடன் போரிட்டபோது முஸ்லீம் அரசுகள் சில சமயம் விஜயநகருக்கு ஆதரவாகவும் சில சமயம் எதிர்தரப்புக்கு ஆதரவாகவும் பங்கேற்றனர். கோவா மற்றும் ஏனைய துறைமுகங்கள் வழியாக நடைபெற்ற குதிரை வாணிகத்தைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதில் ஏற்பட்ட போட்டி இப்போர்களுக்கு மற்றொரு காரணமாகும். தொடர்ந்து போரிட்டுக்கொண்டாலும் கிருஷ்ணா நதியே ஏறக்குறைய இவ்விருவரையும் பிரிக்கும் எல்லைக் கோடாக அமைந்திருந்தது.

ஆந்திராவின் கடற்கரைப் பகுதிகளில் அதிகாரத்திற்கான போட்டி ஒரிசாவைச் சேர்ந்த கஜபதி அரசுக்கும் விஜயநகருக்குமிடையே நடைபெற்றது. இரண்டாம் தேவராயர் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்வரை இப்பிரச்சனையில் விஜயநகரால் பெரும் வெற்றி என எதையும் பெற இயலவில்லை. இரண்டாம் தேவராயர் (1422 – 46 ஒரியர்களைச் சில போர்களில் தோற்கடித்தார். இப்போர்கள் அனைத்தும் கப்பம் வசூல் செய்வதற்காகவே நடைபெற்றன. இடங்கள் கைப்பற்றப்பட்டு இணைக்கப்படவில்லை. சங்கம வம்ச அரசர்களுள் மிகச் சிறந்த அரசர் இரண்டாம் தேவராயர் ஆவார். தன்னுடைய குதிரைப் படையின் வலிமையைப் பெருக்குவதற்காகப் பயிற்சி பெற்ற முஸ்லீம் குதிரைப்படை வீரர்களைத் தனது படைகளில் சேர்த்துக் கொண்டார். இரண்டாம் தேவராயரின் காலத்தில் இங்கு வந்த பாரசீக நாட்டின் தூதுவர் அப்துர் ரஸாக் கொச்சி சாமுத்திரி அரசவைக்கும் விஜயநகரத்திற்கும் வருகை தந்தார். இரண்டாம் தேவராயர் மிகப்பெரும் பகுதியைக் கட்டுப்படுத்தினார் என்று குறிப்பிடுகின்றார். இரண்டாம் தேவராயர் இலங்கை அரசனிடமிருந்தும் கப்பம் பெற்றார்.

இரண்டாம் தேவராயருக்குப் பின்னர் பிரச்சனைகள் தலைதூக்கின. வாரிசுரிமைச் சண்டைகளும் திறமையற்ற கஜபதி ஆட்சிப் பொறுப்பேற்றதின் விளைவாக கஜபதி அரசர்கள் ஆந்திராவின் கடற்கரைப் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தினர். 1460 – 65 க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் கஜபதி படைகள் பலமுறை தாக்குதல்களை மேற்கொண்டன. பகுதியைக் கட்டுப்படுத்தினார் என்று குறிப்பிடுகின்றார். இரண்டாம் தேவராயர் இலங்கை அரசனிடமிருந்தும் கப்பம் பெற்றார்.

இரண்டாம் தேவராயருக்குப் பின்னர் பிரச்சனைகள் தலைதூக்கின. வரிசுரிமைச் சண்டைகளும் திறமையற்ற அரசர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதின் திறமையற்ற அரசர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதின் விளைவாக கஜபதி அரசர்கள் ஆந்திராவின் கடற்கரைப் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தினர். 1460 – 65 க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் கஜபதி படைகள் பலமுறை தாக்குதல்களை மேற்கொண்டன. மேலும் திருச்சிராப்பள்ளி வரை வெற்றிகரமாகப் படையெடுத்து வந்த கஜபதி படைகள் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியதோடு கோவில்களின் செல்வத்தையும் கொள்ளையடித்தன. இச்சூழலை சாதகமாகப் பயன்படுத்திய குறுநில மன்னர்கள் சுதந்திர அரசர்களாயினர். சாளுவ வம்ச அரசர்களின் எழுச்சி வரை தஞ்சாவூர்,திருச்சிராப்பள்ளி பகுதிகளில் திருமலைத்தேவர், கோனேரித் தேவர் போன்ற குறுநிலை மன்னர்கள் ஒரு சில பத்தாண்டுகள் சுதந்திர அரசர்களைப் போல ஆட்சி நடத்தினர்.

காலத்தின் நகர்வில் அரசியல் அதிகாரம் நம்பிக்கைக்குரிய தளபதி சாளுவ நரசிம்மரின் கைகளுக்குச் சென்றது. அவர் கஜபதிகளிடமிருந்து நாட்டைக் காத்து, ஆந்திரக் கடற்கரை பகுதிகளை மீட்டார். 1485 இல் அரசாட்சியைக் கைப்பற்றி தன்னையே அரசரென அறிவித்து, குறுகிய காலமே ஆட்சி செய்து சாளுவ வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார். அவருடைய தளபதியும் மாபெரும் போர்வீரருமான நரச நாயக் அவருக்குத் துணை நின்றார். அவர் தென்பகுதியில் கலகத்தில் ஈடுபட்ட உள்ளூர் தலைவர்களை அடக்க முயன்றார். 1491 இல் சாளுவநரசிம்மர் மரணமடைந்தார். அதற்கு முன்பாக தனது இளம் வயது மகன்களை நரச நாயக்கரின் பாதுகாப்பில் விட்டுச் சென்றார். உண்மையான ஆட்சி அதிகாரம் தனது கைகளுக்கு வரப்பெற்ற நரச நாயக் தனது மரணம் வரையிலும் நாட்டைப் பாதுகாக்க பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். 1505 இல் அவருடைய மூத்த மகன் வீரநரசிம்மர் துளுவ வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார். சிறிது காலமே ஆட்சி செய்தாலும் அவரது ஆட்சிக் காலம் முக்கிய நிகழ்வுகளைக் கொண்டதாய் அமைந்தது. அவரைத் தொடர்ந்து அவருடைய தம்பி கிருஷ்ண தேவராயர் அரியணை ஏறினார்.

**கிருஷ்ண தேவராயர் (1509 – 1529):**

கிருஷ்ண தேவராயர் விஜயநகர அரசர்களில் மகத்தானவராகக் கருதப்படுகிறார். தனது தந்தையும் அண்ணனும் அமைத்துக் கொடுத்த வலுவான ராணுவ அடித்தளத்தின் மீது அவர் ஒரு பேரரசைக் கட்டினார். தனது நாட்டின் ஒருமைக்குக் குறை ஏற்படாமலிருக்கப் பல படையெடுப்புகளை மேற்கொண்டார். தனது ஆட்சியின் தொடக்கத்தில் மைசூருக்கு அருகேயிருந்த கலக மனப்பான்மை கொண்ட உம்மத்தூர் குறுநில மன்னனைத் தோற்கடித்துப் பணியச் செய்தார். இதனைத் தொடர்ந்து அவர் இரு முனைகளில் போரிட வேண்டியிருந்தது. ஒன்று பரம்பரை எதிரிகளான பாமினி சுல்தான்களுடன், மற்றொன்று ஒரிசாவின் கஜபதி அரசர்களுடன், அவருடைய கிழக்குத்திசை படையெடுப்பின்போது கஜபதி அரசர்களின் வசமிருந்த உதயகிரி கோட்டையைப் போன்று பல கோட்டைகள் கைப்பற்றப்பட்டதைப் பற்றிப் பல கட்வெட்டுகள் தெளிவாக விளக்குகின்றன.

முடிவில் அவர் தனது வெற்றித் தூணை சிம்மாச்சலத்தில் நிறுவினார். பாமினி படைகளை முறியடிப்பதற்காகக் கிருஷ்ண தேவராயர் ஒன்றுக்கும் மேற்பட்ட படையெடுப்புகளை ஆண்டுதோறும் மேற்கொள்ள நேர்ந்தது. ஏனெனில் ஆண்டுக்கு ஒருமுறை என்ற கணக்கில் பாமினிப் படைகள் விஜயநகரை ஊடுருவின. ஒரு சில படையெடுப்புகளின் போது, மலபார், கொங்கணக் கடற்கரைப் பகுதிகளில் தங்களுடைய அதிகாரத்தை நிறுவுவதற்கு முயன்றுகொண்டிருந்த போர்த்துகீசியர் விஜயநகருக்கு இராணுவ உதவிகளைச் செய்தவர். மேலும் பத்கல் என்னும் இடத்தில் கோட்டை கட்டிக்கொள்ளும் உரிமையைப் பெற்றவர். அவர் மிகப்பெரும் வெற்றியாளராக இருந்தபோதிலும் கிருஷ்ண தேவராயர் பெற்ற வெற்றிகள், தங்களுக்கிடையே தொடர்ந்து போர் செய்து கொண்டிருந்த தக்காண சுல்தானிய அரசுகளை ஒற்றுமை கொள்ளச் செய்தன.

கிருஷ்ண தேவராயர் விஜயநகர அரசின் மகத்தான அரசர் எனப்போற்றப்படுவதற்கு வேறு சில காரணங்களும் உள்ளன. ஸ்ரீசைலம், திருப்பதி, காளஹஸ்தி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிரம்பரம் ஆகிய இடங்களிலுள்ள சைவ, வைணவக் கோவில்களுக்குப் பெருமளவில் கொடையளித்தார். பல கோயில்களில் அவர் எழுப்பிய கோபுரங்கள் இன்று வரை உள்ளன. விஜயநகருக்கு வருகை தந்த சமகாலத்து வெளிநாட்டுப் பயணிகளான நூனிஸ், பயஸ் போன்றோர் அவருடைய ஆளுமை குறித்தும் விஜயநகரத்தின் உயர் நிலை, செல்வச் செழிப்ப ஆகியன பற்றியும் பாராட்டுகளை விட்டுச் சென்றுள்ளனர். அவருடைய அரசவையை அல்லசானி பெத்தண்ணா போன்ற தலைசிறந்த புலவர்கள் அலங்கரித்தனர். கிருஷ்ண தேவராயரே பெரும் அறிஞராக கருதப்படுகிறார். ஆமுக்தமால்யதா (ஆண்டாளின் கதை) எனும் நூலை இயற்றியுள்ளார். ஆனாலும் அவருடைய தலை சிறந்த சாதனை, ஒரு மதிநுட்பம் மிக்க நிர்வாகியாக அவர் நாயக் அல்லது நாயங்காரா முறையை மறுசீரமைப்பு செய்து அதற்கு சட்ட அங்கீகாரத்தையும் கொடுத்ததாகும். அது நிர்வாக முறை என்ற தலைப்பின் கீழ் விளக்கப்பட்டுள்ளது.

**தலைக்கோட்டைப் போர் (1565):**

கிருஷ்ணதேவராயர் இறந்தபோது அவருடைய மகன் குழந்தையாக இருந்ததால் அவருடைய சகோதரர் அச்சுததேவராயர் ஆட்சிப் பொறுப்பேற்றார். ஆனால் விரைவிலேயே வாரிசு உரிமைப் பிரச்சனை தலை தூக்கியது. கிருஷ்ணதேவராயரின் மருமகனான ராமராஜா அச்சிறு வயது இளவரசனுக்குப் பட்டம் சூட்டுவதன் வழியாக அரசியல் மேலாதிக்கம் செலுத்த விரும்பினார். இருந்தபோதிலும் அச்சுதராயருக்கு செல்லப்பா (சாளுவநாயக் என்றும் அறியப்படுபவர்) என்பாரின் ஆதரவு இருந்தது. அக்கால கட்டத்தில் சிறப்பிடம் வகித்த இவர் தமிழகத்தின் பெரும்பகுதியைக் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். காலப்போக்கில் இவரே கிளர்ச்சியில் ஈடுபட அச்சுதராயர் பெரும்படையோடு தென்னகம் வந்து இவரை அடக்கினார். அச்சுத தேவராயர் பாமினி சுல்தான்களோடும் சில போர்களை மேற்கொண்டார். 1542 இல் அவர் மரணமடைந்தபோது அவருடைய ஒன்றுவிட்ட சகோதரர் அரச பதவியேற்று ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் ஆண்டார் (1542 – 70). ஆனால் உண்மையான அதிகாரம் ராமராஜாவின் கைகளில் இருந்தது. பல நெருங்கிய உறவினர்களின் (ஆரவீடு வம்சாவளியினர்) ஆதரவு அவருக்கு இருந்தது. அரசின் பல முக்கியப் பொறுப்புகளில் அவர் தன் உறவினர்களை அமர்த்தினார்.

சிறந்த வீரரும் ராணுவ வல்லுநருமான ராமராஜர் பாமினி சுல்தான்களை ஒருவரோடு ஒருவரை மோதச் செய்யும் திறமை பெற்றிருந்தார். போர்த்துகீசியரோடு ஒப்பந்தம் மேற்கொண்டதன் மூலம் பீஜப்பூர் அரசருக்குக் குதிரைகள்

அனுப்பப்படுவதை நிறுத்தினார். சில காலம் கழித்து கோல்கொண்டா, அகமதுநகர் சுல்தான்களுக்கு எதிராக பீஜப்பூரோடு கை கோல்கொண்டா, அகமதுநகர் சுல்தான்களுக்க எதிராக பீஜப்பூரோடு கைகோத்தார். இத்தகைய பிரித்தாளும் சூழ்ச்சி விஜயநகருக்கு எதிராகப் பெரும் பகையை வளர்த்தது. இதன் விளைவாக, தக்காண சுல்தான்கள் தங்களது பரஸ்பர பகையை மறந்து ஒன்றுபட்டு, பொது எதிரிக்கு எதிராக இறுதிப்போர் புரிய கைகோத்தனர். 1565 இல் தலைக்கோட்டை அல்லது ராக்சஷிதங்கடி போர் நடைபெற்றது. தனது வயது முதிர்வையும் பொருட்படுத்தாது ராமராஜாவே படைப்பிரிவுகளுக்குத் தலைமை ஏற்று தனது படைப்பிரிவுகளுக்குத் தலைமை ஏற்று தனது சகோதரர்கள், ஏனைய உறவினர்களோடு போர்க்களம் புகுந்தார். போரின் இறுதிக் கட்டத்தில் விஜயநகரம் தோல்வியடைந்தது. ராமராஜர் கைது செய்யப்பட்டு உடனடியாகக் கொல்லப்பட்டார். வெற்றிபெற்ற பாமினிப் படைகள், தங்களது வரலாற்றில் முதன்முறை விஜயநகரத்துக்குள் புகுந்தன. பல மாதங்கள் அந்நகரைக் கொள்ளையடித்துச் சூறையாடி பாழ்படுத்தின.

பொதுவாக இப்போர் விஜயநகர் அரசின் முடிவின் அடையாளமாகக் கருதப்படுகிறது. அரசர் சதாசிவராயரும் அவருடைய வீரர்களும் பெனுகொண்டாவுக்குத் தப்பிச் சென்றனர். ராமராஜாவின் சகோதரர் 1570 இல் தன்னை அரசராக அறிவித்து நான்காவது அரசமரபான ஆரவீடு வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார். அவரைத் தொடர்ந்து அவருடைய மகனுகளும் பேரன்களும் அளவில் சுருங்கிய அரசை இருதலைமுறை காலத்திற்கு 1630 வரை ஆட்சி புரிந்தனர். வேறுசில அரசர்கள் நிரந்தரத் தலைநகரமில்லாமல் நாடோடிகளாகத் திரிந்து 1670 வரை ஆட்சி புரிந்தனர். பல நாயக்கத் தலைவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உண்மையான அதிகாரத்தோடு ஆட்சி புரிந்தனர். அவர்களில் சிலர் அரசரை ஆதரித்தனர். வேறுசிலர் அரசரை எதிர்த்தனர்.

இவ்விரு பிரிவுகளுக்கிடையே சில போர்கள் நடைபெற்றனர். 1601 இல் அரசு விசுவாசிகள் பெரும்பேடு என்னும் ஊரைச் சேர்ந்த யச்சம் நாயக்கர் தலைமையிலும் எதிர் தரப்பினர் வேலூர் நாயக் (வேலூர்) தலைமையிலும் உத்திரமேரூரில் கடுமையான போரில் ஈடுபட்டனர். இப்போரில் சுதந்திர அரசுகளாக மாறிவிட்ட தஞ்சாவூர், மதுரை, செஞ்சி நாயக்க அரசுகள் வேலூர் நாயக்கை ஆதரித்தனர்.

**நிர்வாகம்:**

அரசரே அனைத்து அதிகாரங்களையும் பெற்றவராவார். அவருக்குப் பல உயர்மட்ட அதிகாரிகள் உதவி செய்தனர். முதலமைச்சர் மகாபிரதானி என்றழைக்கப்பட்டார். தளவாய் (தளபதி), வாசல் (அரண்மனைப் பாதுகாவலர்), ராயசம் (செயலர் ∴ கணக்கர்), அடைப்பம் (தனி உதவியாளர்), காரிய கர்த்தா (செயல் முகவர்) போன்ற கீழ்நிலை அதிகாரிகளுக்கு இவரே தலைமையாவார். முதலாம் ஹரிஹரிரும் அவரைத் தொடர்ந்து ஆட்சி செய்தவர்களும் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளை ஒருங்கிணைத்து அவற்றில் நிர்வாக அமைப்புகளை உருவாக்க முயன்றனர். ராஜயா என்னும் மண்டலங்களாக நாடு பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு ராஜ்யாவுக்கும் ஒரு பிரதானி (ஆளுநர்) நியமிக்கப்பட்டார். ஹொய்சாள, ராஜ்யா, அரகா, பருகூர், மங்களூர், முளுவாய் ஆகியன முக்கியமான ராஜ்யாக்களாகும். புதிய பகுதிகள் கைப்பற்றப்பட்டு இணைக்கப்பட்ட போது புதிய ராஜ்யாக்கள் உருவாயின. 1400 இல் தமிழகப் பகுதிகளில் சந்திரகிரி, படைவீடு, வலுதலம்பட்டு, திருச்சிராப்பள்ளி, திருவாரூர் என ஐந்து ராஜ்யாக்கள் இருந்தன. பிரதானி அரசவை உறுப்பினராகவோ அல்லது ராணுவ அதிகாரியாகவோ இருப்பார். இவர் அரச குடும்பத்திற்கு உறவினர் அல்ல. நிர்வாகத்தில் அவருக்கு உதவி

செய்யக் கணக்கர்களும் ராணுவ அதிகாரிகளும் பணியமர்த்தப்பட்டிருந்தனர். ஒவ்வொரு ராஜ்யாவும் சீமை, ஸ்தலம், கம்பனா எனும் சிறிய நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. மிகச்சிறிய நிர்வாக அலகு கிராமமாகும். துளுவ வம்சத்தைச் சேர்ந்த கிருஷ்ணதேவராயரால் நாயக் முறை அறிமுகமானபோது ராஜ்யாக்கள் தங்களது நிர்வாக, வருவாய் முக்கியத்துவத்தை இழந்தன.

**நாயக்க முறை:**

நாயக்க என்னும் சொல் தெலுங்கு, கன்னடப் பகுதிகளில் பதிமூன்றாம் நூற்றாண்டிலிருந்தே இராணுவத்தலைவர், அல்லது இராணுவவீரர் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டு வந்தது. பதிமூன்றாம் நூற்றாண்டில் காகத்திய அரசில் ஒரு நாயக்கின் இராணுவ சேவைக்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட பகுதியின் வருவாயை வழங்கும் முறை நடைமுறையில் இருந்தது. இது தில்லி சுல்தானியத்தில் பின்பற்றப்பட்ட "இக்தா" முறையைப் போன்றதாகும். ஆனால் விஜயநகர அரசில் இராணுவ சேவைக்குப் பதிலாக வருவாய் ஈட்டித்தரும் நிலப்பகுதிகளை வழங்கும் முறை 1500 அல்லது அதற்குச் சற்று முன்னதாகவே தொடங்கிற்று. கல்வெட்டுகள் இம்முறையைத் தமிழில் நாயக்கட்டணம் எனவும், நாயக்தானம் என கன்னடத்திலும், நாயன்கரமு எனத் தெலுங்கிலும் குறிப்பிடுகின்றன. இம்முறையானது கிருஷ்ணதேவராயர், அச்சுததேவராயர் ஆகியோரின் ஆட்சியின்போது நிறுவன வடிவம் பெற்றது. கல்வெட்டுச் சான்றுகளும் நூனிஸ் பயஸ் போன்ற வெளிநாட்டவரின் பயணக் குறிப்புகளும் இதை உறுதி செய்கின்றன. விஜயநகர அரசு இருநூறுக்கும் மேற்பட்ட நாயக்குகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததாகவும் அந்நாயக்குகள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் குதிரை, காலாட்படை வீரர்களைப் பராமரித்து தேவைப்படும் நேரத்தில் அரசருக்கு இராணுவச் சேவை செய்ய வற்புறுத்தப்பட்டார்கள் எனவும் நூனிஸ் குறிப்பிடுகின்றார். மேலும் அவர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் சில குறிப்பிட்ட ஒன்பது நாள் இராமநவமித் திருவிழா போன்ற சமங்களில் அரசருக்குக் குறிப்பிட்ட அளவு வருவாயை வழங்க வேண்டும். நூனிஸின் கூற்றை "ராயவாசகமு" என்னும் தெலுங்கு நூல் உறுதிப்படுத்துகிறது. இந்நூல் கிருஷ்ணதேவராயரின் காலத்தில் இம்முறை நடைமுறையில் இருந்ததைக் கூறுகிறது. பிற்காலத்தைச் சேர்ந்த பாளையக்காரர்களின் வம்சாவளிகள் (அவர்களில் பெரும்பாலோர் பழைய நாயக்க குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்) இந்நாயக்க முறையானது கிருஷ்ணதேவராயர் காலத்தில் நிறைவு பெற்றது எனக் குறிப்பிடுகின்றன. பெரும்பாலான நாயக்குகள் கன்னட, தெலுங்கு போர்த் தளபதிகளாகவும் இருந்தனர். உள்ளூர்த் தலைவர்களும் நாயக்குகளாகப் பணியமர்த்தப்பட்டிருந்தனர். நாயக்குகள் பிராமண, பிராமணர் அல்லாத பல சாதிகளைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். பிராமணரல்லாத நாயக்குகள் பல்வேறு சமூகப் பின்னணியைக் கொண்டிருந்தனர். போர்புரியும் மரபினைச் சார்ந்தவர்களாகவும், மேய்ச்சல் தொழில் செய்பவர்களாகவும், வனங்களில் வாழும் குலத்தோராகவும் (யாதவர், பில்லம), விவசாயக் குடும்பத்தை சேர்ந்தவர்களாகவும் (ரெட்டி) வணிகர்களாகவும் (பலிஜா) இருந்தனர். கிருஷ்ண தேவராயரிடம் பணிபுரிந்த செல்லப்பா போன்ற மிகச்சிறந்த நாயக்குகள் பிராமணர்கள் ஆவர்.

கிருஷ்ணதேவராயரைப் போன்ற வலிமையான அரசர்கள் இருந்தவரை இம்முறை சிறப்பாகச் செயல்பட்டது. இந்நாயக்குகள் நாயக்தானம் எனப்பட்ட தங்களின் பகுதிகளில் உற்பத்தியைக் கட்டுப்படுத்தினர். "பேட்டை" எனும் வணிக மையங்களை நிறுவினர். விவசாயிகளையும் கைவினைஞர்களையும் தங்கள் பகுதிகளில் குடியேற ஊக்குவித்து வரிச் சலுகைகள் வழங்கினர். நீர்ப்பாசன வசதிகளை உருவாக்கிப் பராமரித்தனர். அவர்களில் பலர் உயர்மட்டப் பணிகளில் (ஆளுநர், படைத்தளபதி, கணக்கர்) அமர்த்தப்படடு அரசரின் பிரதிநிதிகளாகச்

செயல்பட்டனர். தலைக்கோட்டை போருக்குப் பின்னர் பெரும்பாலான நாயக்குகள் சுதந்திரமாகச் செயல்படத் துவங்கினர். அவர்களில் மதுரை, தஞ்சாவூர், இக்கேரி போன்ற நாயக்குகள் வலுவான அரசுகளை உருவாக்கிக் குறுநிலத் தலைவர்களைக் கட்டுப்படுத்தினர். பதினேழாம் நூற்றாண்டு பெரும் நாயக்க அரசுகளின் நூற்றாண்டாகும்.

**சமூகமும் பொருளாதாரமும்:**

தொடர் போர்களும் அவற்றின் விளைவாக ஏற்பட்ட அளவிலாத் துயரங்களும் தொடக்ககால, இடைக்கால சமூகங்களின் பொதுவான அம்சங்களாகும். பாமனி விஜயநகர் அரசுகளின் காலமும் இதற்கு விதிவிலக்கல்ல. கண்களால் பார்த்த சாட்சியங்களின் குறிப்புகள் அதிக அளவில் கிடைப்பதால் இவ்வம்சம் வெரியதாகவே தெரிகிறது. மற்றொரு முக்கியமான, நூற்றாண்டுகளைக் கடந்து நீடித்திருக்கும் விளைவு மக்கள் இடம் விட்டு இடம் சென்றதும் புலமட் பெயர்ந்ததுமாகும். இப்பாடத்தில் நாம் காணும் மூன்று நூற்றாண்டு காலப்பகுதியில் அனைத்து இடங்களிலும் இதுபோன்ற குடிபெயர்வைக் காணமுடிகிறது. பாமினி அரசவைகளில் நடைபெற்ற மோதல்களுக்குத் தக்காணப் பகுதிகளில் துருக்கியர், ஆப்கானியர், பாரசீகர் ஆகியோர் குடியேறியதே காரணமாயிற்று. விஜயநகரப் பகுதிகளைப் பொறுத்த அளவில் கன்னட, தெலுங்கு போர் மரபுச் சமூகங்களும் அவர்களைச் சேர்ந்தோரும் தமிழகப் பகுதிகளிலும் ஏனைய பகுதிகளிலும் குடியேறினர். பெரும்பாலான நாயக்கத் தலைவர்கள் இவ்விரு மொழியினரே, மற்றொரு முக்கிய விளைவு ஆளும் வர்க்கத்தினருக்கும் ஆட்சி செய்யப்பட்டவர்களுக்கும் இருந்த மிகப் பெரிய இடைவெளியாகும். அனைத்து அயல்நாட்டு பயணிகளும் அரசர்கள், அரசு அதிகாரிகள், சமூகத்தின் மேல்மட்டத்தில் உள்ளவர்கள், விஜயநகரம், பீஜப்பூர் போன்ற நகரங்களில் வாழ்ந்தோரின் செல்வச் செழிப்பையும் ஆடம்பர வாழ்வையும் குறிப்பிடும்போதே பெருவாரியான மக்கள் வறுமையில் வாடியதையும் குறிப்பிட்டுள்ளனர். அடிமைமுறை நிலவியதையும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மக்களின் மீது வரிவிதிப்பின் மூலமே அரசு வருமானத்தைப் பெற்றது. சங்கம வம்ச அரசர்களின் காலத்தில் விஜயநகரத்தின் ஆட்சி புதிய பகுதிகளுக்குப் பரவிய போது வரிவசூல் அதிகாரிகள் கடுமையாக நடந்து கொண்டதால் உழைக்கும் மக்கள் கிளர்ச்சி செய்ததாகத் தெரிகிறது. அடிப்படிப்பட்ட ஒரு கிளர்ச்சி 1430 இல் தமிழ்நாட்டின் மையப்பகுதிகளில் நடைபெற்றுள்ளது. இக்கிளர்ச்சியில் அடிப்படை உற்பத்தியாளர்கள் தங்கள் சாதி வேறுபாடுகளைப் புறந்தள்ளி ஒன்றுபட்டிருந்தனர். அரசு பிரதானி (ஆளுநர்) அவருடைய படைவீரர்கள் மற்றும் நிலப்பிரபுக்கள் உட்பட நியாயத்திற்குப் புறம்பாக அதிக வரி கட்டும்படி மக்களை வற்புறுத்தியதன் காரணமான இக்கிளர்ச்சி ஏற்பட்டது. விஜயநகர இளவரசர் இது விஷயத்தில் நேரடியாகத் தலையிட்டு மக்களைச் சமாதானப்படுத்தி வரித் தொகையைக் குறைத்ததாகக் கூறப்படுகிறது. பதினாறாம் நூற்றாண்டில், நாயக்க நிர்வாக முறையில் நாயக்குகள் நெசவு போன்ற கைவினைத் தொழில்களை வளர்ப்பதற்காக அவ்வவ்போது வரிச்சலுகை வழங்கினர்.

**இராமநாதபுரம், புதுக்கோட்டை சிற்றரசுகள்:**
இராமநாதபுரம் சிற்றரசு மதுரை நாயக்க அரசர் முத்துக்கிருஷ்ணப் நாயக்கரால் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் துவங்கிவைக்கப்பட்டது. போர் புரியும் மரபினைக் கொண்டிருந்த இப்பகுதி வாழ் மக்கள் பாண்டிய சோழ விஜயநகர அரசர்களிடம் படை வீரர்களாகப் பணியாற்றினர். மேலும் திருநெல்வேலி,

தென் தமிழகப் பகுதி ஆகியவற்றிலும் பரவினர். நாயக்க மன்னர்களின் படைகளிலும் பணியாற்றிய இவர்கள், பரம்பரைக் காவல்காரர்களாக கிராமங்கள், கோவில்கள் ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் பணியையும் செய்து வந்தனர். இராமேஸ்வரம் கோவில், உடையான் சேதுபதி (இராமேஸ்வரத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான நீர் இணைப்பின் அல்லது பாலத்தின் தலைவர் என்று பொருள்) என்பவரின் பாதுகாப்பின் கீழிருந்தது.

புக்கோட்டை ஒரு சிறிய சிற்றரசாக மதுரை மற்றும் தஞ்சாவூர் நாயக்க அரசுகளின் இடையில் அமைந்திருந்தது. முந்தைய காலத்தில் சோழ பாண்டிய அரசுகளுக்கிடையே இடைப்படு நாடாக இருந்துள்ளது. இராமநாதபுரம் பகுதி வாழ் மக்களைப் போலவே புதுக்கோட்டை பகுதி வாழ் மக்களும் போர் புரியும் மரபை சார்ந்தவர்களாவர். இதன் காரணமாகவே தொண்டைமான்களின் தலைமையில் இப்பகுதி ஒரு சிற்றரசு என்னும் மதிப்பைப் பெற்றது. இத்தொண்டைமான்கள் சேதுபதி, மதுரை, தஞ்சை நாயக்க அரசர்களின் அரண்மனைகளில் முக்கியப் பணிகளில் பணியாற்றினர்.

விஜயநகர அரசின் காலத்தில் வேளாண் சாராத கைவினைத் தொழில் உற்பத்தி வியத்தகு வளர்ச்சியை அடைந்தது. பதிமூன்றாம் நூற்றாண்டு வரை பொருளாதாரம் பெருமளவில் வேளாண்மையைச் சார்ந்திருந்தது. பணப் பொருளாதாரத்தின் தொடக்கத்தோடு, நாணயப் பணத்தின் பயன்பாடும், அதன் செலாவணியும் பலமடங்காகப் பெருகியது. சமூகத்தில் நெசவு செய்வோர் உலோக வேலை செய்வோர். கட்டடக் கலைஞர்கள் போன்ற கைவினைஞர்கள் முக்கியத்துவம் பெற்றனர். வேளாண் அல்லாத பிரிவுகளைச் சார்ந்த “பட்டடை“ அல்லது “காஸயவர்க்கம்“ என்றழைக்கப்பட்ட இவர்கள் வரிகளைப் பணமாகவே வழங்கினர். தமிழகத்தின் வடபகுதி, ராயலசீமை, அந்திரக் கடற்கரைப்பகுதி ஆகியவற்றில் பெரும் எண்ணிக்கையில் வணிகமையங்களும் நெசவு மையங்களும் உருவாயின. இயல்பாகவே தென்னிந்தியத் துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பண்டங்களில் ஜவுளி முக்கியப் பண்டமாக விளங்கியது. பதினாறாம் நூற்றாண்டிலிருந்து ஜவுளி வணிகமானது இந்தியாவிற்கு வந்த போர்த்துகீசியர் மற்றும் ஏனைய ஐரோப்பிய வணிகர்களைப் பெரிதும் ஈர்த்த ஒன்றாகும்.

## பாடம் 13
## பண்பாட்டு ஒருமைப்பாடு : இந்தியாவில் பக்தி இயக்கம்

**அறிமுகம்:**

பிற பண்பாட்டு மரபுகளைப் போலவே, மதமும் தனித்து இருப்பதில்லை. நிலவும் சூழ்நிலைகளோடு தன்னை தகவமைத்துக் கொண்டு மக்களின் சமூக, ஆன்மிகத் தேவைகளை மதமும் நிறைவு செய்கிறது. நீண்ட பண்பாட்டு வரலாற்றைக் கொண்டிருக்கும் நாடான இந்தியாவில், மதங்கள் பல்வகைப்பட்ட மரபுகளோடு தொடர்புகொண்டு வளர்ந்துள்ளன. ஆரிய மொழி பேசிய மக்களின் வருகையோடு இந்தியா வந்த வேத மதம் சிந்து நாகரிகத்தின் பல கூறுகளை உள்வாங்கிக் கொண்டது. ஹரப்பாவில் தாய்த் தெய்வ வழிபாடு தொடங்குகிறது. சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட ஒரு சிற்பம் சிவன் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்திரன், வருணன், அக்னி ஆகியோரே முக்கிய வேதக் கடவுள்கள் ஆவர். சிவன், விஷ்ணு வழிபாடு பின்னர் வளர்ந்தனவாகும். பொது ஆண்டுக்கு முந்திய முதலாயிரமாண்டின் (கி.மு. 1000) இடைப்பகுதியில் சிந்து கங்கைச் சமவெளியில் பௌத்தம், சமணம் எனும் இரு மகத்தான மதங்கள் உருவாயின. (ஆசீவகம் போன்ற ஏனைய புறக்கோட்பாட்டு மதங்கள் போன்றே) இவை வைதீக வேதமத நடைமுறைகளை எதிர்த்தன.

இதைப் போலவே பொது ஆண்டின் முதலாயிரமாண்டின் இடைப்பகுதியில் நாட்டின் தென்பகுதியில் பக்தி இயக்கம் எனும் வடிவத்தில் ஓர் உன்னதமான சமய மரபு செழித்தோங்கியது. ஒரு மதக் கோட்பாடான, பக்தியின் பொருள் ஆழமான பற்றுடன் அனைத்துக்கும் மேலான இறைவனைச் சரணடைந்து முக்தி பெறுதலாகும். பகவத்கீதை போன்ற மத நூல்கள் பக்திக்கான பாதை அல்லது பக்தி மார்க்கத்தைப் பற்றி பேசியதாலும் இவ்வியக்கம் வலுப்பெற்றது. இக்காலப் பகுதியில்தான் பௌத்தம், சமணம் ஆகியவற்றின் ஒழுக்கநெறி, கடவுள் மறுப்புக் கோட்பாடுகளுக்கு எதிராகவே இவ்வியக்கம் தோன்றியது என வரலாற்றறிஞர்கள் வாதிடுகின்றனர். வேத இறையியல், இவை இரண்டிலிருமிருந்தும் சில கூறுகளை எடுத்து இணைத்துக் கொண்டது. ஆதிசங்கரர் புறமதக் கோட்பாடுகளை எதிர்கொள்ளும் பொருட்டு இந்து மதத்திற்கு “அத்வைதம்“ எனும் தத்துவக் கோட்பாட்டை வழங்கினார்.

அது அறிவார்ந்தவர்களின் நிலையில் செல்வாக்குப்பெற்றது. புகழ்பெற்ற சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் உள்ளத்தை உருக்கும் பாடல்களால் பக்திக் கோட்பாட்டிற்கு ஒரு வடிவம் கொடுத்து மக்களின் ஆதரவைப் பெற்றனர். வரலாற்றாய்வாளர்கள் இதனைப் பக்தி இயக்கம் என அழைக்கின்றனர். பக்தி இயக்கம் அரச ஆதரவோடு சமூகம், அரசியல், மதம், பண்பாடு, மொழி ஆகிய தளங்களில் மிக ஆழமான, நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியது. இவ்வாறு தென்னிந்தியா 7ஆம் நூற்றாண்டிலிருந்து 10 ஆம் நூற்றாண்டு வரை மத மறுமலர்ச்சியின் இல்லமாக விளங்கியது. இராமானுஜர் போன்ற இறையியலாளர்களால் அது பதினோராம் நூற்றாண்டில் ஒரு தத்துவ, சிந்தாந்த இயக்கமாக மறுவடிவம் கொண்டது. இராமானுஜர் சமய சமத்துவத்திற்குப் பெரும் ஆதரவாளராகத் திகழ்ந்தார். பக்தி வழிபாடு அடியார்கள் கொடுத்த ஊக்கத்தினால் 14ஆம் நூற்றாண்டில் இந்தியா முழுவதிலும் பரவியது. நாம் இங்கு பக்தி இயக்கத்தின் பொதுவான கூறுகளையும் அதை முன்னெடுத்த முக்கியமானவர்களையும், அதன் இருவகையான போக்குகளையும் மக்களின் சமூகப் பண்பாட்டு வாழ்வில் அது ஏற்படுத்திய தாக்கத்தையும் பகுத்தாய்வு செய்ய உள்ளோம்.

## தென்னிந்தியாவில் பக்தி வழிபாடு:

ஒரு பழங்குடிச் சமூகம் நன்கு கட்டமைக்கப்பட்ட சமூகமாக மாற்றம் பெறும்பொழுதும் அதிகாரமிக்க முடியாட்சி முறையிலான நிர்வாக முறை உருவாகும்போதும் தனது அதிகாரத்தை நியாயப்படுத்திக்கொள்ள அதற்கு ஏதாவது ஒரு மதத்தை ஆதரிக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. பௌத்தமும் சமணமும் பெரும்பாலும் வணிக வர்க்கத்தினரால் ஆதரிக்கபட்டன. அரசுகளும் அவற்றை ஆதரித்தன. பக்தி இயக்கம் நிலவுடைமைச் சாதிகளிடையேயிருந்து தோன்றியதால் அது பௌத்தத்தையும் சமணத்தையும் விமர்சனம் செய்தது. இதன் விளைவாக அரசர்களின் ஆதரவைப் பெறுவதில் மோதல்கள் ஏற்பட்டன. பக்தியானது சாதி, பாலின வேறுபாடுகளின்றி அனைவராலும் அணுக இயலும் என்ற நிலையை ஏற்படுத்தியதன் மூலம் சமணமும் பௌத்தமும் பிராமணர்களின் அதிகாரத்தை எதிர்த்தன.

## பௌத்த மற்றும் சமணத்தோடு மோதல்:

சான்றுகள்: பக்தி இலக்கியங்கள், பெரும்பாலும் புராணங்கள், திருத்தொண்டர்களைப் பற்றிய வரலாற்று நூல்கள் ஆகியவை தமிழகத்தில் நடைபெற்ற மத மோதல்கள் குறித்த செய்திகளை வழங்குகின்றன. தேவாரமானது அப்பர் (திருநாவுக்கரசர்) சம்பந்தர் (திருஞான சமபந்தர்) சுந்தரர் ஆகிய மூவரால் எழுதப்பட்டப் பாடல்களைக் கொண்டவை. இவை மூன்றும் சேர்ந்து பன்னிரு சைவத் திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளாக இடம் பெறுகின்றன. மாணிக்கவாசகரின் பாடல்கள் எட்டாவது திருமுறை ஆகும். இவற்றில் பல பாடல்கள் பௌத்தர்களையும் சமணர்களையும் பற்றிய விமர்சனங்களை விவரிப்பவையாகும். அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றி கூறும் சேக்கிழாரின் பெரிய புராணம் பக்தி இயக்கம் குறித்த முக்கியச் சான்றாகும். வைணவ அடியார்களான ஆழ்வார்களின் பாடல்கள் நாலாயிர திவ்வியப்பிரபந்தமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. பக்தி இயக்கப் பாடல்களின் முக்கியத்துவம் யாதெனில் அவை இன்றுவரை மக்களால் படிக்கப்படுகின்றன, பாடப்படுகின்றன, வணங்கப்படுகின்றன. அவை தமிழ் இலக்கிய மரபின் முக்கியப் பகுதியாகவும் விளங்குகின்றன.

## ஆரம்ப கால மோதல்கள்:

பல்லவர் காலத்தில்தான் முதன் முதலாகச் சைவமும் வைணவமும் ஒருபுறமாகவும் சமணம் மறுபுறமாகவும் இருந்து மோதிக் கொண்டன.

முதலாம் மகேந்திரவர்மப் பல்லவர் சமணத்தைப் பின்பற்றியதால் ஏனைய மதங்களைச் சேர்ந்தவர்களைத் துன்புறுத்தினார். அப்பர் தொடக்கத்தில் சமணராக, தர்மசேனன் எனும் பெயருடனிருந்தார். பின்னர் தனது தமக்கையின் செல்வாக்கால் சைவமதத்தைத் தழுவினார். சில சமணர்களால் தூண்டப்பட்ட மகேந்திரவர்மன் அப்பரை மீண்டும் சமணராக மாறும்படி வற்புறுத்தினார். அப்பர் மறுத்த போது துன்புறுத்தப்பட்டார். முடிவில் மகேந்திரவர்மனே சைவமதத்திற்கு மாறியபோது பிரச்சனை முடிவுக்கு வந்தது. மரபுசார்ந்த ஒரு கதையின் படி சம்பந்தர் இறையியல் வாதங்களில் சமணர்களை வென்றதால் தோற்றுப்போன சமணர்கள் கழுவில் ஏற்றப்பட்டனர். கூன் பாண்டியன் எனவும் அறியப்பட்ட மாறவர்மன் அரிகேசரி (640 – 670) சைவத்திலிருந்து சமணத்திற்கு மாறிய பின்னர் சம்பந்தருடைய செல்வாக்கால் மீண்டும் சைவரானார். ஒரு சைவக் கதையின்படி சைவத்திற்குத் திரும்பிய பின்னர்

சமணர் பலரை மதுரை மாவட்டத்திலுள்ள சமந்தம் என்னும் ஊரில் கொல்லும்படி ஆணையிட்டதாகவும் தெரிகிறது.

சைவ சித்தாந்தம் போன்ற தத்துவ ஆய்வு நூல்கள் பௌத்த சமண தத்துவ மோதல்களை விரிவாக விளக்குகின்றன. சைவ சித்தாந்த நூல்களில் ஒன்றான சிவஞானசித்தியாரில் “பரபக்கம்“ என்ற பெயரில் தனிப் பிரிவொன்றுள்ளது. “பரபக்கம்“ என்ற பெயரில் தனிப் பிரிவொன்றுள்ளது. அது பௌத்த சமண வாதங்களை முற்றிலுமாக எதிர்க்கின்றது. பக்தி இலக்கியங்களும் திருத்தொண்டர்களைப் பற்றிய நூல்களும் மோதல்கள் ஏற்பட்ட நிகழ்வுகளையும் புறச்சமயத்தார் தோற்கடிக்கப்பட்டதையும் விளக்குகின்றன. அவ்வாறான மோதல்கள் இறுதியில் வன்முறை சார்ந்ததாக மாற்றம் பெற்று பல சமணத் துறவிகள் கழுவில் ஏற்றப்பட்டதில் முடிந்ததெனக் கல்வெட்டுச் சான்றுகள் கூறுகின்றன.

தத்துவம் சார்ந்த வாதங்கள் ஒரு பக்கம் நடைபெற்றாலும் பக்தி இயக்கம் மன்னர் ஆதரவைப் பெற்றிருந்ததன் விளைவாக பௌத்தமும் சமணமும் தோல்வியைச் சந்தித்தன. பதினோராம் நூற்றாண்டில் இவ்விரு மதங்களும் முற்றிலுமாகத் தோற்கடிக்கப்பட்டன. பௌத்தம் தமிழகத்திலிருந்தும் இந்தியாவிலிருந்தும் முற்றிலுமாகத் துடைக்கப்பட்டாலும் தமிழ்மொழி பேசுகின்ற சமணர்கள் தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் இன்றுவரை வாழ்ந்து வருகின்றனர். சமண பௌத்த கோவில்களும் கருவறைகளும் பெரும்பாலும் சிதைக்கப்பட்டன, அல்லது பயன்பாட்டில் இல்லாமல் ஆயின. கலைப்பொருட்கள் பல புறக்கணிக்கப்பட்டன அல்லது கொள்ளை போயின. இன்றைய அளவிலும் தமிழ்நாட்டின் பலபகுதிகளில் தலைப்பகுதி உடைக்கப்பட்ட புத்தர், தீர்த்தங்கரர் சிலைகளைக் காண முடிகிறது.

இவ்வாறு இருந்தபோதிலும் வைதீகமும் புறச் சமயங்களும் ஒன்றோடொன்று கருத்து பரிமாற்றம் செய்துகொண்ட அடையாளங்களும் காணப்படுகின்றன. பௌத்தம், சமணம் ஆகியவற்றின் மையக்கருத்தான துறவறத்தை சைவமும், வைணவும் ஏற்றுக்கொண்டன. பௌத்தம், வைணவம் ஆகிய இரண்டும் எளிமையையும் உலக சுகங்களை மறுப்பதையும் முன்னிறுத்தியபோது பக்தி இயக்கம், விழாக்கள். சடங்குகள் என வாழ்க்கையைக் கொண்டாடியது. சைவ உணவு, கொல்லாமை ஆகிய மதிப்பு வாய்ந்த நெறிகளும் பரஸ்பர செல்வாக்கின் விளைவாக ஏற்பட்டு இருக்கலாம். புறச் சமயங்கள் வடமொழியான பிராகிருதத்தைப் பயன்படுத்தியதற்கு எதிர்வினையாக தமிழ்மொழிக்கு மேலதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது. பௌத்தமும் சமணமும் ஊழ்வினைக் கோட்பாட்டை பேசியபோது பக்தி இயக்கத்தை விளக்கியவர்கள் சிவனையும் விஷ்ணுவையும் சரணடைவதில் மூலம் விதியை வெல்லமுடியும் எனக் கூறினர். பௌத்தம், சமணம் ஆகியவற்றுடன் ஏற்பட்ட மோதலின் விளைவாக வேதமதங்கள் சில மாறுதல்களுக்கு உள்ளாயின.

**பக்தி இயக்கம் வட இந்தியாவில் பரவுதல்:**

தென்னிந்தியாவில் பக்தி இயக்கம் அதன் புகழின் உச்சத்தை எட்டிய போது பக்திக் கோட்பாடானது வைணவப் புலவர்களாலும் அடியார்களாலும் தத்துவத் தளத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு விளக்கப்பட்டது. இராமானுஜர் விசிஷ்டாத்வைதம் என்னும் தத்துவத்தை உருவாக்கினார். அவருடைய போதனைகள் பரமாத்மாவும் ஜீவாத்மாவும் இரண்டல்ல ஒன்றே என்ற ஆதி சங்கரரின் கருத்தை மறுத்தன.

தமிழகத்தில் பக்தி இயக்கம் ஏழாமட் நூற்றாண்டிலேயே செழித்தோங்கி இருந்த நிலையில் வட இந்தியாவில் பதினைந்தாம் நூற்றாண்டில்தான் அது முழு வேகத்தைப் பெற்றது. இக்காலத்தில் பெரும் எண்ணிக்கையில் பக்திப் பாடல்கள் எழுதப்பட்டன. சாதியை அடிப்படையாகக் கொண்ட பிரிவினைகள், ஒதுக்கி வைத்தல், பல கடவுள்களை வணங்கும் முறை, உருவ வழிபாடு போன்றவற்றால் ஏற்பட்டிருந்த சமூகப் பின்னடைவுகளுக்கு எதிராக வட இந்தியாவில் பக்தி இயக்கம் குரல் கொடுத்தது. மதச் சான்றோர்கள் மூடநம்பிக்கைகளையும் தேவையற்ற சடங்குகளையும் விமர்சித்தனர். வைணவ பக்தி இயக்கத்தோடு இணைந்து ஒரு கடவுள் கோட்பாட்டை முன்வைத்தவர்கள் அன்றைய அளவில் முக்கிய மதங்களாகத் திகழ்ந்த வைதீகம், இஸ்லாம் ஆகியவற்றிலிருந்து விலகி சுதந்திரப் பாதையைப் பின்பற்றினர். இவ்விரு மதங்களிலிருந்த மூடநம்பிக்கைகளையும் பழமைவாதத்தையும் விமர்சித்தனர்.

துருக்கியப் படையெடுப்போடு கூடிய இஸ்லாமின் வருகை வேத மதங்களுக்கும் குருமார்களுக்கும் பெரும் சவாலாகத் திகழ்ந்தது. பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் இஸ்லாம் இந்தியாவின் பல பகுதிகளில் பரவியது. அதிகமான இந்தியர்கள் முஸ்லீம்களாயினர். இஸ்லாம் அரசு அதிகாரத்தோடு சமத்துவத்தை முன்வைத்தது இந்தியச் சமூகத்தில் கீழ்நிலையில் இருந்தோரைக் கவர்ந்தது. புதிய அரசியல் சமூகச் சூழல் பிரதான மதங்களின் சட்டதிட்டங்களை ஏற்றுக்கொள்ளாதவர்களை ஓர் இயக்கமாக்கியது. இவ்வியக்கம் சாதி முறைக்கு எதிரானதாகவும், வேதங்களுக்கும் புராணங்களுக்கும் எதிரானதாகவும் உருவானது. பண்பாட்டுத் தளத்திலும் இவ்வியக்கம் பிராந்திய மொழிகளின் வளர்ச்சி இந்துஸ்தானி இசையின் வளர்ச்சி போன்ற தாக்கங்களை ஏற்படுத்தியது.

முஸ்லீம்களின் அரசியல் அதிகாரத்திற்கு எதிரான இந்துக்களின் எதிர்வினை பன்முகத் தன்மை கொண்டதாய் இருந்தது. ஒருபுறம் புதிய மதத்திற்கு எதிராக வெறுப்பினைக் கொண்டிருந்தபோதும், புதிய சவால்களை எதிர்கொள்ளும் அளவுக்கு வலிமையை பெருக்க வேண்டுமெனின் இந்து மதத்திற்குள் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற உணர்வும் தோன்றியது. இதன் முக்கிய விளைவு ஒருமைப்பாட்டை வற்புறுத்துகிற இயக்கங்கள் மற்றும் அவற்றின் தலைவர்களின் தோற்றமாகும்.

**சூபியிஸத்தின் தாக்கம்:**

இந்து மதத்தில் தோன்றிய பக்தி இயக்கத்திற்கு இணையாக இஸ்லாம் மதத்தில் அதைப் போன்ற கருத்துக்களை சூபியிஸம் கொண்டிருந்தது. சூபி, வாலி, தர்வீஷ், பக்கீர் ஆகிய பெயர்கள் இஸ்லாமிய ஞானிகளைக் குறிப்பதாகும். இவர்கள் தியானம், யோகப் பயிற்சிகள், துறவறம், தியாகம் போன்றவற்றின் மூலம் உள்ளுணர்வைப் பெருக்கி இறை நிலையை உணர்ந்தவர்களாவர். 12 ஆம் நூற்றாண்டில் இஸ்லாமியரின் சமூக வாழ்வில் சூபியிஸம் செல்வாக்குப் பெற்ற சக்தியாக விளங்கியது.

சூபியிஸம் இஸ்லாமின் உள்ளுணர்வு சார்ந்த உள்முகமான, ஆச்சரியமான மற்றொரு பக்கமாகும். மதம், சமூக வேறுபாடுகள் என்ற எல்லைகளைத் தாண்டி சூபிகள் ஒட்டுமொத்த மனித குலத்தின் மேம்பாட்டிற்காகப் பணிசெய்தனர் தத்துவ ஞானிகளான இவர்கள் தங்கள் பரந்த மனப்பான்மைகளாகப் பெயர் பெற்றனர். இறைவனை அனைத்துக்கும் மேலான அழகின் உச்சம் என சூபிகள் கருதினர். அவ்வழகைக் கண்டு ஆச்சரியப்படல் வேண்டும், அதை நினைத்து மகிழ்ச்சி கொள்ளுதல் வேண்டும், முழுக்கவனத்தையும் இறைவன்மேல் குவித்தல் வேண்டும்

என்றனர். அவர்கள் கடவுளை மஸ்க் (நேசிக்கப்பட வேண்டியவர்) என்றும் தங்களை ஆசிக் (நேசிப்பவர்கள்) என்றும் நம்பினர். பின்னாளில் சூபியிஸம் பல பிரிவுகளைக் கொண்டதாக மாறியது. சிஸ்டி, சுரவார்டி, குவாதிரியா, நஸ்பந்தி ஆகியன முக்கியப் பிரிவுகளாகும்.

சூபியிஸம் நகரப் புறங்களிலும் கிராமப்புறங்களிலும் வேர் கொண்டது. சமூக, அரசியல், பண்பாட்டுத் தளங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சூபியிஸம் அனைத்து விதமான மதச்சம்பிரதாயம், பழமைவாதம் வெளிவேடம் ஆகியவற்றை எதிர்த்தது. ஆன்மீகப் பேரின்ப நிலையை மட்டும் இலக்காகக் கொண்ட புதிய உலக ஒழுங்கை உருவாக்க ஆசை கொண்டது. அரசியல் அதிகாரத்திற்காக மோதிக்கொள்வதே இயல்பாக இருந்த ஒரு சூழலில், போர்களாலும் சூபிகள் அமைதியையும் மகிழ்ச்சியையும் நிலைநாட்டப் பணியாற்றினர். சூபிகளின் மகத்தான பங்களிப்பு இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையேயான வெறுப்பின் கூரிய முனைகளை மழுங்கடித்து அவர்களிடையே சகோதரத்துவத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தியதாகும்.

**பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகள்:**

1. பக்தி இயக்கச் சீர்த்திருத்தவாதிகள் ஒரு கடவுள் கொள்கையைப் போதித்தனர்.
2. பிறப்பு இறப்பு எனும் சுழற்சியிலிருந்து விடுபட முடியும் என நம்பினர். இறைவனிடம் ஆழமான பற்றும் நம்பிக்கையும் கொள்வதன் மூலம் முக்தி அடைய முடியும் எனும் கருத்தை முன்வைத்தனர்.
3. இறைவனுடைய அருளைப் பெற அர்ப்பணிப்பை வற்புறுத்தினர்.
4. குருவானவர் வழிகாட்டியாகவும் ஆசிரியராகவும் இருத்தல் வேண்டும்.
5. உலக சகோதரத்துவம் எனும் கொள்கையைப் போதித்தனர்.
6. உருவ வழிபாட்டை விமர்சனம் செய்தனர்.
7. ஆழ்ந்த பக்தியுடன் பாடல்கள் பாட வேண்டுமென வலியுறுத்தினர்.
8. மனிதர்கள் உட்பட அனைத்து உயிரினங்களும் கடவுளின் குழந்தைகளே எனக் கூறினர். பிறப்பின் அடிப்படையில் மக்களைப் பிரித்துவைக்கும் சாதிமுறையைக் கண்டனம் செய்தனர்.
9. சடங்குகள், சம்பிரதாயங்கள், புனிதயாத்திரைகள், விருந்துகள் ஆகியவற்றைக் கண்டனம் செய்தனர்.
10. எந்த மொழியையும் புனிதமான மொழி என அவர்கள் கருதவில்லை. மக்களின் மொழிகளில் பாடல்கள் இயற்றினர்.

## பக்தி இயக்கச் சீர்திருத்தவாதிகள்
### கபீர்

இடைக்கால இந்தியாவின் மிக முக்கியமான பண்பாட்டு ஆளுமையாகக் கபீர் கருதப்படுகிறார். புனிதங்கள் எனக் கருதப்பட்டவற்றை கேள்விக்குறியாக்கும் அவருடைய பாடல்கள் சடங்குகள், சம்பிரதாயங்களைக் கேலிக்குரியதாக்கி, கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார் என்ற கருத்தை முன்வைத்தன. இவருடைய கருத்துகளால் கவரப்பட்ட மக்கள் இவரைப் பின்பற்றினர். அவருடைய வாழ்க்கையைப் பற்றி மிகக் குறைவான செய்திகளே கிடைத்துள்ளன. நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த இவர் இராமானந்தரின் சீடராக, அவரிடமிருந்து வேதாந்தத் தத்துவத்தைக் கற்றுக் கொண்டார் என்று சொல்லப்படுகிறது. பிரபலமான, தஸ்கிரா - இஸிந்த் (இஸ்லாமிய துறவிகளின் வாழ்க்கை) எனும் நூல் அவரை சூபி துறவியான ஷேக் தகி என்பவரின் சீடராகச் சித்தரிக்கிறது. முற்போக்கான மதச் சிந்தனைகளைக் கொண்ட அவர் இந்து இஸ்லாமிய மதங்களிலுள்ள பிரிவினை வாதங்களையும், குறுகிய மனப்பான்மைகளையும் எதிர்த்தார். இந்து சமூகத்தின் கீழ்தட்டுகளைச் சார்ந்த மக்கள் அவருடைய கருத்துக்களால் கவரப்பட்டனர். உருவ வழிபாடு, பல கடவுள் வழிபாடு, சாதிமுறை ஆகியன ஆகியன கைவிடப்பட வேண்டுமென உறுதிபடக் கூறினார். அதே சமயத்தில் இஸ்லாமிலிருந்த சம்பிரதாயங்களையும் கடுமையாக விமர்சித்தார். கடவுளின் மேல் உண்மையான பற்றுதலைக் கொண்டிருந்த அவர் இந்துக்களையும் முஸ்லீம்களையும் பிரிக்கும் தடைகளை உடைக்க முயன்றார். கடவுளை அடைய அவர் கண்டடைந்த பாதை கீழ்நிலையில் உள்ளோர்க்கும் மேல்நிலையில் உள்ளோர்க்கும் ஏற்புடையதாயிருந்தது. அவருடைய பாடல்கள் இன்றுவரை இந்தியாவின் பலபகுதிகளில் பாடப்பட்டு வருகின்றன.

### ரவிதாஸ்:

ரவிதாஸ் 15, 16ஆம் நூற்றாண்டின் பக்தி இயக்கத்தைச் சேர்ந்த கவிஞரும் துறவியுமாவார். பஞ்சாப், ராஜஸ்தான், மகாராஷ்டிரம், மத்திய பிரதேசம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களால் குருவாக வணங்கப்படுபவர். அவர் இயற்றிய பக்திப் பாடல்கள் பக்தி இயக்கத்தின் மேல் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தின. ரவிதாஸின் வாழ்க்கை விவரங்களைப் பற்றி உறுதியான செய்திகள் இல்லை. கிடைத்துள்ள செய்திகளிலும் முரண்பாடுகளுள்ளன. பெரும்பான்மையான வரலாற்றறிஞர்கள் அவரை தோல் பதனிடுவோர் குடும்பத்தைச் சேர்ந்தவரெனக் கூறியுள்ளனர். இவர் பக்தி இயக்கத் துறவியும் புலவருமான இராமானந்தரின் சீடர்களின் ஒருவராவார். சீக்கியரின் மதப் பாடல்களில் ரவிதாசரின் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. சாதி அடிப்படையிலான சமூகப் பிரிவுகள் ஆண், பெண் சமத்துவமின்மை ஆகியவற்றுக்கு எதிராகப் பேசினார். ஆன்மீக விடுதலையைப் பெறும் முயற்சியில் ஒற்றுமையை ஊக்குவித்தார்.

### குரு நானக்:

குரு நானக் மிகப்பெரும் அமைப்பின் செல்வாக்குமிக்க துறவியாவார். அவரால் நிறுவப்பட்ட சீக்கிய மதம் அவருடைய, ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பண்பாட்டு ஒற்றுமைச் சிந்தனையைப் பறைசாற்றுகிறது. ஒரு கடவுள் கோட்பாட்டைக் கொண்ட சீக்கிய மதம் கடவுள் ஒருவரே என்ற கருத்தையும், ஒழுக்க நெறிகளைத் தவறாமல் பின்பற்ற வேண்டுமென்பதையும் வலியுறுத்திக் கூறியது. இரண்டு நூற்றாண்டுகளில், பத்து சீக்கிய குருக்களின் தலைமையில் சீக்கிய மதம் பஞ்சாப் முழுவதும் விரிவடைந்து பெருவாரியான மக்களை ஈர்த்தது.

சீக்கிய மதப் போதனைகள் வலிமை வாய்ந்த சமூக உணர்வை ஏற்படுத்தின. அக்காலத்தில் நிலவிய அரசியல் சூழல் முகலாயப் பேரரசுடன் பகைமையை உருவாக்கி அடக்குமுறைக்கு வழி வகுத்து இறுதியில் குருக்களின் உயிர்த்தியாகத்தில் முடிந்தது. குரு கோவிந்த சிங் சீக்கிய மதத்தின் கடைசி குரு ஆவார். அவருக்குப் பின்னர் கிரந்த சாகிப் (புனித நூல்) குருவாகக் கருதப்பட்டது. குரு நானக்கின் போதனைகள் ஆதிகிரந்தகம் ஆகும். ஏனைய சீக்கிய குருக்களின் போதனைகளும், இராமானந்தர், நாமதேவர், கபீர், ஷேக் பிரித் துறவிகளின் போதனைகளும் ஆதி கிரந்தத்தோடு சேர்த்து குரு கிரந்த சாகிப் எனப்படுகிறது.

**சைதன்யர் (1485 – 1533):**

வங்காளத்தைச் சேர்ந்த சைதன்யர் பக்தி இயக்கத்தின் ஒரு குறிப்பிட்ட நிலையை பிரதிபலித்தார். கபீர் மற்றும் அவரை தொடர்ந்து வந்த பக்தி இயக்கத் துறவிகளின் போதனைகளிலிருந்து அவர் வேறுபட்டார். அனைத்து வேறுபாடுகளையும் கடந்து நிற்கும் இறைவனை புரிந்துகொள்ள மக்களை ஒருங்கிணைத்த கபீரைப் போலல்லாமல் சைதன்யர் ஏனைய கடவுள்களைக் காட்டிலும் கிருஷ்ணர் உயர்வானவர் எனக் கொண்டார். வேறு வகையில் சொல்வதென்றால் சைதன்யருடைய இயக்கம் ஒருமைப்பாட்டிற்கான இயக்கமல்ல. மாறாக இது ஒரு மீட்டெடுப்பு இயக்கமாகும். விஷ்ணுவின் பல வடிவங்களில் பரவசத்தைத் தரும் கிருஷ்ணரின் வழிபாட்டுக்குத் திரும்புவதாகும்.

வங்காள வைணவர்கள் இந்துமதத்தைச் சீர்திருத்த முயலவில்லை. மாறாக விஷ்ணுவின்மேல் பக்தி கொள்ள வற்புறுத்தினர். இருந்தபோதிலும் பல சமூகங்களிலிருந்து சைதன்யருக்குச் சீடர்கள் உருவாயினர். சைதன்யர் இறை வழிபாட்டில் குழுவாகக் கூடிப் பாட்டிசைத்து அத்துடன் பரவசத்தை ஏற்படுத்தும் நடனமாடு பழக்கத்தைப் பிரபலமாக்கினார். அவருடைய இயக்கம் வங்காளத்திலும் ஒரிசாவிலும் பிரபலமானது. இது பதினைந்து பதினாறாம் நூற்றாண்டுகளில் நடைபெற்ற பக்தி இயக்கத்தின் இருவேறு நிலைகளிடையே இருந்த வேறுபாடுகளை உணர்த்துகிறது. எங்கெல்லாம் சமூக சமத்துவம் பற்றிய அக்கறையும் கவலையும் இருந்ததோ அங்கு இந்துமதத்தின் மீது இஸ்லாம் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்தியது.

**நாமதேவர்:**

மகாராஷ்ட்டிராவில் சதாரா மாவட்டத்தில் நரஸ் வாமணி எனும் கிராமத்தில் தையல் கலைஞரின் மகனாகப் பிறந்த நாமதேவர், ஜனதேவர் எனும் துறவியினால் ஈர்க்கப்பட்டு பக்தி இயக்கத்தில் பங்கெடுத்தார். பந்தர்பூரிலுள்ள விட்டலா (விஷ்ணு) வின் மேல் தீவிர பக்தி கொண்ட நாமதேவர் தன் சீடர்களுடன் பெரும்பாலான நேரத்தை இறை வழிபாட்டிலும் தானே இயற்றிய பாடல்களைப் பாடுவதிலும் கழித்தார். மராத்திய, இந்திய மொழிகளில் “அபங்க“ (மகாராஷ்டிராவைச் சேர்ந்த இந்த மத குருமார்கள் இறைவனைப் புகழ்ந்து எழுதிய பாடல்கள்) என்றழைக்கப்பட்ட பாடல்களை எழுதினார். அவர் பஞ்சாப் வரை பயணம் மேற்கொண்டார். பஞ்சாபிலும் அவருடைய போதனைகள் பிரபலமாயின. பின்னர் அவை குருகிரந்தத்தில் சேர்க்கப்பட்டன. ”முழுமையான இதயத்தோடு இறைவனை வணங்குங்கள், மதப் பணி சார்ந்த வாழ்வை வாழுங்கள். உறுதியான பக்தியுடன் அனைத்தையும் இறைவனிடம் அர்ப்பணியுங்கள்“ என்பனவே அவருடைய செய்திகளின் சாரமாகும்.

**இராமானந்தர்:**

சைதன்யர் மாதாவாச்சாரியாரின் (வேதாந்தத்தில் துவைதக் கொள்கையை முன்னிறுத்தியவர்) தத்துவப் பள்ளியைச் சேர்ந்தவர். இராமானந்தர் இராமானுஜரின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர். பிரயாகையில் (அலகாபாத்) பிறந்த இராமானந்தர் காசியில் இந்து மதத் தத்துவத்தில் உயர்கல்வியைக் கற்று இராமானுஜரின் பள்ளியில் போதகராகப் பணியிலமர்ந்தார். வட இந்தியாவின் புனிதத் தலங்களுக்குச் சென்று வந்த அவர் வைணவத்தை போதித்தார். இராமர் சீதை ஆகியோரிடம் பக்தி வைத்தல் என்று தானே உருவாக்கிய புதிய கோட்பாட்டின் அடிப்படையில் வைணவத்தில் முற்போக்கான மாற்றங்களை அறிமுகப்படுத்தினார். கடவுளின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கையைப் போதித்தார். சாதிமுறையை நிராகரித்த அவர் குறிப்பாக இந்து மதத்தின் பாதுகாவலர்கள் எனக் கூறிக்கொள்ளும் பிராமணர்களின் மேலாதிக்கத்தை எதிர்த்தார். சமூகத்தின் அடித்தளத்தைச் சேர்ந்த மக்கள் இவரைப் பின்பற்றினர். ரவிதாஸ், கபீர் மற்றும் இரண்டு பெண்கள் அவருடைய பன்னிரண்டு சீடர்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தனர் என்பது மரபு. பிராந்திய மொழியான இந்தியில் தனது கொள்கைகளை போதித்தவர்களில் முதலாமவர் இராமானந்தரே. இதன் காரணமாகவே அனைத்துத் தரப்பு மக்களாலும் அறியப்பட்டவரானார். இவருடைய சீடர்கள் மதிவாதிகள், முற்போக்கர்கள் என இரு பிரிவாகப் பிரிந்தனர். துளசிதாசரை உள்ளடக்கிய முற்போக்குப் பிரிவினர் இந்துக்களும் முஸ்லீம்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் புதிய சிந்தனையை உருவாக்க பெருமுயற்சி எடுத்தனர்.

**மீராபாய் (1498 – 1546):**

மீராபாய் ராஜஸ்தானில், மேர்தா மாவட்டத்தில் குத் எனும் ஊரில் பிறந்தார். ஜோதிபூர் அரசை நிறுவிய ராணா ஜோதாஜியின் கொள்ளுப் பேத்தி ஆவார். இவர் மேவாரின் அரசனான ராணா சங்காவின் மகன் போஜராஜன் என்பாரை மணந்தார். கிருஷ்ணரின் தீவிர பக்தையாக மாறிய அவர் அரண்மனையைவிட்டு வெளியேறி, அன்பே கடவுளை அடையும் வழியென போதனை செய்யவும் பஜனைப் பாடல்களைப் பாடவும் தொடங்கினார். கடவுளை கிருஷ்ணர் எனும் பெயரில் வணங்க வேண்டுமென்றும், பிறப்பு, செல்வம், வயது, பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் கிருஷ்ணருடைய அருள் யாருக்கும் மறுக்கப்படக் கூடாது எனப் போதித்தார். அவருடைய பக்திப் பாடல்களும் இசைப்பாடல்களும் வளமான பண்பாட்டுப் மரபாகும். அவருடைய போதனைகள் தெய்வீகபக்தி என்னும் செய்தியை ஒவ்வொரு வீட்டிற்கும் கொண்டு சென்றது.

**சூர்தாஸ்:**

அக்பரின் அவையில் இடம் பெற்றிருந்த சூர்தாஸ் ஆக்ராவின் பார்வைத் திறனற்ற பாடகன் எனப் பலராலும் அறியப்பட்டவர். சூர்தாஸ் தில்லி சுல்தானியர் காலத்து, வைணவப் போதகரான வல்லபாச்சாரியாரின் சீடர் என நம்பப்படுகிறது. வல்லபாச்சாரியார் புஷ்தி மார்க்கத்தை (அருள் பாதை) நிறுவியவராவார். சூர்தாஸ் அன்பெனும் மதத்தையும் தனிப்பட்ட கடவுளிடம் பக்தியோடிருப்பதையும் போதித்தார். கடவுள் கிருஷ்ணரைக் குறித்து இந்தி மொழியில் உணர்வுபூர்வமான பாடல்களை இயற்றினார். சூர்தாஸின் கவிதைகளில் கிருஷ்ணருடைய "பாலலீலா" முக்கியக் கருப்பொருளாக விளங்கியது. அவருக்குக் கிருஷ்ணர் தெய்வீகமானவர். அவரைப் பொருத்த அளவில் காதல் என்பது உணர்வுபூர்வமான கருப்பொருளாகும். பிருந்தாவனத்தில் கிருஷ்ணர் மீது கோபியர் கொண்ட கட்டுப்படுத்த இயலாத

காதலை அது பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்றார். கோபியர் வெளிப்படுத்திய காதலின் தீவிரம் என்பது ஒரு தெய்வீக ஆன்மாவின் மேல் மனித ஆன்மா கொண்டிருக்கும் இயற்கையான கவர்ச்சியின் வெளிப்பாடென்றார். சூர்சாகர், சூர்சரவளி, சைத்ய லகிரி ஆகியன அவருடைய முக்கியப் படைப்புகளாகும். அவருடைய மாபெரும் படைப்பான சூர்சாகர் அல்லது சூர்சமுத்திரம் கிருஷ்ணர் பிறந்ததிலிருந்து மதுராவுக்கு புறப்படும் வரையிலான கதைகளைக் கொண்டுள்ளது.

**துக்காராம்:**

துக்காராம் 1608 ஆம் ஆண்டு மஹாராஷ்டிராவில் பூனாவுக்கு அருகே ஒரு கிராமத்தில் பிறந்தார். சத்ரபதி சிவாஜி, ஏக்நாத், ராம்தாஸ் போன்றோரின் சமகாலத்தவர். தொடக்கத்தில் ஒரு வணிகராக இருந்த இவர் பின்னர் தனக்குப் பிரியமான கடவுளான பந்தர்பூர் விட்டலாவின் புகழைப்பாடும் பாடல்களைப் பாடுவதில் நேரத்தை செலவிட்டார்.

துக்காராம் வடிவமற்றவர் கடவுள் என நம்பினார். அவரைப் பொருத்த அளவில் உலக நடவடிக்கைகளில் ஆன்மீக இன்பத்தைத் துய்க்க முடியாது எனக் கூறினார். வேத வேள்விகள், சடங்குகள், புனிதப் பயணங்கள், உருவ வழிபாடு அகியவற்றை நிராகரித்தார். கடவுள் பற்று, மன்னிக்கும் மனப்பாங்கு, மன அமைதி ஆகியவற்றைப் போதித்தார். சமத்துவம் சகோதரத்துவம் ஆகிய செய்திகளைப் பரப்பினார். இந்து முஸ்லீம் ஒற்றுமையை ஏற்படுத்த முயன்றார். அவர் தன்னுடைய "அபங்க" பாடல்களை மராத்தி மொழியில் எழுதினார்.

**பக்தி இயக்கத்தின் தாக்கங்கள்:**

முக்தி என்பது வர்ணாஸ்ரமக் கொள்கையின்படி முதல் மூன்றுபடி நிலைகளைச் சேர்ந்த மக்களுக்கு மட்டுமே உரியது என்ற நம்பிக்கையை மாற்றி அது அனைவருக்கும் உரியது என்ற கருத்தை முன்வைத்தது. பக்தி இயக்கம் பெண்களுக்கும் சமூகத்தின் அடித்தட்டிலிருந்த மக்களுக்கும் சேர்த்து ஆன்ம விடுதலைக்கான வழியைக் காட்டியது. பிராந்திய மொழிகளில் எழுதப்பட்ட பக்தி இயக்கத்தைச் சேர்ந்த துறவிகள் தத்துவ ஞானத் துறையில் சிறந்து விளங்கி துவைதம், அத்வைதம் ஆகிய தத்துவக் கோட்பாடுகளை வழங்கினர். இக்காலத்தில் பிராந்திய அளவில் நமைமுறையிலிருந்த பண்பாட்டுப் பழக்கங்களான, அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுவது பண்டிகைகள், விழாக்கள் நடத்துவது, புனிதப் பயணங்கள் செல்வது, சைவ, வைணவச் சடங்குகளை செய்வது ஆகியன இன்றுவரை நடைமுறையில் உள்ளன.

**பாடச் சுருக்கம்:**

- வைதீக வேத குருமார்களின், பூசாரிகளின் அதிகாரத்தை பௌத்தமும் சமணமும் எவ்வாறு எதிர்த்தன என்பதும், எவ்வாறு மதம் சரி, பாலினப் பாகுபாடுகளை மீறி அனைவருக்குமானதாக மாற்றப்பட்டதென்பதும் விவரிக்கப்பட்டுள்ளது.
- அரசு ஆதரவோடு சமணர்கள் ஒடுக்கப்பட்டது விளக்கப்பட்டுள்ளது.
- பௌத்த சமண மதங்களோடு மோதுகிறபோதே வேதமதத்துக்குள் ஏற்பட்ட மாற்றங்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

- பக்தி இயக்கம் வட இந்தியாவில் பரவியதும் அதன் முக்கியக் கூறுகளும் பகுத்தாய்வு செய்யப்பட்டுள்ளன.

- சூபியிஸம் இஸ்லாமின் மீது ஏற்படுத்திய தாக்கம், ஒரு கடவுள் தத்துவத்தைக் கொண்ட மதங்கள் - குறிப்பாக சீக்கிய மதம் உருவானதில் அது செலுத்திய செல்வாக்கு – ஆகியன பகுத்தாய்வு செய்யப்பட்டன.

- வட இந்தியாவில் பக்தி இயக்கத்தை முன்னெடுத்தவர்கள், அவர்கள் மேற்கொண்ட பணிகளின் தாக்கம் ஆகியவை சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

## பாடம் - 14
## முகலாயப் பேரரசு

### அறிமுகம்:

இந்தியாவின் மீது மேற்கு, வடமேற்குத் திசைகளிலிருந்து மகா அலெக்ஸாண்டர் காலம் தொடங்கி நூற்றாண்டுகளின் ஊடாகப் பலமுறை படையெடுப்புகள் நடைபெற்றுள்ளன. வட இந்தியாவின் பல பகுதிகள் இந்தோ – கிரேக்கர்கள், சாகர், குஷாணர், ஆப்கானியர் போன்ற அந்நியர்களால் ஆளப்பட்டுள்ளன. மங்கோலிய செங்கிஸ்கான், துருக்கிய தைமூர் ஆகியோரின் வழித்தோன்றல்களான மகலாயர் இந்தியாவில் ஒரு பேரரசு நிறுவினர். அப்பேரரசு மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக ஆட்சி செய்தது. ஆனால் அவர்களை நாம் அந்நிய தேசங்களைச் சேர்ந்த ஆட்சியாளர்களாகக் கருதவில்லை, மாறாக நம் நாட்டைச் சேர்ந்த அரச வம்சாவளியினராகவே கருதுகிறோம்.

முகலாயப் பேரரசை நிறுவியவர் பாபர். இப்பேரரசு 1526 இல் பானிப்பட் போரில் இப்ராகிம் லோடியை பாபர் தோற்கடித்தபின் நிறுவப்பட்டது. இவ்வாறு இந்தியாவில், ஒரு புதிய சகாப்தம், ஒரு புதிய பேரரசு தொடங்கி 1526 முதல் 1857 வரை நீடித்தது. முகலாய வம்சத்தைச் சேர்ந்த ஆறு முக்கிய அரசர்களான பாபர், ஹுமாயூன், அக்பர், ஜஹாங்கீர், ஷாஜகான், ஔரங்கசீப் ஆகியோர் இந்திய வரலாற்றில் தங்கள் தடங்களைப் பதித்தனர் 1707 இல் ஔரங்கசீப்பின் மறைவைத் தொடர்ந்து பேரரசு வீழ்ச்சியடைந்தது என்றாலும் 1707 முதல் 1857 வரை முகலாயர் அரசு பெயரளவுக்கு ஓர் அரசாக இயங்கி வந்தது. ஒன்றரை நூற்றாண்டுக்குப் பின்னர் 1857 ஆம் ஆண்டு பெரும் கிளர்ச்சிக்குப் பின் அரசியல் அதிகாரம் ஆங்கிலேய அரசியாரின் கைவசமான போது ஆட்சி ஆங்கிலேயரின் கைவசமான போது ஆட்சி ஆங்கிலேயரின் கைகளுக்குச் சென்றது. முகலாயப் பேரரசு அதனுடைய அதிகாரத்தின் உச்சத்தில் ஆப்கானிஸ்தானிலிருந்து வங்காளம் வரையிலும், காஷ்மீர் முதல் தெற்கே தமிழகம் வரையிலும் பரந்து விரிந்திருந்தது. இந்தியா முழுவதிலும் மையப்படுத்தப்பட்ட சீரான நிர்வாக அமைப்பை முகலாயர் உருவாக்கினர். முகலாயர்கள், குறிப்பாக அக்பர், இந்துக்களையும் முஸ்லீம்களையும் ஒரே நாட்டினராக ஒருங்கிணைத்து, ஒரு கூட்டுத் தேசிய அடையாள அரசியலை உருவாக்கினார். மேலும் இந்தியாவைச் செழுமைப்படுத்திய மகத்தான கலை, கட்டடக்கலை, இலக்கிய, பாரம்பரியத்தையும் விட்டுச் சென்றனர்.

### ஜாகிருதீன் முகமது பாபர் (1526 – 1530):

மத்திய ஆசியாவில் உஸ்பெக்குகள் (துருக்கிய இனக்குழு): சபாவி (ஈரானை ஆட்சி செய்த அரச வம்சத்தினர்; ஷியா முஸ்லீம் பிரிவை ஆதரித்தவர்கள்) உதுமானியத் துருக்கியர் (சன்னி முஸ்லீம் பிரிவைச் சேர்ந்தவர்கள்) ஆகியோரிடையே நடைபெற்ற மேலாதிக்கத்திற்கான போட்டி, சாமர்கண்ட் பகுதியின் அரசரான பாபரை, தனது வாழ்க்கை வளத்துக்கான வாய்ப்புகளை வேறு இடங்களில் தேடிச் செல்லக் கட்டாயப்படுத்தியது. வரலாற்று ரீதியாக மத்திய ஆசிய நாடுகள் பட்டுப்பாதை வழியாக இந்தியாவோடு செய்த வர்த்தகம் அவர் செல்ல விரும்பிய இடத்தைப் பற்றிய (இந்தியா) தேவையான தகவல்களை அவருக்கு வழங்கியது. ஒன்றேகால் நூற்றாண்டுக்கு முன்னர் தைமூர் செய்ததை மீண்டும் செய்ய வேண்டுமெனக் கனவு கண்டுகொண்டிருந்த பாபர், தில்லி சுல்தானியம் அரசியல் ரீதியாகச் சிதைவுற்றதைத் தொடர்ந்து 1526 இல்

தில்லியைத் தலைநகராகக் கொண்டு முகலாயர் பேரரசை நிறுவுவதில் வெற்றி பெற்றனர்.

பாபர பதினோரு வயதுச் சிறுவனாகத் தனது தந்தையிடமிருந்து சாமர்கண்டை (தற்போது உஸ்பெக்கிஸ்தானிலுள்ள ஒரு நகரம்) மரபுரிமைச் சொத்தாகப் பெற்றர். எதிரிகளால் சூழப்பட்ட நிலையில் அரியணையை இழந்த அவர் விரைவில் அதை மீட்டார். ஆனால் ஈரானில் வலிமைவாய்ந்த சபாவிகளின் ஆட்சி நடந்ததினாலும், மத்திய ஆசியாவில் உஸ்பெக்குகள் இருந்ததினாலும் தனக்கென ஒரு பேரரசைத் தென் கிழக்கே இந்தியாவில் தான் அமைக்க முடியுமென உணர்ந்தார். தைமூர் வம்சத்தைச் சேர்ந்தவர் ஆகையால் பஞ்சாப் மீது அவருக்கு ஒரு கண் இருந்தது. ஏனெனில் முன்பு பஞ்சாபின் ஒரு பகுதி தைமூரின் ஆளுமைக்குள் இருந்திருக்கிறது. 1519 க்கும் 1524 க்கும் இடையே அவர் பேரா, சியால்கோட் லாகூர் ஆகியவற்றின் மீது படையெடுத்து இந்துஸ்தானை கைப்பற்றும் உறுதியான எண்ணத்தை வெளிக்காட்டினார். இந்துஸ்தானின் அரசியல் சூழலும் அவருடைய துணிச்சலான நடவடிக்கைகளுக்குச் சாதகமாக இருந்தது. காபூல், கஜினி ஆகியவற்றை கைப்பற்றிய பாபர் சிந்து நதியைக் கடந்து ஒரு சிறிய அரசை ஏற்படுத்தினார். இந்தியாவின் மீது படையெடுப்பதற்கான காலமும் கனிந்தது. லோடி வம்சத்தைச் சேர்ந்த தில்லி சுல்தான் இப்ராகிம் லோடி தன் நாட்டை விரிவுப்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் ஆப்கானியர், ரஜபுத்திரர் ஆகியோரிடையே அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தன. பாபர் இந்தியாவின் மீது படையெடுத்து வரவேண்டும் என்ற வேண்டுகோளோடு இப்ராகிம் லோடியின் எதிரியான தௌலத்கான் லோடியாலும், மேவாரின் அரசனும் ரஜபுத்திர அரசுகளின் கூட்டமைப்பின் தலைவருமான ராணா சங்காவாலும் அனுப்பப்பட்ட தூதுக்குழுக்களை பாபர் சந்தித்தார். பாபர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தபோது, முதலில் தனக்கு உதவி செய்வதாக உறுதி கூறி

**பின்னர் பின்வாங்கிய தௌலத்கான் லோடியின் படைகளை லாகூரில் வென்றார்:**

- பாபர், தில்லி சுல்தானியம் அரசியல் ரீதியாகச் சிதைவுற்றதைத் தொடர்ந்து 1526 இல் தில்லியைத் தலைநகராகக் கொண்டு முகலாயப் பேரரசை நிறுவுவதில் வெற்றி பெற்றார்.

**முதலாம் பானிப்பட் போர் (ஏப்ரல் 21, 1526):**

- இதன் பின்னர் பாபர் லோடியால் ஆளப்பட்ட பஞ்சாப்பை நோக்கித் திரும்பினார். பல படையெடுப்புகளுக்குப் பின்னர் பாபர் இப்ராகிம் லோடியின் பெரும்படையை எண்ணிக்கையில் குறைவான தனது படையைக் கொண்டு பானிப்பட்டில் தோற்கடித்தார்.

- மிகச் சரியாகப் போர்வியூகங்கள் வகுத்துப் படைகளை நிறுத்தியமையும், பீரங்கிப் படையை (Artillery) திறம்படப் பயன்படுத்தியமையும் பாபரின் வெற்றிக்குக் காரணங்களாய் அமைந்தன.

- இவ்வெற்றி இந்தியாவில் நிரந்தரமாகத் தங்குவதற்கான நம்பிக்கையை பாபருக்கு அளித்தது. தில்லியையும் ஆக்ராவையும் பாபர் கைப்பற்றினாலும் ஆப்கானியர்களையும் ராஜபுத்திரர்களையும் அடக்க வேண்டிய அவசியமிருந்தது.

### கான்வா போர் 1527:

- அடுத்தபடியாக பாபர் மேவாரின் அரசனும் ராஜஸ்தான் மாளவம் ஆகிய பகுதிகளில் பெரும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்த சித்தூரின் ராணா சங்காவை போர்க்களத்தில் எதிர்கொள்ளத் தீர்மானித்தார்.

- தவிர்க்கமுடியாத அம்மோதலுக்குச் சாதகமான களமாக ஆக்ராவுக்கு அருகேயுள்ள கான்வா என்னுமிடத்தைத் தேர்வு செய்தார்.

- தன்னுடைய அச்சுமூட்டக் கூடிய பெரும்படையோடும் அதற்கு வலுச்சேர்த்த ஆப்கன் முஸ்லீம்கள், இப்ராகிம் லோடியின் சகோதரர் முகமது லோடி, மேவாட்டின் அரசனான ஹசன்கான், மேவாட்டி ஆகியோரின் உதவியோடு ஆவேசமாக அணிவகுத்து வந்த ராணா சங்காவின் படைகள் பாபரின் படைகளை எதிர்கொண்டன. மீண்டும் ராணுவ தந்திரத்தாலும், பீரங்கிப்படைகளைத் திறம்பட பயன்படுத்தியதாலும் பாபர் ராணா சங்காவின் படைகளைத் தோற்கடித்தார். இவ்வெற்றியைத் தொடர்ந்து குவாலியர், தோல்பூர் ஆகிய கோட்டைகள் கைப்பற்றப்பட்டன. இது பாபரின் நிலைக்கு மேலும் வலுவூட்டியது.

### சந்தேரிப் போர் 1528:

- அடுத்து சிறப்பு வாய்ந்த மாளவப் பகுதியின் மீது பாபரின் மேலாதிக்கத்தை உறுதி செய்தது. சந்தேரியில் மேதினிராய் என்பவருக்கு எதிராகச் செய்யப்பட்ட போராகும். இவ்வெற்றியை தொடர்ந்து பாபர் ஆப்கானியரின் வளர்ந்துவரும் கிளர்ச்சி நடவடிக்கைகளுக்கு எதிராகத் திரும்பினார்.

### காக்ரா போர் 1529:

- ஆப்கானியர்களுக்கு எதிராக பாபர் மேற்கொண்ட இறுதிப்போர் இதுவாகும். சுல்தான் இப்பராகிம் லோடியின் சகோதரனான முகம்மது லோடியும் அவரது மருமகனான சுல்தான் நஸ்ரத்ஷாவும் பாபருக்கு எதிராகச் சதி செய்தனர். ஆபத்தை உணர்ந்த பாபர் அவர்களுக்கு எதிராகப் படையெடுத்தார்.

- கங்கை நதியின் துணை நதியான காக்ரா ஆற்றின் கரையில் இறுதியாக நடைபெற்ற போரில் பாபர் ஆப்கானியரைத் தோற்கடித்தார். ஆனால் ஆக்ராவிலிருந்து திரும்பி லாகூர் செல்லும் வழியில் பாபர் 1530 இல் காலமானார்.

### பாபரைப் பற்றிய மதிப்பீடு:

- முகலாயப் பேரரசை நிறுவிய பாபர் பாரசீக அராபிய மொழிகளில் புலமை பெற்றவராவார். தனது வாழ்க்கையைப் பற்றிய பாபரின் நினைவுக் குறிப்புகளான துசுக்-இ-பாபரி (பாபர் நாமா) உலகச் செவ்வியல் இலக்கியமாகக் கருதப்படுகிறது. ஒரு சில காலம் இந்தியாவை ஆண்ட ஆப்கானியரைப் பற்றியோ அல்லது அவர்களால் ஆளப்பட்ட பெரும்பான்மை மக்களைப்

பற்றியோ வியந்து பாரட்டும் அளவிற்கு பாபர் எதையும் பார்க்கவில்லை. ஆனால் இந்தியாவைப் பற்றிய அவருடைய சில கருத்துக்கள் சுவாரசியமாக உள்ளன.

- இந்தியா எதைப் பெற்றிருந்தது என்பதை பாபர் பின்வருமாறு விவரிக்கிறார். இஸ்துஸ்தானத்தின் தலையாய மேன்மை எதுவெனில் இது ஒரு மிகப் பெரிய நாடு. பெருமளவிலான தங்கத்தையும் வெள்ளியையும் கொண்டுள்ளது. இந்துஸ்தானத்தின் மற்றொரு வசதி யாதெனில் இங்குள்ள தொழிலாளர்கள், ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு பிரிவுக்கும் பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் முடிவே இல்லாத வகையில் கடுமையாக உழைத்தனர்.

  - காந்தகாரில் தொடங்கி வங்காளத்தின் எல்லை வரையிலான பாபருக்குச் சொந்தமான பகுதிகள் தற்போது பாதுகாப்பாய் இருந்தன. இருந்தபோதிலும் ரஜபுத்திரர்களின் விரிந்து பரந்த பாலைவனப் பகுதிகளிலும் ராந்தம்பூர், குவாலியர், சந்தேரி ஆகியவற்றிலும், ரஜபுத்திரத் தலைவர்கள் தங்களிடையே சண்டைகளிட்டுக் கொண்டிருந்ததால் ஒழுங்குபடுத்தப்பட்ட நிர்வாகம் என்பதில்லை. பாபர் தனது மகன் ஹுமாயூனுக்கு இடர்பாடுகள் நிறைந்த பணியை விட்டுச் சென்றார்.

**ஹுமாயூன் (1530 – 1540, 1555 – 1556):**

  - ஹுமாயூன் பண்பாடும் கல்வியறிவும் மிக்கவர். ஆனால் தனது தந்தையைப் போல் பெரும் வீரர் அல்ல. பலவீனமான பொருளாதார நிலை, கொள்ளையடிக்கும் இயல்புடைய ஆப்கானியர், ஆகிய இரண்டு சிக்கல்களை அவர் எதிர்கொள்ள நேர்ந்ததது. குஜராத் அரசரான பகதூர்ஷா அச்சத்தை ஏற்படுத்துபவராக இருந்தார். காபூல், காந்தகார் பகுதிகளுக்குப் பொறுப்பு வகித்த ஹுமாயூனின் சகோதரர் கம்ரான் தன்னுடைய அதிகாரத்தைப் பஞ்சாப் வரை நீடித்தார். பாபர் மரணமுறும் தருவாயில் சகோதரர்களை அன்புடன் நடத்துவேன் என பாபருக்குக் கொடுத்த சத்தியவாக்கை நினைவில் நிறுத்திய ஹுமாயூன் பஞ்சாப் மீதான கம்ரானின் ஆட்சியதிகாரத்தை ஓர் உள்நாட்டுப் போரைத் தவிர்ப்பதற்காக ஏற்றுக்கொண்டார்.

- பீகார், உத்திரப்பிரதேசம் ஆகியவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஷெர்கான் (பின்னர் ஷெர்ஷா) என்பவரின் தலைமையில் வளர்ந்துவரும் ஆப்கானியரின் அதிகாரம், அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள ஹீமாயூனைத் தூண்டின. 1532 இல் தௌரா என்னுமிடத்தில் ஆப்கானியரைத் தோற்கடித்த ஹுமாயூன், பலம் வாய்ந்த சுனார் கோட்டையை முற்றுகையிட்டார். நான்கு மாதங்களுக்குப் பின்னர் முகலாயருக்கு விசுவாசமாக இருப்பேன் எனப் பொய்யாக வாக்குறுதியளித்த ஷெர்ஷாவின் வார்த்தைகளை நம்பி ஹுமாயூன் முற்றுகையைக் கைவிட்டார். ஹுமாயூன் எடுத்த இந்த தவறான முடிவு அவரது ஆட்சியின் வீழ்ச்சிக்கு வழி வகுத்தது.

- பின்னர் வந்த ஆண்டுகளில் அவருடைய எதிரிகள் தங்களை வலிமைப்படுத்திக் கொண்டிருந்த நேரத்தில் இவர் தில்லியில் "தீன்பனா" என்னும் புதிய நகரை உருவாக்குவதில் கழித்தார். இதே சமயத்தில் பாகதூர்ஷா ராஜஸ்தானைக் கைப்பற்றி இணைத்துக் கொண்டதோடு முகலாயர்களுக்கு எதிரானவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து அவர்களைத் தூண்டியும் விட்டார். வரவிருக்கும் ஆபத்தை உணர்ந்த ஹுமாயூன் பகதூர்ஷாவின் மேல் போர் தொடுத்து

குஜராத்தையும் மாளவத்தையும் கைப்பற்றி அவற்றை தனது சகோதரரான அஸ்காரியின் பொறுப்பில் விட்டார். குஜராத் மக்களின் கலகங்களை அடக்க இயலாத நிலையில் அஸ்காரி ஆக்ரா செல்லத் தீர்மானித்தார். அஸ்காரி ஆக்ராவைத் கைப்பற்றி தனதாக்கிக் கொள்வார் என்ற அச்சத்தில் மாண்டுவில் தங்கியிருந்த ஹுமாயூன் குஜராத்தையும் மாளவத்தையும் கைவிட்டுவிட்டுப் படைகளோடு சகோதரரைப் பின் தொடர்ந்தார். ராஜஸ்தானில் சந்தித்துக்கொண்ட சகோதரர்கள் இருவரும் சமாதானமாயினர்.

- பகதூரஷா தொடர்பான போர நிகழ்வுகளில் ஹீமாயூன், முழுமையாக ஈடுபட்டிருந்த வேளையில் ஷெர்கான் வங்காள ஆட்சியாளரைத் தோற்கடித்து தன்னை மேலும் வலுப்படுத்திக் கொண்டார். வங்காளத்திலுள்ள கோட்டையும் ரோத்தா கோட்டையும் அவரால் கைப்பற்றப்பட்டன. சுனார் கோட்டையைக் கைப்பற்றிய ஹுமாயூன் ஷெர்கானை எதிர் கொள்வதற்காக வங்காளம் நோக்கிப் புறப்பட்டார். இடையே கவுர் அல்லது கௌடா என்ற இடத்தை ஹுமாயூன் அடைந்தபோது அவருடைய மற்றொரு சகோதரரான ஹிண்டால் கிளர்ச்சி செய்வதாக தகவல் வந்தது. ஆகவே ஹுமாயூன் அதை அடக்குவதற்காக ஆக்ரா நோக்கிப் புறப்பட்டார். அதுவரையிலும் அதுவரையிலும் அமைதி காத்த ஷெர்கான் இப்போது ஹுமாயூனின் படைகளைத் தாக்கத் தொடங்கினார். மிகப்பெரும் இடர்பாடுகளுக்குப் பின்னர் ஹுமாயூன் சௌசா என்னுமிடத்தை அடைந்த போது ஒரு முழுமையான போரே ஏற்பட்டது.

**சௌசாப் போர் (1539):**

- ஷெர்கான் தனது மேலான, அரசியல், ராணுவத் திறமைகளால் இப்போரில் வெற்றி பெற்றார். ஹுமாயூன் பெருந்தோல்வியைச் சந்தித்தார். இப்போரில் 7000 முகலாயப் பிரபுக்களும் வீரர்களும் கொல்லப்பட்டனர்.

- தன்னுயிரைக் காத்துக் கொள்ளத் தப்பியோடிய ஹுமாயூன் கங்கை நதியை நீந்திக் கடந்தார். ஆக்ராவை சென்றடைந்த அவர் சகோதரர்கள் அஸ்காரி, ஹிண்டால் ஆகியோரின் உதவியோடு ஷெர்கானை எதிர்கொள்ள படையொன்றைத் திரட்டினார். இறுதி மோதல் கன்னோசியில் நடைபெற்றது.

**கன்னோசி போர் (1540)**

- கன்னோசி போரில் ஹுமாயூனின் படைகள் முற்றிலுமாகத் தோற்கடிக்கப்பட்டன. அவர் நாடற்ற அரசரானார்.

**ஷெர்ஷாவும் சூர் வம்சமும்:**

- ஹுமாயூன் கன்னோசி போரில் தோல்வியடைந்து தனது அரியணையை இழந்த பின்னர் மீண்டும் 1555 இல் தில்லியைக் கைப்பற்றித் தனது அதிகாரத்தை மீட்பதற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சூர் வம்சத்தைச் சேர்ந்த ஷெர்ஷாவால் தில்லி ஆளப்பட்டது

- ஒரு ஜாகீர்தாரின் குடும்பத்தில் பிறந்து பரித் என்றழைக்கப்பட்ட இவர் ஒரு புலியைக் (ஹிந்தியில் ஷெர்) கொன்றதனால் ஷெர்கான் என்னும் பெயரைப் பெற்றார். அரியணை ஏறிய பின் ஷெர்ஷா என்றழைக்கப்பட்டார். தன்

திறமையினாலும் ஆற்றலினாலும் இந்தியாவிலிருந்த ஆப்கானியரின் தலைவரானார். அவருடைய இராணுவ மதிநுட்பமும் அரசியல் விவேகமும் ஹீமாயூனுக்கு எதிராகவும் ஏனைய ரஜபுத்திர அரசுகளுக்கு எதிராகவும் அவருக்கு வெற்றிகளை ஈந்தன. மாளவம் போரிடாமலேயே அவரிடம் வீழ்ந்தது. மேவாரின் உதங்சிங் எதிர்ப்பேதும் தெரிவிக்காமல் சரணடைந்தார். கலிஞ்சாரைக் கைப்பற்ற வேண்டும் என்ற தனது அடுத்த முயற்சியில் அவர் தோல்விகண்டார். வெடிகுண்டு விபத்தின் காரணமாக 1545 இல் அவர் உயிரிழந்தார். அவருக்குப்பின் பதவியேற்ற அவருடைய இரண்டாவது மகன் இஸ்லாம்ஷா 1553 வரை ஆட்சி புரிந்தார். சிறு வயதிலேயே அவர் மரணமடைந்ததைத் தொடர்ந்து வாரிசுரிமை பற்றிய குழப்பம் நிலவியது. இக்சூழ்நிலையை ஹுமாயூன் பயன்படுத்தி தில்லியையும் ஆக்ராவையும் சூர்வம்ச அரசர்களிடமிருந்து மீட்டார்.

**ஷெர்ஷாவின் சீர்திருத்தங்கள்:**

- ஹுமாயூனைப் பின்தொடர்ந்த ஷெர்ஷா அதற்கு முன்னர் கிசிர்கான் என்பவரை வங்காளத்தின் ஆளுநராக நியமித்திருந்தார். கிசிர்கான் வங்காளத்தின் முன்னாள் ஆட்சியரான சுல்தான் மகமுதுவின் மகளை மணந்தவர். அவர் சுதந்திர அரசரைப்போல் செயல்படத் துவங்கினார். ஊர் திரும்பியவுடன் அவரைக் கைது செய்ய ஷெர்ஷா உத்தரவிட்டார். பிராந்திய அரசுகளின் கீழ்ப்படியாமையைக் குறித்து நன்கு அறிந்திருந்த ஷெர்ஷா, ஒரு வலிமையான நிர்வாக அமைப்பை உருவாக்குவதே பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வாகும் எனக் கருதினார். எனவே அவர் தனது அரசை மிகவும் மையப்படுத்தப்பட்ட அரசாக மாற்றினார் தில்லி சுல்தானியத்தின் உள்ளாட்சித் துறை நிர்வாகக் கட்டமைப்பு ஒரு சில மாற்றங்களோடு பின்பற்றப்பட்டது. தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள கிராமங்களில் களவு போகும் பொருட்களுக்கு கிராம பொருட்களுக்கு கிராமத்தலைவரே பொறுப்பு என்றானவுடன் கிராமத் தலைவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்படத் தொடங்கினர். "விவசாயி சீர்குலைந்தால் அரசன் சீர்குலைவான்". என ஷெர்ஷா நம்பினார். படைகள் ஓரிடம் விட்டு வேறிடங்களுக்குச் செல்கையில் பயிர்களுக்குச் சேதம் ஏற்படக் கூடாது என்பதில் ஷெர்ஷா தனிக்கவனம் செலுத்தினார். நெகிழ்வுத் தன்மை கொண்ட வருவாய் முறையைப் பின்பற்றினார்.

- நிலங்கள் முறையாக அளவை செய்யப்பட்டு நிலங்களின் வளத்திற்கு ஏற்றவாறு வரி நிர்ணயம் செய்யப்பட்டது. சில பகுதிகளில் ஜாகீர்தாரி முறையும் ஜமீன்தாரி முறையும் தொடர்ந்து செயல்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன.

- வேறுபல இடங்களில் மொத்த வேளாண் விளைச்சலில் ஒரு குறிப்பிட்ட பங்கு மட்டும் வரியாக வசூலிக்கப்பட்டது.

- ஷெர்ஷா விவசாயிகளிடம் கொண்டிருந்த அதே அக்கறையை வர்த்தகர்களிடமும் கொண்டிருந்தார். வணிகத்தை ஊக்குவிப்பதற்காக வணிக வரிகளை எளிமைப்படுத்தினார். நுழைவு வரி, விற்பனை வரி ஆகியவை மட்டுமே வசூலிக்கப்பட்டன.

- தங்க, வெள்ளி, செப்புக் காசுகளில் இடம் பெறும் உலோகங்களின் தர அளவு வரையறை செய்யப்பட்டது வணிகத்திற்கு வசதி செய்து கொடுத்தது.

- அவருடைய நாணயமுறையானது முகலாயர் காலம் முழுவதும் அப்படியே பின்பற்றப்பட்டு ஆங்கிலேயர் காலத்து நாணய முறைக்கும் அடித்தளமானது.

- வணிகத்தையும் வர்த்தகத்தையும் மேம்படுத்தும் பொருட்டு உறுதியான சாலை வசதி முறையை ஷெர்ஷா பராமரித்தார்.

- பழைய சாலைகள் புதுப்பிக்கப்பட்டதோடு புதிய சாலைகளும் அமைக்கப்பட்டன. சிந்துப் பகுதியிலிருந்து வங்காளத்தில் சோனார்கள் வரையிலான முக்கியப் பெருவழியைச் செப்பனிட்டதோடு குஜராத் கடற்கரைத் துறைமுகங்களை ஆக்ராவோடும் ஜோத்பூரோடும் இணைக்கும் புதிய சாலைகளையும் அமைத்தார்.

- லாகூர் முல்தான் ஆகிய நகரங்களை இணைக்கும் புதிய சாலை அமைக்கப்பட்டது. அனைத்துச் சாலைகளிலும் “சராய்“ எனப்படும் சத்திரங்கள் அமைக்கப்பட்டு வணிகர்கள் தங்கவும் உணவருந்தவும் வசதிகள் செய்துதரப்பட்டன.

- இவ்வேறுபாடுகள் விறுவிறுப்பான வணிகத்திற்கு உத்ரவாதம் அளித்தன. ஷெர்ஷாவால் உருவாக்கப்பட்ட ஒரு சில சராய்கள் இன்றளவும் உள்ளன. இத்தகைய சராய்கள் தங்களுக்கு அருகே நகரங்கள் உருவாவதையும் உறுதி செய்தன.

- ஷெர்ஷா பெருமளவில் தர்ம காரியங்களைச் செய்தார். ஆதரவற்றோர்க்குக் கருவூலத்திலிருந்து உதவித்தொகை வழங்கினார். ஷெர்ஷா ஒரு வைதீக சன்னி முஸ்லீம் அவார். பாரபட்சமில்லாமல் நீதி வழங்கினார். தவறு செய்தவர்கள் பிரபுக்களாயிருந்தாலும் தனது உறவினர்களாக இருந்தாலும் அவர்களைத் தண்டிக்கத் தவறவில்லை. கலக மனப்பாங்கு கொண்ட ஜிமீன்தார்கள், பிரபுக்கள், கொள்ளையர், திருடர்கள் ஆகியோரை கடுமையான தண்டனைகள் மூலம் ஒடுக்கி பேரரசில் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தினார். மிகவும் புகழப்படும் அக்பர், தோடர்மால் ஆகியோரின் நிதிநிர்வாக முறை பெருமளவில் ஷெர்ஷாவின் நிதி நிர்வாக முறையினை அடித்தளமாகக் கொண்டதாகும். நிர்மாணிக்கவோ கட்டடங்களைக் கட்டவோ போதிய கால அவகாசம் கிடைக்கவில்லை. தில்லியில் கோட்டைச் சுவர்களுடன் கூடிய ஒரு புதிய நகரத்தை நிர்மாணிக்கத் தொடங்கினார். பின்னர் அது புராண கிலா (old Fort) என அழைக்கப்பட்டது. தன்னுடைய கல்லறை மாடத்தை சசாரம் என்னுமிடத்தில் கட்டினார்.

**ஹுமாயூன் மீண்டு வருதல்:**

ஷெர்ஷா 1545 இல் காலமான பின்னர் அவருக்குப் பின்வந்த வலிமை குன்றிய அரசர்கள் பத்து ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர். கன்னோசி போரில் தோற்றுத் தப்பியோடிய ஹுமாயூன் பாரசீகத்தில் தஞ்சம் புகுந்தார். பின்னர் பாரசீகப் படைகளுடன் ஆப்கானிஸ்தான் சென்ற ஹீமாயூன் காந்தகாரையும் காபூலையும் கைப்பற்றினார். ஆனால் அவருடைய சகோதரர் கம்ரான் அவர் கைப்பற்றிய பகுதிகளை அமைதியாக ஆட்சி புரிய ஹுமாயூன் அனமதிக்கவில்லை.

சகோதரர்களுக்கு இடையிலான போராட்டம் தீவிரமடைந்து இறுதியில் சமாதானத்தில் முடிந்தது. இதனிடையே சூர் பேரரசு பல துண்டுகளாகச் சிதைவடைந்தது. எனவே ஹுமாயூனின் படையெடுப்பு எளிதானது. முகலாயரின் வருகையைக் கண்ட பஞ்சாபிலிருந்த ஆப்கானியப் படைகள் தப்பியோடத் தொடங்கின. ஹுமாயூன் மீண்டும் பேரரசர் ஆனார். ஆனால் மிக விரைவிலேயே தில்லி கோட்டைக்குள் இருந்த நூலகம் ஒன்றின் மாடிப்படிகளில் இடறி விழுந்து ஹுமாயூன் இறந்து போனார். ஸ்டேன்லி லேன்பூலின் பொருள் பொதிந்த வார்த்தைகளில் சொல்வதென்றால் ”வாழ்க்கை முழுவதும் தவறி விழுந்த ஹுமாயூன் வாழ்க்கையை விட்டே தவறி விழுந்து இறந்தார்.

**ஜாகீர்தாரிமுறை:**
இது ஒரு நில உடைமை முறையாகும். தில்லி சுல்தானியர் காலத்தில் இம்முறை வளர்ச்சி பெற்றது. இம்முறையின் கீழ் ஒரு குறிப்பிட்டப் பகுதியில் வரிவசூல் செய்கின்ற அதிகாரமும் அப்பகுதியை நிர்வகிக்கிற அதிகாரமும் அரசாங்கத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரியிடம் ஒப்படைக்கப்படும்.

**ஜமீன்தாரி:**
இச்சொல் மற்றொரு நில உடைமை முறையைக் குறிப்பதாகும். பாரசீக மொழியில் ஜமீன்தார் என்ற சொல்லுக்கு நிலத்தின் உடைமையாளர் என்று பொருள். முகலாயர் காலத்தில் பிரபுக்கள் வர்க்கத்தைச் சேர்ந்தோரே ஜமீன்தார்களாக இருந்தனர்.

அக்பர் பிரபுக்களுக்கும் முந்தைய அரச குடும்பங்களின் வழித்தோன்றல்களுக்கும் நிலங்களை வழங்கி அவற்றை பரமபரையாக அனுபவிக்கும் உரிமையையும் வழங்கினார்.

ஜமீன்தார்கள் குத்தகைதாரர்களிடமிருந்தும் விவசாயிகளிடமிருந்தும் வரி வசூல் செய்து ஒரு குறிப்பிட்ட தொகையை அரசுக்குச் செலுத்தினர்.

**அக்பர் (1556 – 1605):**

- ரஜபுதனத்துப் பாலைவனங்களில் ஹுமாயூன் அலைந்து திரிந்தபோது அவருடைய மனைவி 1542 இல் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தார். அந்த ஆண் மகனே ஜலாலுதீன் என்று அறியப்பட்ட அக்பர். பதினான்காவது வயதில் அவருக்கு முடிசூட்டப்பட்டது.

- அக்பர் அரியணை ஏறியபோது இன்னும் வலிமையாக இருந்த ஆப்கானியரும் ரஜபுத்திரரும் பெரும் சவாலாகத் திகழ்ந்தனர். இருந்தபோதிலும் அக்பர், பைராம்கான் என்ற தலைசிறந்த பாதுகாவலரைப் பெற்றிருந்தார்.

**இரண்டாம் பானிப்பட் போர் (1556):**

தில்லியில் வீற்றிருந்த ஷெர்ஷாவின் வழிவந்த ஆப்கானிய அரசன் அடில்ஷாவின் இந்து படைத்தளபதியான ஹெமு, முகலாயருக்கு எதிராக ஆப்கானியர் படைகளுக்குத் தான் தலைமையேற்றுச் செல்ல அனுமதிக்குமாறு அரசனைக் கேட்டுக்கொண்டார். அரசர் ஊக்கம் தரவே ஹெமு முதலில் குவாலியரைக் கைப்பற்றி அதன் முகலாய ஆளுநரை வெளியேற்றினார். அடுத்து

எவ்வித எதிர்ப்புமின்றி ஆக்ராவைக் கைப்பற்றினார். ஹெமுவின் தாராளத் தன்மை தில்லியைக் கைப்பற்றும்போது பலம் வாய்ந்த எதிரிகளை வெல்ல உதவியது. அக்பர் 1556 நவம்பர் மாதம் தில்லியை நோக்கிப் புறப்பட்டு ஹெமுவை இரண்டாம் பானிப்பட் போரில் சந்தித்தார். போர் ஹெமுவுக்குச் சாதகமாக முடியவிருந்த தருவாயில் அவர் கண்ணில் அம்பொன்று பாய மயக்கமுற்று கீழே விழுந்தார்.

- தலைமை இல்லாத ஆப்கானியப் படைகளை முகலாயப் படைகள் வெற்றி பெற்றன. ஹெமு கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். இவ்வெற்றி அக்பரை ஆக்ரா மற்றும் தில்லியின் அதிபதி ஆக்கியது. முகலாயப் பேரரசு மீண்டும் நிறுவப்பட்டது.

**அக்பரும் பைராம்கானும்:**

அக்பர் ஒரு வெற்றியாளராக வட இந்தியா முழுவதையும் வாகை சூடி வலம் வந்தார். அக்பரின் முதல் நான்காண்டு ஆட்சிக் காலத்தில் பகர ஆளுநர் பைராம்கானின் கீழ், நாடு குவாலியர், அஜ்மீர் உட்பட காபூலிலிருந்து ஜான்பூர் வரை விரிவடைந்தது. தன் சாதனைகளின் காரணமாய் பைராம்கான் தன்போன்ற ஏனைய பிரபுக்களிடம் ஏளனத்துடனும் இறுமாப்போடும் நடந்துகொள்ளத் துவங்கினார். இதனால் கோபம் கொண்ட அக்பர் பைராம்கானைப் பணிநீக்கம் செய்ய உத்தரவிட்டார். இதன் விளைவாகப் பைராம்கான் கலகம் செய்ய அக்பர் அதைச் சாதுர்யமாகக் கையாண்டார். இறுதியில் அக்பர் முன் ஒப்படைக்கப்பட்ட பைராம்கான் மெக்காவுக்கு அக்பரின் அறிவுரையின்படி புறப்பட்டார். செல்லும் வழியில் ஆப்கானியன் ஒருவனால் கொல்லப்பட்டார். பைராம்கானின் குடும்பம் தில்லிக்கு அழைத்துவரப்பட்டது. பைரம்கானின் மகன் அப்துர் ரகீம் அறிவுக் கூர்மை மிக்க மேதையாக கான்-இ-கானான் என்ற பட்டத்துடன் அக்பரின் அவையில் ஒளிர்ந்தார்.

**அக்பரின் படையெடுப்புகள்:**

- அக்பர் மிகப்பெரும் வெற்றிப் படையெடுப்புகள் மூலம் மகத்தானதொரு பேரரசுக்கான அடிக்கல்லை நாட்டினார்.

- 1562 இல் மாளவம் பாஜ்பகதூரிடமிருந்து கைப்பற்றப்பட்டு அவர் அக்பரின் அரசவையில் ஒரு மன்சப்தாராக ஆக்கப்பட்டார்.

- 1564 இல் இந்தியாவின் மையப்பகுதியிலிருந்த கோண்டுவானா அதன் ராணி துர்காதேவி அவ்வம்மையாரின் மகன் வீர்நாராயணன் ஆகியோருடனான கடும் போருக்குப்பின் கைப்பற்றப்பட்டது.

- மேவார் அரசரான ராணா உதய்சிங் சித்தூரை இழப்பதற்கு முன்னர் கடுமையாகப் போரிட்டார். ஆறுமாதகால முற்றுகைக்குப் பின்னர் சித்தூர் கைப்பற்றப்பட்டது.

- ராணா உத்யசிங் குன்றுகளுக்குள் பின்வாங்க அவரின் தளபதிகளான ஜெய்மால், பட்டா ஆகியோர் போரைத் தொடர்ந்து நடத்தினர்.

- இவ்விருவர் உட்பட 30,000 ரஜபுத்திர வீரர்கள் இப்போரில் கொல்லப்பட்டனர். ஜெய்மால், பட்டா ஆகியோரின் துணிச்சலைக் கண்டு பெரும் வியப்படைந்த அக்பர் அவர்களின் நினைவாகவும் அவர்களைச் சிறப்பிக்கும் வகையிலும் ஆக்ரா கோட்டையின் முக்கிய நுழைவாயிலில் அவர்களின் சிலைகளை நிறுவினார்.

- சித்தூர் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து ரஜபுத்திர அரசுகளான ராந்தம்பூர், கலிஞ்சார், பிக்கானீர், ஜோத்பூர், ஜெய்சால்மர் ஆகியவை சரணடைந்தன.

- மத்திய இந்தியப் பகுதிகளைக் கிழ்படிய வைத்த பின்னர் அக்பர் தனது கவனத்தை செல்வச் செழிப்புமிக்க, கடல்சார் வணிகத்திற்குப் புகழ்பெற்ற குஜராத் மீது செலுத்தினார்.

- அதன் அரசன் முசாபர்ஷாவிடமிருந்து 1573 இல் குஜராத்தைக் கைப்பற்றினார். குஜராத் தக்காணத்தைக் கைப்பற்றுவதற்கான ஏவுதளமானது.

- பீகார் வங்காளம் ஆகிய பகுதிகளை ஆண்டு வந்த தாவுத்கான் அக்பரால் தோற்கடிக்கப்பட்டு அவ்விரு பகுதிகளும் 1576 இல் முகலாயப் பேரரசோடு இணைக்கப்பட்டன.

- ராஜா மான்சிங், பகவன்தாஸ் ஆகியோரின் உதவியுடன் அக்பர் காபூலைச் சேர்ந்த மிர்சா ஹக்கீமைத் தோற்கடித்தார். காஷ்மீரையும் (1586) சிந்துவையும் (1591) அக்பர் கைப்பற்றியது வடமேற்கில் அவருடைய பேரரசை வலுப்படுத்தியது.

- அக்பருடைய படைகள் 1591 இல் காண்டேஷ் பகுதியைக் கைப்பற்றின. 1596 இல் சாந்த்பீபியிடமிருந்து பெரார் கைப்பற்றப்பட்டது.

- 1600 இல் அகமதுநகர் அரசின் ஒரு சில பகுதிகள் முகலாயர் படைகளின் கைவசமானது.

- 1604 இல் செப்டம்பர் மாதம் அக்பர் நோய்வாய்ப்பட்டு 1605 அக்டோபர் மாதம் 27 ஆம் நாள் இயற்கை எய்தினார்.

**ரஜபுத்திரக் கொள்கை:**

- இந்துக்களுடைய நல்லெண்ணத்தைப் பெறுவதற்காக அக்பர் மனமார்ந்த முயற்சிகளை மேற்கொண்டார். முஸ்லீம் அல்லாத மக்களின் மீத விதிக்கப்பட்டிருந்த ஜிசியா வரியையும் (தலை வரி) இந்து புனித யாத்திரைகளின் மீது விதிக்கப்பட்டிருந்த வரியையும் நீக்கினார்.

- போர்க்கைதிகளை அடிமைகளாக்கும் நடைமுறையும் கைவிடப்பட்டது. இந்து விதவைகள் பின்பற்றிய உடன்கட்டை ஏறும் முறையும் ஒழிக்கப்பட்டது.

- இணக்கமான ரஜபுத்திரக் கொள்கையானது ரஜபுத்திர அரச குடும்பங்களோடு திருமண உறவை மேற்கொள்ளுதல், அரசவையில் உயர்ந்த பதவிகளில் அவர்களை அமர்த்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

- அக்பருக்கு முன்னரே பல முஸ்லீம் அரசர்கள் ரஜபுத்திர இளவரசிகளைத் திருமணம் செய்திருந்தனர். ஆனால் அக்பர் பரந்த மனப்பான்மையோடு இக்குடும்பங்களோடு நெருக்கமான உறவினை மேற்கொண்டு இத்திருமணங்கள் இருவேறு பண்பாடுகளை இணைக்கின்ற சக்தியாக மாறுவதற்குக் காரணமாக இருந்தார்.

- அக்பர் ஆம்பர் நாட்டு அரசர் ராஜா பார்மல் (பீகாரிமால் என்று அறியப்பட்டவரின்) மகளான ஹர்க்கா பாயை மணந்தார்.

- ஹர்க்காபாய் பின்னாளில் ஜோதா அக்பர் என்று அழைக்கப்பட்டார். மேலும் பிக்கானீர், ஜெய்சால்மர் ஆகிய ரஜபுத்திர அரசுகளின் இளவரசிகளையும் திருமணம் செய்து கொண்டார்.

- ஹர்க்காபாய் பெற்றெடுத்த இளவரசர் சலீம் பின்னர் ராஜா பகவன்தாஸின் மகளைக் கரம்பற்றினார்.

- ராஜா பகவன்தாஸின் மகனான ராஜா மான்சிங் அக்பரின் நம்பிக்கைக்குரிய படைத்தளபதியானார்.

- மேவார், மார்வார் ஆகியவை முகலாயப் பேரரசை எதிர்த்து நின்ற ரஜபுத்திர அரசுகளாகும். ராணா உதய்சிங்கின் மரணத்திற்குப் பின்னர் அவருடைய மகன் ராணா பிரதாப்சிங் அக்பரின் அதிகாரத்தை ஏற்காமல் 1597 ல் தனது மரணம் வரை தொடர்ந்து போரிட்டார்.

- 1576 இல் நடைபெற்ற ஹால்டிகாட் போரே முகலாயப் படைகளுக்கும் ராணா பிரதாப் சிங்குக்குமிடையே நடைபெற்ற நேரடிப் போராகும். மார்வாரில் (ஜோத்பூர்) மால்தியோ ராத்தோரின் மகனான அரசர் சந்திரா சென் 1581 இல் தான் இறக்கும்வரை முகலாயரை எதிர்த்தார். ஆனால் அவருடைய சகோதரர்கள் முகலாயர் பக்கமிருந்து போரிட்டனர்.

- பின்னாளில் பதேபூர்சிக்ரி என்னும் புதிய தலைநகரை அக்பர் உருவாக்கினார். தற்போது கைவிடப்பட்ட நகரமாக இருந்தாலும் இன்றும் அது அழகான மசூதிகளோடும் உன்னதமான புலந்தர்வாசா மற்றும் ஏனைய கட்டங்களோடும் திகழ்கிறது.

**மன்சப்தாரி முறை:**

- அக்பர் ஒரு முறைபடுத்தப்பட்ட மையப்படுத்தப்பட்ட நிர்வாக முறையை உருவாக்கினார். அம்முறை பேரரசின் வெற்றிக்குப் பெரும்பங்காற்றியது. அவர் மன்சப்தாரி முறையை அறிமுகம் செய்தார்.

- பிரபுக்கள், குடிமைப் பணிசார்ந்த இராணுவ நிர்வாகம் சார்ந்த அதிகாரிகள் ஆகிய அனைவரும் ஒன்றுபடுத்தப்பட்டு ஒரே பணியின் கீழ் கொண்டுவரப்பட்டனர்.

- ஒவ்வொருவருக்கும் மன்சப்தார் என்ற பட்டம் வழங்கப்பட்டது. மன்சப்தார் தகுதி ஜாட், சவார் என இருவகைப்பட்டது. ஜாட் என்பது ஒவ்வொரு மன்சப்தாரும் பெறும் ராணுவ வீரர்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்வதாகும்.

- அவ்வெண்ணிக்கை 10 முதல் 10,000 வீரர்கள் வரை ஆனதாகும். சவார் என்பது மன்சப்தாரின் கீழிருக்கும் குதிரைகளின் எண்ணிக்கையைக் குறிக்கும். வீரர்களின் எண்ணிக்கை, குதிரைகளின் எண்ணிக்கை ஆகியவற்றை அதிகரிப்பது அல்லது குறைப்பதன் மூலம் ஒரு மன்சப்தாரின் உயர்வும் தாழ்வும் நிர்ணயம் செய்யப்பட்டன.

- மன்சப்தாரி முறையானது பிரபுக்களின் இனக்குழுத் தளத்தை பல்வகைப்பட்டதாக மாற்றியமைத்தது. அக்பரின் தொடக்க காலங்களில் பிரபுக்கள் முற்றிலுமாக மத்திய ஆசியாவைச் சேர்ந்தவர்களாகவும் பாரசீகத்தைச் சார்ந்தவர்களாகவும் மட்டுமே இருந்தனர்.

- ஆனால் மன்சப்தாரி முறை அறிமுகமான பின்னர் ரஜபுத்திரரும் ஷேக்சதா என்றழைக்கப்பட்ட இந்திய முஸ்லீம்களும் பிரபுக்கள் வரிசையில் இடம் பெறலாயினர்.

- மன்சப்தார்களின் ஊதியம் பணமாக நிர்ணயம் செய்யப்பட்டாலும் அதற்கு மாறாக அவர்களுக்கு நிலங்கள் (ஜாகீர்) ஒதுக்கப்பட்டன.

- இந்த ஜாகீர்கள் அடிக்கடி மாற்றப்பட்டன. மன்சப்தார் பதவியானது பரம்பரை உரிமை சாந்ததல்ல. ஒரு மன்சப்தார் மரணமடைந்துவிட்டால் அவருக்கு வழங்கப்பட்டிருந்த ஜாகீரை அரசு உடனடியாகக் கையகப்படுத்தும்.

**அக்பரின் மதக் கொள்கை:**

- அக்பர் ஒரு வைதீக முஸ்லீமாகத் தனது வாழ்க்கையைத் தொடங்கினார். ஆனால் சூபி தத்துவங்கள் ஏற்படுத்திய தாக்கத்தின் காரணமாக ஓர் இணக்கமான போக்கை மேற் கொண்டார்.

- ஏனைய மதங்கள் தொடர்பான கோட்பாடுகளைத் தெரிந்துகொள்வதில் ஆர்வம் கொணட அவர் அனைவருக்கும் அமைதி (சுல்-இ-குல்) என்னும் தத்துவத்தைப் பரப்புரை செய்தார்.

- அறிஞரான பதானி அக்பர் இஸ்லாமைப் புறக்கணித்தார் எனக் குற்றம் சாட்டினார்.

- அக்பர் இபாதத் கானா எனும் வழிபாட்டுக் கூடத்தை நிறுவினார். தொடக்கத்தில் இஸ்லாமிய அறிஞர்கள் இங்கு கூடி ஆன்மீக விசயங்கள் குறித்து விவாதித்தனர்.

- பின்னர் இந்துக்களையும் கிறித்தவர்களையும் ஜொராஸ்திரியர்களையும் சமணர்களையும் கடவுள் மறுப்பாளர்களையும் இவ்விவாதங்களில் பங்கேற்க வரவேற்றார்.

- இப்பாதத் கானாவில் நடைபெற்ற விவாதங்கள் மதங்களிடையே கசப்புணர்வை ஏற்படுத்தியதில் 1582 இல் அக்பர் அவற்றை நிறுத்தினார். ஆனால் உண்மையை அறிந்துகொள்ள வேண்டும் என்ற முயற்சியை அவர் கைவிடவில்லை.

- அக்பர் பல்வேறு மதங்களைச் சேர்ந்த புகழ்பெற்ற ஞானிகளோடு எடுத்துக்காட்டாக புருசோத்தம், தேவி (இந்து மதம்), மெகர்ஜிராணா (ஜொராஸ்திரிய மதம்), அக்வாவிவா, மான்சரட் எனும் போர்த்துக்கீசியர் (கிறித்துவ மதம்).

- ஹிர விஜய சூரி (சமண மதம்) ஆகியோரை தனிப்பட்ட விதத்தில் தொடர்பு கொண்டு உண்மை எதுவென அறிய முயன்றார். இத்தகைய விவாதங்களின் விளைவாகப் பல்வகைப்பட்ட இப்பெயர்களுக்குப் பின்னே ஒரே ஒரு கடவுள் மட்டும் இருப்பதாக அவர் உணர்ந்தார்.

- அக்பருடைய தத்துவத்தை விளக்குவதற்கு அக்பரும் பதானியும் பயன்படுத்திய சரியான சொல் "தௌகித்-இ-இலாகி" (தீன் இலாகி) என்பதாகும். தௌகித்-இ-இலாகி என்ற சொல்லின் நேரடிப் பொருள் தெய்வீக ஒரு கடவுள் கோட்பாடாகும்.

- தௌகித்-இ-இலாகி (தீன் இலாகி) அக்பருக்குப் பின்னர் இல்லாமல் போனது.

**ஜஹாங்கீர் (1605 – 1627):**

- அக்பருக்குப் பின் அவருடைய மகன் சலீம் நூருதீன் ஜஹாங்கீர் என்ற பட்டப் பெயருடன் அரியணை ஏறினார். இவர் அரசரானதை எதிர்த்து இவருடைய மூத்தமகன் இளவரசர் குஸ்ரு சீக்கிய குரு அர்ஜுன் தேவின் ஆதரவோடு கலகத்தில் இறங்கினார்.

- கலகம் ஒடுக்கப்பட்டு இளவரசர் குஸ்ரு கைது செய்யப்பட்டு விழிகள் அகற்றப்பட்டன. கலகத்தைத் தூண்டியதாக குரு அர்ஜுன் தேவ் கொல்லப்பட்டார்.

* வங்காளத்தில் தனக்கெதிராகக் கலகம் செய்த ஆப்கானியரான உஸ்மான் கான் என்பவரை ஜஹாங்கீர் பணிய வைத்தார். ராணா உதய்சிங், ராணா பிரதாப்சிங் ஆகியோர் காலத்தில் முகலாயருக்கு அடிபணிய மறுத்த மேவார் ராணா உதய்சிங்கின் பேரன் ராணா அமர்சிங்கிற்கு எதிராகத் தனது மகன் இளவரசர் குர்ரம் (பின்னாளில் பேரரசரான ஷாஜகான்) தலைமையில் படையெடுப்பு நடத்தி ஒழுங்குக்கு கொண்டுவரப்பட்டது.

* பின்னர் அவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமர்சிங் ஜஹாங்கீரின் மேலதிகாரத்தை ஏற்றுக் கொண்ட அரசராகத் தனது பகுதிகளை ஆண்டார். 1808 இல் தக்காண அரசான அகமது நகர் மாலிக் ஆம்பரின் தலைமையின் கீழ் தன்னைச் சுதந்திர அரசாக அறிவித்தது.

* அகமதுநகரை இளவரசர் குர்ரம் கைப்பற்ற மேற்கொண்ட பல முயற்சிகள் கடைசியில் தோல்வியில் முடிந்தன. 14 மாத கால முற்றுகைக்குப் பின்னர் காங்ரா கோட்டையைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றார்.

* 1595 இல் பாரசீகர்களிடமிருந்து அக்பரால் கைப்பற்றப்பட்ட காந்தகாரை 162 2இல் பாரசீக அரசர் ஷா அப்பாஸ் மீட்டிருந்தார். ஜஹாங்கீர் அதை மீண்டும் கைப்பற்ற விரும்பினார். ஆனால் இளவரசர் குர்ரம் மேற்கொண்ட கிளர்ச்சியின் காரணமாக அதை அவரால் செய்ய இயலவில்லை.

* ஜஹாங்கீரின் ஆட்சி வில்லியம் ஹாக்கின்ஸ் மற்றும் சர் தாமஸ் ரோ என்ற இரு ஆங்கிலேயரின் வருகைக்கு சாட்சியமானது.

* ஆனால் தாமஸ் ரோ இங்கிலாந்து அரசர் முதலாம் ஜேம்ஸ் அனுப்பிய தூதுவராய்ச் சூரத் நகரில் ஒரு வணிகக் குடியேற்றத்தை அமைத்துக் கொள்வதற்கான அனுமதியை பேரரசரிடம் பெறுவதில் வெற்றி பெற்றார்.

* ஜஹாங்கீர் அரசு விஷயங்களைக் காட்டிலும் கலை, ஓவியம், தோட்டம், மலர்கள் ஆகியவற்றில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்.

* இதன் காரணமாக அரசரின் பாரசீக மனைவி மெகருன்னிசா (ஜஹாங்கீரால் நூர்ஜகான் எனப் பெயரிடப்பட்டவர்) அரியணையின் பின்னே உண்மையான அதிகாரம் கொண்டவராகத் திகழ்ந்தார்.

* நூர்ஜகான் மேற்கொண்ட அரசியல் சூழ்ச்சிகளின் காரணமாக இளவரசர் குர்ரம் தனது தந்தைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்.

* ஆனால் ஜஹாங்கீரின் விசுவாசமிக்க தளபதி மகபத்கான் மேற்கொண்ட முயற்சிகளால் வெற்றிபெற இயலாத நிலையில் குர்ரம் தக்காணம் திரும்பினார்.

- பின்னர் நூர்ஜகானின் சதி நடவடிக்கைகளின் காரணமாக மகபத்கான் கலகத்தில் இறங்க, அக்கலகம் நூர்ஜகானால் திறமையுடம் கையாளப்பட்டதால் மகபத்கானும் தக்காணம் சென்று குர்ரமுடன் கைகோர்த்தார்.

- ஜஹாங்கீர் இறந்தவுடன் நூர்ஜகான் தன் மருகன் ஷாரியர் என்பவருக்கு மணிமுடி சூட்ட முயன்றார். ஆனால் நூர்ஜகானின் சகோதரரும் குர்ரமின் மாமனாருமான ஆசப்கான் மேற்கொண்ட முயற்சிகளால் குர்ரம் ஷாஜகான் என்ற பெயருடன் அடுத்த முகலாய அரசராக அரியணை ஏறினார். பத்து ஆண்டுகள் நாட்டையாண்ட நூர்ஜகான், 1627 இல் ஜஹாங்கீரின் இறப்புக்குப் பின்னர் அதிகாரத்தையும் செல்வாக்கையும் இழந்தார். 1641 இல் ஷாஜகானின் அமைச்சரும் மாமனாருமான ஆசப்கான் மரணமடைந்தார். ஆசப்கானின் சகோதரியும் ஷாஜகானின் முன்னாள் எதிரியுமான நூர்ஜகான் 1645 டிசம்பர் வரை உயிரோடிருந்தார். ஒய்வு பெற்ற பின் அவர் வேறு பிரச்சனைகள் எதையும் ஏற்படுத்தவில்லை.

**ஷாஜகான் (1627 – 1658):**

- ஷாஜகான் ஆக்ராவில் அரியணை ஏறியபோது அவருடைய நிலை பாதுகாப்பானதாகவும் சவால்களற்றதாகவும் இருந்தது. இருந்தபோதிலும் பேரரசின் நடப்பு நிகழ்வுகள் கவனத்தைக் கோரின. தெற்குப் பிராந்தியங்களின் ஆளுநராக இருந்த கான்ஜகான் எனும் பட்டப் பெயர் கொண்ட ஆப்கானாகிய பிர்லோடி பகைமை பாராட்டினார். தக்காண அரசிலிருந்து அவரை இடமாற்றம் செய்து ஷாஜகான் ஆணை பிறப்பித்திருந்தும் அவர் அகமதுநகர் சுல்தானான இரண்டாம் முர்தசா நிஜாம்ஷாவுடன் இணைந்து ஷாஜகானுக்கு எதிராகச் சதிகளில் ஈடுபட்டார். நிலைமை தீவிரமடைந்ததைத் தொடர்ந்து ஷாஜகான் தானே நேரடியாகத் தக்காணத்திற்கு விரைந்தார். புதிதாகப் பதவியில் அமர்த்தப்பட்டத் தக்காண ஆளுநர் ஆசம்கான் எனும் பட்டத்தைப் பெற்ற இராதத்கான் பேரரசின் படைகளுக்குத் தலைமையேற்று பால்காட் பகுதியைத் தாக்கினார். பேரரசின் படைகளால் ஏற்பட்ட அழிவுகளைக் கண்ட மூர்தசா கான்ஜகானுடான தனது போக்கை மாற்றிக் கொண்டார். இதனால் கான்ஜகான் தௌலதாபாத்திலிருந்து தப்பி மாளவம் சென்றார். ஆனால் முடிவில் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். தக்காணத்தில் அமைதி திரும்பியது. ஷாஜகான் தக்காணத்தை விட்டுச் செல்லும் முன்பாக அப்பகுதியைக் தௌலதாபாத் உள்ளிட்ட அகமதுநகர், காண்டேஷ், பெரார், தெலுங்கானா என நான்கு மாநிலங்களாகப் பிரித்தார். அந்நான்கு மாநிலங்களுக்கும் ஆளுநராகப் பதினெட்டே வயது நிரம்பிய தனது மகன் ஔரங்கசீப்பை நியமித்தார்.

- தக்காணம் இவ்வாறாக ஷாஜகான் காலத்தில் முகலாயப் பேரரசின் ஆற்றல்மிக்க கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. முகலாயருக்கு வலுவான போட்டியாளராகத் திகழ்ந்த அகமதுநகர் மாலிக் ஆம்பரின் கடுமையான எதிர்ப்பையும் மீறி பேரரசோடு இணைக்கப்பட்டது. 636 இல் ஷாஜகான் மகபத்கானின் உதவியோடு அகமது நகரின் நிஜாம் ஷாஹி அரசர்களைப் பணியச் செய்தார். ஷியா பிரிவைச் சேர்ந்த கோல்கொணடாவின் சுல்தான் தன் அமைச்சர் மீர்ஜும்லாவைச் சிறையில் அடைத்ததைக் காரணம் காட்டி ஔரங்கசீப் கோல்கொண்டாவின் மீது படையெடுத்தார். உடன்படிக்கையொன்றும் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி குதுப்ஷாகி அரசர் முகலாயப் பேரரசுக்குக் கட்டுப்பட்ட, சிற்றரசரானார்.

**தக்காண சுல்தானியம்:**
மகாராஷ்டிரா, ஆந்திரா ஆகியவற்றின் பெரும் பகுதியையும் கர்நாடகத்தின் ஒரு பகுதியையும் கொண்டிருந்த பாமினி சுல்தானியம் ஒரு நூற்றாண்டுக் காலம் செல்வச் செழிப்போடு இருந்து பின்னர் சிதைவுற்றது. வலிமை வாய்ந்த பிரபுக்கள் கோல்கொண்டா (குதுப்ஷாஹி), பீஜப்பூர், (அடில்ஷாஹி), பெரார் (இமத்ஷாஹி) பீடார், (பரித்ஷாஹி) அகமதுநகர், (நிஜாம் ஷாஹி) ஆகிய இடங்களில் புதிய அரசுகளைத் தோற்றுவித்தனர். இவையனைத்தும் கூட்டாகத் தக்காணச் சுல்தானிடம் என்றழைக்கப்படுகிறது.

- 1638 இல் ஷாஜகான் பாரசீகப் பேரரசில் அரங்கேறிய அரசியல் சூழ்ச்சிகளைப் பயன்படுத்தி, அக்பரால் கைப்பற்றப்பட்டு ஜஹாங்கீரால் இழக்கப்பட்ட காந்தகாரைக் கைப்பற்றி இணைத்துக்கொண்டார்.

- போர்த்துகீசியர் கோவாவில் ஒரு ஆளுநரைக் கொண்டிருக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தாலும் வங்காளத்தில் தங்களது குடியிருப்புகளைத் தொலைதூரத்திலிருந்த ஹுக்ளியில் பெற்றிருந்தனர். ஷாஜகான் இப்போர்த்துகீசியரை அவர்களின் குடியிருப்புகளிலிருந்து துரத்தும்படி வங்காள ஆளுநருக்கு உத்தரவிட்டார். ஹுக்ளியிலிருந்த 200 போர்த்துகீசியர் 600 இந்திய அடிமைகளுக்குச் சொந்தக்காரர்களாய் இருந்தனர். அவர்களில் பலரைப் போர்த்துகீசியர் கட்டாய மதமாற்றம் செய்து கிறித்தவர்களாக்கினர். மேலும் கோவாவிலிருந்த போர்த்துகீசியர் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதில் வீரமாகப் போராடினாலும் முகலாயப் படைகளால் எளிதாகத் தோற்கடிக்கப்பட்டனர்.

- 1641இல் ஷாஜகானின் அமைச்சரும் மாமனாருமான ஆசப்கான் மரணமடைந்தார். ஆசப்கானின் தமக்கையும் ஷாஜகானின் முன்னாள் எதிரியுமான நூர்ஜகான் 1645 டிசம்பர் வரை உயிரோடிருந்தார். ஓய்வு பெற்றபின் அவர் வேறு பிரச்சனைகள் எதையும் ஏற்படுத்தவில்லை.

- பிரான்ஸ் அரசன் XIV லூயியின் சமகாலத்து அரசனான ஷாஜகான் முப்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். இவருடைய காலத்தில்தான் அரசருக்காகப் புகழ்பெற்ற மயிலாசனம் செய்யப்பட்டது.

- பெர்னியர் (பிரெஞ்சு மருத்துவர், பயணி) தாவர்னியர் (பிரெஞ்சு வைர வியாபாரி, பயணி), மான்டெல்சோ (ஜெர்மன் பயணி மற்றும் துணிச்சல் வீரர்), பீட்டர்முன்டி, (இங்கிலாந்து வணிகர்), மனுச்சி (இத்தாலிய எழுத்தாளர் மற்றும் பயணி) ஆகிய ஐரோப்பியர்கள் ஷாஜகானின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவிற்கு வந்தனர். இந்தியா குறித்த விரிவான விவரங்களை எழுதிச் சென்றனர்.

- ஷாஜகானின் இறுதி நாட்களில் அவரது நான்கு மகன்களிடையே அரியணைக்கான போட்டி ஏற்பட்டது. மூத்த மகன் தாராஷுகோ அரசனாவதை ஷாஜகான் விரும்பினார். தாராஷுகோ பட்டத்து இளவரசனாக அறிவிக்கப்பட்டதால் மற்ற சகோதரர்கள் வெறுப்புக் கொண்டனர். மூன்றாவது மகனான ஔரங்கசீப், மனிதர்களையும் சூழ்நிலைகளையும் சரியாக எடைபோடுபவராகவும் சிறந்த திட்டமிடல் கொண்டவராகவும் இரக்கமற்றவராகவும் இருந்தார். தாராஷுகோ சன்னி இஸ்லாமியப் பிரிவைச் சேர்ந்தவராயினும் சூபி தத்துவங்களின் மேல் ஆர்வம் கொண்டிருந்தார். ஷாஜகானின் நான்கு

மகன்களிடையே நடைபெற்ற வாரிசுரிமைச் போரில் மூன்றாவது மகன் ஔரங்கசீப் வெற்றி பெற்றார்.

தில்லி அரியணைக்கான வாரிசுரிமைப் போரில் ஔரங்கசீப்பிடம் தோற்றுப்போன தாராஷூகோ தத்துவஞான இளவரசர் என அறியப்பட்டார். பல்வேறு பயன்பாடுகளை உரையாடலுக்கு உட்படுத்திய அவர் இந்து மதத்திற்கும் இஸ்லாத்துக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் இருப்பதைக் கண்டறிந்தார். சமஸ்கிருத மொழியிலமைந்த உபநிடதங்களைப் பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார்.

ஷாஜகானைச் வீட்டுச் சிறையிலடைத்த ஔரங்கசீப் முகலாயப் பேரரசராக முடிசூட்டிக் கொண்டார். மனம் உடைந்துபோன ஷாஜகான் ஒரு அரண்மனைக் கைதியாகவே 1666 ஜனவரி மாதம் மரணமடைந்தார். தாஜ்மஹாலில் அவரது மனைவியின் அருகே நல்லடக்கம் செய்யப்பட்டார்.

**ஔரங்கசீப் (1658 – 1707):**

- ஓரளங்கசீப் ஆலம்கீர் (உலகை வெல்பவர்) வாரிசுரிமைப் போரில் அரியணைக்காகத் தன்னோடு போட்டியிட்ட தாராஷூகோ, ஷூஜா, முராத் ஆகியோரை வெற்றி கொண்டு 1658 இல் அரியணை ஏறினார். அவருடைய ஐம்பது ஆண்டுகால ஆட்சியைச் சரிபாதியாகப் பிரித்துப் பார்க்கலாம். முதல் இருபத்தைந்து ஆண்டுகள் வட இந்திய அரசியலில் பெரும்பாலும் ஈடுபட்டிருந்தார். தக்காணப் பகுதி அவருடைய ஆளுநர்களின் கைகளில் விடப்பட்டிருந்தன. 1681 இல் அவருடைய மகன்களில் ஒருவரான இளவரசர் அக்பர் மேற்கொண்ட கிளர்ச்சியின் காரணமாய் அவர் தக்காணம் செல்ல நேர்ந்தது. மீண்டும் அவர் தில்லிக்குத் திரும்பவேயில்லை. ஏமாற்றமடைந்த மனநிலையில் 1707-இல் அவர் அகமதுநகரில் காலமானார்.

- முகலாயப் பேரரசின் எல்லைகளை விரிவடையச் செய்வதற்காகப் பல படையெடுப்புகளை ஔரங்கசீப் மேற்கொண்டார். வடமேற்கிலும் வடகிழக்கிலும் அவர் மேற்கொண்ட போர்களால் கருவூலம் வறண்டு போனது. இவருடைய தந்தையார் காலத்திலேயே நிலவரியானது விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கு என்ற நிலையிலிருந்து சரிபாதி என உயர்த்தப்பட்டது. ஔரங்கசீப் மேற்கொண்ட நீடித்தப் போர் நடவடிக்கைகள், விவசாயிகளின் மீது அதிகமான வரிகளைச் சுமத்தும் தேவையை ஏற்படுத்தின. தொடக்கத்தில் ஷாஜகானாபாத் அவரின் தலைநகராக அமைந்தது. ஆனால் இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் தனது நீண்ட படையெடுப்புகளின் போது ஔரங்கசீப் எங்கெல்லாம் முகாமிட்டாரோ அவ்விடங்களுக்குத் தலைநகர் மாறியது.

- வட இந்தியாவில் ஔரங்கசீப்பிற்கு எதிராக மூன்று மிக முக்கியக் கிளர்ச்சிகள் அரங்கேறின. ஜாட் (மதுரா மாவட்டம்), சத்னாமியர் (ஹரியானா பகுதி), சீக்கியர் ஆகியோர் கலகம் செய்தனர். ஜஹாங்கீர், ஷாஜகான் காலத்திலேயே தொடர்ந்து கலகம் செய்யும் இயல்பினைக் கொண்ட ஜாட்டுகளின் 1669 ஆம் ஆண்டுக் கலகம் தற்காலிகமாக ஒடுக்கப்பட்டாலும் ஔரங்கசீப்பின் இறப்பிற்குப் பின்னரும் அவர்கள் கட்டுக்கடங்காதவர்களாகவே இருந்தனர்.

- சத்னாமியரின் கிளர்ச்சியானது உள்ளூர் இந்த ஜமீன்தார்களின் உதவியோடு ஒடுக்கப்பட்டது. சீக்கியர் கலகமானது, அதிகாரப்பூர்வமாக சீக்கிய குரு என்ற பதவியை வகித்து வந்த சீக்கிய குரு தேஜ்பகதூருக்கு எதிராக அப்பதவியின்

மீது உரிமை பாராட்டிய ராம்ராய் மேற்கொண்ட சூழ்ச்சிகளின் காரணமாய் வெடித்தது. இறுதியில் சீக்கியரின் ஒன்பதாவது குருவான தேஜ்பகதூர் கொல்லப்பட்டதோடு கிளர்ச்சி முடிவுற்றது.

- அனைத்து வகைகளைச் சேர்ந்த இந்துக்களின் மீதும் ஜிஸியா வரி விதிக்கப்பட வேண்டுமென ஔரங்கசீப் மேற்கொணட முடிவு, அதுவரைப் பேரரசிற்கு விசுவாசத்துடன் சேவை செய்துவந்த ராஜஸ்தானத்து தலைவர்களிடையே கிளர்ச்சி மனநிலையை உருவாக்கியது. மார்வாரில் ஜஸ்வந்த் சிங்கின் மரணத்தைத் தொடர்ந்து வாரிசுரிமைச் சிக்கல் ஏற்பட்டது. இச்சிக்கலில் ஔரங்கசீப் தலையிட்டு ஜஸ்வந்த் சிங்கின் பேரனான இந்திரசிங் என்பவரைப் பெயரளவிற்கு அரச பதவியில் அமர்த்த மேற்கொண்ட முயற்சியை ஜஸ்வந்த் சிங்கின் மனைவி ராணி ஹாடி வெறுத்தார். இது தொடர்பாக, ராத்தோர் ரஜபுத்திரரின் உதவியோடு மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சி ஒடுக்கப்பட்டது.

- மார்வார் அரசியலில் ஔரங்கசீப் தலையிட்டதால் வெறுப்புக் கொண்ட மேவாரின் ராணாவான ராஜ்சிங் கலகத்தில் ஈடுபட்டார். இக்கிளர்ச்சியை ஔரங்கசீப்பின் மகன் இளவரசர் அக்பர் ஆதரித்தார். இருந்தபோதிலும் முகலாயப் படைகளுக்கு ராணா இணையானவர் அல்ல என்பதால் கொரில்லா போர் முறையைக் கையாண்டு 1680 இல் தான் மரணமடையும் வரை ராணா போராடினார். 1681 இல் மேவாரின் புதிய ராணாவாகப் பதவியேற்ற ராணா ஜெய்சிங் ஔரங்கசீப்புடன் ஒரு அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்.

**ஔரங்கசீப்பின் தக்காணக் கொள்கை:**

- ஔரங்கசீப்பின் தக்காணக் கொள்கையானது வளர்ந்துவந்த மராத்தியரின் செல்வாக்கைக் கட்டுப்படுத்துவது, ஷியா பிரிவைச் சேர்ந்த தக்காணச் சுல்தானியங்களானக் கோல்கொண்டா, பீஜப்பூர் ஆகியவற்றின் கிளர்ச்சிப் போக்கிற்கு அணைபோடுவது, தக்காணத்தைப் புகலிடமாகக் கொண்ட தனது மகன் இளவரசர் அக்பரின் கிளர்ச்சிகளை ஒடுக்குவது ஆகியவற்றை நோக்கமாய்க் கொண்டிருந்தது.

- ஔரங்கசீப் 1682 இல் தக்காணம் வந்தார். 1707 இல் தனது மரணம் வரை தக்காணத்திலேயே தங்கியிருந்தார்.

- பீஜப்பூரின் அடில்சாஹி வம்சத்தைச் சேர்ந்த சுல்தான் சிக்கந்தர் அடில்ஷா ஔரங்கசீப்பின் பல படையெடுப்புகளை எதிர்த்து நின்றார்.

- ஔரங்சீப் 1685 இல் தனது மகன் ஆசாம் ஷாவை அனுப்பிவைத்தில் பயனேதுமில்லை பின்னர் மற்றொரு மகன் ஷா ஆலமை பீஜப்பூரைக் கைப்பற்ற அனுப்பி வைத்தார். ஷியா முஸ்லீமான பீஜப்பூர் சுல்தான் திறமையுடன் கோட்டையை பாதுகாத்தார்.

- ஆனால் ஔரங்கசீப்பே நேரடியாகப் போர்க்களத்தில் இறங்கி இறுதிவரை போரிடும்படி தனது படைகளுக்கு உற்சாகம் அளித்ததால் பீஜப்பூர் சுல்தான் தோல்வியடைந்தார். கோல்கொண்டா சுல்தான் அப்துல் ஹசன் 1687 இல் தோற்கடிக்கப்பட்டு கோல்கொண்டா கைப்பற்றப்பட்டது.

**மராத்தியருக்கு எதிராக ஔரங்கசீப்பின் நடவடிக்கைகள்:**

- சிவாஜியின் தலைமையில் மராத்தியர்கள் ஔரங்கசீப்புக்கு ஓர் அச்சுறுத்தலாகவே இருந்தனர். ஔரங்கசீப் தனது இரு முக்கியத் தளபதிகளான செயிஷ்டகான், ஜெய்சிங் ஆகியோரை ஒருவருக்குப் பின் ஒருவராக சிவாஜியைக் கைதுசெய்ய அனுப்பி வைத்தார். ஜெய்சிங் சிவாஜியைக் கைது செய்து தில்லிக்கு அழைத்துச் சென்றார். ஆனால் அங்கிருந்து தப்பிய சிவாஜி மீண்டும் தக்காணத்தை அடைந்தார். சிவாஜி கொரில்லாப் போர் முறையைப் பின்பற்றி 1680 இல் தான் மரணமடையும் வரை முகலாயப் படைகளை எதிர்த்துப் போர் செய்தார். சிவாஜியின் மகன்களும் தொடர்ந்து எதிர்த்து ஔரங்கசீப்பை 1707 இல் அவர் மரணமடையும் வரை பெரும் சோதனைக்கு உள்ளாக்கினார். 1707 இல் ஔரங்கசீப் காலமானது இந்திய வரலாற்றில் ஒரு முக்கியத் திருப்புமுனையாகும். ஏனெனில் அடுத்த 150 ஆண்டுகளுக்கு வலிமைகுன்றிய வழித்தோன்றல்களால் அது ஆளப்பட்டபோதும் ஔரங்கசீப் மரணமடைந்தபோதே முகலாயப் பேரரசும் முடிவுக்கு வந்துவிட்டது.

- அரியணைப் போட்டியில் தனக்கு எதிரான முக்கியப் போட்டியாளரான தனது சகோதரர் தாராஷுகோவுக்குச் சீக்கியர் உதவினர் என்ற காரணத்திற்காக அவர்களின் மீது ஔரங்கசீப் வெறுப்புக் கொண்டார். ஔரங்கசீப்பின் உத்தரவின் படியே குரு தேஜ்பகதூர் கொல்லப்பட்டார். ஔரங்கசீப்பிற்குக் கடுமையான எதிர்ப்பென்பது மராத்தியரிடமிருந்தே வந்தது. அவர்களின் தலைவரான சிவாஜி ஔரங்கசீப்பிற்கு சதையில் குத்திய முள்ளாக இருந்தார்.

- சிவாஜி தனது 53 வது வயதில் காலமானது முகலாயப் பேரரசருக்கு ஓரளவுக்கு நிம்மதியைத் தந்தது. ஆனால் அதே ஆண்டில் ஜோத்பூர் மற்றும் மேவாரைச் சேர்ந்த ரஜபுத்திர அரசர்கள் ஔரங்கசீப்பிற்கு எதிராக உடன்படிக்கையை மேற்கொண்டு தங்களை ஓரங்கசீப்பின் மேலாதிக்கத்திலிருந்து விடுபட்ட சுதந்திர அரசுகளாகப் பிரகடனம் செய்தனர். இவர்களுக்கு எதிராக ஔரங்கசீப்பின் மகனான இளவரசர் அக்பரின் தலைமையில் பெரும்படையொன்று அனுப்பப்பட்டது. மகனுடையத் துரோகக் குணத்தை ஒருவேளை அறிந்திராமலே ஔரங்கசீப் இந்த முடிவை எடுத்திருக்கலாம். எப்படியிருந்தபோதிலும் இளவரசர் தன்னைஅ முகலாயப் பேரரசராகப் பிரகடனம் செய்து கொண்டார். தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அவரைத் தக்காணத்திற்குத் துரத்தின. அங்கு அவர் சிவாஜியின் மகன் சாம்பாஜியின் உதவியைப் பெற்றார். ஔரங்கசீப் நேரடியாகக் களத்தில் இறங்கவே பாரசீகத்திற்குத் தப்பிச் சென்ற இளவரசர் அக்பர் அங்கிருந்து திரும்பவேயில்லை. 1689 இல் சாம்பாஜி கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். பீஜப்பூர், கோல்கொண்டா சுல்தானியங்கள் முற்றிலுமாகச் சரணடையும் அளவுக்குத் தள்ளப்பட்டன.

- ஔரங்கசீப்பின் ஆட்சியின் இறுதிப்பகுதியில் பேரரசு சிதைவடையத் தொடங்கியது. ஔரங்கசீப்பின் இறப்பிற்குப் பின் தோன்றிய “பின்தொடர்ந்த அரசுகளால்” பேரரசின் சிதைவு விரைவுபடுத்தப்பட்டது. பேரரசு எளிதில் கையாள முடியாத அளவிற்கு விரிந்தது. பேரரசின் தொலைதூரப் பகுதிகளை மேலாண்மை செய்யக்கூடிய அளவுக்குப் போதுமான நம்பிக்கைக்குரிய நபர்களை ஔரங்கசீப் பெற்றிருக்கவில்லை. அவருடைய அரசியல் எதிரிகள் பலர் முகலாயர் ஆதிக்கத்தை மீறி சுதந்திர அரசர்களாகப் பிரகடனம் செய்தனர். தக்காண விவகாரங்களில் ஔரங்கசீப் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டது பேரரசின் ஏனைய பகுதிகளில் தோன்றிய எதிர்ப்புகளை

எதிர்கொள்ளவிடாமல் அவரைத் தடுத்தது. ஔரங்கசீப் மரணமடைந்த சிறிது காலத்திலேயே இந்திய அரசியலில் முகலாயப் பேரரசு ஒரு ஆற்றல்மிக்க சக்தியாக இல்லாமல் மறைந்தது.

- ஔரங்கசீப் "ஜிஸியா" வரியை மீண்டும் விதித்தார். புதிய கோவில்கள் கட்டப்படக் கூடாதெனவும் ஆணைகள் பிறப்பிந்தார். ஆனால் பழைய கோவில்களில் பழுது நீக்கும் பணிகள் அனுமதிக்கப்பட்டன. இந்நடவடிக்கைகள் அவருடைய மத நம்பிக்கைகயில் மட்டும் வேர்கொண்டு இருக்கவில்லை; மாறாக அரசியல் நிர்பந்தங்களிலும் அவை வேர்கொண்டிருந்தன. ஜிஸியா வரி இந்தியாவில் பல ஆண்டுகளாக விதிக்கப்பட்டது. ஆனால் ஓர் உண்மையான முஸ்லீமாக, வழக்கமாக விதிக்கப்படும் நிலவரிக்கு மேலாக வசூலிக்கப்பட்ட "அப்வாப்" என்னும் வரிவசூலை, அது ஷரியத் சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்ற காரணத்திற்காக நிறுத்தினார். அதைப் போலவே கோவில்கள் தொடர்பான அவருடைய சட்டங்களும் பழமையானவை. இச்சட்டங்கள் அரசியல் பகைமையிருந்த பகுதிகளில் மட்டும் நடைமுறையில் இருந்தன. எங்கே அரசியல் பகைமையில்லாமல் கீழ்ப்படியும் நிலையிருந்ததோ அங்கெல்லாம் கோவில்கள் கட்டுவதற்கு ஔரங்கசீப் கொடைகளை அளித்துள்ளார்.

- ஷாஜகானுடைய ஆட்சிக் காலத்தைக் காட்டிலும் ஔரங்கசீப்பின் ஆட்சிக் காலத்தில் இந்து அதிகாரிகள் அதிகமான எண்ணிக்கையில் அரசு நிர்வாகத்தில் பணியாற்றினர் என்பது இவ்விடத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய செய்தியாகும்.

**முகலாயர்காலச் சமுதாயம்:**

- இந்திய மக்கள் தொகை 16 ஆம் நூற்றாண்டில் 15 கோடியாகவும் 18 ஆம் நூற்றாண்டில் 20 கோடியாகவும் இருந்திருக்கலாமென மதிப்பீடு செய்யப்படுகிறது. நிலப்பரப்பின் பெரும்பகுதி காடுகளாக இருந்தால் வேளாண்மை நிலங்கள் அளவில் குறைவாகவே இருந்தருக்க வேண்டும். சமூகத்தின் மிக முக்கியத் தொழில் வேளாண்மை என்பதால், சமூக அமைப்பில் கிராமச்சமூகமே முதன்மை நிறுவனமாகும். கிராமத்தின் இயல்புகள், உட்கூறுகள், ஆட்சி முறைகள் ஆகியவற்றில் இடத்திற்கிடம் வேறுபாடுகள் இருந்தபோதிலும் கிராம நிர்வாகத்தில் சில பொதுத்தன்மைகள்
  கிராமத்தின் இயல்புகள், உட்கூறுகள், ஆட்சி முறைகள் ஆகியவற்றில் இடத்திற்கிடம் வேறுபாடுகள் இருந்தபோதிலும் கிராம நிர்வாகத்தில் சில பொதுத்துன்மைகள் இருந்தன. முக்காடம் என்றழைக்கப்பட்டக் கிராமத் தலைவர்கள் கிராமத்தின் நிர்வாக உறுப்பான பஞ்ச் (பஞ்சாயத்து) என்ற அமைப்பினை உருவாக்கினர். கிராம அளவில் வரிகளை வசூலிப்பதும் அவை தொடர்பான கணக்குகளைப் பராமரிப்பதும் இப்பஞ்சாயத்தின் பொறுப்பாகும். பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படாத நிலைங்களைக் கிராமக் கைவினைஞர்கள், கடைநிலை ஊழியர்கள், சேவை செய்வோர் ஆகியோருக்கு அவர்கள் செய்யும் சேவைகளுக்குக் கைமாறாக இப்பஞ்சாயத்து வழங்கியது.

- சமூகத்தின் நடுத்தர வர்க்கமானது சிறிய மன்சப்தார்கள், சிறு கடைகள் வைத்திருப்போர், ஹக்கீம் (மருத்துவர்கள்), இசைக் கலைஞர்கள், ஏனைய கலைஞர்கள், முகலாய நிர்வாகத்தின் கீழ்நிலை அலுவலர்கள் ஆகியோரைக் கொண்டிருந்தது. ஊதியம் பெறும் ஒரு வர்க்கமும் இருந்தது. இவர்கள் "மதாத்-

இ-மாஷ்" எனப்பட்ட மானியத்தை முகலாயப் பேரரசரிடமிருந்தும், உள்ளூர் ஆட்சியாளர்கள், ஜமீன்தார்கள் ஆகியோரிடமிருந்தும் பெற்றனர். இவர்கள் கிராமத்து மேன்மக்களின் ஒரு பகுதியாக மாறி கிராமத்தையும் நகரத்தையும் இணைக்கின்ற கண்ணிகளாய் இருந்தனர். தில்லி, ஆக்ரா, பதேப்பூர் சிக்ரி, லாகூர், அகமதுநகர், டாக்கா, முல்தான் ஆகியன பேரரசின் முக்கியமான நகரங்களாகும். அவை சமகால ஐரோப்பிய நகரங்களான லண்டன், பாரிஸ் போன்றவற்றிற்கு இணையாகக் கருதத்தக்க நிலையிலிருந்தன.

- சிறப்பு உரிமைகளையும் தனிச் சலுகைகளையும் பெற்றிருந்த வர்க்கத்தாருக்கும் அவற்றைப் பெற்றிராத வர்க்கத்தாருக்கும் இடையே வாழ்க்கைத் தரத்திலிருந்த சமத்துவமின்மை தெளிவாகத் தெரிந்தது. சமூகத்தின் அடிமட்டத்திலிருந்த மக்களில் ஆண்கள் "லங்கோடு" எனப்பட்ட கௌபீரத்தையும் பெண்கள் சேலையையும் அணிந்தனர். ஏழைமக்கள் மண் வீடுகளில் வசித்தனர். அவர்களுடைய உணவு கோதுமை சப்பாத்தி, பருப்புகள், காய்கறி ஆகியன. முகலாய சமூகத்தில் உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றிருந்த ஜமீன்தார்களையும், பிரபுக்களையும் கொண்டிருந்த வர்க்கம் ஆடம்பரமான வாழ்க்கையை வாழ்ந்தனர். மன்சப்தாரிகளான பிரபுக்கள் ஜாகீர்களை (நிலமானியங்களை) தங்கள் தகுதிக்கேற்ற ஊதியமாகப் பெற்றிருந்தனர். இவர்கள் அடக்குமுறை, சுரண்டும் இயல்புகளைக் கொண்டிருந்தனர். பிரபுக்கள் அதிக எண்ணிக்கையிலான பணியாளர்களையும் குதிரைகளையும் யானைகளையும் மற்றவற்றையும் பெற்றிருந்தனர். அவர்கள் கனிமரங்களைக் கொண்ட தோட்டங்களையும், நீரோடைகளையும் கொண்டிருந்த அழகிய வீடுகளிலும் வசித்தனர். நேர்த்தியான ஆடைகளை அணிந்தனர்.

- ஆதிக்க இனங்களையும் சாதிகளையும் சேர்ந்த ஜமீன்தார்கள் ஆயுதம் ஏந்திய படைகளோடு நிலத்தின் மீதும் விவசாயிகளின் மீதும் ஆதிக்கம் செலுத்தக் கூடிய சலுகைகளைப் பெற்றவர்களாய் விளங்கினர். அபுல் பாசல் தன்னுடைய அய்னி அக்பரியில் ஜமீன்தார்கள் ஆவதற்கானத் தகுதிகளையுடைய சாதிகளைப் பட்டியலிடுகிறார். பெரும்பாலும் இந்து மேல் சாதிகளைச் சேர்ந்தோரும் ரஜபுத்திரர்களும் ஜமீன்தார்களாக இருந்தனர். சில பகுதிகளில் முஸ்லீம்களும் ஜமீன்தார்களாக இருந்துள்ளனர். ஜமீன்தார்கள் குத்தகைப் பணத்தை முறையாகச் செலுத்தத் தவறிய விவசாயிகளை நிலத்தைவிட்டு வெளியேற்றும் உரிமையைப் பெற்றிருந்தனர்.

- முகலாயச் சமூகக் கட்டமைப்பில் பிரபுக்களாக அங்கம் வகித்தவர்களில் பெரும்பாலோர் மத்திய ஆசியா மற்றும் ஈரானிலிருந்து வந்தவர்களாவர். ஆப்கானியர், இந்திய முஸ்லீம்கள் (ஷேயிக்சதாஸ் என்றழைக்கப்பட்டனர்). புஜபுத்திரர்கள், மராத்தியர் ஆகியோரும் பிரபுக்கள் என்னும் சமூக மேன்மைநிலையைப் பெற்றிருந்தனர். அக்பருடைய ஆட்சிக் காலத்தில் 15 விழுக்காடுக்கும் மேற்பட்ட பிரபுக்கள் ரஜபுத்திரர்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ராஜா தோடர்மால், ராஜா மான்சிங், ராஜா பீர்பால் ஆகியோர் அக்பர் காலத்தில் புகழ்பெற்ற பிரபுக்களாவர். ரஜபுத்திரர்கள் அரசு நிர்வாகத்திலிருந்த பல்வேறு பணியிடங்களுக்குக் காயஸ்தர், கத்ரி சமூகத்தைச் சேர்ந்தவர்களை நியமித்தனர். ஜஹாங்கீர், ஷாஜகான், ஔரங்கசீப் ஆகியோர் மராத்தியரைப் பிரபுக்களாக நியமித்தனர். எடுத்துக்காட்டாக சிவாஜியின் தந்தை ஷாஜி சில காலம் ஷாஜகானிடம் பணியாற்றினார்.

- வாழ்க்கையில் மேம்பாடு அடைவதற்கான வாய்ப்புகள் இந்தியாவில் அதிகம் இருந்ததால் மத்திய ஆசியாவிலிருந்து தொடர்ந்து புலம்பெயர்தல் நடைபெற்றது. இப்புலம் பெயர்தல் பல்வகைப்பட்டக் கூறுகள் ஒருங்கிணைவதற்கு வழிவகுத்துப் பண்பாட்டிற்குச் செழுமை சேர்த்தது. பிரபுக்கள் இன அடிப்படையில் பிரிந்திருந்தாலும் அவர்கள் கூட்டிணைந்த வர்க்கமாக, பாரசீக இந்திய ஓவியர்களையும், இசைக்கலைஞர்களையும் ஆதரித்ததன் மூலம் ஒரு சமரசம் சார்ந்த பண்பாட்டை முன்னெடுத்தனர்.

- சாதிமுறை ஒரு மேலாதிக்க நிறுவனமாக இருந்தது. கீழ்நிலைச் சாதிகள் அதிகமான ஒடுக்குமுறைக்கு உள்ளாயினர். சமூகப் பாகுபாடுகளுக்கு எதிராகப் பக்தி இயக்கம் புரட்சிக்கொடியை உயர்த்தினாலும் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட வறுமையில் வாடிய, நிலமற்ற விவசாயிகள் கட்டாய உழைப்புக்கு உட்படுத்தப்பட்டனர்.

- இந்துப் பெண்கள் பருவமடைவதற்கு முன்பே திருமணம் செய்து தரப்பட்டனர். மரபு வழிச் சொத்துக்களில் பங்கு பெறுவதற்கு குறைந்தபட்ச உரிமையே அவர்களுக்கு இருந்தது. உயர் சாதிப் பெண்களிடையில் விதவை மறுமணம் தடைசெய்யப்பட்டிருந்தது. அன்றாட வீட்டுவேலைகளோடு பெண்கள் நூல்நூற்றனர். வேளாண் பணிகளிலும் உதவி செய்தனர். முகலாய நிர்வாகம் மேல்சாதிச் சமூகங்களிடையே நிலவிய உடன்கட்டை ஏறும் பழக்கத்தை நிறுத்த முயற்சிகளை மேற்கொண்டது. முஸ்லீம், மணப்பெண்கள் திருமணத்தின் போது "மகர்" எனும் பணப்பரிசை (மணமகன் மணமகளுக்குக் கட்டாயம் தர வேண்டிய பணம்) பெறுவதற்கு உரிமை பெற்றிருந்தனர். மேலும் பரம்பரைச் சொத்துக்களில் குடும்பத்திலுள்ள ஆண்களுக்குச் சமமமாக இல்லாவிட்டாலும் பெண்களும் ஓரளவு பங்குபெறும் உரிமையைப் பெற்றிருந்தனர்.

**பொருளாதாரம்:**

- முகலாயப் பொருளாதாரம் காடு சார்ந்த வேளாண் பொருளாதாரமாகும். காடுகள் கைவினைத் தொழிலாளர்களுக்குத் தேவையான கச்சாப் பொருட்களை வழங்கியது. தச்சர், கப்பல்கட்டுவோர், மேல்பூச்சு சாயம் தயாரிப்போர் ஆகியோர்க்குத் தேவையான மரங்களைக் காடுகள் ஈந்தன. நெசவு செய்வோர் உருளைகள் செய்வோர்க்குத் தேவையான பக்குவப்படுத்தப்படாத பட்டையை வழங்கியது. இரும்புச் சுரங்கப் பணியாளர்களுக்கும், உலோகங்களை உருக்குவோருக்கும் தேவைப்பட்ட மரக்கரியைக் கொடுத்தது. ஆகவே உற்பத்தியாளர்களுக்கும் காடுகளுக்குமான உறவு மிக நெருக்கமாக இருந்தது.

- கிராமப் புறங்களில் பல்வகைப்பட்ட வர்க்கங்களைச் சேர்ந்த மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டடிருந்தனர். வேளாண்மையே பொருளாதாரத்தின் அடித்தளம். சொத்துக்கள் வைத்துக்கொள்ள உரிமை மறுக்கப்பட்ட, நிலமற்ற ஏழை விவசாயிகள் மக்கள் தொகையில் ஏறத்தாழக் கால் பங்கிருந்தனர். ஜமீன்தார்களும் கிராமத் தலைவர்களும் ஏராளமான நிலங்களைக் கொண்டிருந்தனர். அவற்றில் பணி செய்ய வேலையாட்கள் அமர்த்தப்பட்டு அவர்களுக்கான ஊதியம் பணமாகவோ பொருளாகவோ வழங்கப்பட்டது. கிணற்று நீர்ப் பாசனமே முக்கியப் பாசன முறையாக இருந்தது.

- ரபி, காரிப் ஆகிய இரு வேளாண் பருவங்களில் பயிர் செய்யப்பட்டப் பயிர் வகைகளை அய்னி அக்பரி பட்டியலிடுகிறது. புகையிலையும் மக்காச்சோளமும் பதினேழாம் நூற்றாண்டில் அறிமுகமாயின. அதற்குப் பின்னரே மிளகாயும் வேர்க்கடலையும் அறிமுகமாயின. அன்னாசிப்பழம் பதினாறாம் நூற்றாண்டில் அறிமுகமானது ஒட்டுமுறையில் பல மாம்பழரகங்களை போர்த்துகீசியர் வளர்த்தார்கள். உருளைக்கிழங்கு, தக்காளி, கொய்யா ஆகியவை பின்னர் வந்தன. அவுரி மற்றுமொரு முகலாய கால முக்கிய வணிகப் பயிராகும். பட்டு உற்பத்தி வங்காளத்தில் பிரமிப்பூட்டும் வளர்ச்சியைப் பெற்று உலகச் சந்தைக்கு அதிகமான பட்டுத்துணியை அனுப்பி வைக்கும் தலைமைப் பட்டு உற்பத்தி மையமாயிற்று.

  - விவசாயிகள் நிலவரியைச் செலுத்துவதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டதால் அவர்கள் தங்கள் உபரியைச் சந்தையில் விற்றாக வேண்டியருந்தது. முகலாய ஆளும் வர்க்கத்தாருக்கு நிலவரியே மிக முக்கியமான வருவாயாகும். அது விளைச்சலில் ஒரு பங்காகும். அரசு நிர்வாகம் நிலத்தின் உற்பத்தித் திறனை மதிப்பிட்டு, நிலத்தை அளவை செய்து, மொத்த அளவை அடிப்படையாகக் கொண்டு வரியை நிர்ணயம் செய்தது. அக்பர் ஜப்தி முறையை (தோடர்மாலால் அறிமுகம் செய்யப்பட்ட முறை) பிரகடனம் செய்தார். நிலத்தின் அளவு, விளைவிக்கப்பட்ட பயிர் ஆகியவற்றின் அடிப்படையில் விவசாயி பணமாகச் செலுத்த வேண்டிய வரி நிர்ணயிக்கப்பட்டது. பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் செலுத்த வேண்டிய இவ்வரிகள் தொடர்பான விவரங்களைக் கொண்ட அட்டவணைகள் தஸ்தர் என அழைக்கப்பட்டன.

  - நகர்புறப் பொருளாதாரம் கைவினைத் தொழிற் கூடங்களைச் சார்ந்திருந்தது. பஞ்சடித்துப்பட்டை இடுபவர், நூல் நூற்போர், நெய்வோர், சாயமேற்றுவோர், அச்சுப் பதிப்போர், சலவைச் செய்வோர் என அதிக எண்ணிக்கையிலான மக்களைப் பருத்தியிழைத் தொழிற் கூடங்கள் பணிகளில் அமர்த்திக் கொண்டன. இரும்பு, தாமிர, வைரச்சுரங்கங்கள் அமைத்தல், துப்பாக்கி தயாரித்தல் போன்றவை ஏனைய முக்கியத்த தொழில்களாகும். “கர்கானா” என்னும் தொழிற்கூடங்களில் விலையுயர்ந்த கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அரச குடும்பங்களுக்குத் தேவையான பொருட்களை அரண்மனை சார்ந்த கர்கானாக்கள் உற்பத்தி செய்தன. கைவினைக் கலைஞர்கள் உற்பத்தி செய்த ஆடம்பரப் பொட்களை வர்த்தகர்கள் உள்ளூர் மற்றும் தொலைதூரச் சந்தைகளுக்கு அனுப்பிவைத்தனர்.

**வரததகமும் வாணிகமும்:**

  - நாட்டின் அரசியல் ஒருங்கிணைப்பும் திறமைமிக்க சட்டம் ஒழுங்குப் பராமரிப்பும் சுறுசுறுப்பான வர்த்தகத்தையும் வாணிகத்தையும் உறுதிப்படுத்தின. உபரியானது நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு ஆறுகளின் வழியாகவும், மாட்டு வண்டிகளிலும், ஒட்டக வண்டிகளிலும் சாலை வழியாகவும் கொண்டு செல்லப்பட்டன. பஞ்சாரா எனும் நாடோடி வணிக இனக்குழு பெருமளவிலான பொருட்களைத் தொலைதூரப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லும் நிபுணத்துவம் பெற்றிருந்தது. அரிசி, சர்க்கரை, மஸ்லின் பட்டு, உணவு தானியம் ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதில் வங்களாம் முக்கிய மையமாகத் திகழ்ந்தது. சோழமண்டலக் கடற்கரை, தனது பருத்தித்

துணி உற்பத்திக்காகப் புகழ் பெற்றிருந்தது. காஷ்மீர் சால்வைகளும் தரைவிரிப்புகளும் கைவினைப் பொருட்களின் உற்பத்திக்குப் பெயர் பெற்றிருந்த லாகூரிலிருந்து விநியோகமாகின. பொருட்கள் இடம் விட்டு இடம் செல்வதற்கு “உண்டி“ என்றழைக்கப்பட்ட கடன் பத்திரங்கள் உதவின. ஒருங்கிணைக்கப்பட்டிருந்த “சராய்கள்“ (ஓய்வு விடுதிகள்) வணிகர்களின் பயணங்களை ஊக்குவித்தன. இந்து, முஸ்லீம், சமணம் போன்ற அனைத்து மதங்களையும் சார்ந்த வணிகர்கள் இருந்தனர். குஜராத்தைச் சேர்ந்த போராமுஸ்லீம்கள், ரஜபுதனத்து மார்வாரிகள், சோழமண்டலக் கடற்கரைசார்ந்த செட்டியார்கள், மலபார் முஸ்லீம்கள் ஆகியோர் புகழ்பெற்ற வணிக சமூகத்தினர் ஆவர்.

- மேற்கு ஆசியா ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றுடனான வணிகத்தை ஐரோப்பியரே கட்டுப்படுத்தினர். இந்திய வணிகர்களின் பங்கேற்பை அவர்கள் கட்டுப்படுத்தினர். மேலும் பெருமளவிலான வளங்களையும், மிகப்பெரும் ராணுவத்தையும் கொண்டிருந்தபோதிலும் முகலாய அரசு ஒரு கடற்படையைக் கொண்ட சக்தியாக இல்லை. தாங்கள் ஒரு பலம் பொருந்திய கடற்படைச் சகாப்தத்தில் வாழ்கிறோம் என்பதை அவர்கள் உணரவில்லை. முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

- ஐரோப்பியர்கள் நறுமணப் பொருட்கள், சாயங்கள், வங்காளப் பட்டு, மஸ்லின், சொரசொரப்பான அச்சிடப்பட்ட துணி, பளபளப்பான பருத்தித் துணி ஆகியவற்றை இங்கும் கொள்முதல் செய்தனர். இதற்கு மாறாக இந்தியா பெருமளவில் தங்கத்தையும் வெள்ளியையும் இறக்குமதி செய்தது. முகலாயரின் வெள்ளி நாணய முறை வெள்ளிக்கான தேவையை அதிகரித்தது.

**மதம்:**

- முகலாயர் காலம் புராண மரபுகளின் அனைத்து அடிப்படைக் கூறுகளும் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டதற்குச் சாட்சியாய் இருந்தது. எண்ணிலடங்கா நம்பிக்கைகளும் அதிக எண்ணிக்கையிலான மரபுகளும் நடைமுறைகளும் வழக்கத்தில் இருந்ததால் இந்து மதத்தை ஒரு கோட்பாட்டுத் தொகுப்பெனச் சொல்வது கடினமானது என்றாலும் பரஸ்பர பரிமாற்றம், பெரும்பாலுமான பகுதிகளில் சமஸ்கிருத மொழியில் வெளிப்பாடாகி, இந்து மதத்தின் பல பிரிவுகள் ஒரே மாதிரியான மரபுத் தொடர்புகளையும், ஒரே மாதிரியான தெய்வங்களையும் கொண்டிருந்தன. பதினாறு, பதினெழு ஆகிய நூற்றாண்டுகள் வைணவ மதத்தின் நூற்றாண்டுகளாகும். இராமர் வழிபாட்டு மரபைத் தனது புகழ்பெற்ற பக்திப் பாடல்கள் வழி முன்மொழிந்த துளசிதாசர் (ராமசரிதமனஸ்) இராமரைக் கடவுளின் அவதாரமாகச் சித்தரித்தார். பக்தியின் இலக்கு விஷ்ணுவின் மற்றொரு அவதாரமான கிருஷ்ணரான போது பக்தியின் வெளிப்பாடு மேலும் உணரச்சிகரமாயிற்று.

- இக்காலகட்டத்தில் பக்தி இயக்கம் பெரும் வளர்ச்சி பெற்றது. கவிஞர்களும் இறையடியார்களும் நாட்டின் பல பகுதிகளில் தோன்றினர். சடங்குகளையும் சாதிமுறையையும் அவர்கள் விமர்சனம் செய்து கேள்விக்குள்ளாக்கினர். தங்கள் பக்தியை வெளிப்படுத்துவதற்கு சமஸ்கிருத மொழியைப் பயன்படுத்தாமல் மக்களின் மொழியைப் பயன்படுத்தினர். அவர்களின் முற்போக்கான சிந்தனைகள் கருத்தைக் கவரும் மொழிநடையில் இசையோடு

பாடப்பட்டபோது அவை மக்களிடையே பிரபலமாயின. வல்லபாச்சாரியார் அவருடைய மகன் வித்தால்நாத் ஆகியோர் கிருஷ்ண வழிபாட்டைப் பரப்புரை செய்தனர். இப்பிரிவைப் பின்பற்றிய சூர்தாஸ் சூர்-சராவளி என்னும் இலக்கியத்தை உள்ளூர் மொழியில் எழுதினார். ஏகநாதர், துக்காராம் ஆகியோர் மகாராஷ்டிராவைச் சேர்ந்த பக்தி இயக்கக் கவிஞர்களாவர். வியாசராயரால் பிரபலப்படுத்தப்பட்ட கர்நாடகத்தைச் சேர்ந்த பக்தி இயக்கமான "தசருதா" இயக்கம் தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தோரின் இயக்கமாக மாறியது.

- பக்தி இயக்கத்தின் மிக முக்கிய ஆளுமை கபீர் ஆவார். இவர் முழுமையான ஒரு கடவுள் கோட்பாட்டை முன்வைத்தார். உருவ வழிபாட்டையும் சடங்குகளையும் சாதிமுறைகளையும் கண்டித்தார். எளிய மொழி நடையில் எழுதப்பட்ட இவரின் பாடல்கள் வாய்மொழியாகவே வட இந்தியாவின் பெரும் பகுதியில் பரவியன.

- பக்தி இயக்கப் புலவர்களைப் பற்றி ஆர்வமூட்டக் கூடிய செய்தி யாதெனில் அவர்கள் தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களாகவும் கைவினைஞர்களாகவும் சேவை செய்யும் சமூகப் பிரிவினராகவும் இருந்தனர் என்பதே. கபீர் ஒரு நெசவாளர். ரவிதாஸ் தோல் பதனிடும் தொழிலாளி. சைன் என்பவர் சிகையலங்காரத் தொழில் செய்தவர். தாது பருத்தியைச் சுத்தம் செய்பவராவார். ஹரியானாவைச் சேர்ந்த சத்னாமி சமூகத்தவர் தங்களைச் கபீர் மற்றும் அவருடைய போதனைகளின் வழித்தோன்றல்கள் எனக் கூறுவதில் பெருமை கொள்கின்றனர். சமஸ்கிருதமும் பாரசீகமும் நிர்வாக, அறிவுலக நடவடிக்கைகளின் மொழிகளாக இருக்கையில் பிராந்திய மொழிகள் தங்கள் உயிர்த்துடிப்பு மிக்க இலக்கிய ஆற்றலை வெளிப்படுத்தின.

**சீக்கிய மதம்:**

- சீக்கிய மதம் ஒரு கடவுள் கோட்பாட்டை முன்னெடுத்த இயக்கமாகத் தோற்றம் பெற்று பின்னர் அங்கீகரிக்கப்பட்ட உலக மதங்களில் ஒன்றாகப் பரிணமித்தது. சீக்கியரின் புனித நூலான குரு கிரந்த சாகிப் இஸ்லாமிய மத குருவான ஷேக் பரித், பக்தி இயக்கப் புலவர்களான நாமதேவர், கபீர், சைன், ரவிதாஸ் ஆகியோரின் போதனைகளை உள்ளடக்கமாய்க் கொண்டுள்ளது. "கடவுள் ஒருவரே" என குரு நானக் நம்பினார். அக்கடவுள் உருவமற்றவர், எங்கும் நிறைந்திருப்பவர் எனக் கூறினார். உருவ வழிபாட்டையும் மதச் சடங்குகளையும் அவர் கண்டனம் செய்தார். அனைத்து மக்களின் மீதும் அன்பு செலுத்துதல், நன்னெறியைக் கடைப்பிடித்தல், ஒழுக்கம் ஆகியவற்றை பின்பற்றும்படி வற்புறுத்திக் கூறினார். சாதிமுறையைக் கண்டனம் செய்தார்.

**சூபியிஸம்:**

- சூபியிஸம் என்பது இஸ்லாமிய உள்ளுணர்வு சார்ந்த இறைநிலை இணைப்பை முன்வைக்கும் ஒரு மதக் கோட்பாடாகும். ஈரானில் உதயமான இக்கோட்பாடு, இந்தியாவில் செழித்து வளர்ந்தது. வைதீக முஸ்லீம் இறையியலாளர்களுக்கு ஷரியத் முன் வைக்கும் கட்டுப்பாடுகளை சூபியிஸம் நிறைவேற்றுகின்ற வரை அது ஏற்புடையதாகவே இருந்தது.

## கிறித்தவம்:

- ஐரோப்பிய வணிகரின் வருகையோடு பிரான்ஸிஸ் சேவியர், ராபர்ட்-டி-நொபிலி போன்ற கிறித்தவத் மதப் பரப்பாளர்களும் இந்தியா வந்தனர். தொடக்ககாலக் கிறித்தவச் மதப் பரப்பாளர்கள் கத்தோலிக்கர்களாவர். டேனியர்களின் ஆதரவின் கீழ் முதல் லூத்தரன் மதப் பரப்பாளர்கள் 1706 இல் தரங்கம்பாடிக்கு வந்தனர். அவர்களில் ஒருவரான சீகன்பால்கு விவிலியத்தின் புதிய ஏற்பாட்டை 1714இல் தமிழில் மொழியாக்கம் செய்தார். வெகுவிரைவில் பழைய ஏற்பாடும் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டது.

## அறிவியலும் தொழில்நுட்பமும்:

- முஸ்லீம் கல்வி நிறுவனங்களான மதரஸாக்கள் முஸ்லீம் இறையியலின் மீதே அதிகக் கவனம் செலுத்தியது. வாரணாசி போன்ற மிகச் சிறந்த கல்வி மையங்களில் ஜோதிடம் கற்றுத்தரப்பட்டது. ஐரோப்பாவிலிருந்த பல்கலைக் கழகங்களுக்கு நிகராக இந்தியாவில் கல்வி நிறுவனங்கள் இல்லையென பிரான்ஸ் நாட்டுப் பயணி பெர்னியர் குறிப்பிடுகிறார். இதனால் அறிவியல் பாடங்களைக் கற்பிப்பது இயலாத நிலையில் இருந்தது. இருந்தபோதிலும் கணிதம், வானியல் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தப்பட்டது. அக்பரின் அவைக்களப் புலவரான பெய்சி பாஸ்கரச்சாரியரின் புகழ்பெற்ற கணித நூலான லீலாவதியை மொழிபெயர்த்தார். முகலாயர் காலத்தில் ஐரோப்பியர் இந்தியாவில் இருந்தாலும் இந்தியக் சமூகத்தின் மீது அவர்கள் செல்வாக்குச் செலுத்தவில்லை.

- நீர் இறைப்பதற்காகப் பல பீப்பாய்கள் இணைக்கப்பட்டச் சக்கரமான பாரசீகச் சக்கரம் பாபர் காலத்தில் அறிமுகமானது. வரிசையாக விசைச் சக்கரங்கள் பொருத்தப்பட்டச் சற்றே கடினமான நீர் இறைக்கும் இயந்திரம் பதேபூர் சிக்ரியில் நிறுவப்பட்டது. வெடியுப்பை பயன்படுத்தி நீரைக் குளிர்விக்கும் முறையைப் பரவலாக்கிய பெருமை அக்பரைச் சாரும். கப்பலின் ஒட்டகம் எனச் சொல்லப்படும் தொழில் நுட்பத்தை உலகத்திலேயே கண்டறிந்த முதல் மனிதர் என அக்பர் புகழப்படுகின்றார். இத்தொழில் நுட்பத்தின்படி ஒரு பெரிய படகின் மீதே கப்பல் கட்டப்படும். அவ்வாறு கட்டப்படுவது அக்கப்பல்களைக் கடலுக்குள் கொண்டு செல்வதை எளிதாக்கியது. ஒருசில இயந்திரத் தொழில்நுட்ப சாதனங்கைள இறுக்கமாக இணைப்பதற்கான திருகாணிகள், உடல் உழைப்பாலும் வார்களாலும் இயக்கப்படும் துளைப்பான், வைரத்தை பட்டை தீட்டும் கருவி போன்றவை பயன்பாட்டில் இருந்தன. வேளாண் கருவிகள் முன்னர் இருந்ததைப் போலவே தொடர்ந்தன. அவை பெரும்பாலம் மரத்தாலானவை. உலோகவியலைப் பொருத்தமட்டிலும் வார்ப்பு இரும்பை உற்பத்தி செய்ய இயலாமல் போனது பெரும் பின்னடைவாகும். வரலாற்றறிஞர் இர்பான் ஹபீப் இந்தியாவின் பின்தங்கிய நிலையைக் கீழ்க்கண்டவாறு பதிவு செய்கிறார். தொழில் நுட்பத்தில் இந்தியாவின் பின்தங்கிய நிலை வெளிப்படையாகத் தெரிகிறது. இந்தியப் படைகளில் மேட்ச் லாக் எனப்படும் பழைய பாணியிலானத் துப்பாக்கிகள் அதிகமான பயன்பாட்டில் இருந்தபோது ஐரோப்பாவில் பிளின்ட்லாக் எனப்படும் நவீனத் துப்பாக்கிகள் பயன்பாட்டிற்கு வந்துவிட்டன. செலவு மிக்க செம்பிலான பீரங்கிகளை இந்தியா தொடர்ந்து பயன்படுத்தி வந்தபோது ஐரோப்பாவில் முன்னதாகவே அவை பயன்பாட்டிலிருந்து நீங்கிவிட்டன. இதற்குக் காரணம் பதினேழாம் நூற்றாண்டில் கூட இந்தியாவால் வார்ப்பிரும்பை உற்பத்தி செய்ய இயலாமல் போனதேயாகும்.

**கட்டடக்கலை:**

- முகலாயர் காலத்தில் கட்டடக் கலையில் ஏற்பட்ட மகத்தான வளர்ச்சி உலகக் கலையில் குறிப்பிடத்தக்கக் கட்டமாகும். கூண்டு வடிவிலான குமிழ்களைக் கொண்ட கவிகை மாடங்களாலும், ஒப்பனைகள் மிகுந்த கலங்கரை விளக்கம் போன்ற கோபுரங்களாலும், நான்கு மூலைகளிலும் எழுப்பப்பட்டுள்ள ஸ்தூபி மாடங்களாலும் படங்கள் வரையப்பட்டு பதிக்கப்பட்டு ஓடுகளாலும் அலங்கரிக்கப்பட்ட பெரிய வடிவங்களுக்கு முகலாயக் கட்டங்கள் பெயர் பெற்றவையாகும்.

- பாபர், ஹுமாயூன் காலங்களில் கட்டப்பட்ட மசூதிகள் கட்டக்கலை ரீதியாக முக்கியத்துவம் உடையவையல்ல. சூர் வம்சத்து அரசர்கள், தில்லியில் புராணகிலா, பீகாரில் சசாரம் என்னுமிடத்தில் கட்டிய ஷெர்ஷா, இஸ்லாம் ஷா ஆகியோரின் கல்லறைகள் போன்ற கண்களைக் கவரும் கட்டங்களை விட்டுச் சென்றுள்ளனர்.

- புராணகிலாவில் உயர் அரண் படியடுக்கு நடைமேடையில் கட்டப்பட்டுள்ள கல்லறைகள், நாற்புறமும் சூழந்துள்ள நீர் நிலைகள் ஆகியன நவீனக் கூறுகளாகும்.

- அக்பர் ஆட்சிக் காலத்தில் ஹுமாயூனின் கல்லறை உயர்த்தப்பட்ட தளத்தின் மீது வைக்கப்பட்டது. சுற்றிலும் தோட்டங்கள் அமைக்கப்பட்டன. பாரசீகக் கட்டக்கலை வல்லுநர்களால் வடிவமைக்கப்பட்டு இந்தியக் கலைஞர்களால் கட்டப்பட்ட இக்கல்லறை எதிர்காலத்தில் பின்பற்றுவதற்கு முன்மாதிரியாய்த் திகழ்ந்தது.

- ஆக்ரா கோட்டை ரஜபுத்திர பாணிகளை இணைத்துக் கட்டப்பட்டதற்கு ஒரு எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது. எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது. அக்பரின் புதிய தலைநகரான பதேபூர் சிக்ரி கோட்டைகளால் சூழப்பட்ட எழுச்சியூட்டும் பல கட்டங்களைக் கொண்டுள்ளது. பதேப்பூர் சிக்ரியின் மலைப்பூட்டும் வாயிற்பகுதியும், அக்பர் சிகப்புநிற மற்றும் பளிங்குக் கற்களால் கட்டிய புலந்தர்வாசாவும் நேர்த்தியான கட்டடக்கலையில் முகலாயரின் சாதனைகளாகக் கருதப்படுகின்றன. ஆக்ராவுக்கு அருகே சிக்கந்தராவிலுள்ள அக்பரின் கல்லறை மாடம் சில பௌத்த கட்டடக்கலைக் கூறுகளையும் கொண்டுள்ளது. இது அக்பரின் காலத்தில் தொடங்கப்பட்டு ஜஹாங்கீரின் காலத்தில் நிறைவு பெற்றது. ஜஹாங்கீர் நூர்ஜகானின் தந்தையான இதிமத் உத் தௌலாவுக்காக எழுப்பிய கல்லறையே முழுவதும் வெள்ளை நிறப் பளிங்குக் கற்களால் முகலாயர் கட்டிய முதல் கட்டமாகும்.

- ஷாஜகான் காலத்தில் முகலாயக் கட்டடக்கலை அதன் சிகரத்தை எட்டியது. தாஜ்மஹால் முழுவதும் பளிங்குக் கற்களால் உயர்த்தப்பட்ட தளத்தின் மீது கட்டப்பட்டதாகும். மையத்தில் பின்னொதுங்கிய வாயிலுக்கு மேல் குமிழ்வடிவக் கவிகை மாடத்தையும் அதைச் சுற்றி நான்கு ஸ்தூபி மாடங்களையும் நான்கு மூலைகளிலும் நான்கு தனித்தனியான கோபுரங்களையும் (மினார்) கொண்டு அமைந்த இந்நினைவிடம் உலகப்புகழ் பெற்றுள்ளது. திவானி ஆம், திவானி காஸ், மோதி மஹால், ஹுரமஹால்

போன்ற பிரமிப்பூட்டும் கட்டங்களால் சூழப்பட்டுள்ள செங்கோட்டை ஷாஜகான் காலத்து கட்டடக்கலைத் திறன்களைப் பிரதிபலிக்கின்றன. ஆக்ரா கோட்டையிலிருக்கும் மோதி மசூதி முழுவதும் பளிங்குத் கற்களாலானது. தில்லியிலுள்ள கம்பீரமான வாயிற் பகுதியில் வரிசையான கவிகை மாடங்கள், உயரமான மெலிதான கோபுரங்கள் (மினார்) ஆகியவற்றைக் கொண்டுள்ள ஜும்மா மசூதி ஆகியன ஷாஜகானால் கட்டடப்பட்ட முக்கிய மசூதிகளாகும். ஷாஜகான், ஷாஜகானாபாத் என்ற பெயரில் ஒரு நகரத்தையே (இன்றைய பழைய தில்லி) உருவாக்கினார். இங்குதான் செங்கோட்டையும் ஜும்மா மசூதியும் அமைந்துள்ளன. ஔரங்கசீப் காலத்தில் லாகூரில் பாதுஷாகி மசூதி கட்டப்பட்டது. மேலும் ஔரங்காபாத்தில் ரபீயா உத் தௌராணியின் பளிங்கிலான கல்லறையும் கட்டப்பட்டது. இக்கல்லறை பீபிமக்பாரா (பெண்ணின் கல்லறை) என்றழைக்கப்படுகிறது.

- ஜஹாங்கீர், ஷாஜகான் ஆகியோர் உருவாக்கிய ஷாலிமர் தோட்டங்கள் இந்தியத் தோட்டக் கலையில் குறிப்பிடத்தக்கவை ஆகும். மிகப் பெரும் கட்டிடங்களைத் தவிரப் பொதுப்பயன்பாட்டிற்காகவும் பல கட்டுமானப் பணிகளை முகலாயர் மேற்கொண்டனர். அவற்றுள் மகத்தானது ஜான்பூரில் கோமதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளப் பாலமாகும். முகலாயரின் மிகவும் போற்றத்தக்கச் சாதனை தில்லிக்கு நீர் கொண்டுவரும் மேற்கு யமுனா கால்வாயைக் கட்டியதாகும்.

- முகலாயக் கட்டடக்கலை நாட்டின் பல்வேறு பகுதிகளில் கோவில் கட்டுமானங்களின் மீதும் செல்வாக்குச் செலுத்தியது. மதுராவுக்கு அருகே பிருந்தாவனத்தில் உள்ள கோவிந்தேவ் கோவிலிலும், மத்தியப் பிரதேசம் ஒரிசாவிற்கு அருகேயுள்ள சதுர்டிஜ் என்னும் இடத்திலுள்ள பீர்சிங் கோவிலிலும் முகலாயக் கட்டிடக்கலையின் தாக்கத்தைக் காணலாம்.

**ஓவியம்:**

- முகலாயர் கால ஓவியம் பன்னாட்டு அளவிலான அங்கீகாரத்தைப் பெற்றது. முகலாயரின் நுண் ஓவியங்கள் உலகத்தின் பல அருங்காட்சியகங்களில் முக்கிய இடம் வகிக்கின்றன. குஜராத், மாளவம் ஆகிய பகுதிகளில் உயிர்ப்புடன் செயல்பாட்டிருந்த இந்திய ஓவிய மரபுகள், மேற்காசிய ஓவிய மரபுகளின் செல்வாக்கோடு இணைந்து ஓவியக் கலையின் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின. மத்திய ஆசியாவிலிருந்து ஹுமாயூனோடு இந்தியா வந்த நுண் ஓவியக் கலைஞர்களான அப்துல் சமத், மீர் சையத் அலி ஆகியோரிடமிருந்து இந்திய ஓவியர்கள் ஊக்கம் பெற்றனர். இலக்கிய நூல்களை விளக்கும் பொருட்டே ஓவியங்கள் பெரிதும் வரையப்பட்டன. பாரசீக மொழியில் எழுதப்பட்ட மகாபாரதத்திலும், அய்னி அக்பரியிலும் பல ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. தஷ்வந்த், பசவன் ஆகியோர் அக்பரின் அவையை அலங்கரித்த முக்கிய ஓவியர்களாவர். ஐரோப்பிய ஓவியங்கள் போர்த்துக்கீசியப் பாதிரிமார்களால் அக்பரின் அவையில் அறிமுகம் செய்யப்பட்டன. ஜஹாங்கீர் காலத்தில் உருவப் படத்தை வரைதலும் விலங்குகளை வரைவதும் வளர்ச்சி பெற்றன. இத்துறையில் மன்சூர் பெரிதும் அறியப்பட்டவராவார். முகலாய நுண்ணோவியங்கள் டச்சு நாட்டின் தலைசிறந்த ஓவியரான ரெம்பிராண்ட் மீது தாக்கத்தை ஏற்படுத்தின. ஷாஜகான் ஓவிய மரபைத் தொடர்ந்தார். ஆனால் ஔரங்கசீப்பின்

அலட்சியத்தால் ஓவியர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குக் கலைந்து சென்றதன் மூலம் பிராந்திய அளவில் ஓவியக்கலை வளர்ந்தது.

**இசையும் நடனமும்:**

- பல மெல்லிசைப் பாடல்களை இயற்றிய குவாலியரைச் சேர்ந்த தான்சென் ஏனைய 35 இசைக் கலைஞர்களோடு அக்பரால் ஆதரிக்கப்பட்டார் என அய்னி அக்பரி குறிப்பிடுகின்றது. ஜஹாங்கீரும் ஷாஜகானும் இசையை ஆதரித்தவர்களே. ஔரங்கசீப் இசைக்கு எதிரானவர் என்ற பொதுக் கருத்தொன்று நிலவுகிறது. ஆனால் அவருடைய காலத்தில்தான் இந்தியாவின் செவ்வியல் இசை குறித்த பல நூல்கள் எழுதப்பட்டன. அவருடைய அரசிகளும் இளவரசிகளும் பிரபுக்களும் தொடர்ந்து எதிரானவர் என்ற பொதுக் கருத்தொன்று நிலவுகிறது. ஆனால் அவருடைய காலத்தில்தான் இந்தியாவின் செல்வியல் இசை குறித்த பல நூல்கள் எழுதப்பட்டன. அவருடைய அரசிகளும் இளவரசிகளும் பிரபுக்களும் தொடர்ந்து இசைக்கு ஆதரவு தந்தனர். பிற்கால முகலாய அரசர்களில் ஒருவரான முகமது ஷா இசைத்துறையில் முக்கிய வளர்ச்சிகள் ஏற்படக் காரணமாக இருந்தார். பாபர் நாமா, பாதுஷா நாமா ஆகிய நூல்களில் இசைக்கருவிகளோடு பெண்கள் நடனமாடும் ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன.

**இலக்கியம்**

- பாரசீகம் சமஸ்கிருதம் மற்றும் பிராந்திய மொழிகள் முகலாயர் காலத்தில் நன்கு வளர்ச்சியடைந்தன. முகலாயர் காலத்தில் நன்கு வளர்ச்சியடைந்தன. முகலாயப் பேரரசிலும் தக்காண அரசுகளிலும் பாரசீக மொழியே நிர்வாக மொழியாக இருந்தது. ராஜப்புத்திர ரெசுகளின் மீதும் அம்மொழி தாக்கத்தை ஏற்படுத்தியதால் அவற்றின் நிரிவாகத்தில் பல் பாரசீகவச் சொற்கள் இடம் பெற்றன. ‘அக்பர் நாமா’ என்னும் நூலில் அக்பரின் வரலாற்றை அபுல் பாசல் தொகுத்து வழங்கியுள்ளார்.

- முகலாய நிர்வாகத்தைப்பற்றி அவர் அய்னி அக்பரியில் விவரித்துள்ளார் அறிவியல், புள்ளியியல், புவியியல்,பண்பாடு ஆகியவற்றின் மீது ‘அய்னி அக்பரி’ கொண்டுள்ள அக்கறைக்காகவே அது பாராட்டப்பட வேண்டும் அப்துல் ஹமீது லகோரி, முகமது வரிஸ் ஆகிய இருவரும் இணைந்து எழுதிய ஷாஜகான் வாழ்க்கை வரலாறான பாதுஷா நாமா அய்னி அக்பரியை முன்னுதாரணமாகக் கொண்டு எழுதப்பட்டதே ஔரங்சீப்பின் முதல் பத்தாண்டு கால ஆட்சியைப் பற்றி ஆலம்கீர் நாமா என்னும் நூலை எழுதிய முகமது காஸிம் இதே முறையைத்தான் பின்பற்றினார்.

- பாபரின், சகாட்டி துருக்கிய மொழியில் எழுதிய சுயகரிதையை அப்துல் ரகீம்ட கானி-இ-கானான் என்பவர் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்தார். தபிஸ்தான் என்னும் நூல் பல்வேறு மதங்களின் நம்பிக்கைகள், அம்மதங்கள் தொடர்பான நூல்கள் ஆகியன குறித்துப் பாரபட்சமற்ற விபரங்களைக் கொண்டுள்ளது. சமஸ்கிருத நுல்களை மொழிபெயர்த்தால் பாரசீக மொழி வளம் பெற்றது. அக்பரின் அவைகளப் புலவரும் அபுல்பாசரின் சகோதரருமான அபுல் பேசியின் மேற்பார்வையில் மாகாபாரதம் பாரசீக மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. தாராஷூகோவால்

உபநிடதங்கள் சர்-இ-அக்பர் (மாபெரும் ரகசியம்) என்னும் பெயரில் மொழிபெயர்க்கப்பட்டது குறிப்பிடதக்கதாகும். அபுல் பெய்சியின் மஸ்னாபி உத்பி, நசிரி ஆகியன இந்தியாவிரல் பாரசீக கவிதைகளுக்கு வளம் சேர்த்தன.

- முகலாயர் காலத்தில் படைக்கப்பட்ட சமஸ்கிருக நூல்கள் வியக்கத்தக்கவையாகும். இக்காலச் சமஸ்கிருத இலக்கியம் காவியம் என்றழைக்கப்படும். வரலாற்றுக் கவிதைகள் வடிவில் எழுதும் பாங்கிற்கு பெயர் பெற்றதாகும். கலஹணர் காஷ்மீரின் முழுமையான வரலாறு குறித்து எழுதிய ‘ ராஜவலிபதகா’ எனும் நூல் அகபர் ஆட்சிக் காலத்தில் பிரக்ஞபட்டரால் தொகுக்கப்பட்டது. பாரசீக மொழி நூல்கள் சமஸ்கிருதத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டதால் கிரேக்க. அராபியப் புலமையானது இந்தியா வந்தடைந்தது. அக்பரின் வானியலறிஞரான நீலகண்டர், தஜிகனிலகந்தி ஷாஜகானின் அவைக்களப் புலவரான ஜெகநாத பண்டிதர் ‘ரசகங்காதரா’ எனும் சிறப்புக்குரிய நூலை எழுதினார்.

- முகலாயர் காலத்தில் இலக்கியத் துறைக்குச் செய்யப்பட்ட பெரும் பங்களிப்பு பல்வேறு மொழிகளைப் பேசி வந்த மக்களிடையே உருது ஒரு பொதுவான தொடர்பு மொழியாக வளர்ச்சியடைந்ததாகும். இக்காலத்தில் பிராந்திய மொழிகளும் வலுப் பெற்று முழுமையான வளர்ச்சி பெற்றன. செய்யுள் முறையிலான தனிமனித உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற மிகச் சிறந்த அப்துர் ரகீம் கான்-இ-கானான் என்பவர் வாழ்க்கை குறித்த, மனித உறவுகள் தொடர்பான பாரசீகர்களின் சிந்தனைகள் இழையோடும் பக்திப் பாடல்களை அந்தியின் கிளை மொழியான பிரிஜி என்னும் வடிவத்தில் எழுதினார் கிழக்கு உத்திரப் பிரசேத்து மக்கள் பேசிய அந்தி மொழியின் வட்டார மொழியான அவதியில் துளதிதாசர் எழுதிய பாடல்கள் அவற்றின் பக்திச் சிந்தனைகளுக்குப் பிரபலமாயின. இக்காலத்தில் ஏகநாதர், துக்காராம், ராம்தாஸ், முக்தீஸ்வரர் ஆகியோரின் இலக்கியப் படைப்புகளால் மராத்திய இலக்கியம் எழுச்சி பெற்றது ஏனைய மொழிகளின் னீதான சமஸ்கிருதத்தின் மேலாதிக்கத்தை ஏக்நாத் கேள்விக்குள்ளாக்கினார் துக்காராமின் பாடல்கள் ஒரு கடவுள் கோட்பாட்டின் மேல் ஆர்வத்தைக் தூண்டியது முக்தீஸ்வர் மகாபாரத்தையும் இராமாயணத்தையும் இலக்கியவளம் கொண்ட மராத்திய மொழியில் எழுதினார்.

- விஜயநதரப் பேரரசர் கிருஷ்ணதேவராயர் தனது ‘ஆமுக்தமால்யதா’ (ஆண்டாளைப் பற்றிய காவியம்) மூலமாகவும், அவருடைய அவைக்களப்புலவரான அல்சானி பெத்தண்னா தனது ‘மனுசரித்திரா’ எனும் நூலின் மூலமாகவும் தெலுங்கு இலக்கியத்தின் கலங்கரை விளக்கங்களாகத் திகழ்கின்றனர். இக்காலத்தில் தமிழிலிருந்து தனியாகப் பிரிந்த மலையாம் இலக்கிய நிலை பெற்றது. இராமயணமும் மகாபாரதமும் மலையாள மொழியில் எழுதப்பட்டன. அஸ்ஸாமிய மொழியில் பக்திப் பாடலை முன்மாதிரியாகக் கொண்டு சங்கர தேவர் ஒரு புதிய இலக்கியமரபை உருவாக்கினார்.

- அஸ்ஸாமிய மொழியில் வானியல், கணிதம், யானைகள் மற்றும் குதிரைகளுக்குச் சிகிச்சையளிக்கும் முறைகள் குறித்த நூர்கள் படைக்கப்பட்டன இராமாயணமும் மகாபாரதமும் அஸ்ஸாமிய மொழியில்

எழுதப்பட்டன. கிருஷ்ணருக்கும் ராதைக்குமான காதலைச் சித்தரிக்கும் கவிதைகளைக் கொண்ட சைதன்ய வழிபாட்டு முறை வங்காள இலக்கியத்தை மேம்படுத்தியது குரு அர்ஜுன் சிங் தொகுத்த சீக்கியரின் புனித ஒரு கடவுள் கோட்பாட்டின் மேல் நம்பிக்கை பொண்ட சீக்கிய குருக்கள், ஷேக்பரித் ஆகியோரின் பாடல்கள் பஞ்சாபி மொழியின் பரிணாம வளரச்சியின் முக்கிய அடையாளங்களாகும்

- இதே காலப் பகுதியில் தமிழ் இலக்கியப்பரப்பில் சைவ, வைணவ இலக்கியங்கள் பெரும் செல்வாக்ர்ப் பெற்றுத் திகழ்ந்தன. மாபெரும் சைவப் புலவரான குமரகுருபரர், பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காசி சென்று வந்ததாகக் கூறப்படுகின்றது. அவர் மீனாடசியம்மை பிள்ளைத் தமிழ், நீதிநெறிவிளக்கம் ஆகிய முக்கிய இலக்கியங்களை இயற்றினார். தாயுமானவர் சமரச கன்மாரக்கம் எனும் அறத்தை உள்ளடக்கியப் பக்திப்பாடல்களை இயற்றினார் .கிறித்தவ மதப் பரப்பாளர்களான ராபட் ஜோசப் பெஸ்கி ஆகிளோர் தமிழ் மொழழியின் வளர்ச்சிக்குத் தங்கள் பங்களிப்பைச் செய்யத் தொடங்கியிருந்தனர்.

- தேசிய அளவில் முகலாயர் உருவாக்கிய பேரரசு, ஆற்றல் மிகுந்த மையப்படுத்தப்பட்ட நிர்வாகமுறையின் சிறப்பான உதவியோடு பல துண்டுகளாகப் பிரிந்து கிடந்தவற்றை அரசியல் ரீதியாக ஒருங்கிணைத்து ஒன்றாக்கியதின் மூலம் இந்தியாவின் மீது என்றுமழியாத தாக்கத்தை ஏற்படுத்தியது. இச்செயல்பாட்டில் பன்முகப்பட்ட அடையாளங்கள் ஒருங்கிணைக்கப்பட்டதால் தனித்தன்மை வாய்ந்த ஒரு இந்தியப் பண்பாடு பரிணமித்தது.